**The classical reader; or, Selections from standard Tamil authors.**
Jaffna, 1847.

http://hdl.handle.net/2027/nyp.33433081850798

www.hathitrust.org

**Public Domain, Google-digitized**
http://www.hathitrust.org/access_use#pd-google

We have determined this work to be in the public domain, meaning that it is not subject to copyright. Users are free to copy, use, and redistribute the work in part or in whole. It is possible that current copyright holders, heirs or the estate of the authors of individual portions of the work, such as illustrations or photographs, assert copyrights over these portions. Depending on the nature of subsequent use that is made, additional rights may need to be obtained independently of anything we can address. The digital images and OCR of this work were produced by Google, Inc. (indicated by a watermark on each page in the PageTurner). Google requests that the images and OCR not be re-hosted, redistributed or used commercially. The images are provided for educational, scholarly, non-commercial purposes.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

NYPL RESEARCH LIBRARIES
3 3433 08185079 8
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

செந்தமிழ்

ஆசிரியரின் சில நூல்களிலே

தெரிந்துகொண்ட

# இலக்கிய சங்கிரகம்.

THE

# CLASSICAL READER,

OR

SELECTIONS

FROM

STANDARD TAMIL AUTHORS.

JAFFNA:
AMERICAN MISSION PRESS:
1847.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

THE NEW YORK
PUBLIC LIBRARY
607162A
ASTOR, LENOX AND
TILDEN FOUNDATIONS
R 1932 L

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

# PREFACE.

THIS work was prepared primarily and chiefly for the use of the Batticotta Seminary. The Conductors of the Institution have ever felt that it is of the highest importance that young men, preparing for missionary service among this people, be well instructed in the principles of the Tamil language. It is not seen how this can be done effectually without resorting to the standard native works. But these, in nearly all cases, are, as a whole, very exceptionable on the ground of the immoral and heathenish subjects contained in them. The only safe and proper course seemed to be, either to exclude the whole from the course of study, or to make *a selection*. The latter course has been chosen; and it is believed to be not only safe, but of considerable importance.

The method of teaching this branch in the Seminary is designed to be such as to make it a means of mental discipline, of instruction in the knowledge and use of the Tamil language, as well as in the philosophy of language in general, and also, of furnishing to the minds of these youth, to some extent, an antidote to the poison so universally diffused by the *purely native course of instruction*.

It is believed that the book may be useful in schools of a different order. The section containing selections from the *Cural*, is recommended to the attention of those who are beginning the study of Tamil poetry.

*Batticotta Seminary, May,* 1847.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

# முகவுரை.

இலக்கிய சங்கிரகம் என்னும் இந்நூல், முக்கியமாயும், பிரதானமாயும், வட்டுக்கோட்டையிலுள்ள வித்தியாசாலையின் கல்விப் பயிற்சிக்காகவே இயற்றப்பட்டது. இத் தேசத்தாருக்குள் மிசியோன்வேலை முயற்சிகளுக்குப் பக்குவப்படுகின்ற வாலிபர், செந்தமிழ் நடைகளை நன்குணர்ந்தவர்களாய் வருவதே, முக்கியமான விஷயம் என்பதை மேற்சொல்லிய வித்தியாசாலையின் பராபரிப்புக்காரர் நெடுங்காலங் கண்டுணர்ந்தனர். இவ்வூரிலுள்ள செந்தமிழ் நூல்களைச் சாராமல், கொண்ட நோக்கத்தை அதிக வாய்ப்பாய் முடிப்பது எவ்வாறெனத் தோன்றிலது. தமிழ்நூல்களுமோ, அவற்றினுட் போதிந்திருக்கும் சன்மார்க்க விபரீதமும், அஞ்ஞான விலாசமுமான பொருட்டுறைகளினிமித்தம் திரட்டிப் பார்க்குமிடத்து, முற்றும் அங்கீகரித்தற்குஇடணானவைகள்அல்ல. ஆனதால் தமிழ்நூல்களை முற்றும் விலக்கி வைப்பது, அன்றேல் அவற்றிற் சிலவற்றைத் தெரிந்துகொண்டு கற்பிப்பதே ஏற்ற சேமமான வழியாகத் தோன்றினது. இவ்விருவழியுட் பின்னைய வழியே நன்மைய எனத்தெரிந்துகொள்ளப்பட்டது. இது சேமம்மாத்திரம் அல்ல அதிக யோக்கியமுமானது எனவிளங்கிற்று.

வித்தியாசாலையில் உள்ள மாணாக்கரின் மனோகரணங்களைத் திருத்தவும், தமிழை நன்றாய் விளங்கிப் பேசி ஒருவாறு அதன் இலக்கண சம்பந்த முதலியவைகளையுந் தெளியும்படி உணர்த்தவும், முற்றும் இவ்வூரின் முறையாய்க் கற்பதால் எங்கும் ஏறிச் செறிந்திருக்கின்ற நஞ்சை மீட்டற்கான ஔஷதத்தை ஒருமட்டுக்கு அம்மாணாக்கரின் மனங்களிலே புகட்டவும், ஓர் ஏதுவாய் வருவிக்கும்படியாகவே இந்நூலை வித்தியாசாலையிலே கற்பிக்கும் வகையிற் கொண்ட நோக்கமாயினது.

இந்நூலானது எத்திறத்து வித்தியாரம்பசாலைகளிலேயும் உபயோகமானதாய் இருக்கும் என்று நம்புகிறோம். தமிழ்ச் செய்யுட்களைக் கற்கப்புகுவோர் திருவள்ளுவர் குறளிற்றெரிந்து இந்நூலுள் அமைந்திருக்கும் பகுதியைச் சிந்தனையாய்ப் பார்க்க வேண்டுமென்றுங் கேட்கிறோம்.

வட்டுக்கோட்டை வித்தியாசாலை }
௲௮௱௪௰௫ வைகாசிமீ. }

# RAMAYANA.

# இராமாயணம்.

### இராமர் கொலுவிருக்கை.

[Rama on his throne, and his interview with the Rishies.]

பூலோகத்தினிடத்திலே சுவர்க்கலோகம் போல விளங்கும் அயோத்தியாபட்டணத்தில் அளவில்லாத விசித்திரமான தேவேந்திர சபையைப் பார்க்கிலும் அதிகமானசிங்காரங்கள் பொருந்திய கொலுமண்டபத்தின் நடுவிலே பூமி, பாதாளம், சுவர்க்கமென்று சொல்லப்பட்ட மூன்று லோகங்களும் நடுங்கச்செய்யுங் கொடிய துட்டர்களாகிய இராவணன், கும்பகன்னன் முதலானவர்களையும் பொல்லாதபாபமேரூபமாகக்கொண்ட இராட்சதகுலத்தையும் நாசமாகும்படி சங்கரித்துச் செயம் பொருந்திய சீராமரானவர் சோதிமயமாகப் பிரகாசிக்கும் மாணிக்க கிரீடமும், மகரகுண்டலமும், வாகுவலயமும், வச்சிரகடகமும், இரத்தின கங்கணமும், கொத்துச் சரப்பணியும், முத்து மாலையும், மோகன மாலையும், பொற்பூணூலும், பட்டையரைஞாணும், பவித்திர மோதிரமும், இராசமுத்திரை மோதிரமும், வீரகண்டாமணியும், இவை முதலான திவ்வியாபரணங்களும் சித்திரப்பூம்பட்டாடையும், உத்தரீயமும், பீதாம்பரமுந் தரித்து சீதள களப சந்தன கஸ்தூரியும் சுகந்தபரிமள புட்பமாலைகளும் அணிந்து அலங்கரித்துக்கொண்டு சர்வாபரண அலங்கார அதிரூப சௌந்தரியவதியாய் விளங்கும் மகாலட்சுமியாகிய சீதாதேவிசமேதராய் நவரத்தின சிங்காசனத்தின் மேவி, வசிட்டர் முதலான மகஇருஷிகளுந்தேவேந்திரன் முதலா



Digitized by Google

Original from NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ன சகல தேவர்களும் வேதப் பிராமணர்களும் சகல வித்தைகளிலும் வல்லவர்களாகிய மகாவித்துவான்களும் நிறைந்திருப்பவும் அங்க, வங்க, குலிங்க, கலிங்க, காஸ்மீர, மகத, குகுத, மாளவ, சாளுவ, மச்ச, கூர்ச்சர, கேகய, கோசல, கேரள விதேக, விதர்ப்ப, பாண்டிய, பாஞ்சால, பப்பர, சிந்து, சௌராட்டர, கொங்கண, தேபாள, மராட, விராட, கருணாடக முதலான தேசாதிபத்திய மகுடவத்தனராகிய இராசாக்களும் துதித்து வணங்கவும் பேரிகை சங்கு முதலான பதினெண் வகை வாத்தியங்கள் முழங்கவும் யக்க கந்தருவர் தேவகானங்கள் பாடவும் பரதமோகன நாட்டிய மாதர்கள் நடனங்கள் செய்யவும் இன்னமும் அநேக விநோதமான சம்பிரமத்துடனே பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு கொலுவாகவீற்றிருக்குஞ் சமயத்தில் காசிபர், அத்திரி, பரத்துவாசர், கௌதமர், சமதக்கினிபகவான் முதலான மகாமுனிவர்கள் அயோத்தியாநகரத்திற் பிரவேசித்து ஆஸ்தான மண்டபத்துக்கு முன்னாக விளங்குங் கோபுர வாயிலில் வந்து அந்தவாயில் காத்திருக்குங் காவலாளரைப் பார்த்து அந்த இருஷிகளெல்லாரும் நாங்கள் உம்முடைய பட்டாபிஷேகத் திருக்கோலங் காண அபேட்சித்து வந்திருக்கின்றோமென்று இராமருக்கு அறியப்படுத்துவீரென்று சொல்ல அவர்களும் அப்படியே அறியச்செய்து அவர் சொல்லி யனுப்பிய உபசாரங்களைச் சொல்லி அந்த முனிவர்களை உள்ளே அழைத்துக்கொண்டுபோம் பொழுதில் ஆஸ்தான மண்டபத்துக்குச் சமீபமாக அடுத்த மாத்திரத்தில் அந்த இருஷிகளைக் கண்டு இராமர் துணுக்குற்றுச் சிங்காசனத்தை விட்டெழுந்து சீக்கிரமாக வந்து அவர்களுடைய பாதங்களிலே தீர்க்கதெண்டனாக நமஸ்காரம்பண்ணி வந்தனஞ்செய்து அநேகமான உபசாரவார்த்தைகள் சொல்லி அவர்களை முன்னே நடத்தித் தாம் பின்னே நடந்து அழைத்துப் போய் அந்த ஆஸ்தான மண்டபத்தில் நிறைந்திருக்கு

ம் சகல இருஷிகளும் தேவர்களும் மற்றுமுள்ள எல்லாரும் எழுந்திருந்து வந்தனங்கள்செய்ய அந்த இருஷிகளுக்குஆசனங்கள்கொடுத்துப் பூசித்துஎழுந்தருளியிருக்கச் செய்தார். அவர்களும் இராமருக்கு ஆசீர்வாதஞ் செய்தார்கள். அதின் பின்பு இராமர் மகா சந்தோஷமாக எழுந்தருளியிருக்குஞ் சமதக்கினி பகவான் முதலான மகாயோகிகளைப்பார்த்துத் தேவரீர்களுடைய ஆச்சிரமங்களும் யாகசாலைகளும் பசுக்களும் நன்றாயிருக்கின்றனவோவென்றும் வேதங்கள், சாஸ்திரங்கள், தரும சாஸ்திரங்கள், இதிகாசங்கள், ஆகமங்கள், புராணங்கள் இவை முதலாயுள்ளசகல வித்தைகளையும், உங்களுடைய புத்திரர்களும், வித்தியார்த்திகளும், நன்றா யோதிவருகிறார்களோவென்றும் நித்திய கருமானுட்டான முதலான காரியங்களும் கால நியமங்களும் தப்பாமல் நடந்து வருகின்றனவோவென்றும் அந்தரங்கவிநய பயபத்தியுடனேமாதுரிய வசனமாகச் சேமங்களை விசாரித்தார். அப்படி இராமர் சுக விருத்திகளைக் கேட்ட மதுரவசனமாகிய அமிர்தபானம்பண்ணினவர்களாய் மகா சந்தோஷத்தை அடைந்து அந்த மகாயோகிகள் இராமரைப் பார்த்துச் சொல்லத் துடங்கினார்கள். கேட்பீர், இராகவரே, சகலலோகங்களும் நசிக்கும்படியாய் மிகவுங் கொடுமையான உபத்திரவங்களைச் செய்யும் துட்ட கண்டகராகிய விராதன், கவந்தன், கரன், தூஷணன், கும்பன், நிகும்பன், அகம்பன், மகோதரன், மகாபாரிசுவன், தூம்பிராட்சன், விருபாட்சன், சோணிதாட்சன், மகாராட்சன், அதிகாயன், பிரகஸ்தன், தேவாந்தகன், நராந்தகன், கும்பகன்னன் முதலானவர்களும் சேனாபதிகளும் அளவில்லாத இராட்சதசேனையும், மூலபலமும், தசக்கிரீவனும் யுத்தகளத்திலே சின்னாபின்னப்பட்டு மடிந்து பிணக்குவைகள் பருவதங்கள்போல இராசிராசியாகக்குவியவும், தேர்களும், யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிகளும், சாமரங்களும், மயிற்பிச்சங்களும், ஆலவட்

டங்களும், வாள்களும், வேல்களும், வில்லுகளும், பாணங்களும், தண்டங்களும், மூசலங்களும், சூலங்களும், எழுக்களும் இவை முதலான அஸ்திரசஸ்திரங்கள் அறுபட்டு முறிபட்டு தெறிபட்டு ஒடிபட்டு சிதைபட்டு வதைபட்டு இரத்தப்பிரவாகத்தில் மிதந்தோடவும் நாய்களும், நரிகளும், காக்கைகளும், கழுருகளும், பருந்துகளும், குடல்களை, மூளைகளை, கொழுப்புகளை, நிணங்களை, தசைகளை, தோல்களைக் கொத்தியும் பிடுங்கியும் குடித்தும் தின்றும் சவ்வியும் வவ்வியும் ஒன்றோடொன்று கலந்து கூட்டமிட்டு நெருங்கி பூளையிட்டுக் குலைத்துக் கத்திக் கதறி ஆர்ப்பரிக்கவும் பூதப் பிரேதபிசாசங்களும் ஆணும் பெண்ணும் குட்டிகளும் அங்கங்கே கூட்டங்கூட்டமாகக் கூடிக்கொண்டு மண்டைகளாகிய கலங்களிலே பகுந்திட்டு தின்று தேக்கிட்டுக் கொக்கரித்துத் தோள்கொட்டிக் கூத்தாடி விளையாடவும் விசயலட்சுமி சந்தோஷித்துடனே நடனஞ் செய்யவும் மகாவுக்கிராசத்துடனே அட்டகாசம்பண்ணி விசய கோதண்டத்தை வளைத்து நாணேறிட்டுக் குணத்தொனிமுழக்கி அந்தக் கோதண்டஞ் சக்கிராகாரமாகும் படியாக வளையவாங்கி அர்த்தசந்திரபாணம் வச்சிரசூசிகாபாணம் அக்கினிபாணமுதலான திவ்வியாஸ்திரங்களைப் புங்காறுபுங்கமாக இடைவிடாது தொடுத்துச் சரவருஷிமாகப் பொழிந்து கண்டதுண்டங்களாகச் சித்திர வதை செய்து சங்கரித்துச் சர்வலோகங்களும் திர்ப்பயமாக வாழ்ந்திருக்கும்படி வெற்றிபெற்று வாகைமாலை சூடிய விசய கோதண்ட பாணியாகிய தேவரீரும் மகாதபோமகிமைபொருந்திய முனிவர்களாலும் திரிலோகாதிபதிகளாலும் மற்றுமுள்ளவர்களாலும் வெல்லுதற்கு அரிய சகலமாயாவுபாயங்களிலும் வல்லவனாகிப் பலபராக்கிரமசௌரியங்களாலேமதோன்மத்தனாகித் துவாதசாதித்தியர்கள்ஏகாதசருத்திரர்கள் அட்டவசுக்கள் மருத்துவரிருவர் இந்நால்வகைப்பட்ட முப்பத்து மூவர்க்கும் ஒரொருவகையின

ர்க்கொவ்வொரு கோடியாகக் கூடிய முப்பத்து மூக்கோடி தேவகணங்களுக்கதிபதியாகிய இந்திரனை மாயாபாசத்தினாலே கட்டிக் கொடுஞ் சிறையில் வைத்து அக்காரணத்தினாலே இந்திரசித்து என்னும் பெயர்பெற்ற பொல்லாத துட்ட கண்டகனைச் சங்கரித்து வெற்றிபெற்ற இலட்சுமணருமிருக்க எங்களுக்கு எக்காலத்தினும் யாதேனுமோர்குறையுண்டாகுமோவென்று கேள்விக்கு உத்தரமாகப் பிரதி வசனஞ் சொல்லி வாழ்த்தினார்கள்.

---

### அரசியற்றுமுறைமை.

[How to administer Government.]

இராமர் தம்முடைய உயிர்த்துணைவனாகிய இலட்சுமணனைப் பார்த்து, கேட்பாய் தம்பி, உலகத்திலே அரசனானவன் இராச்சியத்திலே நடக்குங்காரியங்களை நாடோறும் நன்றாய் விசாரித்துப் பரிசோதித்து இராசரீகஞ்செய்வது இராசதருமமுறைமையாதலால் நாமுமப்படியே செய்ய வேண்டும். அன்றியுங் கோபசித்தனாகி நீதிமார்க்கத்தை விட்டுப் பழிபாவங்களை மேற்கொண்டு தன்னுடைய நாட்டிலே வாசமாயிருக்குங் குடிகளுக்குண்டாகிற துன்பங்களைப் போக்காமல் அவன்றானே அந்தக் குடிகளுக்குத் துன்பத்தை உண்டாக்கிக் குரூரதண்டஞ் செய்து நடுங்கப்பண்ணி அதிகமாக இறைகொண்டு கொடுங்கோல் செலுத்துவானாகில் அத்துட்டனாகிய இராசாவினுடைய தேசத்திலிருக்குஞ் சன்மார்க்கரானவர்களுந் துன்மார்க்கத்தையுடைய மூர்க்கரேயாவார்கள். அல்லாமலும் யாவனொருராசாவானவன் தன்னுடைய தேசத்திலிருப்பவர்கள் ஒரு திரவிய மூலியத்திலேயொருவருக்கொருவர் விவாதப்பட்டுத் தன்னிடத்திலே வந்து விவகாரத்தைச் சொல்லிக்கொண்டால் அந்தவிவகாரத்தை உள்ளபடி விசாரித்துத் தரும சாஸ்திரப் பிரகாரம் நடப்பியாமல் நட்பினாலேயாவது ஆசையினாலேயாவ

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

து குரோதத்திஞலேயாவது பட்சபாதமாகத் தண்
டனை செய்யத் தக்க குற்றமுடையவர்களைத் தண்ட
னை செய்யாமலுந் தண்டனை செய்யத் தகாத பரிசு
த்தர்களைத் தண்டனை செய்தும் இப்படி நீதிமார்க்கந்
தப்பி நடந்து கொடுங்கோன் மன்னவனுகில் பூலோ
கமுள்ளளவுங் கெடாமல் நிலைபெற்று விளங்கும் பா
பத்தையும் அபகீர்த்தியையும் அடைந்தவனுய்ப் பர
லோகத்திலே யமதருமராசனுலே குரூர தண்டனை
யாகத்தண்டிக்கப்பட்டு ஒருகாலத்திலுங் கரையேற்ற
மில்லாத நரக வாசத்துக்கும் யோக்கியனுவான். சதுர
ங்க பதாதியென்று சொல்லப்பட்ட சதுரங்க சேனை
ப்பெருக்கமுஞ் சகலபிராணிகளிடத்திலுந் தன்னுயிர்
போலவிளங்குந் தயாளமும் வறுமையாளர்களுடைய
தரித்திர துன்பங் கெடும் படிக்கவர்கள் இச்சித்தபொ
ருளை அன்புடனே சந்தோஷமாகக் கொடுக்குங் கொ
டையினையுமுடையவனுகிய நீதி மன்னவன் தேசத்
திலிருக்கும் யாவர்க்கும் ஏதேனுமோர் குறையுண்
டாகுமோவென்று இந்தப் பிரகாரம் தரும சாஸ்திர
ங்களிலே சொல்லப்பட்டிருக்கையால் அந்த விதங்க
ளை அறிந்து நீதிமார்க்கமாக நடவாத இராசாக்களுடை
ய சரித்திரங்களையுங் கேட்பாயென்று பின்னும் இலட்
சுமணனைப் பார்த்துக் கேளாய் முன்னமொரு கா
லத்திலே பார்க்கனென்று சொல்லப்பட்ட இராசாவா
னவன் அன்னதானமுதலான சோடசமாதானங்களும்
மற்றுமுள்ள சகல புண்ணியங்களும் விதிப்படி நா
டோறுஞ் செய்து வருவான். அந்த இராசன் அப்ப
டிச் செய்து வருமளவில் அநேக கோடிகாலத்திலே
செய்யப்பட்ட புண்ணியங்களெல்லாம் ஒரு நிமிஷத்
திலே சித்திப்பதாகிய ஒரு மகா புண்ணிய காலம் வந்
துநேரிட்டது. அப்பொழுது அளவில்லாதநல்லபசுக்
களை வேதோத்தமராகிய பிராமணர்களுக்குத் தான
ம்பண்ணுகிறசமயத்திலே அந்த இராசாவினுடையபு
ண்ணிய சரித்திரங்களைக் கேள்விப்பட்டு மிகவுந் த
ரித்திரனுகிய ஒரு பிராமணன் நெடுந் தூரத்தி

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

விருந்து வந்தான். அந்தப் பிராமணனுக்கும் ஒ
ரு பசுவைத் தானமாகக் கொடுத்தான். அந்தப் ப
சுவைக் கொண்டுபோய்த் தன்னுடைய கிரகத்திலே
கட்டி வைத்துக்கொண்டிருந்தான்.அந்தப் பசுத் தப்
பிப்போய்ப் பின்னும் அந்த இராசாவினுடைய பசுக்
கூட்டத்திலே சேர்ந்தது. அதை விசாரியாமல் அப்
படியே மற்றுமோர்நாட்கோதானம் பண்ணும்பொ
ழுதில் அந்தப் பசுவையும் வேறொரு பிராமணனுக்
குத் தானமாகக் கொடுத்தான். தானம் வாங்கின பி
ராமணன் அந்தப்பசுவைக்கொண்டுபோய்த் தன்னு
டைய கிரகத்திலே வைத்துக்கொண்டிருந்தான். அ
ப்படியிருக்குமளவில் முன்னந் தானம் வாங்கின
பிராமணன் தப்பிப்போன பசுவை எங்குங் கா
ணாமல் இரண்டாவது தானம் வாங்கின பிராமண
னிடத்திலிருக்கக் கண்டு இந்தப் பசுவானது என்
னுடையதென்று சொல்ல, அதற்கிரண்டாவதுதான
ம் வாங்கின பிராமணனும் என்னுடையதென்றுசொ
ல்ல அப்படி அந்தப் பிராமணர்கள் இருவரும் அந்
தப் பசுவை என்னுடையது என்னுடையதுஎன்றுமா
றுபாடாக விவாதப்பட்டுத் தங்களுக்குத் தானமாகக்
கொடுத்த பார்க்கனென்னும் இராசாவினுடைய ஆஸ்
தான வாயிலிலே வந்து நெடுநாளாய் முறையிட்டலை
ந்து திரிந்தார்கள். அப்படி அலைகின்றவர்களை நீங்க
ள் எங்கே வந்தீர்கள் வந்த காரியமென்னவென்றுகே
ட்குங்கேள்வியில்லாமற் போனபடியினாலே அவ்விரு
வரும் மிக மனஞ் சலித்துக் கோபித்து அந்த இராசா
வைப் பார்த்து, நீயோந்திவடிவாய்ப்பாழ்ங்கிணற்றில்
அளவில்லாத துக்கத்துடனே தலைகீழாகத் தூங்கிக்கொ
ண்டுகிடக்கக்கடவாயென்று சாபஞ் செய்தார்கள். அ
துகண்டு அந்த இராசாவானவன் ஓகோநாம்என்ன கா
ரியஞ்செய்தோம். நம்முடைய அறியாமையினாலே
நமக்கிப்படி அபகீர்த்தியான காரியம் வந்து நேரிட்
டதேயென்றுபயப்பட்டு அந்தப்பிராமணர்கள் இரு
வரையும் நான் செய்த அபசாரத்தைப் பொறுத்து

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இரட்சிக்கவேண்டுமென்று மிகவும் வணங்கி வேண்டி க்கொள்ள, அதற்கவர் இருவரும் இராசாவைப் பார்த்து, நீ இப்படி வெகுகாலம் இருந்து மேல்வருந் துவாபரயுகாந்தத்தில் அவதாரம்செய்யும்மகாவிட்டுணுவாகிய கிருட்டிண பகவானுடைய கிருபாகடாட்ச வீட்சணத்தினாலே உனக்கு வந்த சாபம் நிவிர்த்தியாய்ப்பழயரூபத்தை அடைந்து முன் போலவேயிருக்கக்கடவாயென்று அநுக்கிரகஞ்செய்து தங்களிருவருக்கும் விவாதப் பொருளாயிருந்த பசுவை உத்தமனான மற்றொருபிராமணனுக்குத் தானமாகக்கொடுத்துத் தாங்கள் இருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள். பின்பு அந்த இராசா அவர்களிட்ட சாபப்படியே ஓந்திவடிவாகி ஒரு பாழ்ங்கிணற்றிலே தலைகீழாகத் தூங்கிக்கொண்டு கிடந்தான். அந்த யோக்கியனான இராசனுக்கும் விசாரியாததினாலே அப்படிப்பட்ட தீங்கு வந்து நேரிட்டதென்று சொன்னார். இப்படியுமுண்டோவென்று ஆச்சரியப்பட்டுத் தனக்குத்தானே எண்ணமுற்று நின்ற இலட்சுமணருடைய குறிப்பறிந்துபின்னும் இராமர் இலட்சுமணரை நோக்கித் தம்பி, நீ இதைத்தானோ அதிசயமென்றெண்ணினாய். இதனிலும் அற்புதமான ஒரு கதையுண்டு அதனையுஞ் சொல்லக் கேட்பாய். எப்படியெனில் முன்னமொருகாலம் நம்முடைய குலத்திலுற்பவித்த நிமிச்சக்கிரவர்த்தியென்றுசொல்லப்பட்ட மகாராசன் அநேககாலம் மநுநீதிதவறாமல் தன்னுயிர்போல மன்னுயிர்க்கிரங்கிச் செங்கோற்செலுத்தி இராச்சியபரிபாலனஞ் செய்துவருநாளில் இகப்பிரயோசனங்களெல்லாமடைந்தவராய்ப் பரப்பிரயோசனமாகிய மோட்ச பதத்தை அபேட்சித்தவராய் மகாவனத்தைச் சார்ந்து சத்திரயாகஞ் செய்யவேண்டி அத்திரி பிருகு அங்கிரா வசிட்டரென்று சொல்லப்பட்ட நால்வரையும் வரவழைத்து இந்த யாகத்தைச் செய்விப்பீரென்று சொன்னார். அப்பொழுது தன்னுடைய குலகுருவாகிய வசிட்டமகா முனிவர் இப்பொழுது தேவேந்திரன் யா

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கஞ் செய்விப்பதற்காக நம்மைவரித்திருக்கிறான். அ
ந்த யாகத்தை நிறைவேற்றிப் பின்பு வந்து உன்னுடை
ய யாகத்தை நடப்பிக்கிறோமென்று சொல்லிப்போ
யினார். அவர் அப்படிச் சொல்லக்கேட்டு நிமிச்சக்
கிரவர்த்தியானவர் இந்தவசிட்டனைத்தவிர வேறொரு
இருஷியுமில்லையோ, இவன் இப்படி மறந்துப்போ
ய்விட்டதினாலே என்னுடைய யாகம் நடவாமல் நின்று
போய்விடுமோவென்று ஆலோசித்தவராய் அந்தவசி
ட்டமகாமுனிவருக்குச் சமானமான மகிமையுடைய
கௌதம மகா முனிவரை வரவழைத்து அவர் முன்
னிலையாக நடப்பித்துக் கொண்டிருக்குஞ் சமயத்தில்
வசிட்டரானவர் சுவர்க்கலோகத்திலே தேவேந்திர
னுடைய யாகத்தை நிறைவேறச் செய்திருக்குமளவி
ல் பூலோகத்திலே நிமிச்சக்கிரவர்த்தி கௌதமரைக்
கொண்டு யாகம் நடப்பித்துக்கொண்டிருக்கிறதை
அறிந்து இந்த நிமியென்று சொல்லப்பட்டவன் ந
ம்மை ஒருபொருட்டாகவெண்ணாமல் நமக்குப் பிர
தியாக வேறொருவரை வைத்துக்கொண்டு இப்படி
யாகமுஞ் செய்விப்பானோ அதனையும் அறிகிறேனெ
ன்று அதிதீவிரமாகச் சுவர்க்கலோகத்தினின்று நீங்கி
அந்த யாகசாலைக்குவந்தார். அந்தச்சமயத்திலே நிமி
ச்சக்கிரவர்த்தியானவர் நித்திரைசெய்துகொண்டிரு
ந்தார். அதினாலே வசிட்டரிடத்துக்கு வராதிருப்ப
அப்பொழுது அந்த வசிட்டமகாமுனிவர் நம்மைவே
றுபடுத்தி யாகஞ்செய்விப்பதுமல்லாமல் நாம் வந்த
இடத்தும் நம்மை ஒருஇலட்சியமாயெண்ணாமல் அவ
மரியாதை செய்தபடியினாலேயும் செத்தபிணம்போ
லத் தூங்கிக்கிடந்தபடியினாலேயும் சரீரத்தை விட்டுப்
பிராணன் நீங்கி மரணத்தையடையக்கடவனென்று
சாபஞ்செய்தார். அதுகேட்டு நிமிச்சக்கிரவர்த்தி
நித்திரைசெய்துகொண்டிருந்ததால் இவர் வந்தத
றியாதிருக்கும் என்னை இப்படி அநியாயமாகச் சாப
ஞ்செய்தால் இந்தச் சாபம் இவரைத் தானே அடை
யக்கடவதென்று தன்னைச்சபித்த அந்த வசிட்டருக்கு



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

ப் பிரதிசாபஞ்செய்தார். அந்த இராசன் தபோபலத்திலே சிலாக்கியம்பொருந்திய யாவரினும்மேன்மையான தபோமகிமையுடையவனாதலால் அந்த இராசாவினுடைய சாபத்தினாலே வசிட்டரானவர் மிகவுந் துக்கபயத்தையடைந்தவராய்த் தம்முடைய பிராணன் விடுமென்றறிந்துபிரமதேவரிடத்துக்குப்போய்த் தமக்கு அவமரியாதையாக இராசாவினுடைய சாபம் வந்துநேரிட்டவிருத்தாந்தங்களையெல்லாஞ் சொல்லி இந்தச் சாபத்தினாலே மேலுமேலுஞ் சனனமரணங்களுக்கிடமான சிருட்டிபேதங்களிலே பிறவாமல்இந்தச்சாப நிவிர்த்திக்கேதுவாக வேறொரு சனனமுண்டாகும்படிக்கு உபாயஞ்செய்துஅநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்டார்.

---

## இராம ராவண யுத்தம்.

### (Rama's Contest with Ravana.)

மூலபலச்சேனையும் அடிபட்டிறந்தது கேட்டு இராவணன் காட்டுநெருப்பிலே நெய்மழைபெய்தாற்போல்மேலுமேலும் மனங்கொதித்துச் சீறித் தன்னுடைய மந்திரிகளாகிய மகோதரன்,மகாபாரிசுவன்,விருபாட்சன் முதலானவர்களைச் சேனைகளுடனே யுத்தத்துக்குப் புறப்படச்சொல்லி உத்தரவுகொடுத்துத் தானும் போர்க்கோலங்கொண்டு தேரேறி இலங்காபட்டணம் விட்டு வெளிப்படும்பொழுதே அக்கினிமழைபோல அநேககோடிபாணங்களைச் சொரிந்து பார்த்த இடமெங்கும் பாழாக அளவில்லாத வானரசேனைசளை மடித்துக்கொண்டு வருவதைக் கண்டு சுக்கிரீவன் சுஷேணனைப் பேரணிப்படையிலே நிறுத்தி அங்கதன் முதலானவர்களுடனே சேனைகளை முன்செலுத்திக் கலந்து யுத்தம்பண்ணும்பொழுது மகோதரனையும் மகாபாரிசுவனையும்மிகவும்பிரயாசமான யுத்தம் பண்ணிச் சுக்கிரீவன் அடித்துக்கொன்றான். விருபாட்சனை அங்கதன் வதைத்தான். அப்படி மந்திரிமா

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ர்கள் இறந்ததைக் கண்டு இராவணன் மகா உக்கிர கோபங்கொண்டு இராமனெங்கே எங்கேயென்று தன்னை நாடி வருகிற உக்கிரவேகத்தைக் கண்டு இலட்சுமணன் எதிர்த்தான். அவனையுந் தள்ளிக்கடந்து வந்து மழைபோலப் பாணங்களைச் சொரிந்தபடியே தன்னையடுத்து எதிர்த்த மாத்திரத்திலே தானும் அநேககோடிபாணங்களைச் சொரிந்து அடித்து உருத்திராஸ்திரமுதலான திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகிக்க இராவணனும் பிரதியாக ஆசுராஸ்திரமுதலான அஸ்திரங்களைப் பிரயோகித்தான். அப்படி மகா குரூரமானயுத்தம்பண்ணிக்கொண்டிருக்கையில் இலட்சுமணன் முனைந்து எழுபாணங்களினாலே இராவணனுடைய தேரிற் கட்டிய நரசிரக்கொடியை அறுத்து ஒரு பாணத்தினாலே சாரதியைக் கொன்று ஐந்துபாணங்களினாலே வில்லையும் அறுத்தான். அந்த வேளையிலே விபீஷணன் பாய்ந்து ஒரு தண்டத்தினாலே குதிரைகளையடித்து மடித்தான். அது கண்டு இராவணன் கோபித்து விபீஷணன் மேலே ஒரு வேலை எறிந்தான். அந்த வேலை இலட்சுமணன் மூன்றுபாணங்களினாலே மூன்று துண்டமாக அறுத்தான். அது கண்டு இராவணன் முன்பு தனக்கு மயன்கொடுத்தவெட்டுமணிகட்டிய வேலை விட்டெறிந்தான். அது மார்பிற் பட்டுருவி இலட்சுமணன் நிலத்தில் விழுந்தான். அப்படி மூர்ச்சித்துக்கிடக்கும் இலட்சுமணனைப்பார்த்து விசனப்பட்டபடியே இராவணனுடனே யுத்தம்பண்ணிக்கொண்டு வைத்தியனாகிய சுஷேணனைப்பார்த்து இலட்சுமணன் பிழைக்கும்படி செய்வாயென்றுசொல்ல, அவன் அனுமானை நோக்கி மிருதசஞ்சீவினி ஔஷதம் வேண்டுமென்று சொல்ல அது கேட்டு அனுமான் முன்போல அதிவேகமாகப் பாய்ந்து மருத்துமாமலையைக் கொண்டுவரச் சுஷேணன் அதிலிருந்த ஔஷதத்தைப் பிடுங்கிநசியம்பண்ண இலட்சுமணன் முன்னிலும் அதிகமான பலத்துடனே எழுந்து தன்னைப்பார்த்து இன்னுந் தாழ்ந்திருக்கலாமோ என்று துரிதம்பண்ணி

நெருக்குமளவில் இராவணன் அடிக்கும் பலவேகத்தைப் பார்த்துத் தேவேந்திரன் தேர், குதிரை, வில், அம்பு,வேல்,முதலானவைகளைக்கொடுத்துமாதலியென்னுஞ் சாரதியையும் அனுப்பினான். அவன் தன்னிடத்துக்கு வந்து சேர்ந்து அந்தத் தேரிலேறிக்கொண்டு உலகமெங்கும் நடுங்கும்படி மகாகோரமான யுத்தம்பண்ணுமளவில் இராவணன் கோபித்து அக்கினிமயமாய் யமன்போல உயிரை வாங்கும் ஒரு சூலத்தை எடுத்துவிட்டான். அந்தச் சூலத்தைத் தான் இந்திரன் கொடுத்தவேலாலே அறுத்துப் பாணங்களினாலே குதிரைகளையும் அறுத்து அவனுடையசரீரமுழுதுஞ்சல்லடைக்கண்ணாகத் துளைக்க இராவணன் இளைத்து மூர்ச்சையடைந்தான். அப்பொழுது சாரதி தேரைத் திருப்பி நெடுந்தூரம் கொண்டுபோய் வைத்திருந்தான். அந்தச் சமயத்திலே அகஸ்திய மகாமுனிவர் வந்து இந்த மந்திரபலத்தினாலே சத்துருவைச் செயிக்கலாமென்று தனக்கு ஆதித்தியவிருதயமென்று சொல்லப்பட்ட மந்திரத்தை உபதேசித்துப்போனார். அந்த வேளையில்இராவணன் மூர்ச்சைதெளிந்து பார்த்து இப்படி அவமானமான காரியம் என் செய்தாய் என்று தன்னுடைய சாரதியைக் கோபித்துக்கொண்டு அதிவேகமாகத் தேரை விடச்சொல்லிவிளக்கொளியிற் பாய்ந்திறக்கும் விட்டிற்பறவைபோல் ஒரு நிமிஷத்துக்குள்ளாக வந்து எதிர்த்துக்கொண்டமாத்திரத்திலே பூமிஅதிர, மலைகள் குலுங்க, அண்டம் வெடிபட,ஆகாசம்இருள,சமுத்திரந்ததும்ப, சகலலோகங்களும் நடுங்க,தேவர்களும் பயந்து பிரமிக்க,பூமிஆகாசம் திக்கு கோணங்களெங்கெங்கும் திரிந்து சுழன்று திரும்பி அடர்ந்து மயங்கி அதிர்ந்து சினந்து ஆரவாரித்துத் தாக்கி நோக்கி அஸ்திரபாணங்களினாலே கொடி குடை கொடுங்கை தேர்க்கால் தேருருள் சாரதி குதிரை கவசம்கிரீடந்தனு முதலானவைகள்அடிக்கடி சின்னாபின்னப்படும்படி அடித்துக்கொண்டு பின்னும் பின்னும் ஓயாமல் ஆகாசத்திற்காகாசமும் சமுத்

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

திரத்திற்குச்சமுத்திரமும் எப்படி உவமையோ அப்
படி இராமராவணயுத்தத்துக்கு அதுவே உபமானம்
என்றுதேவர்கள் முதலான எல்லோருஞ் சொல்லி அதி
சயிக்க யுத்தம்பண்ணுமளவில் தேர் சாரதி குதிரைக
ளையும் அறுத்து அம்புவில் ஆயுதங்கள் ஒன்றுமொடா
தபடி அடித்து தலைகளையும் அறுத்துத் தள்ளின மா
த்திரத்திலே அறுத்த தலை கீழேவிழுமுன்னமே அறு
பட்டது ஒருவருக்குந் தெரியாமற் பின்னும்பழையப
டி தலைகள் முளைக்க அப்படி முளைக்குந் தோறும்
நூற்றொருதரம் அறுத்துப் பின்னும் முளைக்கக் கண்டு
அறுத்தறுத்துக் கையும் மனமுஞ் சலித்து இனி என்
ன செய்யலாம். இது என்ன அதிசயமென்றாலோசித்த
குறிப்பறிந்து சாரதியாகிய மாதலி தன்னை நோக்கிச்ச
கலமுந் தெரிந்திருக்கும் நீரும் இப்படி மயங்கலாமோ
முன்னம் ஒருகாலம் பிரமதேவர் இந்திரனுக்குக்கொ
டுக்கஇந்திரன் இனிமேல் இராவணனைச்சங்கரிக்க அவ
தாரஞ்செய்யும் இராமனுக்குக் கொடுப்பீரென்று அ
கஸ்தியரிடத்திற்கொடுக்க அவர் உமக்குக்கொடுத்தபி
ரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யுமென்றுஞாபக
ம்பண்ண அப்படியே பிரமாஸ்திரத்தைப்பிரயோகித்
தமாத்திரத்தில் அந்த அஸ்திரமானது சகலலோகத்தி
லும் உள்ள எல்லோருஞ் சந்தோஷத்தையடைய இரா
வணனுடைய சிரங்களை அறுத்துத் தள்ளி வெற்றிபெ
ற்று மீண்டுவந்து அட்சயதூணீரத்திற் சேர்ந்தது.

---

## அனுமப்படலம்.
### (History of Hanuman.)

வாலியினுடைய பல பராக்கிரம சௌரியமுதலான
மேன்மைகளையும் இராவணனுடைய உத்பத்தி முதற்
கொண்டு வாலியினுடைய வாலிலே கட்டுப்பட்டதுவ
ரைக்கும் உள்ள சரித்திரங்களையெல்லாஞ் சொல்லக்
கேட்டு மிகவுஞ் சந்தோஷத்தையடைந்தவராய்ப் பி
ன்னும் இராமர் அகஸ்தியபகவானைநோக்கி முன்பு நா

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ன் வனவாசஞ்செய்துவருகிறபோது சுக்கிரீவனுக்கு
ம் எனக்கும் சினேகஞ்செய்வித்தும், ஒரு சிறிதான
குளத்தைத் தாண்டுவதுபோலப் பெரிதான சமுத்தி
ரத்தைப் பாய்ந்து தாண்டியும், அப்பொழுதெதிர்ப்
பட்ட சாயாக்கிரகணியென்று சொல்லப்பட்டவளு
டைய குடலைப் பிடுங்கி மாலையாகத் தரித்துக்கொண்
டு அவளை வதைத்தும், அசோகவனத்தைச் சூறையா
டிப் பாழாக அழித்தும், சம்புமாலி முதலானவர்களை
நிலத்தோடே தேய்த்துவதைத்தும், இலங்காபட்டண
த்தை அக்கினிக்கிரையாகக் கொடுத்தும், பின்னும் எ
திர்த்துவந்தசேனைகளையெல்லாஞ் சமுத்திரத்தில் வா
ரிவீசி எறிந்து அழித்தும், சீதையினுடைய பிராணனை
இரட்சித்தும், இப்படிக்கெல்லாம் அவ்விடத்திற் பிர
யாசப்பட்டுஞ் சற்றும் மனஞ்சலியாமல் முன்பு இந்த
க் கரையிலிருந்து தாண்டும்பொழுதுள்ள பலமாய்த்
தானே பின்னும் அந்த இலங்காதீவினின்றும் பாய்ந்து
இவ்விடத்துக்கு வந்து என்னுடைய சோகத்தைத் தீர்த்
தும், சமுத்திரத்திலே அணைகட்டுவதற்கு எவ்வளவு பி
ரயத்தினஞ்செய்யவேண்டுமோ அவ்வளவு பிரயத்தின
முஞ்செய்து சுலபமாகக் கட்டுவித்தும், யுத்தமுகத்
திலே இந்திரசித்துப்பிரயோகித்த பிரமாஸ்திரத்தினு
லே கட்டப்பட்டு அவசமாய் மூர்ச்சையடைந்துகிட
க்கும்பொழுதில் உத்தரதிக்கிலே மகாமேரு பருவத
த்துக்கு வடக்கே வெகுதூரத்திலிருந்த சஞ்சீவிமலை
யைப் பெயர்த்து ஒருநாழிகையளவிற் கொண்டு வந்
துவானரசேனைகளையும் இலட்சுமணனையும் மூர்ச்சை
தெளிவித்து இரட்சித்தும், பின்னும் இராட்சதர்கள்
செய்யும் மாயையினாலே உண்டாக்கப்பட்ட விகாதங்
களையெல்லாம் தீர்த்தும், இப்படிக்கு இன்னம் அநேக
விதமாயுள்ள காரியங்களாலே எனக்கு உபகாரஞ் செய்
தவனாய் அணுவைப்போலவும் மகாமேருவைப்போல
வும் சிறிதாகவும் பெரிதாகவும் தான் நினைத்தபடிக்கு உ
ரூபங்கொள்ளத்தக்க சித்திவல்லமையும் நிறைந்த வித்
தையும் சுந்தரமும் பொறுமையும் நீதியும் சத்தியமு

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ம் விசுவாசமும் பொருந்தி இன்னம் இவைமுதலாயு
ள்ள சிலாக்கிய குணங்களெல்லாம் பெற்று விளங்கும்
இந்த அனுமானுடைய உற்பத்தியும் சரித்திரமும் தன்
னுடைய பலபராக்கிரமந் தனக்குத் தெரியாத கா
ரணமும் விவரமாகச் சொல்லவேண்டுமென்று கே
ட்க, அந்த அகஸ்திய பகவானனவர் இராமனைப்பார்த்
து கேளுந் தசரதநந்தனா, முன்னமொருகாலம் அ
ஞ்சனாதேவிக்கும் வாயுபகவானுக்குங் காரணமகிமை
யினாலே புத்திரனாக அனுமான் பிறந்தவுடனே மாதா
வைப் பார்தது வணங்கி எனக்கு மிகவும் பசியா
யிருக்கின்றது. இந்தப் பசி தீரத்தக்கதாக நான் பு
சிக்கும் பதார்த்தங்கள் என்னவென்று கேட்க, அதற்
கு அவள் குளிர்ந்த வனங்களிலும் சோலைகளிலும் மது
ரமாய்ச் சிவந்து பழுத்திருக்குங் கனிகள் என்று சொ
ல்லி மகனுடைய பசியாற்றவேண்டிக் கனிகள் கொண்
டுவர வனத்துக்குப் போனாள். தாய் வருவதற்கு
முன்னமே மிகவுங் கொடுமையான பசியுண்டாகி வ
ருத்தம் பொறுக்கமாட்டாமற் பரிதாபப்பட்டுக்கொ
ண்டிருக்கிற சமயத்திலே உதயகாலத்திற் சூரியன்உ
தித்தான். அந்தச் சூரியவிம்பத்தைக் கண்டு தாய் த
னக்குச் சொல்லிய சிவந்த கனிவகைகளிலே இதுவும்
ஒரு கனிதானேயென்று நினைந்து சூரியன்மேலே ம
காவேகமாகப் பாய்ந்தான். அப்பொழுது அந்த
வேகத்தைப்பார்த்துக் குழந்தையாயிருக்கிற பருவத்
திலே பிதாவினுடைய பலமும் வேகமும் கருடவேக
மும் பெற்றுச் சூரியன்மேலே இப்படிப் பாய்ந்தா
னல்லவோ, ஆனால் இவன் பலம்பொருந்தி நாளுக்கு
நாட் பிரபலமாவானானால் தம்முடைய சத்துருக்க
ளாகிய இராட்சதர்களெல்லாரும் என்ன துன்பத்தை
அடைவார்களோ என்று தேவர்களெல்லாரும் ஆச்ச
ரியத்தை அடைந்தார்கள். பிதாவாகிய வாயுபகவான்
அக்கினிமயமாயெரிக்குஞ் சூரியகிரணங்கள் சீதளசந்
தனம் போலக் குளிர்ந்திருக்கக்கடவதென்று வரங்
கொடுத்தான். அப்படிக்குப் பாய்ந்து கவ்விக்கொ

ண்டிருக்கும் அனுமானைச் சூரியபகவான் விளையாட்டுக்குழந்தையென்றெண்ணிக் கோபஞ்செய்யாமற் கிரணங்களினாலே தகியாமற் றயவாக மகிழ்ச்சிகொண்டிருந்தான். அப்படியிருக்குஞ் சமயத்தில் கிரகணகாலமானபடியினாலே சூரியனைப்பற்றவந்த இராகுவானவன் அந்தச் சூரியனைக் கவ்விக்கொண்டிருக்கும் அனுமானுடைய பராக்கிரமத்தைக் கண்டு பயந்தோடித் தேவேந்திரனிடத்துக்குப் போய், சுவாமி தேவராசனே, சந்திர சூரியமண்டலங்களைப்பற்ற எனக்கு முன்னே வரங்கொடுத்திருக்க இப்பொழுது வேறொருவனுக்கு நியாயத்தப்பாய்க் கொடுக்கத்தக்கதாக நான் செய்த குற்றமென்னவோ என்னகாரணத்தால் இப்படிக்கு அவமரியாதை செய்வித்தீரென்று முறையிட்டுக்கூறினான். அதுகேட்டு அப்பொழுதேதேவேந்திரன் மிகவுங்கோபத்துடனே ஐராவதத்தின்மேல் ஏறிக்கொண்டு அதிவேகமாகப் போய் அடுத்துநின்று நீ இந்தச் சூரியனைப்பிடியென்று இராகுவை ஏவினான். அவன் சூரியனை அடுத்துவருவதைக்கண்டு அந்த அனுமான்சூரியவிம்பத்தைவிட்டு இராகுவின்மேலேபாய அந்த இராகுவானவன் பயந்து நடுங்கி உளறிக்கொண்டு ஓட்டமாய் ஓடித் தேவேந்திரன் காலடியில் வீழ்ந்து புலம்பினான். அது கண்டு தேவேந்திரனும் மிகவும் உக்கிரமான கோபத்துடனே ஐராவதயானையை மகா பிரசண்டவேகமாகக்கடுக நடத்திக்கொண்டு அனுமான் மேலே சீறிவரும்பொழுதில் அந்த ஐராவதயானையின் முகத்திலே சிவப்பாய் விளங்கும் சிந்துரப்பொட்டு வட்டத்தை இதுவும் ஒரு கனிதானோ என்றெண்ணி அந்த ஐராவதயானையின் மத்தகத்திலே பாயுமளவில் அதைக் கண்டுதேவேந்திரன் பலம்பொருந்திய தன்னுடைய வச்சிராயுதத்தினாலே அடித்தான். அந்த அடியினாலே அனுமான் மூர்ச்சையடைந்து பூமியிலே விழுந்தான். அந்த வேளையிலே அனுமானுடைய பிதாவாகிய வாயுபகவானானவர் இந்திரனைக் கோபித்து இந்த மூன்று லோகங்களையும் கண

ப்பொழுதில் அழிப்பேனென்று சபதம்பண்ணிக்
கொண்டு லோகத்திலெங்கும் வாயுவியக்கமில்லாதப
டிசெய்து தன்னுடைய புத்திரனைப்பார்த்து மிகவும்
விசனத்தையடைந்தவனாய் அந்த அனுமானை எடுத்து
க்கொண்டுபோய் இமயகிரியைச் சேர்ந்து அந்தக் கி
ரியிலே ஒரு பெரிய குகையிற் பிரவேசித்திருந்தார்.
அப்பொழுது உலகமெங்கும் வாயுவியக்கமில்லாத
படியினாலே யானைமுதல் எறும்பு கடையான எண்ப
த்துநான்கு நூறாயிரம் சிருட்டி பேதங்களாயுள்ள சக
ல பிராணிகளும் வயிறு விம்மி மரணயாதனையாகத் து
ன்பப்படுகிற சமயத்தில் தேவர்களும் இருஷிகளும்
போய்ப் பிரமதேவரிடத்திற் சொல்ல அவரும் அந்த
த் தேவர்கள் இருஷிகளுடனே வாயுபகவானிருக்குமி
டத்தைத் தேடி வந்தார். வாயுபகவான் அந்தப் பிர
மதேவரைக் கண்டு எழுந்து போய் மிகவும் புத்திர
சோகவிசனத்தோடே அவர்க்கு நமஸ்கரித்து வணங்
கி நிற்கும்பொழுது பிரமதேவர் அந்த வாயுபகவா
னுடைய விசனந் தீரும்படி தேறுதல் சொல்லி உபச
ரித்து மூர்ச்சித்துக்கிடந்த அனுமானைத் தம்முடைய
கையினாலே தடவி மூர்ச்சைதெளிவித்தெழுப்பி அந்
தப் பிரமதேவரானவர் தம்முடனே வந்த தேவர்களை
நோக்கி நீங்களெல்லாரும் இந்த அனுமானுக்குவரங்க
ள் கொடுப்பீரென்றுஅருள்செய்ய அப்படியே சூரிய
பகவான் தன்னுடைய கிரணகாந்தியிலே நூற்றிலொ
ருபங்கு பிரகாசமுண்டாகக் கடவதென்றும் சகல
வித்தைகளையுஞ் சுலபமாகக் கிரகிக்கத்தக்க தீட்சண
புத்தியுமுண்டாகக்கடவதென்றும் வருணபகவான் யு
த்தகளத்திலே சத்துருக்களாலே என்னுடைய பாச
த்தாற் கட்டுப்பட்டாலும் மரணமடையாதிருக்கக் க
டவனென்றும் யமதருமராசன் என்னுடைய கால த
ண்டத்தினால் மரணமடையாதிருக்கக் கடவனென்று
ம் குபேரன் தன்னுடைய கதாயுதத்தினாலே சாவாம
லிருக்கக்கடவனென்றும் உருத்திரமூர்த்தி தம்முடை
ய சூலாயுதத்தினாலே அழிவில்லாதிருக்கக்கடவனென்



Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

றும் விசுவகருமாவானவன் சகல தேவர்களுடைய அஸ்திர சஸ்திரங்களினாலே அபசயப்படாமலிருக்கக்கடவனென்றும் வரங்கொடுத்தார்கள். பின்பு பிரமதேவர் தம்முடைய பிரமதண்டத்தினாலே நாசப்படாமலிருக்கக்கடவனென்றும் வரங்கொடுத்து அனுமானுடைய பிதாவாகிய வாயுபகவானை நோக்கி உன்னுடைய புத்திரன் இனிமேல் இந்த லோகங்களைப் பிடித்துக் கொடுமைசெய்யும் இராவணனுடைய இலங்காபட்டணத்தைஎரித்தழித்து இராட்சதர் குலத்தைவேரறுத்துஇராமன் சந்தோஷத்தை அடையும்படிக்கு உபகரித்து அவருடைய அநுக்கிரகத்தினாற் பிரமபதத்தை அடையக்கடவனென்றும் அநுக்கிரகித்தார். இவ்விதமாகப் பிரமதேவர் முதலாயுள்ள சகல தேவர்களும் வரங்கள் கொடுத்துத் தங்களுடைய லோகத்தைச் சேர்ந்தார்கள். பின்பு அப்படிக்குப் பிரமதேவர் முதலாயுள்ள சமஸ்ததேவரிடத்திலும் பெற்ற வரத்தினுடைய மகிமையினாலே தமக்கு நிகரானவர்கள் ஒருவருமில்லையென்று அகங்கார கர்வத்தைஅடைந்தவனாய் இதாகிதங்கள் ஒன்றுந் தெரியாமல் மதோன்மத்தனாய்த் தபோதனர்களாகிய மகருஷிகள் வாசஞ் செய்துகொண்டிருக்கும் ஆச்சிரமங்களிலும் யாகசாலைகளிலும் புகுந்து அவ்விடங்களிலுள்ள ஓமத்திரவியங்களாகிய நெய் பால் தயிர்களைக் குடித்தும் கந்த மூலபலாதிகளைத் தின்று எச்சிலாக்கியும் சந்தன புட்பங்கள் முதலானவைகளை எடுத்தெறிந்தும் கமண்டலம் முதலான பாத்திரங்களை எடுத்து உருட்டி உடைத்தும் இப்படிக்குப் பல பல விதமான பாவிய சேட்டையாய் ஓம யாககாரியங்களுக்கு விகாதஞ் செய்துகொண்டு திரியுங்காலத்தில் ஒருநாள் முனிவர்கள் எல்லோரும் நாடோறும் அனுமான் செய்கிற துட்ட சேட்டைகளைப் பார்த்துச் சகிக்க மாட்டாதவர்களாய் மிகவுங் கோபங்கொண்டு இந்த அனுமான் சகல லோகங்களையும் ஒரு நிமிஷத்திலே அழிக்கத்தக்க மகிமைபொருந்திய பிரமதண்டத்தினாலும்மரணமில்

லாத வரம்பெற்றவன் மிகவும் பொல்லாதவனாகவுமி
ருக்கிறான். இவனை யாவராலும் என்னசெய்யலாகும்.
ஆனாலும் இவ்விதமாகத் தண்டித்து அடக்குவோமெ
ன்றாலோசித்துஎல்லோரும்ஒருவாக்காகத்தன்னுடை
ய பலபராக்கிரமந் தனக்குத் தெரியாமற் போகக்க
டவதென்று சாபஞ்செய்தார்கள். அப்படி அந்த
மகருஷிகள் செய்த சாபத்தினாலே விஷப்பல் பிடுங்க
ப்பட்ட பாம்புபோல அனுமான் தன்னுடைய அகங்
கார கருவமும் கோபமும் அடங்கிச் சாந்தத்தை அ
டைந்தவனாகி அந்தத் தபோதனர்களுக்குப் பயந்து
நாம் என்ன காரியஞ் செய்தோம், நம்முடைய அறியா
மை எப்படியிருந்தது. அல்லாமலும் இந்திரன் மு
தலான தேவர்களுடைய சாபமும் பெரிதல்ல. அந்
தத் தேவர் வணங்கத்தக்க பெருமையுடையவர்களா
யிச் சகல லோகங்களையுஞ் சிருட்டி திதி சங்காரஞ் செ
ய்கிற அதிகாரிகளாயுள்ள பிரமதேவர் விட்டுணுபகவா
ன் உருத்திரமூர்த்தியாகிய திரிமூர்த்திகளுடைய சா
பமும் பெரிதல்ல. அந்தத் திரிமூர்த்திகளுந் துன்
பப்படும்படி சாபஞ்செய்கின்ற தபோதனர்களுடை
ய சாபத்தைக் கடந்தாரொருவருமில்லை. அப்படி
யிருக்க நாம் இந்த மகருஷிகளுக்கு அபசாரத்தைச்
செய்தவனானேமேயென்று ஆலோசித்துத் தன்னைத்
தானே ஒறுத்துக்கொண்டு வெட்கத்தை அடைந்தவ
னானான். அதன்பின்பு முன்னமொருகாலம் வாலி சு
க்கிரீவனாகிய இருவரும் தாரையின்பொருட்டு ஒருவரு
க்கொருவர் விரோதப்பட்டுச் சகல லோகங்களிலுஞ்
சென்று வெகுகாலமாய் யுத்தம்பண்ணிக்கொண்டுவ
ரும் நாளில் ஒருநாள் சுக்கிரீவன் அந்த வாலியினாலே
அடிபட்டு ஆற்றாமல் இளைத்தோடி அடைக்கலமாகப்
புக அந்தச் சுக்கிரீவனுக்கு அபயங்கொடுத்து இரட்சி
த்த மதங்கமகாமுனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்
து அவ்விடத்திலிருக்குஞ்சுக்கிரீவனைப் பிராணசினேகி
தனாகத் தோழமைகொண்டு அந்த மதங்கமாமுனிவரை
க் கண்டு வணங்கிச் சேவித்து அனுமதிபெற்று வித்தியா

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ர்த்தியென்று சொல்லப்பட்ட படிப்போனாகி வேத வேதாங்கமுதலான சகல சாஸ்திரங்களும் ஓதியுணர்ந்து பின்பு சூரியபகவானிடத்துக்குப் போய் எனக்குஐந்திரவியாகரணம் போதிக்க வேண்டுமென்று கேட்க அதற்கவர் நாம் மேவியிருக்கும் இந்த இரதமானது ஒரு சுவாசகாலத்துக்கு இருபததோராயிரதத்று நூறு யோசனை தூரம் அதிவேகமாகச் சதாகாலமுஞ் சஞ்சரித்துக்கொண்டிருப்பதால் ஓரிடததிலிருந்து பாடஞ்சொல்வதற்குச் சாவகாசமில்லையே. இப்படியாகவிருக்கும் எம்மிடததிலே கற்றுக்கொள்வதற்கு வல்லமையுண்டாகில் ஓதுவிக்கிறோமென்று சொல்ல அதற்கு அனுமான் சூரியபகவானைப்பார்த்துத் தேவரீருடைய அநுக்கிரக விசேஷத்தினாலே உம்மிடத்திலே இந்த வித்தைகற்றுக்கொள்வதற்கு எனக்கு வல்லமையுண்டாயிருக்குமென்று சொல்வி உடன்பட்டுக் குருவினிடத்திலெதிரேயிருந்து பாடங்கேட்கிறபடிக்குச்சூரியபகவானுக்கு எதிர்முகமாகவே அந்இரத வேகத்துக்குப் பின்னிடாமல் ஆகாசமார்க்கத்திற் பாய்ந்தபடியாய் ஆறுதினத்திலே அந்த ஐந்திரவியாகரணமுழுதுங் கற்றுக்கொண்டான். அன்றியும் தயாளத்திலும் சாந்தத்திலும் சத்தியத்திலும் ஞானத்திலும் நிகருவகுணத்திலும் பிரயத்தினம்பண்ணின காரியங்களை விகாதப்படாதபடி முடிக்கும் வல்லமையிலும் தம்பினோர்களைப் பாதுகாக்கும் மனோதிடத்திலும் இவனுக்குச் சமானமானவர்கள் ஒருவருமில்லை. இவனாலே தருமங்களெல்லாம் அபிவிருத்தியாய்த் தேவர்களெல்லாரும் சௌக்கியத்தை அடைந்தார்கள். பாபங்களெல்லாம் தேய்ந்து இராட்சதர்களெல்லாருந் துக்கத்தையடைந்து அழிந்தார்கள். இன்னும் அளவில்லாத மேன்மைபொருந்திய இந்த அனுமானானவன் உம்முடைய திருவடிப்பணிவிடையை விரும்பி உம்மை விட்டு நீங்காதிருப்பானாகில் உம்முடைய குணத்துக்குங் கீர்த்திக்குஞ் சமானமுண்டோவென்று இப்படி அனுமானுடைய சரித்திரங்களெல்லாம் இ

Digitized by Google Original from NEW YORK PUBLIC LIBRARY

ராமனுக்குத் தெரியச் சொன்னார். அப்பொழுது அவ்விடத்திலுள்ள மகருஷிகளெல்லாரும் இராமனைப்பார்த்து எங்களுக்கு விதியாய் விதித்திருக்கப்பட்ட நித்திய நியமாதிகாரியங்கள் அநேகமிருந்தாலுஞ் சதாகாலமும் உம்மைவிட்டுப் பிரிந்திருப்பதற்கு மனங்கொள்ளவில்லையென்று சொல்ல, அதுகேட்டு இராகவன் அந்த மகாமுனிவர்களை நோக்கி நீங்கள் எவ்விடத்திலிருந்தாலுமென்ன உங்களுடைய ஆசீர்வாத அநுக்கிரகமொன்றுமே வேண்டுவது. உங்களுடைய தபோமகிமையினாலேயல்லவோ எங்களுடைய இராசரிக்கமும் லோகபரிபாலனமும் உண்டாகத்தக்கன, ஆனதால் நீங்கள் நாடோறுங் காலநியமங்கள் அதிக்கிரமியாமல் நித்திய நைமித்தியமான சற்கருமாநுட்டானங்கள் வழுவாமல் நடத்திவருவதே உங்களுடையபாரம். உங்களுடைய ஆச்சிரமங்களுக்கு எழுந்தருளலாமென்று உபசரித்துவணங்கிப் பின்சென்று அனுப்பச் சந்தனாசலவாசராகிய அகஸ்தியபகவான் முதலான மகருஷிகள் எல்லாரும் ஆநந்த சந்தோஷத்தை அடைந்தவர்களாய் இராகவனுக்கு அநேக ஆசீர்வாதஞ்செய்து வாழ்த்தித் தங்களுடைய வாசமாகிய ஆச்சிரமங்களைச் சேர்ந்திருந்தார்கள்.

# PANCHATANTRAKATHEI.

# பஞ்சதந்திரக்கதை. *

### அசம்பிரேட்சிய காரித்துவம்.

(Acting without deliberation.)

சோமசருமன் அரசன் மக்களை நோக்கி யாவனொருவனுடைய தீச்செயலைக் கண்ணுற்றாயினுஞ் செவியுற்றாயினும் அறிவுடையோன் அதைப் புரியலாகாது. அங்ஙனமாகையில் வெள்ளறிவனென்னும் பெயரிய ஒரு மயிர்வினைஞன் மணிபத்திரனென்போனது கருமங் கண்டுழித்தேராமல் அங்ஙனம்புரிந்து இடருற்றனனென அதைக் கேள்வியுற்ற இளங்குமாரர் அஃதெவ்வாறு இயம்புதியென வினவ ஆசிரியனுரைக்கலாயினான்.

அவாசிக்கண்ணதாய பைடணபுரிவாசியாகிய மணிபத்திரனென்போன் நன்னெறி பற்றி ஒழுகலானுளதாய நல்குரவாற் பரிபவமுற்று இவ்வறுமை கெட்டது சீச்சீ எனெனின் தயை சாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றனவென்று கணந்தோறும் ஆகுலித்துக் குடும்பபாதுகாப்பின் எக்கத்தினால் அறிவு மழுக்கமடைகின்றது. தானியமுதலியபொருளிலாவீடு இடுகாடொக்கும். ஒருவன் கல்வி முதலிய குணச்சிறப்புற்றோனாயினும் மநுசரெண்ணிக்கையிலுளான். இங்ஙனம் பலவகைத்தாயகவற்சி மிடிமையினால் எய்துகின்றதாகலாற் பட்டினியிருந்து உயிர் துறப்பலெனத் துணிந்து மணிபத்திரன் கண்வளர்கையிற் பதுமநிதி நீத்தோன் படிவமாய் அவன் கனவிலடைந்து யான் உன் ஒழுக்க

* தந்திரம்—பலகாரியங்கட்குப் பொதுவாய ஒரு காரண ஏது.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

த்தாற் கட்புலனாக நாளை இவ்வுருவத்தோடு வருவேன்
அப்போழ்து என் சென்னிமேற் றண்டத்தாற் புடை
ப்பையாயின் யான் குன்றாப்பொற் குவையாவேனெ
னக் கேட்டு அவன் துயிலொழிந்து இக்கனவுண்மை
யோ அன்றேலிஃதெப்போழ்தும் எமக்குளதாய பொ
ருட்சிந்தையின் றோற்றமோவென்று இங்ஙனம் மறு
நாட் கருதிக்கொண்டிருக்குங்கால் இரவிற் கண்டாங்
குவந்த அந்நீத்தோனைக் கண்டு நிகழ்ந்த கனவு மெய்
யெனத் துணிவுற்று அவன் சிரமேல் ஒரு தண்டங்கொ
டுதாக்க அவன் பொன்மயமாய் ஒளிவிட்டுநின்றமையா
ல் ஒன்றிற் பொதிந்து வீட்டில் வையாநிற்புழி அவனில்
லாட்கு நகங்களைந்து கொண்டிருந்த மயிர்வினைஞனை
நோக்கி உனக்குச் சிறிது அருத்தந் தருவேன் இவ்வற்பு
தத்தை யெங்ஙனுஞ் சிறிதும் புலப்படுத்தற்கவென வ
ற்புறுத்திவிடுக்க அவன் அந்நெறி நிற்பலெனமேற்கொ
ண்டு வீட்டிற் சென்று அறிவின் சிறுமையாற் றன்னுளா
ராய்வாயினன். அஃதெங்ஙனமெனின் வைகறையிலொ
ரு துறவியை அழைத்து வந்து அன்னோன் மண்டையிற்
கோல்கொண்டறையின் அவன் சுடர்விரிபசும்பொனா
வானெனத் தேறி, மற்றைநாள் துறவிகள்குழுவிற்சென்
று மிகவணங்கி நீவிர் எத்திறத்தோர்க்கும் அறிவுணர்த்
திக்கரையேற்றா நிற்கின்றனீர். மற்றும் எவ்வெவர் இல்
லத்தும் பிச்சைக்கு ஏகாநிற்கின்றீர் ஆயின் இத்தினம் நா
யினேன் சிறுகுடிலுக்குத் தேவரீர் திருக்கூட்டத்தோ
டு எழுந்தருள்வீராகவென, அவர்களிற்றலைவன் இம்
மாசுதீர்ப்போனை நோக்கி நாடோறும் அந்தணர் உ
ன் மனைக்கு வாராநிற்க நீ இற்றைக்கு எமக்கேன் இயம்
புகின்றனை. அவ்வேதியரையே அழைபாயென அக்கா
லநாவிதன் நும்மாட்டுப் பேரறச்செயல்களிருக்கின்
றமையான் அறிகின்றேன் ஆகலால் நீவிரென் வேண்டு
கையை எட்டுணையும் மறாமற் றிருவுளம்வைத்தருள்வீ
ரெனப் பணிவாகமொழிந்து அவர் காரத்தைப் பற்றி
இல்லிற் கொடுவந்து அம்முனியின் கபாலத்திலுலக்
கையாற் சாத்தினவளவில் அவன் களைத்து நிலத்தில்

அடியற்ற பனைபோல் வீழ்ந்தனன். இதற்குள் தப
சிக்குளாம் வந்து மெய் மறந்துகிடக்கின்றவனைப்
பார்த்தளவிற் பேரிரைச்சலிட இக்கலிபலியை அவ்வூ
ராள்வோன் காலாள்கள் கண்டு ஆண்டெய்தி அந்நா
விதனைப் பிணித்துத் தன்றலைவன் பாற் கொடுபோய்
விட அவ்வூராளி மஞ்சிகனை நோக்கி இஃதென் செய்
தனையென உறுக்கி வினவ அம்மங்கலன் மணிபத்திர
ன் அகத்துக்கண்டாங்குடான் செய்தனனென, அத்த
லைவன் அவ்வணிகனை விளித்து உன் பால் நிகழ்ந்ததெ
ன்னையோவென அவன் ஒன்றுமுரையாதிருந்தனன்.
அதன்மேல் அதிகாரத்தலைவன் அம்பட்டனைப் பார்த்
து இவன் ஆராயாமல் இக்கருமம் புரிந்தனனாகையா
ல் இவனைக் கழுவேற்றுக. இங்ஙனம் முன்னொரு
பார்ப்பினி பராமரிசியாமலியற்றின கருமத்தால் மூத்
தா * வைக்குறித்து ஆகுலித்தாளென மணிபத்திரன்
இஃதெங்ஙனம் அருள்வாயென அவ்வூராளி சொல்
வானாயினான். உச்சயினிபுரத்தில் வதிந்த தேவனாமவே
தியனென்போன் மனையோடு இல்லறநடாத்துநாளிற்
குழவியில்லாக் குறைவால் இருவரும் ஓர் கீரிப்பிள்ளை
யை மைந்தனைப்போற் கருதிவளர்ப்புழி ஒரு மகவு
ண்டாயிற்று. அம்மதலையை ஓர் நாள் தூங்குவித்துக்
கணவனைப்பார்த்துயான் உதகத்தின்பொருட்டுச் செ
ல்லாநின்றேன் நீர் நங்கான் மூலையைப்பார்த்திரும் ஓர்
வேளை கீரிகடிக்குமென்று இங்ஙனம் வகுத்துத் தண்
ணீர்க்குச்செல்லப் பின்னர்அக்குழந்தை தொட்டிலிற்
கண்வளர்ந்தமையறிந்து அவ்வந்தணனும் ஓர் தடாகக
ருமவயத்தனாயப் புறஞ்செல்ல அத்தருணத்தில் ஒரு
கிருட்டிண சர்ப்பம் பிலத்தினின்றும் புறம்போந்து
தொட்டிலின் மேற் செல்லாநிற்க அதைக் கண்ணுற்ற
நகுலம் அதை அக்கணமே விரைந்து பற்றி உதறிக்
கொன்று பலகண்டங்கண்டு குருதியாற் பூசுற்ற முகத்
துடனே தனது ஆற்றலைக்காட்ட விரும்பி விரைந்து
துவாரமுகமாக வருகையில் வந்தபார்ப்பினி செந்நீரா
ல் நிறைந்த அதன் வதனத்தைப் பார்த்தளவில் அது

* மூத்தா, மூடத்துவம்.

நுன் பிள்ளையைக் கடித்து மடித்ததென்று உள்ளித்துள்
ளித் தனுக்குற்ற நீர்க்குடஞ் சிதைவுறும்படி அதன்
றலைமேற்போட்டுக்கொன்று உடனே உட்புகாநிற்கை
யில் மகன் உறங்குதலையும் அருகே கரும்பாம்பின் துணி
க்கைக்குவையையுங் கண்டு அந்தோ கெட்டேன்யானெ
ன்னருங்குழவியை நன்காராய்வின்றிக் கொலைசெய்தே
னெனச் சோகமுற்றுப்புலம்பாநிற்புழி அவள் தலைவ
ன் ஆண்டெய்திக் குழந்தை இதோ இருக்கையில் நீவெ
றுமையென மகவிழந்தேனென்று என் கழறிக் கலுழ்
கின்றனை என்னடி பேதாயென, மனைவி நீர் யாதோ
பேர் அவாவால் என் மொழிதள்ளிப் போனமையால்
அதன் பயன் இதோ வாய்த்தது. இது மிக்கவாவினன்
முடிமேற் சக்கிரஞ் சுழல்றதை யொத்ததென, அவன்
அஃது எவ்வணம் உரைத்தியென, உரைப்பாளாயினாள்.

அமராவதிநகரத்து இன்புற்றிருந்த வேதியர் நால்வர்
மிடியாற்றுன்புற்று இப்போழ்து யாம் அடைந்த பொ
ருளின்மையை இன்மையாக்குமிட நாடிச்செல்வோமா
க. பொருளில்லார்க்கு வாநடுவதிதலினும் இன்பிலையெ
ன்று இங்ஙனங் கடைப்பிடித்து நால்வரும் மறுதேய
ம்போர்காநிற்கையில் சிப்பிரா நதிக்கரையணித்தாகப்
பைரவாநந்தியென்னும் யோகியொருவன் எல்லாம் வ
ல்லோனாய் வீற்றிருக்கின்றனனென அறிந்து அம்மடத்
தில் அவனுழைச்சென்று இயன்றமட்டும் பூசிக்க அத்து
றவி இவர்கள் வழிபாட்டிற்கு இரங்கி உம் வரவின் கார
ணம் எதென அவர்கள் அடிகளே எம்மை நலிகின்ற ந
ல்குரவைத்தொலைப்பான் மிக்க பொருள் விழைவால்
எந்நாடுதுறந்து புறம்போந்தனம். ஆனால் அப்பொ
ருட்குவை துணிவின்செய்கையாலன்றி எய்துவதன்று
தலின் இதனிமித்தஞ் சார்துணையும் முயலவேண்டுமெ
ன்று துணிந்து ஈண்டுறஞ் சரணடைந்தோம். இனி
த்தேவரீர் எம் விழைவை முடிப்பீர் மறுப்பீரேல் எம்
உயிரை நும்பால் விடுப்பேமென யோகி இவர்கள்
பரபரப்பையுங் கடைப்பிடியையும் உணர்ந்து நான்
கு சித்தியைச் சிந்தித்து அன்னோரை நோக்கி நீவிர்



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இமயகிரி நெறிபற்றிப் பிசகாதுபோமின். போ
வுழி எவன் வர்த்தி ஆண்டு விழுமோ அவற்கு ஆண்டு
சித்தியாமென்று உரைத்து அவர்கள் தலைமீது நான்
கு திரிச்சிலைகளை வைத்தபின் அப்பொன்விருப்போ
ர் அங்ஙனம் அவர் ஆணையைச் சிரமேற்றாங்கி இமய
மலையிடத்திற்போகச் சிறிதாறுகடக்கையில் ஒருவன்
வர்த்தி வீழ்ந்தது. அக்காலை அன்னவன் அங்குத்
தோட்டுப் பார்ப்புளித்தாமிரக்கனியா இருக்க அவன்
றனை விட்டுநடந்த எனையோரை மித்திரரே, நும் அவா
க்கெடத் தாம்பிரங்கொண்மினெனக் கேட்டு மூவரு
ம் பேதாய் இஃதால் என்ன பயன். இஃது எத்துணை
ப்பெறினும் நம்மிடுமை எட்டுணையும் அகலாதாதலா
ன், யாம் முன்செல்லுதுமென உரையாடி அவர் முற்
செலாநிற்க, அவன் தனது ஆற்றலளவு செம்புவாரி
க் கொடு வந்த நெறிசென்றனன். பின்னர் முன்னர்க்
கூறிய மூவரும் ஓர்கூப்பீடு சேய்மைபோவுழி அ
ங்கு ஒருவன்றலைத்திரிவீழ அவன் அங்ஙனந்தொட்டு
மற்றோரை நோக்கி இவ்வெள்ளிகளைக் கைக்கொடுமீ
ள்வோமென அவ்விருவரும் முற்படப்பொற்குவை
யிருக்குமாகலால் யாம் போகுதுமென, அவர் போ
யபின் அவனும் வெண்பொன்னிராசியிற் றன்வலிக்கு
இயன்றன சுமந்து சென்றனன். பின்பு அவ்வெஞ்
சிய இருவரும் நடக்கையில் ஒருவன் சிரத்திரி நிலத்
தில் வீழ்வுற அவன் தோண்டிக்காண்புழிப்பொ
ற்றிரளிருந்தமையான் அவன் களிப்பின்பெருக்கில் அ
மிழ்ந்தினவனைய் நண்பனே, நம் இச்சைமட்டுஞ்சொ
ன்னத்திரட்கொடுசெல்லுதும் வருதியென அப்பே
ராசைப்பேதை அறிவிலாய் முன்னே மணித்திரளிரு
ப்பனவாம். ஆதலால் நான் செல்வனென, பின்பு அ
வன் யான் இச்செம்பொன் ஏற்றுக்கொண்டு உன்
வரனோக்கிக்கொடு இருப்பன். நீ விரைவில் வருதி
யென அவன் அங்ஙனமாகவென்று அவண் விட்டு அக
ல்வுழிவெயிலின் வருந்திப் பசி நீர் வேட்கையாற் சித்
திநெறிதப்பி இவன் அவண் உழல்கையில் அங்கொரு

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

மனிதன் தலையில் ஒரு சக்கிரஞ் சுழலவும் அவன் உடலெங்குஞ் செந்நீரான் மூழ்கியிருக்கவுங் கண்டு அவனை நோக்குற்று, நீ யாவன் உன் தலைமேல் இந்நேமி சுழல்வதென்னை என்று இம்மாற்றம் வினவிய அளவில் அவ்வாழி இவன் உச்சிமீது வந்திருக்க, அவ்வேதியன் துணுக்குற்று இதென்னை கிணறுவெட்டப் பூதம் பிறப்பட்டாற்போலாயிற்று எனக் கவலையுற்று இந்நேமி என் மத்தகத்தின் மீது உறுவதென்னையென முன் சக்கிரி மொழியலுற்றனன். இது காறும் எனக்கு அநுபவமிருந்தது. இக்காலையின் மற்றொருவன் சித்தித்திரியோடெய்தி உசாவுவன் அப்போழ்து இவ்வாழி அவன் தலையைப் பற்றிக்கொளுமென்று எனக்குக் குபேரன் வரம் இருக்கின்றதென அச்சக்கிரத்தலைப்புதியோன் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல் எனக்கு ஆயிற்றென்று தன்னிற்கவன்று நெட்டுயிர்ப்பெறிந்து பண்டையநேமித்தலையனை நோக்கி நீ இங்கெய்தி எத்துணைநாளாயினை விளம்புதியென, அவன் எனக்குக் கால வரையறை தெரியாது. ஆயின் இராமன் அரசியற்றுங் காலையில் நான் மிடிபட்டு இங்கு இச்சக்கிரத்தாற் பிடிபட்டனனென அதைக் கேட்ட வேதியன் இங்கு வல்சிநீர் தருபவர் எவரென, பூர்வச்சக்கிரி பசிதாகம் இவ்வுழிவருத்துதலில்லை. முழுதும் இத்துன்பேறுகாவேண்டும். இஃது நிதிக்கோனிதியைக் கவர்வான் வருபவர்க்கு அச்சுறுத்தும்பொருட்டு வைத்திருக்கின்றது. இவ்வச்சத்தால் யாவரும் இங்கு வாராரென்று இங்ஙனம் நிகழ்வன யாவுஞ் சொல்லி, இப்போழ்து என் மெய்க்கு ஆற்றப்பெறாத வேதனை உளதாயிற்று. ஆகலால் நான் செல்வனெனச் செல்வுழிச்சென்றனன். பின்னர் முன் கூறிய சுவர்ணசித்தி சொல்லியாங்கு நெடுநேரம் இவன் வருநெறி நோக்குற்றிருந்துங் காணாமையால் தேடி வந்து அவன் சென்னியிற் சக்கிரஞ் சுற்றுகின்றமை கண்டு ஐயுற்று அருகெய்தி நண்பனே இஃது என்னை என்னையெ

ன அவன் இஃதுபேராசையின் பயனெனச் சுவர்ணசித்தி ஒகோ இது பிள்ளைவரத்துக்குப் போன இடத்திற் புருஷனைப் பறிகொடுத்தாற்போலாயிற்றே எனச் சற்றுக் கலங்கிப் பின் வெள்ளறிவோர்க்குக் கல்விப்பயிற்சி சிறிதுளதாயிற் பிறன் அறிவைக் கேளாது செத்த சிங்கத்தை உயிர்ப்பிக்கின்றவர் போற் கெடுறுவார்களென அதைக் கேட்டுச் சக்கிரதரன் அஃதெங்ஙனமென வினவப் பொன்வாய்ப்பினன் இறக்கின்றனன்.

துளசாபுரமென்னும் மூதூரில் நால்வர் ஒருசாலைமாணாக்கராய்க் கல்வி பயில்கையில் அவர்களின் மூவர்க்கும் மந்திரவித்தை கைவர அப்போது அவர்கள் அரசனையடுத்துப் பெரும்பொருள் ஈட்டுதலன்றோ வித்தையுணர்ச்சிக்குப் பயனென, அது கேட்டு அவருள் ஒருவன் வாருங்கள், நம்முள் இவ்வொருவன் கல்வி அறிவிலனாகலான் இவற்கு ஈட்டுநம்பொருளிற் கூறுகொடேம் ஆதலால் இவன் இந்நொடியிற்றனே தன்னில்லத்திற்கே ஏகற்பாலனென, அதைக் கேட்டு மற்றொருவன் இவன் கல்விகல்லானாயினும் இளமை தொட்டு நம்மோடு விளையாட்டயர்ந்தோனாகினான். அன்றியும் நம்மினும் உலகநடையிற் றேர்ந்தவன். அரசன் மாட்டு உலகநடை அறிந்தவனினுங் கல்வி மாத்திரம் பயின்றோன் புகழ் எய்தானாதலால் இவற்கு நாவிலோர்கூறு கொடுக்குதுமென, அதை எவரும் ஒத்துப் பின்பு நால்வரும் வேற்றுத்தேயநோக்கிப்போவுளி அங்கே ஓர் அடவியில் ஓர் உயிர்நீத்த அரிமாகிடந்தமைகண்டு ஒருவன் நாம் பிழைப்பிக்கக் கற்ற வித்தையை இவ்விறந்ததன்பால் இயற்றித் தெளிவோமென, அதை உலகநடைவல்லோன் கேள்வியுற்று இவ்வரிமாவைச் சீவிப்பிப்பின் அஃதெல்லோரையுந் தின்றுவிடாது. இதன்பாற் பரீக்கை செயல் ஒழியற்பாலதெனப் பலவகையான் மறுத்தனன். அம்மூவரும் அந்நன்மொழியை எறிந்து செருக்கினால் அச்சிங்கத்தை உயிர்ப்பிக்கத்தொடங்க மற்றவன்

இத்தகுதியில்செயற்குச் சதுரனாவான் செய்மையாக
ற்பாலனென்று உரைத்து அவன் நீளப்போய் ஓர் நெ
டுமரத்தின்மிசையிருக்கப் பின்னர் இவர்கள் அம்மறவி
லங்குக்கு உயிர் தந்தமாத்திரத்தில் அது மூவர் ஆவி
யையும் வாங்கிற்று. ஆதலாற் கல்வியினும் அறிவு
பெருமையதென அப்போது சக்கிரி இஃதுகாரண
மன்று, எனெனில் அறிவுடையோன் வீட்டிற் பலகா
ப்பமைத்திருப்பினும் நாசமுறுகின்றான். பேதை
யாயினான் காட்டகத்தில் தனித்திருந்தும் உய்கின்றன
ன். முன் ஆயிரம்புத்தி மல்லார்தலையும் நூறு
புத்தி தொங்கினதையும் ஒருபுத்தி நீரில் விளையாட்
டயர்ந்ததையுங் கேட்டிலையோவென, பொன்வா
ய்ப்பினன் அஃதெவ்வாறு அறைதியென, நேமிதிரித
லையன் விடைவிடுக்கலாயினான்.

மகததேயத்தில் ஓர் மலர்ப்பொய்கையில் அறிவா
யிரத்தன் நூறறிவன் என்றிரண்டுமீனங்கட்கும் ஓர
றிவனென்னுந் தவளைக்கும் நட்புளதாயிருக்குங்கா
லையில் ஓர்திவசம் ஆண்டு ஓர்வலையன் வந்து பித்
றைஞான்று ஈண்டுள கொழுமீன்களை வலையெறிந்து
கவர்வேனாகவென்று உரைகூறி இறந்தமையை அறிவு
ற்ற அம்மண்டூகந் தன்னுற்றார்க்கு அறிவுறுத்துழி அ
றிவாயிரத்தன் பகர்வனாயினான். நான் நீர் நடைப
லவுங் கற்று வல்லேனென, நூறறிவன் யாம் நிலைபெ
யரலாகாது. யாது ஆகற்பாலதோ அஃதீண்டேயா
குகவென, அதைக்கேட்ட தவளை, வாரீர் நட்டோரே
நான் இதோ போகின்றேன். நீவிரும் நடமினென
அவ்விரண்டும் நீ ஓரறிவனாகின்றனையாகலாற் போ
வையானாற் போ. யாம் வருவேமல்லேம் என, பி
ன் அத்தவளை தன் குழுவோடு வேறிடம்போயிற்று.
மறுநாட் செம்படவன் வீசிய வலையிற் சிக்கிய பற்ப
ல மற்சியங்களோடு அகப்பட்ட அறிவாயிரத்தனைத்
தலைமேற் சுமந்தும் நூறறிவனை வாலைப்பற்றியும் ந
டக்கையில் இதை ஓரறிவன் கண்டு தன் பெண்டி
ரை நோக்கி அறிவாயிரத்தனுக்கும் நூறறிவனுக்கும்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

இங்ஙனங் கேடெய்திற்று. நான் ஓரறிவன் நீரில் விளையாடுகின்றேனெனக் குதுகுலித்துச் சொல்லிற்று. ஆகலான் மிக்கறிவோனுக்கும் ஊழினால் இவ்வணந் துன்புளதாமென, பொன்வாய்ப்பினன், நீள்செவியலை நன்மதி தடாநிற்கையில் இசைபாடிக் கட்டுண்டாற்போல் உனக்கு இப்பேரிடறு உளதாயிற்றெனச் சக்கிரதரன் அஃதெங்ஙனம் நிகழ்ந்தது உரையெனச் சுவர்ணசித்தி சொல்லலாயினான்.

நெடுஞ்செவியல் சுமதியென்னுங் கழுதை நரிகள் இரண்டும் இடைவிடாமல் ஊரினர் பைங்கூழை மேய்ந்து வனத்திற் றங்குழி ஓர் நாள் விலாப்புடைக்கத் தின்று இரண்டுந் தேக்கெறிந்து குந்தியிருக்கையில் நெடுஞ்செவியல் இந்நிலவெறிக்கும் இரவில் எனக்குப் பொழுதுகழிவின்றாதலான் யான் கானஞ்செய்வேனென, சுமதி நீள்செவியா நீ பாடற்க, உழவர் உன் குரலைக்கேட்டுத் துயிலொழிந்து உன்னைப் புடைப்பார்கள், மௌனமாயிருவென, நீள்செவியல் உனக்கு இவ்விசையைக் குறித்து உணர்வின்மையான் என்னைத் தட்டுகிறாயென்று அர்நரியை வைது கழுதை தன் பெருங்குரல் முழுதுந் திறந்து பாடிற்று. அப்போழ்து அவ்வுழவர் விழிப்புற்று அக்கழுதையைக் குண்டுருட்டாய்ப் பிணித்து நையப்புடைத்தனர். நரி அதைக் கண்டு மாமா என்மொழிதள்ளி இசைபாடினமையால் இப்பயன் அடைந்தனையென்று இகழ்ந்து உரைத்ததென, சக்கிரதரன் நன்மொழி வினவியும் மந்திரனென்னுந் தந்துவாயன் மரணமுற்றனனென, பொன்வாய்ப்பினன் இஃது எவ்வணம் உளதாயிற்று இயம்புதியெனச் சக்கிரி சொல்வதாயினான்.

நாராயண நகரத்தில் மந்தரனென்னுந் தந்துவாயன் பல்வகைப்பட்ட வத்திரம்நெய்து வரும் ஊதியத்தான் மனைவியோடு உண்டு உடுத்துக் காலந்தள்ளிவருகையில் அவன் தறிமுறிந்தமையான் மரம் வேண்டுற்றுக் காட்டிற் புக்கானாகத் திரியாநிற்கையில் ஓர் பெரிய வாகையைப் பார்த்து வெட்டத் தொடங்குழி அ

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தன்மேல் இருந்தஇயக்கன் இவ்வென் இடத்தை வருத் தாதை, நீ விருப்புற்றதை வெறுப்பின்றித் தராகிற் பேனெனச் சாலியன் நான் என் இல்லம்புகுந்து எ வரையும் உசாவி அவர் சொன்ன வண்ணங் கேட்பே னென்று அவ்வண்ணம் வீடு நோக்கி வருங்கால் நெ றியில் எதிர்ந்த மித்திரனுய நாவிதனை என் செய்வது இயம்புதியென, அன்னேன் நீ இராச்சியங்கேள், நீ அரசும் நான் அமைச்சுமாவேமென, அதைக் கேட்ட பின் அந்நடந்த செய்தியைத் தன் மனைவியாகிய சா லிச்சிக்குத் தெரிக்க அம்மடந்தை இராச்சியத்திற்கு வரம்பிலா இடையூறுகள் இருக்கின்றனவாகலான் அ து கேட்கற்பாற்றன்று. வேறொருவதனமும் இரு கரமுங் கேட்பையாயின் திவசத்திற்கு இருசீரை நெ ய்தால் நம் இல்வாழ்க்கை செவ்வன்நடக்குமென, அதை மேற்கொண்டு மீட்டு அவ்வனத்தருவருகிற் சென்று அவ்வியக்கனை நோக்கி எனக்கு மற்றோர் சென்னியும் இர்அத்தமுந் தருதியென்று அவன் அங்ஙனமாகச் சொல்லிய அளவில், வினையவாறடைந் து உவப்பெய்தித் திருமிக் கிரகத்திற்கு வருகையில் மாக்கள் இவ்விபரீதத்தைக் கண்டு இஃது ஓர் இராக் கதனென்றெண்ணுற்றுத் தலையால் ஒரு கல்லெறிந் து கொன்றனராதலால், வாற்பாலது பிழைபாதென் று உணர்வுற்று வல்லோர் வீணாசைகொள்ளார். அ ங்ஙனம் வீண் எண்ணங்கொடு கிருபணனென்போன் கேடுற்றனனென, சொன்ன சித்தி அஃது எவ்வாறுய து இயம்புதியென, சக்கிரதரன் சாற்றலுற்றனன்.

பண்டரபுரத்திற் கிருபணசருமனென்னும் ஒரு வேதியன் இரந்து வயிறு நிரப்பி எஞ்சிய தவசங்களை ப் பெய்து நிரப்பிய பானையைச் சிக்கத்தின் மீது இ ருத்தி அதன் அடியிற் படுப்பன். இங்ஙனம் ஒழுகு கையில் ஓர் நாட் கிடந்தவாறே சிறுவிலைக்காலம் எய் தில் இப்பண்டம் விலைப்படுத்திஅப்பொருட்கு ஓர்கா ரடுகொண்டு அது மல்கியபின்னர் அவற்றை ஆவிற் குமாறி அவ்வாபெருகியபின்னர் அவற்றிற்கீடாக வா

ம்பரிகொள்வேன், பின் அப்பரிகுட்டிகளீன்று விருத்தியாயபின் அவற்றை விற்று யான் செல்வமுடையேனாவேன், பின் ஓர் பார்ப்பனக்கன்னிகையைநாடி மணம்புரிவேன், அம்மாதின் அகட்டு ஓர் மகவுளதாம் அது தவழ்கையில் யான் பெண்டிரை நோக்கி அடிபெண்ணே குழவியை எடு என்பேன், அவள் பணிபூற்றத்தால் எடாள் அப்போழ்துயான் அவட்கு இங்ஙனம் ஓர் உதை கொடுப்பலென இங்ஙனம் எண்ணமிட்டு ஓர் உதை உதைக்க அவ்வுதை அரிசிப்பானையிற்றாக்கி அஃது உடைபட்டு இருந்தபண்டமுழுவதுங் கொட்டுண்டு இறைந்து பயன்பெறாதாயிற்று. ஆதலால் வீண்கற்பனை கற்பித்தல் ஆகாதென அதைக் கேள்வியுற்ற பொன்வாய்ப்பினன் உன்மீது குற்றம் யாது, இது பற்றுள்ளத்தின் பெருமை. * கிருபணத்துவத்தினாற் சந்திரசேன இராசன் மிகத்துன்புற்றனனென, சக்கிரதரன் அஃது எங்ஙனமாயதென, சுவர்ணசித்தி சொல்லுகின்றனன்.

அயோத்தியா நகரத்திற் சந்திரசேனனென்னும் அரையன் தன் மகன் வலிமுகத்தோடு ஆடல்அயர்வதின் மிக்க வேட்கையைக் கண்டு பற்பல வலிமுகங் கொணர்ந்து சாலையில் வளர்ப்பிப்புழி அங்குமடையனுக்குங் குற்றேவல்செய்வோர்க்கும் பகைமூண்டமையறிந்து அவற்றுள் ஓர் சதுரப்பாடுடைய முசு இவண் கலகநிகழ்ந்திருக்கின்றமையால் இவ்விடந்துறந்து காட்டகம்புகுவேமென, அதைக் கேட்ட வானரக்குழு நீ மூத்தமையால் அறிவிழந்து பலபலபடி பிதற்றுகின்றாய். இங்கு அரையனை அடுத்துப் பலவண்ணஉண்டிகளுண்டு சுழீஇயிருந்தேம். இந்நலத்தை வலிய வீசிவனத்திற்றழைதின்று உழல்வது நன்றன்று. யாதொன்று எய்தற்பாலதோ அஃது இங்ஙனே எய்துகவென இம்மொழி கேட்டு அக்கிழக்குரங்கு தன் குடும்பத்தோடு வேற்றிடம்புக்கது. பின்னர் ஓர் நாள் பணிசெய்வோன் மடையனைக் காந்தன்

* கிருபணத்துவம், உலோபத்தனம்.

உடத்தால் ஒச்சி எறிந்தமையால் இவன் அவனை எரி கொள்ளிகொண்டு எறிந்தான். அக்கனற்பொறி வைத் தூறிற்பற்றிக் குதிரைச்சாலை யாவற்றினும் மூண்டு அதன் அகத்துள பரிகளிற் சில எரிந்து இறந்தன, சில உடற்பாதி கரிந்து வீழ்ந்தன, சில கண்முதலிய உறுப்புக்கள் வெந்தன, இச்செய்தி அரசன் அறிந்து அக்கணத்திற் குதிரை மருத்துவரைக் கூய் அவ்வசுவவேக்காடொழிதற்கு ஏதுசெய்யலாவதெனை, அந்த ஆமாத்தியர் குரக்கு நெய்யாலன்றிக் குணமுறாதெனை, அண்ணல் உடனே ஏவல்புரிவோரின் ஆனனம் எறிட்டு, இவ்வானரக்குழுவைக் கொலைசெய்து இப்பண்டிதர் சொல்லியாங்கு புரிந்து குணமுறுவியின்களென்றேவ அவர் அன்னவாறு செய்தனர். இதை அம்முதுகடுவன் அறிந்து பெரிதும்வருந்தி இப்பழிவாங்குவேனென்று உறுதிசெய்து காட்டகத்துத் திரிதருகையில், வழியின் மிகப்பொலிவுள்ள ஒரு பெருஞ்* சாசைக் கண்டு இக்குளத்தகத்து மக்கள் நடப்பின்மையின் இவண் ஓர் பெரும் பேய் இருக்கவேண்டுமென்று உள்ளிச் செய்மைக்கண் நின்று ஓர் தாமரைத்தாளைப் பிடுங்கி அதன் நாளத்தினால் நீரை உறிந்து குடித்தது. இதை ஆண்டுவதிந்த கணங் கண்டு அதினின்று மர்க்கடத்தின் அருகுற்று உன் சதுரப்பாட்டை மெச்சி நான் பிரசன்னமாயினேன். இவ்வென் மணிவடத்தை ஏற்றுக்கொள்ளெனத் தன் களத்தின் மாலையைக் கழற்றிக் கொடுத்தது. அப்போது குரங்கு பிசாசத்தை உதகத்தில் உனக்கு வலி எவ்வளவிருக்கின்றதெனை அப்பிசாசம் ஆயிரம் பெயர் ஒருங்கே நீரில் இறங்கினும் அவரைப் புறம்போக ஒட்டேனென, இதைக் கேட்ட வலிமுகம் உனக்கு நிரம்ப உணவு கொடுவருவலென்று அவ்விரத்தினமாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டு சந்திரசேன அரையன் பதிபுக்கு இறைவனைத் தரிசித்துச் சுவாமி உமது சோறு நெடுநாள் உண்டுவளர்ந்தேன் ஆகலால் உம்மைக் காண வரலாயினேனெனப் பணிந்து சொல்ல, அரையன் இவ்வரத

* சாச, நீர்க்குளம்.

னவடம் உனக்கு யாங்கு கிடைத்ததென வானரம் சுவாமி, காட்டிலோர்மலர்த்தடம் இராநின்றது, அதில் வைகறையிற் குதிப்புவனுக்கு இன்ன மணிகள் அகப்படுகின்றவென, அம்மொழி கேட்டுத் தோன்றல் யான் அங்கெய்துவலென வானரம் மிகவு நன்றெனத்தாழப் பின் மன்னன் சேனைக்குழாஞ் சூழ வானரத்தின் பிற்சென்று அச்சரசின் அணித்து இறுத்துப் பின்னர்க் கங்குற்கழிந்து விடியற்காலையிற், சாகாமிருகம் எழுந்து எந்தலை எடுப்பி நோக்கி நமக்கு அரதனவிருப்புளதேல் இதே நற்பருவமெனக் கேட்டுக் காலாட்களோடு நடத்திற் செல்லா நிற்கையில் வானரம் அரையனைப் பார்த்து எல்லோருந் தடத்தகம்புக்கு மணிகள் வாரிக்கொண்டு எய்தியபிற்றை நாம் இருவரும் புக்கு அம்மணிகள் கொள்ளுதுமென, அவன் அங்ஙனமாகவெனப் போக்கிய பதாதிகள் வாவியில் இறங்கினமாத்திரையில் அப்பாரிடம் அவர்களை அந்நீரில் அமிழ்த்திச் சேரக்கொன்றது. பின்பு சந்திரசேனன் சேவகர்கள் சென்று நெடுநேரஞ் சென்றது, இதுகாறும் எய்தவில்லை என்னென்று பிலவங்கத்தைக் கேட்க, வானரம் வானுற ஓங்கிய ஓர் மரநெருங்கிளையிற் பாய்ந்தேறி அரசை நோக்கி நீ என் குலமுழுவதையுங் கொல்வித்தாய் ஆதலால் அக்கடனை இதோ நான் கைக்கொண்டேன். நீ எனக்கு அன்னந் தந்தமைபற்றி உன்னை உய்வித்தேனென, இப்பேச்சைக் கேட்டு அண்ணலிரங்கி அத்தியாசைகொடு முயலுங் கருமங் கேட்டைத் தாராநிற்குமென்று உள்ளினவனுகக் கோயிற்புக்கனன். அங்ஙனமாயகருமம் நீ புரிந்தமையால் அஃது உனக்கு இத்துன்பம் பயந்தது. நல்லது இனி யான் ஏகுவனென, அப்போழ்து சக்கிரதரன் குறைவுற்றகாலையில் நட்டோர் பயன்படுகின்றார்கள். அங்ஙனமாகவின் நீ எற்றுறந்து எவ்வாறு அகலுதியென, சுவர்ணசித்தி கள்வன் இராக்கதனைப் பிடிப்புளிவானரம் பேசினமையால் அதுபிடிபட்டதாதலால் நான் இவ்வாழியை அஞ்சுகின்றேனென, சக்கி

ரி இது எங்ஙனமென, பொன்வாய்ப்பினன் சொல்லு
கின்றனன்.

மதுரைப்பதிகாவலனாகிய பத்திரசேனக் கோமா
னுடைய இரத்திநவதியென்னும் பெயரிய கட்டழ
கியாகிய மகளைக் கவரக் கருத்துற்று ஓரிராக்கதன்
போந்து அற்றம் நோக்கிச் சின்னாட்டிரிவுற்று அவ்
வுபாயம் நடவாமை கண்டு ஓர் நாட் பநிவிருக்க அக்
கன்னிகை அது கண்டு அடுத்துநின்ற தோழி முகம்
நோக்கி உயிர்ப்பாங்கி இவ்வரக்கன் என்னை எல்லும்
எல்வியும் வருத்துகின்றனன். இதற்கு ஏதேனும் ஓ
ர் சூழ்ச்சி செய்ய வேண்டுமென, அது செவிபுக்க
இராக்கதன் இம்மாதைக் கவரும்பொருட்டு யாம் வ
ந்திருக்கையில் இவ்வெண்ணங்கொண்டே எம்மினும்
வலிய மற்றொருவன் வந்திருந்தால் என்செய்வேமெ
ன்று அச்சமுற்று அரையன் குதிரைச்சாலையில்ஓர் க
லிங்க உருக்கொடு இருந்தனன். அங்ஙனம் இருப்புழி
ப்பரிமாக் கொடுபோம்பொருட்டு அவண் உற்ற ஓர்
கள்வன் இஃது ஏனையவற்றின் மிகநன்றாயிருந்தமை க
ண்டு அதன்வாயிற்கலினம் பெய்துபுறத்து இர்த்துவ
ந்து அதன் மீதூர்ந்துவீட்டின்பால் நடாத்தா நிற்கை
யில் அஃது இங்கும் அங்கும் ஓடத் தலைப்படுகையி
ல் அவன் சம்மட்டியால் அறைந்து பார்த்துச் செவ்
வனே செல்லாமையால் அக்கள்வன் இதுகாறும் யா
ங் கண்ட பற்பல மாக்களில் இஃதொத்ததைக் கண்
டோமில்லையாகலான் இஃது ஏதோகிருத்திரமமாயிரு
க்கின்றதென்று உள்ளங் கலங்குறுகையில் அக்குதி
ரைதொன்மரத்தின் கீழ்இர்த்தோட அப்போழ்துமே
லிருந்தகள்வன் விரைந்து ஆலின் வீழைப்பற்றித் தொ
த்தி அத்தருமீதேற இராக்கதன் விலாசனுக்கு அஞ்சி
யோடினன். அதைக்கண்ட அம்மரம்மீதிருந்த வா
னரம் அடா இவன் மனிதன் நீ அரக்கனாயிருந்தும்
ஏன் இரிகின்றனையென, அதைக் கேட்ட சோரன்
வெருண்டு கீசகத்தின்வாலத்தைப்பற்றி வருத்த அரக்
கன் குரங்கு வஞ்சகம் உளதென்றெண்ணி மீண்டும்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

விரைந்தோடினன். ஆதலால் அக்கவிக்கு எய்திய
இன்னல்போல எனக்குமுளதாமென்று இந்நேமியை
க் குறித்து அஞ்சுகின்றனனென, சக்கிரி தெய்வம் எ
திர்ப்பின் யாவரும் இங்ஙனம் இடுக்கண் அநுபவிப்ப
ர் கேண்மோ இலங்கேசன் திரிகூடாசலம் ஒத்தமலை
யும், கடலொத்த அகழியும், தான் அரக்கனும், பே
ராற்றலுடையானும் சுக்கிரன் குருவுமாக இவ்வண்ண
ம் ஒன்றுக்கொன்று குறைபாடின்றியிருந்தும் அவ
னை ஒரு குரங்கு அவமானத்தால் தலைதாழ்ப்பித்தது.
ஆதலால் விதி வலி முன் யாவன் சூழ்ச்சிவலியாயினும்
யாது பயன்படும். அவ்வூழொன்றியிருப்பின் தீயவு
ம் நல்லவாய் விடும். இவ்வண்ணமே சிதடன் கூன
ன் மும்முலைப்பெண் இவர்கட்கு முன்னம் நேரிட்ட
தொன்று கேட்டிலையோவென, பொன்வாய்ப்பினன்
அஃது எங்ஙனமோ இயம்புதியெனச் சக்கிரதரன்
சொல்வானாயினன்.

மதுபுரக்காவலனாகிய மதுசூதனனென்பவற்கு
மும்முலைப்பெண் தோற்றினமையாற் சோதிடம் வ
ல்லோரைக்கூய் இதற்குச் செயற்பாலது என்னென
க்கேட்புழி, சார்வபௌம கேட்குதி எவனாயினுஞ்
சொல்வதை முன்னர் நன்காராய்ந்து சொல்லவேண்
டும். அங்ஙனமாராயாதுசொல்லின் சண்டகருமனை
ப்போலாகுமென, அரையன் அவன் யாதுரைத்தன
னெனச் சோதிடம் வல்லோன் சொல்லலுற்றனன்.

தண்டகாரணியத்திற் சஞ்சரிப்போனாகிய சண்டக
ருமனென்னும் ஓரிராக்கதத்தலைவன் அவண் நேரிட்ட
ஓரந்தணன் தோள்மேலேறி நடத்திக்கொண்டுபோ
வுழி அவ்வேதியன் அவ்வரக்கனடிகள் மிக மெல்லிய
வாயிருப்பனவற்றைப் பார்த்து ஐய அரக்கத்தலைவ,
உன்காலடிகள் எப்படி மெல்லியவாயினவென, அரக்
கன் நான் நீராடி ஈரம்புலராளவும் நிலன்மீது செல்லே
னெனக் கேட்டுச் சிறிதாறுமுன்னே தாங்கிப்போய்
ப் பிறகு இராக்கதன் ஓர்குளனின் மூழ்கப் புக்குளி
ப்பார்ப்பானைப் பார்த்து யான் நித்தகருமஞ் செய்

துவருகாறும் நீ அடிபெயரற்க, இங்கே தான் நிற்றி
யெனச்சொல்லிப் பின்னர் நானஞ்செய்தனன். அந்த
ணன் இதைப்பார்த்து இவன் மூழ்கிப் புறம்போந்
தால் நாம் இவன் வயிற்றழலின் மூழ்காதிரேம் ஆக
லான் ஓடி உய்ய இதுவே நல்ல அமயம். நீராடிக்
காற்புலருமுன் இவன் நடவானல்லவா என்று தனக்
குள் தெரிந்துகொண்டு விரைந்தோடினான். அது
கண்டு அவுணன் வாய் பதறிக் கைக்கெட்டினது வா
ய்க்கெட்டாமல் இழப்புற்றேன், கடிதிற் பிற்சென்று
கவர்வேமெனினுங் கொண்ட நோன்பு குறையுறுகி
ன்றதென்று மறுக்கமுற்று ஆங்கே நெட்டுயிர்த்து
வாளாநின்றனன். ஆகலான் யாதும் உய்த்துணரா
து இயற்றலாகாதெனச் சொல்லிப் பின்னர் பன்னூ
ல்களையும் நன்காய்ந்து கடைப்பிடித்து இம்மும்மு
லைபரிவையைப் பார்க்கவொண்ணாது என்னையோவெ
னின் விரூபமகவுளதாயின் அதைக் காணலாகாதென்
பது நூற்றுணிபாம். மற்றும் இஃது ஆன்றோரொழு
க்கமுமாமென, எந்தல் அம்மொழியுட்கொண்டு அக்
கன்னியை வேற்றுனிலைவைத்தளித்தபின்னர் அவள் பூத்
தமையால் இவள் மணத்திற்கு இயைபவனுக்குப் பெ
ரும்பொருட்குவை தருவலெனத் தேயந்தோறும் ம
ணவோலை போக்கினமையைக் கேட்ட இரந்துண்ணு
ம் மன்னையராகிய ஓர் குருடனுங் கூனனும் விவாக
விருப்பான் மன்னன்பாற்புக்கனர். அவருட்குருடன்
அரையனை நோக்கி நுங் கன்னிகையை எற்குத்தரிற்
கொடுமென இறைவன் இச்சுவயம்வரக்கு நங்கன்னி
யைக் கடிபுரிவது தக்கதென்று உள்ளி அவனுக்கு ம
கட்கொடை நேர்ந்து அங்ஙனமே கடிமுடித்து அள
வில் பொருடந்து நீ கணமும் நீட்டியாமற் பரதேய
ம்போகியென்றனன். அவ்விடைகொண்டு மூவரும்
பரதேயம்புக்கிருப்புழி அவள் அக்கூனற்கு வயமாய்
அவனை நோக்கி இக்குருட்டுச் சவத்தை நஞ்சிட்டுக்
கொல்லில் நாம் இடையூறின்றி இன்பநுகர்வமெனக்
கேட்டு அவன் செத்த பாம்பொன்றைத் தந்தனன்.

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அவ்வணைக்கு அதை ஏற்றுக் கண்டித்து அடுப்பின்மேல் வேவவைத்துப் பொறியிலியை இத்தசை நிற்குறித்துக்கொணர்ந்தேன், இச்சுல்லி எரித்துக்கொண்டிரு. நான் வேறுகருமத்திற் புகுகின்றேனென, அக்கண்ணறை அவ்வாறே இளந்தழலா எரித்துக்கொண்டிருப்புழி அக்கிருட்டிணசருப்ப ஆவி கண்ணிற்றாக்கி அவ்விடத்திலுற் கண்ணுரோகந் தீர்ந்து முன்போற் கண் தெரிந்தமையால் இவர் இருவரும் இவன் குருட்டுதவியால் நகைத்து விளையாட்டயர்வதைக் கண்டு காலால் நெறிகாணும் பண்டைமாட்சிபோல் வந்து கூனனைப்பற்றி ஈர்த்துச் சீற்றத்தாற்றாக்கி அவள் மார்பில் ஏற்றினவளவில் அவள் மூன்றும் முலை அமிழ்ந்திக் கூனன் கூனும் நிமிர்ந்தது. ஆதலால் தெய்வ ஒற்றுமையிருந்தால் யாவும் நல்லவாமென, சக்கிரதரன் நல்லது நீ உன் கேகத்துக்கு ஏகுழி வழித்துணையோடேகு. ஊர்வழிதனித்துச்சேறலும் எல்லோரும் உறங்குகையில் விழித்திருக்கையுந் தலையாயபொருளும் இன்பமுந் தனக்கே உளவாகுகவென்னும் விருப்புரவும் ஒழியற்பாலனவென நூலறைகின்றன. இங்ஙனம் நூல் நெறிகடவா ஒழுக்கினன் புயங்கத்தினின்றும் ஓர் வேதியன் உய்ந்தவண்ணம் உய்வானெனச் சுவர்ணசித்தி அப்பன் அவன் உயல் எவ்வாறு நிகழ்ந்ததென, சக்கிரி சொல்வானாயினான்.

நாசிக தேயத்தனாகிய தத்தனென்பவன் அன்னையை நோக்கி யான் ஆரியன் கருமத்தால் ஓரூர்க்குப் போகுவல், விடைதருதியென, அவ்வீன்றாள் குழந்தாய் ஒருவனாய் ஏகற்கவென, அவன் தாயே நெறிஉளறின்றி இருக்கின்றதேயென, அவள் மீண்டும் அப்பனே எஃதுளதாயினும் நீ நெறித்துணையின்றிச் சேறலாகாதென்று, கூபத்தில் ஓர் நண்டைப்பற்றி ஓர் கலயத்திற்பெய்து கொடுத்து இதையேனுந் துணைகொடுபோகென, அவ்வாறே ஆய்மொழிமேற்கொண்டேகுழிநெறியில் வேனிலால் வேவுற்று ஓர் தருநிழலிற் கண்வளராநிற்குமிடத்து யாண்டிருந்தோ அவ

ற்றீண்டவந்த ஓரரவு இம் மட்கலயத்திற் பெய்திருப்பதென்னென்று அதனுள்ளே தலை நீட்டுகையில் அஞ்ஞெண்டு இஃதோர் காரராவென்று உணர்வுற்றுக்கொடுக்காலிடுக்கிக் கொன்றது. பின்னர் அந்தணன் விழித்து இப்பணியைப் பார்த்து இஃதெங்ஙனம் இறந்ததெனச் சூழ்வுழி அதன் சென்னியை அலவன் கத்தரிக்கக் கண்டு இத்துணைச்செயலும் இதுவே புரிந்தது. மாதாதந்த வழித்துணையாற் பிழைத்தேன். தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை என்றது பொய்யாதென்று அந்நண்டைக் கைக்கொடு இல்லம்புக்கு அன்னைக் கட்டாங்க நிலந்தோய வீழ்ந்துபணிவுதோன்றத் தழுதழுது வாழ்த்தி நிகழ்ந்த செய்திகளை விளம்பி இன்புற்றிருந்தனனென, பொன்வாய்ப்பினன் இது தக்கதேயாம், ஏனெனில் மந்திரம் தீர்த்தம் பெரியோர் சோதிடன் மருத்துவன் குரு இன்னோர்பால் எவன் எவ்வண்ணம் பாவனைபுரிவானோ அவன் அவ்வண்ணம் பேறுபெறுவனென்று இங்ஙனம் நேமியானைத் தேற்றித் தன் மனைக்கு ஏகினன்.

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

# PARATHAM.

# பாரதம்.

## வாரணாவதபௌர்வச்சருக்கம்.

(Discord between the Pandavas and Turiyothana &c. and the consequent removal of the Pandavas to the city Varanavatha.)

ஆங்கவாம்மறை அயருமாயிடைத்
தீங்கொருவடிவமாஞ் சீர்ச்சுயோதனன்
பாங்கவனமக்கெனப் பரிதிமைந்தனை
வாங்குபுதழீயினன் வலிமைகூரவே. ௧.

ஒருபகனிலமக ளுய்யமங்குலின்
வருபகீரதிநதி வாசமும்படிந்
திருதிறப்புதல்வரும் இயைந்தகேண்மையாற்
களையடைந்தனரிளங் கடவுளோனார். ௨.

தைவருநவமணிச் சயிலமென்னவே
ஐவகைநிறங்களும் அமைத்தியற்றிய
தெய்வவாடகமனைச் செல்வப்போனகம்
கைவாநுகர்ந்தபின் கண்ணுந்துஞ்சினார். ௩.

கண்படைக்கங்குலிற் சன்னசௌபலர்
எண்படைக்குமாரோ டெண்ணிப்பாவகன்
நண்புடைப்புதல்வனை நார்கொள்வல்லியாற்
றிண்புயத்தொடுகாஞ் சிக்கவார்த்தபின். ௪.

ஆவினிற்பிணித்தெழும் ஆர்வம்பொங்கிட
ஊனுடைப்பொருப்பையன் றும்பர்நாயகன்
பாவையிற்செறித்தெனப் பயனில்செய்கையால்
விரவுமப்பெருநதி யூடுவீழ்த்தினார். ௫.

வீழ்ந்தவனனந்தர நிமிர்ந்துமெய்யுறச்
சூழ்ந்தவப்பிணிகளைத் துணிகளாக்கியே
ஆழ்ந்திலனேறிமீண் டவசத்தோடவட்
டாழ்ந்தனனிராவணன் றம்பிபோன்றுளான். ௬.

வாளிரவியையொளி மறைக்கும்வெஞ்சினக்
கோளரவனையனக் கொடியநெஞ்சினன்
நீளரவினங்களா னித்திரலுவை
மீளவுங்கொல்லுவான் வீரனேவினான். ௭.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

கடித்தனபன்னக நகங்கோள் கைகளாற்
றுடித்திடமறக்குணத் தோகுதிபோற்பிசைந்
திடித்திடுமகிலென வெழுந்துமாநகர்
வடித்தவேற்றுணைவரோ டெய்திமன்னினுன். ௮.

வேறெருபகற்கழ னிளைத்துவிமனே
டாறுபாய்ந்திருவரும் ஆடும்வேலையிற்
றேறலர்வஞ்சகந் தேறவண்டினுல்
ஏறினன்றடத்தரி யேறுபோன்றவன். ௯.

பின்னருமோருபகற் பெற்றம்பெற்றவன்
றன்னையம்மகிபதி தனையனுதரித்
தின்னமுதருத்துவான் போலயாவையுந்
துன்னியவிடங்களாற் றுய்ப்பித்தானரோ. ௰.

விடத்திலேயழிந்தறி வோழிந்தவிமனை
வடத்திலேபிணித்தனன் கங்கைவாரியின்
இடத்திலேயமிழ்த்தினன் இதயமோத்தவர்
திடத்திலேமதிர்ந்தகிங் கிர்த்திறங்களால். ௰௧.

ஓதவான்கடலிடை யோளித்தவெற்பெனப்
பாதலந்தனில்விழும் பவனசூநுவை
வேதனைப்படுத்தின விடங்கொள்கூரெயிற்
றுதவப்பன்மணி யாவினஞ்சிறுர். ௰௨.

முற்படுகோடுவிட முளையெயிற்றுதும்
பிற்படுவிடத்தினுற் பெயர்ந்துபோதலின்
மற்படுபுயகிரி வடம்பிணிப்புமற்
றற்படுமீருள்புலர் அலரியாயினுன். ௰௩.

வாசுகிதனக்கிவன் வாவுணர்த்தலும்
ஆசுகன்மதலையென் றறிந்துமற்றவன்
தேசுறுபோற்கடந் தெரிந்துபத்தினுல்
ஏசறுமமுதெலாம் இனிதினூட்டினுன். ௰௪.

வெங்கனல்கோளுத்தலின் வெந்தவான்புலம்
மங்குல்பெய்மாரியால் வயங்குமாறுபோல்
அங்கெரிவிடநுகர்ந் தழிந்தபேருடல்
இங்கமுதருந்தலால் எழில்புரிந்ததே. ௰௫.

ஆயிரம்பதின்மடங் காசுவாக்களின்
மாயிருந்திறல்வலி மலிந்தமேனியான்
ஏயிருந்தவப்பயன் என்னவோண்பகன்
மேயிருந்தனன்பணி வேந்தன்கோயிலே. ௰௬.

இவனையங்கதியிடை யிட்டபாபியும்
தவனனையுததியிற் சாய்த்தமாலைபோல்
அவனிபனகரியில் அரசவெள்வளத்
துவனிசெந்தனிவிளக் கெடுப்பத்துன்னவே ௰௭.



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கண்டிலளுதிட்டிரான் கனிட்டன்கண்ணுற
உண்டிலளடிசிலும் ஒரிராவினுங்
கொண்டிலடுயிலிளங் குமரர்தம்மொடும்
விண்டிலளுரையுளம் விம்முகுந்தியே. ௰௮.

வீடினனுமெனத் துணைவர்வேறுவே
றோடினர்கானதி யோடையெங்கணுந்
தேடினர்காண்கிலஞ் செய்வதென்னென
வாடினர்நடுங்கினர் நடுக்கில்சிந்தையார். ௰௯.

கூற்றெனச்சுயோதனன் குமரனேயிவன்
ஆற்றலின்வெரீஇயழக் கற்றசிந்தையான்
ஏற்றதையுணர்கிலம் என்றுசிந்தையாங்
காற்றினுமலமரு கருத்தாயினார். ௨௰.

ஊதையில்பூதமொத் துள்ளம்வெம்பிய
தாதையில்சிறுவரைத் தாதைதாதைபாற்
கோதையில்குழலினாள் கொண்டுசேறலும்
வாதையிலவற்கென வருத்தமாற்றினான். ௨௧.

தருமமன்னனுநகர்ச் சனங்கள்யாவருந்
தெருமாறேறவுந் தெய்வங்கூறவும்
பெருமிதநிமித்தங்கள் பெற்றிபேசவும்
வரும்வருமெனமன மறுகவைகினார். ௨௨.

இருந்திவளப்பகன்றபின் இவணமற்றைநாள்
அருந்திறற்போகிகள் அரசனேவலால்
வருந்தியுற்றெடுத்துமுன் வந்தநீர்வழி
பொருந்திறற்கங்கையின் கரையிற்போக்கவே. ௨௩.

பாழியம்புயகிரிப் பாண்டவன்றனைச்
சூழ்கற்பணிக்குலஞ் சுமக்கவல்லவோ
வாழியங்குலங்களின் மன்னனல்லவோ
ஏழிருபுவனமும் இனிதினேந்துவான். ௨௪.

விதியினாலொளித்தலின் உயங்கிமீளவும்
நதியினால்வருதலின் நலங்கொண்மேனியான்
பதியினால்விளங்குமென் பங்கயங்களும்
மதியினாற்துளிர்கெடு வானுமாயினான். ௨௫.

வேதியர்தூவர்வில் விதுரன்வீடுமன்
ஆதியர்துணைவரந் நகருளார்களென்
றேதியசனங்களுக் குவகைநல்கினான்
ஞாதியர்க்கிளைக்கெலா நடுக்கநல்கியே. ௨௬

குந்தியைமகிழுரை கூறிக்கற்பினால்
அந்திமீனனையவர் அருளின்வாழ்த்தவே
செந்திருமகளுறை செல்வமாநகர்
வந்திவன்முன்புபோல் வளருநாளிலே. ௨௭.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கோதமன்மகன்மகன் குனிவிலாதியா
மேதகுபடைக்கலம் யாவும்விறேடம்
மாதவன்வயிற்பயில் வாதன்வானவர்க்
கேதமில்சிந்தையான் கிருபனேன்றுளான். உ அ.

மற்றவன்சந்தனு மைந்தனேவலாற்
சொற்றவாருள்தரு குலக்குமாரரை
வெற்றிகொள்சிலையும்வேவ் வேலும்வாளமும்
பற்றலர்வெருவரும் படிபயிற்றினன். உ கூ.

பரிவுடனிவன்படை டயிற்றப்பின்னரும்
துருபதிவேறேரு துருவைத்தேடினன்
ஒருளறமதிநில வேறித்ததாயினும்
பரிதியைநயக்குமிப் பாவைஞாலமே. ௩ ய.

(வே.) பாதநாதவேத பாத்துவாசனேன்போன்
விாதவேள்விதன்னின் மேனகைசெயிலாதான்
சுாததாதுவீழ்ந்த துரோணகும்பந்தன்னில்
வாதனெருவன்வந்தான் வசிட்டமுனியையோப்பான். ௩ க.

ஈரேழ்விஞ்சைத்திறனும் ஈன்றேன்றன்பாலெய்தி
நீரேழென்னயாவு நிறைந்தகேள்விநேஞ்சன்
பாரேழெண்ணும்படைகள் பாசிராமன்றன்பால்
ஓரேழ்பகலிலுலகுக் கோருவனேன்னக்கற்றன். ௩ உ.

வெற்பின்வலியதிண்டோள் வேந்தனேவுந்தூதால்
அற்பின்மிக்கசிந்தை யறஞ்சான்மோழியவ்வாசான்
கற்பின்பன்னியோடுங் கையின்மதலையோடும்
பொற்பினமாாவதியே போலுநகரிபுக்கான். ௩ ௩.

வந்தான்வந்தானேனலும் மந்தாகினியாண்மைந்தன்
பைந்தாரசையவெதிர்போய்ப் பணிந்துபூசைபண்ணிச்
சிந்தாசனத்தோடோக்குஞ் சிங்காசனத்தினேற்றி
எந்தாய்வாகீயடியேன் என்னதவத்தேனேன்றன். ௩ ச.

மூசிவண்டுமோய்க்கு முருகார்சேவ்வியலங்கல்
வாசிமான்றேர்வேம்போர் மன்னர்மன்னன்றன்வன
ஏசில்கடவுள்வாய்மை இருக்காலேண்ணில்கோடி
ஆசியன்பாலோதி யருள்செய்திருந்தபின்னர். ௩ ரு.

வேதமுனிவனிருந்த வேத்துமுனியைநோக்கிப்
பூதந்தன்னினிகழ்ந்த புன்மைமோழியோன்றுரைத்தான்
ஏதமேபேற்றவனைய யாகசேனனேன்பான்
போதமில்லாவேன்பாற் பூட்டுநண்புபூண்டான். ௩ கூ.

யானுமவனுமுறையால் இணையோமானவேல்லைப்
பானுநிகர்தோல்லங்கி யேயன்பாதம்பணிந்து
வானுமண்ணும்வியக்க மறைவேம்படைகள்கற்றுத்
தானும்வல்லனாகித் தன்போலேன்னைவைத்தான். ௩ எ.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பின்னையிரவும்பகலும் பிரியோமாகித்திரியாத்
தன்னையடைந்தநண்பின் றகவான்மிகவாதரியா
என்னைவானமெய்த யானேயிறைவனானால்
உன்னையாளவைப்பேன் உலகிற்பாதியென்றான். ௩௮.

நன்றுநன்றுன்வாய்மை நன்றுநண்புக்கினியாய்
என்றுபோந்துயானும் இயன்றதவத்திருந்தேன்
வென்றுகொண்டபுவியை வேந்தன்மகவுக்களித்துச்
சென்றுவானம்புகுந்தான் சிறுவன்றலைவனானான். ௩௯.

தனத்திலாசையின்றித் தவமேதனமென்றெண்ணி
வனத்திலுண்டிகொண்டே மகிழ்வுற்றொருசார்வைகிச்
சனத்திலருளாயில்வாழ் தருமந்தவறவண்ணம்
இனத்தின்மிக்ககிருபற் கிளையாளிவளைவேட்டேன். ௪௰.

கந்தமகவையீன்ற காளகண்டனருளால்
வந்தமகவிம்மகவு வறுமைவளாவளர்ந்தான்
இந்தமகவுமையாண் டிளமையறியாதெனலாற்
றந்தமகவைநோக்கித் தாயும்பெருகத்தளர்ந்தாள். ௪௧.

மாவின்பாலேயன்றி மாபுக்குரியமைந்தன்
ஆவின்பால்கண்டறியான் அதனால்வருந்தியந்தக்
கோவின்பாலேகுதலுங் கோமான்யார்நீயென்ன
நாவின்பாலானடுங்கி நானுன்னன்பனென்றேன். ௪௨.

மன்னன்யானீமுனிவன் மாபாலெனக்குநினக்கும்
என்னநண்புண்டென்றே யேசிநகைசெய்திகழ்ந்தான்
அன்னதுருபன்றன்னை அவையிலாசுகேட்பச்
சொன்னவாய்மைநீயே சோர்ந்தாயானேசோரேன். ௪௩.

புகன்றபடிநீயாளும் புவியும்பாதிகொள்வேன்
இகன்றசமரிலுன்னை யிரதத்துடனேகவர்வேன்
அகன்றமெய்மையுடையாய் அறிதியென்றேனென்று
சுகன்றன்ஞானம்பெற்ற துரோணன்சொல்லக்கேட்டான். ௪௪.

கேட்டவாசனழைக்கக் கிருபனுடன்வந்திறைஞ்சும்
பூட்டுவரிவிற்றடக்கைப் புதல்வர்புதல்வர்தம்மைக்
காட்டிநீயேயிவரைக் கடிதிற்படைமெய்க்கல்வி
யூட்டிநின்வஞ்சினமு முடித்தியென்றுமொழிந்தான். ௪௫.

முனிநீயையயாவிதற்கு முன்னமின்றுமுதலாய்
இனியிவ்வுலகுக்கிறையாம் எம்மிலொருவனுக்குத்
துனிவில்வலியாலமருங் கோடியென்றுகொடுத்தான்
பனிவெண்குடையநிருபர்க் குரியவரிசைபலவும். ௪௬.

(வே.) அன்றுமுதலாகவரி வெஞ்சிலைமுதற்படைகள் ஆனவையனை
த்துமடைவே
தோன்றுபடுநூன்முறையின் மறையினொடுதீட்டிடா சுயோதனர்களாதி
யேவரும் [லே
ஒன்றியதுரோணனரு ளாலும்வலியாலுமுய நுணர்வுடைமையாலுமுத

நின்றுதுறையாதொருவ ருக்கோருவர் கல்வியில்நி ரம்பினர்வாம்பினிதீ
யோர். சஎ.

வெஞ்சிலையினுலிவனி ராகவனையொக்குமென விசயன்விநயத்தி
ன்மிகவே
எஞ்சியதுமாரர்கள்பொ ருமையின்மிகுத்தனர்க ளிரவியெதிர்மின்மி
னிகள்போல்
அஞ்சொன்முனிதானுமிவன் மேலெவரினும்பெருக அன்புடையனுகி
யகலா
நெஞ்சுறவருங்கலைகள் கற்குமவர்தம்மளவி னேயமகிழாதவர்கள்
யார். சஅ.

ஏகலைவனென்றொருகி ராதன்முனியைத்தனியி றைஞ்சியவனேவலி
ன்வழான்
ஆகலையடைந்துமிகு பத்தியொடுநாடொறும ருச்சுனனையொத்துவரு
வோன்
மேகலைநெடுங்கடல்வ ளைந்ததரணிக்கணொரு வில்லியெனவின்
மையுடையான்
மாகலைநிறைந்துதரு தக்கவணவலக்கையினில் வல்விரல்வழங்கியு
ளனுல். சகூ.

அங்குலியமொன்றுபுனல் ஆழ்தருகிணற்றில்விழ அந்தமுனிதேடுமினெ
னப்
புங்கமொடுபுங்கமுற வெய்தவனெடுத்தமை புகன்றநுதுநின்றவனை
நீர்
இங்கிதனிலைத்தொகைகள் யாவுமுருவப்பகழி யேவுமினெனுமுன்வி
சயன்
துங்கவில்வளைத்தொருக ணத்தினில்வடத்திலது ளைத்தனனிலக்
கிறேடையால். ருய.

முத்தன்முனிதாளிணையை நீர்படிதடந்துறையின் முதலைகவர்வுற்ற
தெனலுஞ்
சித்திரவில்வீரர்பலருந்தமவெறுங்கைகொடுசென்றருநின்றுவிடவே
பத்தியின்விரைந்துபொது வேயிபமழைக்கவொரு பறவைமிசைவந்த
நெடுமால்
கைத்திகிரிபோல்கணையின் விசயனதவணப்பழய கார்முதலையிற்று
ணிசெய்தான். ருக.

ஒருதன்விறலாலிதய மகிழ்தருவினுக்கிவனும் உயிருதவினுனுதவலுங்
தருவுமிவனுக்குநிலை யாலுமறையாலும்வலி கூர்பகழி ஒன்றுதவினுன்
இருவருநயந்தருளும்விநயமுமிகுத்தனர்களின்னுயிருமனமுமெனவே
மருவிவருநல்வினைவ சத்தின்வழிவந்தபயன் மற்றெருவருக்குவரு
மோ. ருஉ.

சிலைக்குருவிறற்றரு குலக்குமாருக்குவரு சிராமநிலைகாண்மினெனவே
அலைத்தலைநிலாவெழசரிற்*புதல்வனுக்குநலறக்கடவுளுக்குமுனையா

* சரித் — யாறு.

நிலைப்படுவிசாலமணி யணிதிகழாங்கின்மிசை நிகழ்பலிகொடுத்தரி
யுடன்
கலைப்புராவியூர்திருவை யுந்தொழுதுபுக்கனர்கள் கல்விகரைகண்ட
பெரியோர். ருரு.

புரிவிலறிவோர்சன பதத்திலறிவோர்புவி புரக்குமவர்தம்மிலறிவோர்
வரிபடவயங்குகொடி மஞ்சவிதமெங்கணும்வ னப்புறவிருந்தபொழி
திற்
றெரிவுறுவிமானமவை தோறுமுறைதேவர்பலர் சித்தர்முதலோர்பா
னுெடுங்
கரியநெடுமால்பிரம னிந்திரன்முதற்பலர்க லந்தவகல்வானிகருமே ருச.

ஆற்றில்வழுவாமனுமுறைத்தருமன்மைந்தன்முதலாகியருமாராடைவே
போற்றியடலாசிரிய ரிருவரையுமன்பினுயர் பூசனைபுரிந்துபுரிநாண்
ஏற்றியசராசனம் வணக்கிவடிவாளியி னிலக்கமவைநாலும்வகையரு
ன்
மாற்றினர்பிளந்துபொரு வன்மைசிறுநுண்மைசில மச்சலமெனச்
சொல்வகையே. ருரு.

ஆயுதமநேகவித மானவையெனப்பலவு மழகுறவியற்றியுமதம்
பாயுமிபமாவிரத வாசியொருவர்க்கொருவர் பலகதிவாக்கடவியுஞ்
சேயுயருமாடநிலைதோறவையிருந்தவர் தெளிந்துளமகிழ்ந்துநவைதீர்
வாயுகதியல்லது மனித்தர்கதியல்லவென வல்லனபுரிந்தனரோ.
ருசு.

ஒத்தவலியோர்வலியு மொத்ததிறலோர்திறலு மொத்தவினையோர்வி
னையுமன்
சித்தமழன்மூழ்முக வம்புயமலர்ந்தாசன் மகனுமநிலன்சிறுவனுங்
கைத்தலமமர்ந்தகதை கொண்டெதிர்நடந்தனர் களிப்புடனிரண்டு
தறுகண்
மத்தகயம்வேறொடு மாாமாமெடுத்தமர் மலைந்தனையகோலமற
வோர். ருஎ.

தண்டின்முனையொன்றினுட னொன்றுருமெறிந்தனைய தன்மையொ
டுடற்றவிலகும்
மண்டலவிதங்களும்வியப்புறநடந்துபின்மறத்தொடுசெயிர்த்துவயிரம்
கொண்டிருவரும்பொருத லுன்னுபொழுதங்கவர் குறிப்பினையிமைப்ப
ளவையிற்
கண்டுகுருவின்சிறுவ னன்பொடுவிலக்கினன்மெய் கல்விகரைகண்
டபெரியோன். ருஅ.

மீளிமகவான்மதலையாயுதபுரோகிதன் விலோசனமுணர்ந்தவன்மலர்த்
தாளின்முடிவைத்தெதிர்தரித்தனனிடங்கைவரிசாபகவயத்தனனிபம்
யாளியாவங்கருடன் வன்னிசலிலந்திமிர மீரவியிவையேகடவுளாம்
வாளியின்விநோதமுற வெய்தனனிருந்தமுடி மன்னவர்திகைக்கும் வ
கையே. ருகூ.

(வே.) மங்குல்சூழ்விசாலமுன்றின் மஞ்சகோடிதிகழவே
அங்கண்வானமீனமாக அவையிருந்தவாசர்முன்
சிங்கமென்னுமாறெழுந்து சிங்கநாதமுஞ்செய்தான்
பங்கசாதபரிமளங்கொள் பாதநாயகுநுவே. கூய.

சிந்தையன்புடன்பணிந்து தேசிகேசனருளினல்
வந்துவெஞ்சாரசனம் வணக்கிவீரவாளியால்
இந்திரன்குமாரன்முன் னியாதியாதியற்றினன்
அந்தவந்தநிலையுமேவும் அதனில்விஞ்சலாயினன். ௬௧.

கணைகள்போயிலக்கடைந்த வுறுதிகண்டுகண்களித்
திணையில்வீரனென்றதன் றிருந்தாரசமண்டலம்
பிணையன்மாலைவிசயனண்ணல் பெற்றிபற்றிநாணினன்
துணைவரோடுவரிகழற் சுயோதனன்களிக்கவே. ௬௨.

மருவநின்றருக்கன்மைந்தன் வானநாடன்மகனைநாம்
இருவருந்தனுக்கொள்போர் இயற்றவம்மினென்றலுங்
குருகுலந்தழைக்கவந்த குமாரன்புகாவே
உருகிநன்றெனத்தழீஇ யுவந்துளந்தருக்கினன். ௬௩.

அனந்தாம்பொறாத்து நீகோல் அந்தாமெனக்கெனத்
தனஞ்செயன்செயிர்த்தல்கண்டு தபனன்மைந்தன் மீளவும்
ம்வனந்தபோரின்முடிதுணித்துன் முகசரோருகத்தினற்
சினந்தணிந்தாங்கபூசை செய்வனென்றுசீறினன். ௬௪.

அதிருகின்றவெழிலிபோல் அருச்சுனன்றனைக்குறித்
ததிருகின்றவின்மைகண் டியாவருந்துதிக்கவே
முதிருகின்றமெய்யனுகி முன்னிருந்தகோதமன்
உதிருகின்றவழுதவீர மொக்குமென்னவுரைசெய்தான். ௬௫.

சூதன்மைந்தன்வேலையேழு சூழுமேதினிக்கெலாம்
நாதன்மைந்தனுடன்வெகுண்டு நவிலுதற்குநண்ணுமோ
ஏதமுண்டுசாலமென்ன ராசராசனிகலியக்
கோதமன்றனக்குளங் கொதிக்குமாறுகூறினன். ௬௬.

கற்றவர்க்குநலனிறைந்த கன்னியர்க்கும்வண்மைகை
உற்றவர்க்கும்வீரரோன் றுயர்ந்தவர்க்கும்வாழ்வுடைக்
கொற்றவர்க்குமுண்மையான கோதின்ஞானசரிதராம்
நற்றவர்க்குமொன்றுசாதி நன்மைதீமையில்லையால். ௬௭.

அரிபிறந்ததன்றுதூணி லானும்வேயிலாயினன்
பாவையுண்டமுனியுமப் பாத்துவாசன்மைந்தனும்
ஒருவயின்கண்முன்பிறந்த தொண்சலத்தினல்லவோ
அரியவென்றிமுருகவேளு மடிகளும்பிறந்ததே. ௬௮.

என்றுநல்லவுரையெடுத் தியம்பியேனையிளவினே
டொன்றிநின்றவாடகத்தை யோடவைக்குமாறுபோல்
அன்றுசூதன்மதலைதன்னை யங்காசனுக்கினன்
மின்றயங்குமுடிகவித்து வேந்தெலாம்வியக்கவே. ௬௯.

தானிருந்தவரிமுகஞ்செய் தாள்சுமந்ததவிசின்மேல்
ஊனிருந்தபடையினனை யுடனிருத்திவண்டுசூழ்
தேனிருந்தமாலைவாகு சிகாமீதுதெண்டிரைக்
கானிருந்தமண்டலங் கருத்தினுலிருத்தினன். ௭௰.

தவனன்மைந்தனுஞ்சுயோ தனும்இசைந்துதனதனும்
சிவனுமென்னநண்புகொண்டு திறலுடன்சிறந்துளார்
பவனனும்பர்நாயகன் பயந்தவீராஞ்சவே
அவனியெங்குநமதெனக்கொள் பெருமீதத்தாயினர். ௭௧.

ஆனகாவலயெண்ணுகின்ற வாயுதங்கள்யாவையும்
யானைவாசியிரதமான யானமுள்ளயாவையுஞ்
சேனையோடுதெவ்வரைச் செறுக்கவல்லவீரமும்
மானவீர்வல்லரொன்று மறைவலாளன்மகிழ்வுற. ௭௨.

வம்மினுதிருதலந் தழைக்கவந்தமைந்தர்காள்
தம்மினுளையேயெமக் களிக்கநின்றதக்கணை
எம்மினுனொருத்தன்வே றியாகசேனனேன்றுளான்
நும்மினுடியவனையிம்பர் நோதல்செய்துகொணர்மினே. ௭௩.

என்றுதஞ்சிலைப்புரோ கிதன்கனன்றியம்பவே
அன்றவன்பதம்பணிந் தளித்தசொற்றலைக்கொளா
வென்றிநீடுபடைகளோடும் விரவுமங்கநாலொடுஞ்
சென்றுதங்களுடகன்று தெவ்வர்நாடுதுறுகினர். ௭௪.

ஆளிமொய்ம்பாம்முனைக்க ணனைபோதனீகினித்
தூளிகண்புதைத்தசென்று செவிபுதைத்ததுளனிபோய்
ஒளிகொண்டசெம்பொன்வெற்பி னுடல்புதைத்தவெழிலிபோல்
வாளிகொண்டவிருதர்மா மதிற்புறம்புதைக்கவே. ௭௫.

வளைத்தசேனையானைவாசி வானினின்றுதுமறவே
உளைத்தெழுந்துமழையைவிட் டுடன்றசிங்கவேறுபோற்
றிளைத்ததன்பதாதியோடு மேகயாகசேனனும்
இளைத்தநெஞ்சனன்றுநீடு புரிசைவாயிலெய்தினன். ௭௬.

சோமகர்க்குமடுதுசேனை சூழவந்ததருதலக்
கோமகர்க்கும்வெஞ்சமம் விளைந்ததாண்மைகூரவே
பூமகற்குமிக்கமா முனிக்குவாய்மைபொய்த்தவம்
மாமகற்கும்விசயனுக்கு மன்னுபோர்வயங்கவே. ௭௭.

தூறுகொண்டுகணைபொழிந்து சோமகேசர்பொருதலான்
நூறுகொண்டகுமார்தங்க ணகரின்மீளநோக்கினர்
மாறுகொண்டவிசயன்வீசும் வண்ணவாளிவலையினல்
வீறுகொண்டேதீரந்தமன் விலங்கரீடுபட்டதே. ௭௮.

தகப்படுஞ்சாசனத் தனஞ்செயன்கைவாள்வெரீஇ
அகப்படுந்தராதிபன்ற னற்றவில்லிணையியான்
மீகப்படுந்தடங்கொடேர் மிசைப்பிணித்துவிசையுடன்
நகப்படுஞ்செயற்கைசெய்து குருவின்முன்னர்நண்ணினன். ௭௯.

முறுவல்கொண்டுகண்டசாப முனியுநாணியெம்மைநீ
உறுவதொன்றுமுணர்கிலா துரைத்தவுன்சொலுறுதியோ
மறுவிலந்தணாளன்யானு மன்னனீயும்வாசவன்
சிறுவன்வென்றுனைப்பிணித்த சிறுமையென்னபெருமையோ. ௮௰.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அன்றெனக்குநீயிசைந்த அவனிபாதியமையுமற்
றின்றுனக்குநின்றபாதி யான்விளைந்துதருதவன்
குன்றெனக்குவிந்திலங்கு கோர்றவாதவீரவே
உன்றனக்குவேண்டுமென்ன உயிரும்வாழ்வுமுதவினான். அக.

(வே.) புயங்கம்பருகியுமிழ்மதியம் போல்வான்மீண்டும்பூசான்றன்
வயங்குஞ்சுருதிவாய்மையினான் மன்னுந்தருக்கள்பதிநீங்கித்
தயங்குஞ்சிலைக்கைவாள்விசயன் சயமும்பிறர்முன்றனகப்பட்
டுயங்குஞ்செயலுநினைந்துநினைந் துள்ளஞ்சுடப்போயூர்சேர்ந்தான்.
அஉ.

மறுகிற்பணிலந்தவழ்பழன வளநாடுடையானெதிர்வணங்கி
முறுகிப்புரிவெங்கலைக்கோட்டு முனியேபோலுமுனிவாணைத்
தறுகட்குருவின்றலைதுணிக்கத் தகவோர்மகவுந்தனஞ்சயன்றேள்
உறுதற்கொருபூங்கன்னியையும்பெறுவான்வேண்டியுற்றிரந்தான். அங

ஆறுமுகனைப்பயந்தநதி யலையாற்குளிர்வதொருகாவில்
ஈறில்தவத்தோனுபையாசன் அரசனெனும்பேரிருவோருங்
கூறுமுறையிற்சடங்கியற்றக் கோவின்வழக்கப்பெருவேள்வி
நூறுமகத்தோனிகராசை நோன்மைக்கிசையப்புரிவித்தான். அச.

புரிந்தமகப்பெற்றழல்வேள்விப் பொன்றவோமப்பொருண்மிச்சில்
பரிந்துவிபுத ரமுதேய்ப்பப் பைம்பொற்கலத்தினிறைத்தாங்குத்
தெரிந்தமணிப்பூணவன்றேவிக் களிக்கத்தீண்டாளாகியபின்
சொரிந்துகனலினுபையாசனிமைப்பிற்சுதனைத்தோற்றுவித்தான்.
அரு.

வலையம்பிறழமுடிதயங்க மணிக்குண்டலம்போழகெறிப்பச்
சிலையுங்கையுமெய்யும்வயங் திகழ்போர்வயிரக்கவசமுமாய்க்
கொலைவெஞ்சிங்கக்குருளைபோலங் குன்றின்புறத்துக்குதிப்பதுபோற்
றலைவன்களிக்கத்தடந்தேர்மேற் றனயனொருவன்றலைப்பட்டான்.
அசு.

தேரோடருக்கனருண்மணிச் சிமயத்துதிப்பச்செவ்வியுடன்
நீரோடையிற்செந்தாமரைக ணிறம்பெற்றலர்ந்துநிறைவனபோல்
விரோதயன்வந்துதிப்பளவில் மேன்மேன்மகிழ்ந்துமெய்களித்துப்
பாரோர்கணங்கள்களித்தனவாற் பார்க்குந்தோறும்பரிவுற்றே. அஎ.

சங்கச்சங்கமிகமுழங்கச் சாந்தும்புழுகுமெறிந்தார்த்துத்
துங்கக்கொடியுந்தோரணமுங் தொடையும்பரப்பிச்சோமகநாட்
டங்கட்சயந்தனவதரித்த வமராவதிபோலார்வமெழத்
தீங்கட்குழவியுற்பவித்த திசைபோன்றன எண்டிசையெல்லாம். அஅ

பின்னுங்கடவுளுபையாசன் பெருந்தீப்புறத்துச்சுருவையினான்
மன்னுங்கடலாரமுதென்ன வழங்குஞ்சுருதியவிகலத்தான்
மின்னுங்கொடியுநிகர்மருங்குல் வேய்த்தோண்முல்லைவெண்முறுவற்
பொன்னும்பிறந்தாள்கோகனகப் பூமீதெழுந்தபொன்போல்வாள். அகூ.

மண்மேலொருத்தியாக்கர்குல மாளப்பிறந்தாள்வாமநுதற்
கண்மேலின்றுமிவள்பிறந்தாள் கழற்காவலர்தங்குலமுடிப்பான்
எண்மேலென்கொலினியென்றுங் கெவருங்கேட்பவொருவார்த்தை
விண்மீதெழுந்ததவன்புரிந்த வேள்விக்களத்தினிடையம்மா. கூய.



Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

முற்றேன்றியதன்குலமுதலான் மாட்போர்முனிக்குமுடிவுமவன்
பிற்றேன்றியவக்கன்னிகையால் விசயன்றனக்குப்பெருநலமும்
உற்றேர்ந்துள்ளமிகத்தருக்கி உயர்ந்தாங்கமைந்தானுயர்மகத்தாற்
பெற்றேன்பெற்றபேறுமகப் பெற்றேர்தம்மிற்பெற்றார்யார். ௬௧.

காணமறுவற்றிலங்குதிறற் கலைசொல்பவன்பாற்கனல்பயந்தோன்
சாணமலர்தன்றலைக்கொண்டு தனுநூலெனக்குத்தருகென்றன்
மாணமீவனுற்றனக்கென்ப துணர்ந்துகுருவுமருதளித்தான்
ஆணியிடத்திற்செறிந்தன்றே அதனைச்செதுப்பதழலம்மா. ௬௨.

இவ்வாறமைந்தாங்கைவருடன் ஈரைம்பதின்மர் நண்ணிவளர்
மைவான்மீனிற்பலகோடி மன்வந்திறைஞ்சிப்புடைசூழத்
தெவ்வாறியவெம்பெருஞ்சேனைத் திரிதாட்டினானுந் தம்பியுமற்
றெவ்வாரிவற்கென்றுதிட்டிரனை யொழுக்கத்தழகாலுட்கொண்டார். ௬௩.

(வே.) பூதிநலந்திகழ் பூருதலத்துக்
காதிபனுகிய நங்கணவென்றேன்
நீதியினுலு நிறைந்தனனுண்ணூல்
ஓதியகேள்வியு திட்டிரனென்று. ௬௪.

மைந்தருடன்செயல் வழுவறவெண்ணிக்
குந்திபயந்தருள் குரிசிலையிவனே
இந்தநிலக்கினி இளவாசென்றுங்
கந்தண்மதிக்குடை முடியொட்ளித்தான். ௬௫.

சந்தனுவின்றனி மாபுதயங்கச்
செந்திருமேவரு சிறுவனுமப்போ
தீந்துவோடாதவ னிருவருமன்பால்
வந்துதழீஇமெய் வயங்கினனுெத்தான். ௬௬.

துன்மதியான சுயோதனன்மாழ்கித்
தன்மதியாலரு டந்தையையெய்திப்
புன்மதியாமுரை சிற்சில்புகன்றன்
மன்மதியாதும தித்தலிலாதான். ௬௭.

உன்பதம்யாவும் உதிட்டிரனுக்த
மன்பதையோடுவ ழங்கினையெந்தாய்
அன்பதிலாவவ் வநுசர்மதத்தால்
என்பதமம்ம இறந்ததையன்றே. ௬௮.

என்றலுமைந்தவ இந்துதலத்தோய்
நின்றிலையான்மனு நீதியிலையா
பொன்றியவெம்பி பதம்புதல்வர்க்கே
அன்றிநுமக்கா சாளுதலாமோ. ௬௯.

நீதியிலாநெறி யெண்ணினைநீயிங்
கோதியவாய்மையில் உறுபொருளின்றல்
ஆதிபாரயவ னைவருநீரும்
மேதினியாளுதல் வேந்தியலென்றன். ௭0.

ஐகன்மிதகன்னனும் என்னிவளயோருஞ்
சதனியுழண்டு ததந்துவணைநெஞ்சில்
உகவையிலாரோடு றேனினியென்றே
மூக்ண்மழதாம்புவன முகனொடுரைத்தான். ௱௧.

பாதகனன்றுப கர்ந்தமொழிக்கே
பேதகமானபி தாமருளெய்தா
மேதகவாழ்வுறு வில்விதுரற்கும்
காதகநல்லுரை நதிமகனுக்கும். ௱௨.

ஈண்டினியென்செய்வ தென்னுமினென்றே
பாண்டவரோடுப யின்றுறையாமற்
றூண்டுபரித்துரி யோதனன்முதலோர்
பூண்டனர்வெம்பகை வாழ்வுபொறாதார். ௱௩.

ஒருதிறனிந்நகர் உறைதலினென்ற
திருதிறன்மைந்தரும் இகலுவர்மேன்மேல்
அருகணுகாவகை யகலவிருந்தால்
மருவுறுநண்பு வளர்ந்திடுமன்றே. ௱௪.

இம்மொழிகூறலும் இருவருமெண்ணித்
தெம்முறையாயினர் சிறுபருவத்தே
எம்முனைகேளலர் இனியவர்மதியே
தம்மதியேமதி யாதுவதென்றார். ௱௫.

விதுரனும்வார்கழல் வீடுமனுந்தம்
இதயநிகழ்ந்தவி யம்பியபின்னர்
பொதுமையிலாத புரோசனனென்னும்
மதியுடைமந்திரி வருகெனவந்தான். ௱௬.

வந்தவமைச்சனு மைந்தனுமற்றத்
தந்தையுமாங்கொரு தனிவயினெய்திச்
சிந்தனைசெய்தனர் தீயமனத்தோர்
குந்திமகாருயிர் கோறல்புரிந்தே. ௱௭.

(வே.) ஆணுதியர் ஆற்றும்புகழது
நாணுதியர் நண்ணுஞ்சிறப்பது
தோணுதிது லங்குபொற்கோபுரா
வாணுவத மாநகரங்களே. ௱௮.

சென்றிருக்கத் திருவாய்மலர்கென
ஒன்றுபட்டும கன்றெழுதோதினன்
அன்றுதொட்டுயிர் அன்னவமைச்சனால்
நன்றுபட்டது நன்னகரங்களே. ௱௯.

சிற்பநூலிற் றிருந்தியமாக்களாற்
பொற்பமைந்துபொ லிந்ததுபொன்னகர்
கற்பகாடவி யல்லதுகண்டவர்
அற்பமென்பர் அமராவதியையே. ௱௰.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அறத்தின்மைந்தனை யாங்கொருநாளவைப்
புறத்திருந்துபு கன்றனன்பூபதி
திறத்துநின்னிளை யாரொடுஞ்சென்றுதோண்
மறத்திறற்றனி வாழுதியென்னவே. ௱௰௧.

புகன்றகேள்விப் புரோசனன்றன்னையும்
மகன்றனக்கினி மந்திரியாகிநீ
இகன்றவர்ச்சேற் றினியோர்க்கினிமைசெய்
தகன்றஞாலம் இவன்வழியாக்குவாய். ௱௰௨.

என்னவாங்கண் இறைஞ்சியனந்தாஞ்
சொன்னசொற்படி சூழ்படைவேண்டுவ
இன்னவுங்கொண் டிளவாசோடுமப்
பொன்னகர்க்கொடு போயினனென்பவே. ௱௰௩.

ஆரவேண்டுடை யைவருந்தந்தியும்
பூரஞானப் புரோசனநாமனுஞ்
சோவெண்பிறைச் செஞ்சடைவானவன்
வாரணவதஞ் சென்றுவணங்கினர். ௱௰௪.

அங்கவன்றன் அருள்பெற்றழுதுற
இங்கிதத்தொ டியற்றியநீள்கொடி
மங்குறேய்மணி மாளிகையெய்தினர்
சங்கம்விம்ம முரசந்தழங்கவே. ௱௰௫.

ஆவியன்னவ மைச்சன்மொழிப்படி
மேவியத்திசை வேந்தர்தழாந்தொழக்
கோவினுவரைக டக்கக்குவலயத்
தேவிமெய்களிக் கச்சிறந்தாரோ. ௱௰௬.

(வே.) மன்னரைவரும் வாரணவதந்தனின்மருவித்
துன்னலார்தொழத் தொன்னிலம்புரந்திடுநாளிற்
பின்னநெஞ்சுடைப் புரோசனன்பேதுறுமதியால்
முன்னமேயினி தமைத்தமன் மனைச்செயன்முன்று. ௱௰௭.

மெழுகினனமக் காலயம் வகுத்ததும்விரகே
ஒழுகுகின்றதன் றெழுக்கமும் வஞ்சனையொழுக்கே
எழுகடற்புவி யாவையும் இவன்வழியளவே
தொழுதகையும்வெம் படையுள சூழ்ச்சியும்பெரிதால். ௱௰௮.

சங்கையுண்டினி யுண்டியுஞ்சாந்தமும்பூணும்
பொங்குநுண்ணிழைத் துகிலுமந்தாமமும்பூவும்
இங்கிவன்புரிந் தியற்றியகோடலமென்றார்
கங்கைநீர்தவழ் கழனிசூழ்பழனநாடுடையார். ௱௰௯.

ஐயமுற்றிவரிருப்புழி மயனினுமதிகன்
சையமொத்ததோள்வலனுடைத் தபதியனொருவன்
வையமுற்றுடைவிமனை யொருதனிவணங்கி
ஐயபட்டதை யறிந்தருளாய்முறையென்றான். ௱௨௰.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

நுந்தையேவலிற் கன்மியனூதனமாக
இந்தமாநகர்த் திருமனையியற்றிடுநாளில்
வந்தமந்திரி வஞ்சனையறிந்தறன்வடிவாந்
தந்தையென்னையும் ஏவினன் றன்மையினுணர்ந்தே. ௱௨௧.

அடியனேனுமற் றவருடன் ஆக்குமாளிகையிப்
படியினாலியற் றியதொழிற் பயனெலாங்குறித்து
நெடியகானகத் தளவுநீ ணிலவறைநேர்போய்
முடியுமாறொரு மண்டபத்தோட்டினேன் முழைபோல். ௱௨௨.

வேறொருத்தரும் அறிவுற விரகினாலொருதூண்
மாறுபட்டுநீ பறிக்கலாம் வகைவழிவகுத்தேன்
தேறுதற்கிது ததுமெனத் திருவுளத்தடக்கி
ஊறுபட்டபோதெழுந்தருள் எனப்பணிந்துரைத்தான். ௱௨௩.

தச்சரிற்பெருந் தலைவனுக் குரிமையிற்றங்கள்
பிச்சரிற்கொடுத் தவன்விடை கொண்டதன்பின்னர்
அச்சமற்றிவன் அம்மனைக்கம்மனைவழங்கி
நீச்சமின்றுகோல் இன்றுகோ லெனநினைந்திருந்தான். ௱௨௪.

விடலிவன்சினை நெடுங்கொடி தழுவலின்மிடைந்த
அடவியெங்கணும் வேட்டையாற் றங்கள்போராண்மை
நடவிநண்பகல் இரவுகண் டுயிலறநடந்தார்
புடவிதங்கள்வெண் குடைநிழற் குளிருமாபுரப்போர். ௱௨௫.

பாந்தளோடொரு மனைவயிற் பயில்பவர்போல
வேந்தரைவரு மந்திரவலியினன் மிக்கோர்
காந்துநெஞ்சுடை யமைச்சனைக் கைவிடாதணுகித்
தாந்தமெய்யென வுயிரெனத் தனித்தனிசார்ந்தார். ௱௨௬.

ஆங்கோர்கங்குலின் அழைத்துநீ டாசியலுசாவி
ஈங்குநீதுயில் வைகுதி யெம்முடனென்னப்
பாங்கர்மெல்லணைப் பள்ளியும் பரிவுறவழங்கித்
தாங்களும்போலஞ் சேக்கையிற் றங்கினர்மாதோ. ௱௨௭.

உணர்வறத்துயில் உற்றபோ தற்றமங்குணராத்
துணைவரைத்திருத் தாய்பதந் தொழுகெனச்சொல்லி
அணிகொள்கோயிலைத் தாதைதன் நண்பனுக்களித்தான்
இணையிலாவழ லாசர்கோ னிடநுகர்ந்திருந்தோன். ௱௨௮.

முடியுறத்தடங் கிரியினை முளிகழைதொறுமற்
றடிநிலத்துறச் சூழ்வரு மாறுபோலழலோன்
கொடிநிரைத்தபொற் கோபுரப் புரிசைசூழ்கோயில்
இடிமுழக்கென வெடிபடச் சிரித்தெழுந்தெரித்தான். ௱௨௯.

அக்கணத்திடை அன்னையில் அணுகியாங்கவரைத்
தோக்கசித்திரத் தூணடித் துவாரமேவழியாப்
போக்கெனக்கொடு போயகல் வனத்திடை புகுந்தான்
முக்கணற்புதன் முனிந்தவூர் முவரோடொப்பான் ௱௩௰.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

புரிந்ததீயினைக் கண்ணினீர் அவித்திடப்புகுந்து
பரிந்தநெஞ்சினை மீண்டுமப் பாவகன்சுடவே
கரிந்தகோயிலைக் காரிருள் புலாழன்கண்டோர்
எரிந்துவிழ்ந்தனர் ஐவரும் ஆயுமீண்டேன்றார். ௱௯௧.

விருந்தாய்விடம் இடவரு வேடருந்தாயும்
இருந்ததீமதி அமைச்சனே டிறந்தமையுணரார்
திருந்துமாமதிப் பாண்டவர் செயலுமற்றறியார்
வருந்தினார்தம துயிரிழந் தெனப்புவிமன்னர். ௱௯௨.

போதுபட்டிருள் புகுந்தொளி போனவானகம்போல்
மாதுபட்டபார் மடந்தைதன் மதிமுகமழுங்கித்
தீதுபட்டது குருகுலச் செல்வமென்றிரங்கி
ஏதுபட்டது முனிவார் முதலினோர்தயம். ௱௯௩.

கொட்பனற்சுட இறந்தமை கேட்டலுங்குருக்க
ளுட்பவத்துடன் அழுதிடுஞ் சுயோதனன்முதலோர்
உட்பனித்துமேல் வெயிலுற வேதும்புரிரோத்தார்
பெட்புறப்புவி முழுவதும் பெறுங்கருத்துடையோர். ௱௯௪.

பொன்னலங்கொண்மென் மெழுகினால் ஆலயம்புனைந்து
துன்னுவெங்கதைப் படைமருச் சுதனையேசுடுவான்
என்னவாண்மைகொல் எண்ணினா னெண்ணினுஞ்சுடுமோ
வன்னிதன்பெயர் மருச்சக னென்பது மறந்தே. ௱௯௫.

---

## காண்டவதகனச் சருக்கம்.

(Conflagration of the forest Kandava by the god of fire, for the purpose of appeasing his appetite.)

இனிய பான்முகந் தொழுக்குமா குதியென இலங்குமப் புரிநூலும்
தனது வெஞ்சிகைக் கொழுந்தெனப் புறத்தினிற் றழ்ந்தசெஞ் சடைக்காடும்
புனித வெண்புகை மருங்குசுற் றியதெனப் புனைந்த ஆடையுமாகி
மனிதவேதியர்வடிவுகொண்டவரோதிர் வன்னிவானவன்வந்தான். ௧.

வந்த அந்தணன் வடிவுகண் டிருவரு மெதிரோதிர் வணங்கித்தம்
சிந்தை யன்பொடு வேதிகை எனத்திகழ் செம்பொனின் றவிசேற்ற
அந்த ணாளனுந் துளிந்தபொற் கண்ணின னவிமணங் கமழ்வாயன்
உந்து வெம்பசி பெரிதுவல் லேயெமக் கோதனம் இடுகென்றான். ௨.

கரிய மேனியர் இருவருஞ் செய்யபொற் காயமா முனியுண்டற்
குரிய போனக மிடுதுமிக் கணத்தென உவகையோ டுரைசெய்தார்
அரிய வேள்வியின் வழங்குதற் கேற்றன அல்லவா யினுந்தம்மிற்
பெரிய வாயினும் அதிதிகள் கேட்டன மறுப்பரோ பெரியோரே. ௩.

அளித்து மென்றசொற் றன்செவிப் படுதலும் பெற்றனன் போலாகி
ஒளித்து வந்தன னிருபிறப் பினனலேன் உதாசன னென்றும்
களித்து வண்டிமிர் தொடையலீர் எனக்குணக் காண்டவ மெனுங்
கானம்

குளித்த நந்துதற் கிடங்கொடான் அவ்வனங் கொண்டல்வா கனன்
காவல். ச.

மிடைந்த நால்வகை மகீருகங் களுடனே வெற்பினங் களுந்துன்றி
அடைந்த தானவர் ஆக்கர்பே ரூகருக் காலயங் களுமாக்க்
குடைந்து சோரிகொள் வாளுகி ரரிமுதற் கொடுவிலங் கினமீக்துக்
கடைந்த கூரெயிற் றலதக் ககனும்வாழ் கானக மதுகண்டீர். ரு.

புதந்தி யான்முகம் வைக்கினேழ் புயலையும் ஏவியப் புருகூதன்
தொதுந்த ரதல இறுதிபோ னெடும்புனல் சொரிந்தவித் திடுமென்வன
முதுந்த னுனிரை புரந்தவா றெனவொரு முனைபடவிலக்கிற்கின்
மிதுந்த தாகமு மெண்ணமு முடிந்திடும் வேண்டுவ தீது என்றன். சா.

என்ற போதிலுன் இச்சையின் படியுனு விசைந்தனம் இமைப்போ
ழ்திற் [யித்தீ
சென்று கொள்கெனத் தனஞ்சயன் கூறலுஞ் சிந்தைகூர் மகிழ்வே
மன்ற லந்துழாய் மாயவன் அருளினல் வடிக்கவண மாளாமற்
றுன்று தூணியுஞ் சாபமும் இரதமுஞ் சுவேதவா சியுமீந்தான். எ.

ஈந்த வானாப் பதாகைகட் டீரான்ன டிவுளியு முடன்பூட்டி
ஆய்ந்த வன்றேழிற் பாகனும் அருணனி லழதுறும் படிதூண்டக்
காய்ந்த சாயக நாழிகை கட்டியக் கானிடிபங் காத்தேந்தி
வேய்ந்த மாமணிக் கவசமும் அருக்கனி லழதுற மேற்கொண்டான். அ.

நெஞ்சின் மேலிடும் ஊக்கமோ டணிதிகழ் நெடும்புயம் பூரித்துச்
செஞ்சி லீமுகந் தெறித்தனன் றெறித்தலுந்தெறித்தபேரொலி கானின்
விஞ்சி வாழ்வன் சத்துவ மடங்கவுள் வெருவுற உகாந்தத்து
மஞ்சி னீடுரு மொலியெனப் பாந்தது வான்முக டுறமன்னே. கூ.

ஆழி வாயொரு வடவையின் முகத்திடை அவதரித் தனனென்ன
ஊழி வாயுல கனைத்தையு முருக்குமா றுடன்றெழுந் தனனென்ன
வாழி வாழியென் றருச்சுனன்சாத்தையும் வார்சிலையையும் வாழ்த்தி
பாழி மேனியை வளர்த்தனன் பாவகன் பவனனும் பாங்கானன். ய.

மூள மூளவெம் பசியொடுஞ் சினத்தொடு மூடிமொய்த் துறவோடி
வாள மாகவோர் பவளமால் வரைநெடு வாரியை வளைந்தென்னக்
காள மாமுகி லூர்திநந் தனகிகர் காண்டவந் தவனயண்ட
கோள மீதெழ வளர்ந்தனன் வரைபடி கொண்டலுங் குடர்தீய. யக.

ஆன வாதுலந் தன்னொடுந் தப்புதற் கணிப்படப் பறந்தோங்குந்
தூங்கி றத்தன கபோதமொத் தனவிடை யிடையெழுஞ் சுடர்த்தூமம்
கான மேதியுங் காடியும் ஏனமுங் கடகரிக் குலந்தாமும்
வானி லேறுவ போன்றன நிரைநிரை வளர்தரு கருந்தூமம். யஉ.

வரைத்த டந்தொறுங்குதுலிய கடுங்கனன் மண்டலி னகல்வானின்
நிரைத்தெழுந்தன மேகமொத் தனவளர் நீலவொண்ணிறத் தூமம்
தரைத்த லத்துநின் றண்டகோ ளகையுறச் சதமகன் றடஞ்சாபம்
உரைத்த தன்வளை வுறநிமிர்ந் தழகுற வோடுகின் றதுபோலும். யங.

கருதி யாயிர கோடிவெம் புயங்கமீக் கானிடையுள வென்று
பருதி சூழ்வா வெருவுபல் துவடுடைப் பருப்பதங் களின்சாற்

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

சுருதி வேள்விநூறுடையவன்சிறகறத் துணித்தவாய்தோறும்பொங்கிக்
குருதி பாய்வன போன்றன கொளுந்திய கொழுந்தழற் கொழுந்தம்மா.
௰௪.

நோத்தி ரங்களின் வானிடை கதுமெனக் கொளுந்தியுற் றெரிகின்ற
தீத்தி ரங்கள்செங் காந்தளு மசோகமுஞ் செழுங்குறிஞ் சியுஞ்சோப்
பூத்த வொத்தன அன்றியுங் குலிங்கநீர் பொழியரு வியும்போன்ற
பார்த்த கண்கள்விட் டேகலா வகைநிறம் பாந்ததா துவும்போன்ற.
௰௫.

தளைத்த பாதவத் தலைதோறும் பற்றின சந்ததீர்த் தீளவேனிற்
கிளைத்து மீளவும் பொறியளி யெழவளர் கிசலயங் களும்போன்ற
திளைத்த வேர்முதற் சினையுற வெர்வன தீபசா லமும்போன்ற
வளைத்த கானிடை மேனிமிர்ந் துள்புது வன்னியின் சிகைவர்க்கம்.
௰௬.

தழைத்த பேரொளித் திவாகான் காங்கள்போய்த் தடவிய வடவிக்
கட்
பிழைத்த காரிருட் பிழம்பினை வளைந்துடன் பிடித்தெரிப் பனபோலு
முழைத்த வான்புழை யொருகாத்திருசெவி மும்மதப்பெருநால்வாய்
மழைத்த குஞ்சா முகந்தோறும் புக்குடன் மயங்கிய பொறிமாலை. ௰௭.

அரியெனும்பெயர் பொறுமையிற் போல்விளைந் தழற்கொழுந் துளைப்ப
ற்றக்
கிரிமு ழைஞ்சுக டோறும்பதைத் தோடின கேசரிக் குலமெல்லாம்
விரியு ரோமவா லதிசளிற் பற்றலின் விளிவுடைச் சாபங்கள்
எரியு சோகவெங் கனலிறு னின்றுநின் றிறந்தனசலியாமல். ௰௮.

எப்பு றத்திலும் புரிந்துதீ சுடுதலி னேகுதற் கிடமின்றித்
தப்பு றக்கருத் தழிந்தபே ரிரவலயோ டுழையினந் தடுமாற [டி
மெய்ப்பு றத்துவெண் புள்ளிசெம் புள்ளியாய் விடும்படி விளைந்தோ
அப்பு றத்துவீழ் பொறிகளவ் வவற்றினை அலங்கரித்தனவன்றே. ௰௯.

காழு டைப்புறக் கழைகளின் றுளைதோறுங் கால்பாந் திசைக்கின்ற
ஏழி சைக்குள முருகிமெய் புளகெழ விறைகொளும் அசுணங்கள்
தாழு ழற்சுடர் சுடச்சுட வெடித்தெழு சடுலவோ சையினமாய்ந்த
ஊழி யிற்புய லுருமிறுன் மடிந்திடு மாகர்தங் குலம்போன்றே. ௨௰.

அனைய போதிலவ்விபினசா லங்களி னூர்தருக் களினீண்ட
சினைக டோறும்வாழ் சிகாவளக் கலாபமேற் செறிதரு தீச்சோதி
பனையி னீளுடற் பணிகளை யலகினுற் பற்றலிற் படர்பந்தி
புனையுமாமணி நிழல்பாந் தெழுந்தெனப் பொலிந்திலங் கினமாதோ.
௨௧.

ஆசு கன்றனே டடவியை வளைத்தன னுசுகற் கணிமேன்மேல்
வீசு கின்றன புலிங்கசா லமும்புகல் வேறெமக்கிலதென்று
பாசி ளங்கிளி பூவைகள் வெருவிமெய் பதைத்துளந் தடுமாறிப்
பேசு கின்றசொற் கேட்டலு நடுங்கின பிறபற வைகளெல்லாம். ௨௨.

நெஞ்சி லீர நீதியுங் குடியிரா நிருதர்சென் னியில்வன்னி [ல்
குஞ்சி நீடுற வளர்வபோற் செங்கொடுங் கொழுந்து விட்டனமேன்மே
வஞ்சி நேரிடை யாக்கியர் நகமுழு மதிசிவப் புறத்தீட்டும்
பஞ்சி போன்றன வவாவர் பதயுகம் பற்றியசிகாவுன்னி. ௨௩.

றுப்பு ராங்கவள முக்கணன் முனிந்தநாள் மூவாம் முழுத்தீயிற்
றப்பி னுருளர் காண்டவ அடவிவாழ் தானவர் யாருய்ந்தார்
வைப்பு றத்தணி மணியொளி பாந்தேனப் பஃறலை களிற்பற்றி
வெப்பு றுத்தலி னுரகருந் தங்கள் வாய் விடங்கள்கொன் றெனவீழ்
ந்தார். உச.

புகைப டப்படக் கரிந்தன பொறியினுற் பொறியெழுந் தனவானின்
மிகை படைத்தவச் சுரர்பதி யாயிர விழிகளுங் கணப்போதிற்
றகைவ றக்கழை முதலிய தருக்களின் சடுலவா ரவமிஞ்சித்
திகைய னைத்திலும் பாத்தலிற் செவிகளுஞ் செவிடுபட்டனசோ. உரு.

(வே.) விாதமேற்கொண்டு செம்பொன்மால் வரையை விரிசுடர் சூ
ழ்வருவதுபோல் [ந்து
ஓதமேற்கொண்ட அநுசனுஞ் சுதனு மிமைப்பினிற் பன்முறை புரி
சாதமேற்கொண்டு சிரிப்பதுந் தனது தாவகம் பாவகன் புகுந்து
பாதமேற்கொண்டுநடிப்பதுங் கருதிப் பார்த்தனன் பாகசாதனனே.
உசு.

முந்திவார் சிலைக்கைப் பற்குனன் றொடுத்த மாணுடை மூரிவெங் க
ணைகள்
உந்திவா ளுரகர் சூடியமகுட கோடிக ளுடைத்தலி னுதிர்ந்து
சிந்திமீதெழுந்த மணிகளுமனலின் சிகைகளிற்றெறித்தெழுபொறியும்
இந்திராலயத்திற் கேற்றியதீப மென்னநின்றிலங்கினவெங்கும். உஎ.

தானவர் புரங்க ணீறெழ முனிந்த தமனியச்சிலைக்கைவே ளூர்தி
ஆனவர் நமது புரத்தையுஞ் சுடுவான் அழன்றனர் போலுமென்றஞ்சி
வானவர் நடுங்க வச்சிரப் படைக்கை வலாரியுமனனுறத்தளர்ந்து
கானவ நடனத் தக்கக னென்னுங் கட்செவி கெடுமெனக் கரைந்
தான். உஅ.

பாந்தெழ புகையாற் றத்தம வடிவம் பண்டையிற் பதின்மடங் காகச்
சுாந்ததிர் புயல்க ளனைத்தையு நெடுநீர் சொரிந்தவித் திடுமெனச்
சொல்லி
நீந்தா மருந்து விடாதுதன் னிழல்போல் நின்றவா னவரையு மேவிப்
புாந்தான் றனு மீரிருமருப்புப் பொருப்பின்வெம் பிடர்மிசை பொலிந்தா
ன். உகூ.

ஏவக விருத்தச் செவ்வியின் றனுவுக் கேற்றநாண் முறுக்கி யிட்டெ
ன்னச் [னப்
சேவகவிமையோர் எண்டிசா முகத்துச் செஞ்சுடர்வாள்விதிர்த் தென்
பாவகன் பதுவாய் நாவிதிர்த் தென்னப் பாந்தவப் பாவகற் குணவாய்த்
தாவக முழுதும் வளைந்துகொண் டெழுந்து சால்வதாஞ் சஞ்சலசாலம்.
ஙய.

ஏறிய களிறு பிளிறுநீ ளொலியு மெறித்தவிற் றெறித்தநா ணொலியுஞ்
சூறிய விமையோர் பெருந்தகை யொலியுந் துந்துமிக்குழாமதிரொலியுங்
கூறிய வநிலன் சடுலவல்லொலியுங் குறைவறத் திசைதோறுமிகுந்து
ஊறிய கவன பவனவேகத்தோ டுருமுடைமுகிலின்வா யொலியே. ஙக.

8

தூமமழ மெழுது பவனனு மெமது தோழனத் தோயமழ மெமதே
யாழமிங் கிவற்றே டொன்றுதலொழிந்து மீரிருபொருள்களும் பிரிந்தால்
மாழகி லெனும்பே ரொங்குளதடர்த்தும வாசவ னென்செயு மெம்மை
ஆழறை யற்து மென்றுகொண் டறவு மகங்கரித் தனன்வெதுண் ட
ழலோன். ௯௨.

ழண்டவெங் கனவல யுருமீன்வெங்கனலான் முருக்கியெங் கோதை
யா னெருக்கி
ஆண்டவன் களிற்றின் காங்கர்தாரை அருவியின் கணங்களாலவித்
துப் [ங்கள்
பாண்டவன் பகழி தொடுக்கினுங் கண்ணன் பருப்பதமெடுக்கினுமெ
காண்டவம் புரத்து மென்றுகொண்டிழிந்து பொழிந்தன கணம்படு க
ளங்கள். ௯௩.

காவலவா யருக்கன் பனிநுகர்ந் தென்னக் கட்டறக் காண்டவமென்
னும்
பாவலவா யுள்ளசாரசா மனைத்து நுகர்தலிற் பைம்புனல்வேட்டோன்
வேவலயே ழையுமொண் டேழமா முகிலும் விதம்படப் பொழிந்த தா
ரைகளாற்
றலுவே ழினையு நனைத்தனன் நனைத்துந் தணிந்ததோ தன்பெருந்
தாகம். ௯௪.

எக்கடல் களினு மினிப்பசை யிலதென் றேழிரு புவனமுநடுங்கத்
தொக்கட லுருமோ டேழுமெழ கொண்டற் சோணையஞ் சுருவையான்
முகந்து
மைக்கடல் வெளுக்கக் கறுத்தமெய்மகவான் வழங்கிய ஆகுதி ய
னைத்தும்
நெய்க்கடல் சொரிந்த தென்னுமா றருந்தி நீடுவான் முகடுற நிமிர்ந்தா
ன். ௯௫.

தொழுதகு விசயன் றலுவே ழுடையோன் சுடர்முடி நனைந்திடு வதன்
முன்
எழுமுகி லினமும் பொழிதருமாரி யாவையுமவ் ஏவினுல் விலக்கி
முழுதுல கழந்தன் னிடத்தடக்கியவான் முகடுற முறை முறையடுக்கித்
தழுவெழுங் கணையாற் கனற்கட வுளுக்குக் கொற்றவான் கவிகையு
ங் கொடுத்தான். ௯௬.

ஆழ்தரு பாவை யேழும்வற் றிடுமா றருந்துகா ருமிழ்ந்திடு நெடுநீர்
தாழ்தரு கணையான் வேய்ந்ததற்கிடையோர் தனித்திவலையும்பொசி
யாமல்
வீழ்தருமருவி பாவசன்றனக்கு விசயனன் றளித்தபொற்குடைக்குச்
சூழ்தா நிரைத்துத் தூக்கியமுத்தின் சுடர்மணித் தொடையல்போன்
றனவே. ௯௭.

மண்டமீ தெழுந்த வன்னியின்சிகைக ளிந்திரன் மதவலவாளிகளாற்
கண்டகூடத்திற் கமைத்தசெம்பவளக் காண்டகு தூண்டிராள்காட்ட
அண்ட கூடத்திற் கிந்திரன் பளிங்கா லமைத்தபல் லாயிரகோடி
தண்டதூணங்கள் போன்றன பாந்து தனித்தனி முகில்பொழி தாரை.
௯௮.

தக்ககன் றன்வனக் கூயினர் தேடிச் சாயகமண்டபஞ்சுற்றி
மிக்கவின் னவர்க டிரிதா வவன்றன் மெல்லியன் மகவையும விழு
ங்கி
அக்கணந் தன்னி லந்தாத் தெழலும் விழ்த்தின னம்பினுற்றுணித்துச்
செக்கா நடுவட் சென்னியை யுாகர் கன்னியைத் திருமணஞ் செய்
தோன். ௩௯.

பருவயிற்சதகோ டியினிைத் தயிராபதத்தின் முமதத்தினனவனத்துக்
கருவயிற்றெழிலித் தாரையால் வருணக் கடவுடன் கணைகளாலவித்
துச் [வனைத்தான்
செருவயிற்புாள வோதுக்கியத்தோழன் சிறுவனைச் சென்றெடுத்த
ஒருவயிற்பிறந்தானுதலின் மகவானுடனுடன் றிலனுதாசனனே. ௪௰.

அன்னவா யொடுதன் வாலதிதுணியுண் டலமருமச்சுவசேனன்
றன்னவாசவன்போய் வீடுகண்டுழியத் தனஞ்சயன் இனஞ்செய்
வெங் கணையால்
முன்னவானவனை முனைமுகந் தன்னின் முதுகிட முதுகிடமுருக்கிப்
பின்னவா ரிதங்க ளேழையும் பொருது பின்னிடப் பின்னிடப் பிளந்
தான். ௪௧.

தீான்மால்பொருது விடுகொண்டதற்பின்செக்கர்மெய் தக்ககன்பயந்த
பாாமாசுணமிவ் விசயனுக் கியாவர் பகையெனப் பலரையும் வினவிச்
சூான்மா மதவல சாணமேயாண நமக்கெனத் தொழுதுசென் றெய்தீ
வீாமாமுவனவெம் பகழியாகியதெம் மேதினிகளும்பெருவார்த்தை. ௪௨.

தோழன்மாமகனைக் கண்டபின்றனது தோழனையொருவயிற் காளுன்
வேழமாமுகத்திற் கைத்தலம்புடைத்தான் விழிகளாயிாங்களுஞ் சிவ
ந்தான் [ன்
ஏழுமாமுகின்மின் எதிரொலியெழுமா றெயிற்றிள நிலவெழ நகைத்தா
தாழுமா நிலத்தி னின்றமர் விளக்குந் தன்பெருந் தனயனை முனிந்
தான். ௪௩.

மேகசா லங்க ளிளைத்ததுந் திளைத்து மேலிடு விண்ணவ ரணிந்த
யூகசாலங்க ளுடைந்ததுங் கண்டா னுருத்தெழுந் துள்ளமுங் கொதித்
தான்
ஏகசாயகமு மிந்திாதனுவு மிமைப்பள வையின்விைாந் தெடுத்தான்
பாகசாதனனு மேனையதிசையின் பாலரும்பகடுமேற்கொண்டார். ௪௪.

தேவருங் கோடி தேவருக் கொருவர் சிாங்களாய் நின்றமுப் பத்து
மூவருந் தத்தம் வாகமேற்கொண்டு முந்துற வந்துவந் தணிந்தார்
யாவரும் புவனத் தின்றுகொலிறுதியென்றுகொண்டிாங்கினர் நடுங்க
மேவரு மனித ர்ருவரோடநேக விபுதரும் வெகுண்டு போர் புரிந்தார்.
௪௫.

பச்சைவாசிகளுஞ் செய்யவாய்க்கடவுட் பாகனும்பதங்களேயன்றித்
தச்சவா ளிகளாற் காங்களுமிழந்து தனிப்பெருந் திகிரியுந் தகா
உச்சமா மகத்திற் பண்டொடிந்தொடியா தொழிந்தனபற்களுமொடிய
அச்சமே துணையாய் அருக்கனுமொழிந்த அருக்கர்பன்னிருவரு மக
ன்றார். ௪௬.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

மாறுபட்டொழ்யப் பற்குனன்காத்தால் மழக்களுஞ் சூலமுமடைய
நீறுபட்டுடலி னிற்றுடன் மடிய நெடுங்கொடி யூர்தியேறுகளும்
ஏறுபட்டொழியச் சடையில்வானதியா லெய்தியதூளிவானெறியுஞ்
சேறுபட் டிடுமாறேடினர் மீளப் பதினொரு திறலுருத்திரரும். சஎ.

எண்ணிய வசுக்களெண்மரிற் கங்கை யென்னுமாய் வயிற்றினுற் ப
வித்த
புண்ணிய னொழிந்தோ ரெழுவருந் தங்கள் புயவலி மையிற்பொரு திடு
வான்
நண்ணியவமரில் விசயன்வெங்கணையா னுப்புலர்ந்துள்ளமுநடுங்கி
அண்ணிய நிலையும் பிரிந்தனரொன்ற னிற்பரோவாயுள்வேதியரோ. சஅ.

அருணவெங் கனலோன் கனலுடன்கலந்தா னுசுக னவற்றுநண் பா
னுன் [னுல்
கருவணயில் யமனுங் கானிடைமடியுங் கணத்திலே கவலையுற்றன
வருணனுங் கடல்கள் வறத்தல்கண் டழிந்தான் மதியுமம் மதிமுடித்
தவனும்
இருணிறவாக்கன் றனுமிங்கிவரோ டெங்ஙனம் பொருதுமென் றிளை
த்தார். சகூ.

சொன்மழைபொழிந்து வாகையுந்தனது சூழநங் துதிக்குநாவலர்க்குப்
பொன்மழைபொழியுங் கொங்கர்பூபதிதன் பொற்பதம் பொருந்தலார்
போலக்
கன்மழைபொழியுங் காளமாமுகிலுங் கடவுளர்த்துரந்தவன்காத்தின்
வின்மழைபொழியக் கற்களுந் துகளாய் மேனியும் வெளிறிமீண் ட
னவே. ருய.

மாயவன்றனக்கு நேயமைத்துனனு மைந்தனத் தந்தையை மதியா
ன் [ளவிற்
தூயவெங்கணையா லவனிடித்துவசந் துணித்தமர் தொடங்குமவ்வ
காயமெங்கணுநின் றெலியெழப்பாந்து காயமில் கடவுளக்கடவுள்
நாயகன்றனக்குப் பரிவுடனவைதீர் நல்லுரை நவின்றதையன்றே.
ருக.

தமரினு மினிய தக்ககன் முதலே தப்பினன் துருநிலஞ் சார்ந்தான்
தமானு நுமா லுய்ந்தன ன் றூமக் கொடியனுங்கொண்டலுக்கவியான்
நமர்களி லிருவர் நானுநாரணனு நமக்குமிங் கிவர்சிறி திளையார்
அமரினையொழிமி னமரினையொழிமி னமாரு மமார்நாதனுமே. ருஉ.

என்றுகொண்டுரைத்த மொழிசெவிப்பட்ட எல்லையி னிரவிமுன்னி
ருள்போற்
றுன்றுதன் சேனைச் சுர்கணஞ்சூழச் சுர்பதிதுறக்கமதடைந்தான்
வென்றுவெங்களங்கொண் டருச்சுனன்றனது வெற்றிகொள்சங்க
முங்குறித்தான் [னனே. ருங.
அன்றுசெந்திருமா லருச்சுனன் பொருத ஆண்மைகண் டதிசயித்த

வடமதுரையினுந் தென்மதுரையினு மதிக்குல நிருபர்கன்னியரைக்
கடிமணம்புரிந்தோன் வின்மையின்வன்மை கண்ணுறக்கண்டவா
னவரும்

புடவியிலொருவ ரொடுமினிப்பூசல் போரோனெனப் போன வாசவனும்
முடிசடைமவுலி நாதன் முதலா முனிவரு முடிவறப் புகழ்ந்தார். ருச.

மாசுணத்தாசன் மந்திரமமைத்த வனத்திடையிருந்தமாமயனை
ஆசுகக்கணைசென் றடர்த்தலும் வெருவி அருச்சுனுவபயமென்றா
ற்றத் [னும்
தேசுடைத்திகிரிச் செங்கண்மால்கருணை செய்தனன் றீவினையுறி
பேசுதற்கரிய பெரியவர் நினைந்தால் யார்கொலோ பிழைத்திடாதவரோ.
ருரு.

அழைத்தடல்விசயன் றனைத்துணைசெய்கென் றறுபத்தியோசனை
யாகித் [திடுகாவலப்
தழைத்தவவ் வனத்தைக் கனத்தைவென்கண்டு தழலவனுகர்ந்
பிழைத்தவர் மயனுந் தக்ககன்மகவும் பெருந்தவ னொருவன்முன்கருப்
பம்
இழைத்தநுண்சிறகர்க் கருநிறக் குரீஇன் கணங்களும அன்றிவேறில
ரால். ருசு.

என்பிறபுகல்வ தீரொழுபுவன மெம்பிரான் அருந்தியதென்னத்
தன்பசிதணியக் காண்டவவனத்திற் சாரசாழள்ளவையனைத்தும்
வன்புடனருந்தி யுதாழங்குளிர்ந்தான் வன்னிதன்வடிவழங் குளிர்ந்
தான் [டைந்தான். ருஎ.
அன்புடையிருவர்க் காசியும்புகன்ற னசைந்துபோய்த் துறக்கழம

அமாரா முதுத கண்டகாவலரு மவாவர் ஆண்மைக ளரைசெய்
தமரிலன்றெடுத்த பல்பெருங்கொடியால் அலங்கரித்தமைந்தன தேர்
மேற் [ளத்
றமருடன்றுணைவர் நால்வருநகரின் சனங்களு மகிழ்ந்தெதிர்கொள்
தமாழமாசு முழங்கவெண்சங்கந் தழங்கவந்தணிநகர் சார்ந்தார். ருஅ.

---

## பெருமாள் தூதுச்சருக்கம்.

(Krishna sent as an Envoy by the Pandavas to Turiothana.)

ஞானமன்போ டினிதுரைத்த ஞானமுனி அகன்றதற்பின் சாமபேத
தானதண்ட மெனநிருபர் தம்முறைமை யிற்புகலுந் தகுதிநோக்கித்[ம்
தூநறுந்தண் டுளவோனைத் தூதுவிடுவதற்கெண்ணிச் சுனைகடோறு
ஏனலந்தண் கிரிப்பெருந்தே னிரைக்குமெழிற் குருநாட னியமபினு
னே. க.

செஞ்சொன்முனி சஞ்சயனுக் கியாமுரைத்த கருமமுமன் சென்றகா
லை
அஞ்சொன்முனி புரோகிதனுக் கவருரைத்த கருமமுநீ அறிதியன்றே
நஞ்சுதவன மிக அருந்தி நன்மருந்து மந்திரமும் விரைந்துநாடா
தெஞ்சினர்தங் கிளைபோல இருக்குமதோ யார்மனத்து மிருக்குஞ்சோதி.
உ.

அருஞ்சமாம்விளக்கும்வகைஅவருரைத்தாரானுலுமறனொன்றின்றிப்
பெருஞ்சமாம் விளக்குமது கடனன்றென் றருள்வெள்ளம் பெருக
க்கூறும்
பொருஞ்சமா மணிமாசப் பூங்கொடியோன் றனைநோக்கிப் புயல்போ
ல்வண்ணன்

இருஞ்சமாந் தோலைத்தபிரான் இளைஞரையு முடனிருத்தி ஐயம்பிரு
ணே. ௩.

செய்வார் லினமுகளுந் திருநாடு பெறநினைவோ சென்றுமீளப்
பைவார் இருங்கானிற் பயின்றுதீர் தாநினைவோ பகைத்தபோரின்
உய்வார் ரெனவிளைவி னுருத்தெழுந்து போநினைவோ உண்மையாக
ஐவா மவனிபர்க்கு நினைவேதென் றருள்புரிந்தா னமார்கோமான். ௪.

வயிரமெனுங் கடுநெருப்பை மீகழட்டி வளர்க்கிலுயர் வரைக்காடெ
ன்னச்
செயிரமரில் வெதுளிபோச் சோவிரு திறத்தோருஞ் சென்றுமாய்வோம்
கயிரவமுந் தாமரையுங் கமழ்பழனக் குருநாட்டிற் கலந்துவாழ
உயிரனையாய் சந்துபட உரைத்தருளென் றனனறத்தின் உருவம் போ
ல்வான். ௫.

தூவரையுங் கிளைஞரையுங் குலத்துரிய துணைவரையுங் கொன்று
போர்வென்
றாவநெடுங் கடலாடை அவனியெல்லாந் தனியாளும் அரசுதன்னிற்
காவுறையுமனத்தாதைமுனிக்குரைத்தமொழிப்படியே கானந்தோறும்
இரவுபகற் பலமூல சாகநுகர்ந் துயிர்வாழ்தல் இழிவுமன்றே. ௬.

நீதூது நடந்தருளி எமதுநினை வவற்குரைத்தானினைவின்வண்ணம்
தாதூதி அளிமாலுந் தண்பவணசூழ் தரையுமவன் றானுகின்
மீதூதி வளைக்குலமும் வலம்புரியு மிகமுழங்க வெய்யகாலன்
மாதூதர் மனங்களிக்கப் பொருதேனும் பெறுவலிதுவசையுமன்றே. ௭.

மூந்தூர்வெம் பணிக்கொடியோன் மூதூரி னடந்துழவர் மூன்றிறேறும்
நந்தூரும் புனனாட்டிற் றிறம்வேண்டு நாடொன்று நல்கானுகில்
ஐந்தூர்வேண் டஃதின்றே லந்திலம்வேண் டவைமறுத்தால் அடு
போர்வேண்டு
சிந்தூரத் திலதநுதற் சிந்தூரத்தின் மருப்பொசித்த செங்கண்மாலே.௮.

மூத்தோன்மற் றிவையுரைப்ப இளையோன்வெஞ்சினமனத்தீ மூளமூள
காத்தோமி லுரைபதறிக்கதுமெனவுற்றெழுந்திறைஞ்சிஞாலமெல்லாம்
பூத்தோனே பூந்தவிசிற் பூவைபுணர் மணிமார்பா புன்மையாவுந்
தீர்த்தோனே ஊனமில்லான் மானமிலாதுரைப்பதற்கேன் செய்வதெ
ன்றன். ௯.

விரிதுழற்பூங் கொடிநாணி வேத்தவையின் முறையிடுநாள் வேதளே
லென்றல்
மாபினுக்கு நமக்குழல துள்ளளவுந் தீராத வசையேகண்டாய்
எரிதழற்கா னகமகன்று இன்னமும்வெம் பகைமுடிக்க இளையாநின்
றய் [னேனே ௰.
ஆவுயர்த்தோன் கொடுமையினு மாசுயர்த்தோய் நினதருளுக் கஞ்சி

காளை எமைவிடுத்த கண்ணிலா அருளிலிதன் காதன்மைந்தன்
தானுளுந் தாணியெல்லாம் ஒருகுடைக்கீழ் நீயாளத் தருதவேனுல்
மேனுண முரிமையறக் கவர்ந்தபெருந் துணைவனினை வெறுதவண்
ணம் [௰௧.
வானுளும் வானவர்கோன் றன்பதமு மவன்றனக்கே வழங்குவேனே.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பேரர்முடித்தா னமர்பொருது புலம்புறுசொற் பாஞ்சாலி பூந்தண்கூந்தற்
கார்முடித்தான் இளையோர்முன் கழறியவஞ்சினமுடித்தான் கடவுட்க
ங்கை
கீர்முடித்தா னிாவொழித்த நீயறிய வசையின்றி நிலைநின்றேங்கும்
பேர்முடித்தான் இப்படியே யார்முடித்தார் இவருடனே பிறப்பதேயான்.
௰௨.

அணிந்தபெருஞ் சமரிலெதிர்ந் தாவுயர்த்தோ னுடனாச நடலமெல்
லாம்
துணிந்தீாண்டு படப்பொருது தோல்வலயுலகாசாளத் துணிவதல்லாற்
றணிந்தறமுங் கிளையுறவுங் கொண்டாடித்தானின்னந்தனித்தூதேவிப்
பணிந்தீாந்து புவிபெற்றுண் டிருப்பதற்கே துணிகின்றன் பட்டபாடே.
௰௩.

பரிவுடனுற் றிவைகூறும் பவனகுமாவனமலர்க்கை பணித்துநோக்கிக்
குருகுலத்தார் போரோறே குற்றமதே பார்க்குங்காற் சுற்றமில்லை
ஒருகுலத்திற் பிறந்தோர்க ளுடன்வாழும் வாழ்வினைப்போல் உறுதியு
ண்டோ [௰௪.
இருவருக்கும் வசையன்றே இருநிலங்காரணமாக எதிர்ப்பதென்றன்.

உரிமையுடன் றம்பியான் றுணர்வறியா மையினவைக்க னுரைத்த
மாற்றம்
பரிபவமோ கேட்டோரும் பரிபவமென் பதுபிறராற் பட்டாலன்றே
கருதிலிது மற்றெவர்க்கு மோவ்வாதோ கண்மலரிற் கைபடாதோ
பொருதொழிலுங் கடைநிலத்திற் கிடந்ததே யெனமொழிந்தான் புகழே
பூண்பான். ௰௫.

சூடுகின்ற துழாய்முடியோன் சுாருடனே முனிவாருஞ் சுருதிநான்குந்
தேடுகின்ற பதஞ்சிவப்பத் திருநாடு பெறத்தூது செல்லவேண்டாம்
வாடுகின்ற மடப்பாவை தன்வாழ மென்வாழம் வழுவாவண்ணங்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத்தூது விடுகவினிக் கொற்றவே
ந்தே. ௰௬.

மலைகண்ட தெனவென்கை மறத்தண்டின் வலிகண்டு மகவான்
மைந்தன்
சிலைகண்டு மிருவர்பொருந் திறல்கண்டு நமக்காகத் திருமானின்ற
நிலைகண்டும இவள்விரித்த குழல்கண்டும இமைப்பொழுதி னோரர்தம்
மைக் [௰௭.
கொலைகண்டு மகிழாமல்அவன் குடைக்கீழுயிர்வாழக் குறிக்கின்றயே.

வெம்புயவீமனும்வெகுண்டு மீண்டுமிவை எடுத்துரைப்பமேகமேனிப்
பைம்பொனேடுந் தனித்திகிரிப் பாந்தாமன் கருணையுடன் பரிந்துநோ
க்கி [ற்
அம்புவியின் முன்பிறந்தோர் அாசுநெறிமுறையுரைத்தால் அதுகேளாம
றம்பியரும் வெறுப்பரோ தலைவலினிக் கடுங்கோபந்தவிர்கவென்றன்.
௰௮.

மைக்கால முகிலூர்தீ வானவர்கோன் றிருமதலை வணங்கிநின்று
முக்காலங் களுமுணரு முதல்வனுக்கு முறைமையுடன் மொழிந்தான்
மன்னே

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அக்காலம் பொறுத்தவெல்லாம் அமையால் இன்னுமிருந் தறமேசொ
ன்னால்
எக்காலம் பகைமுடித்துத் துருபதியுங் குழன்முடிக்க இருக்கின்றாளே.
யக.

தேவரா யினும்பழய தெயித்தியரா யினுமற்றுஞ் செப்புகின்ற
ஏவரா யினுமெதிர்ந்தோ ருயிருணவேன் றிருப்பதுவே என்கைவாளி
மூவரா யவர்கட்கு முதல்வனாகியமூர்த்தி முகிறேய்பூகம்
மீவாலுகளுவயற் குருநாடின் றென்னவன்பால் வேண்டுமாறே. உய.

தீண்டாத கற்புடைய செழுந்திருவைத் துகிலுரியச் செயலொன்றின்றி
நீண்டோனே கரியோனே நிமலாவென் றாற்றினளாய் நின்றுசோர
மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில் யாமிருந்த மாசுதீர
வேண்டாமோ வேண்டுவது நின்னறமோ மேம்பாடோ வேந்தர்வேந்
தே. உக.

பொன்னாருந் திகிரியினான் போனாலும் பொறைவேந்தன் புகன்றவெல்
லாஞ் [றே
சொன்னாலும் அவன் கேளான் விதிவலியாற் கெடுமதிக டோன்றுதன்
எந்நாளும் உவர்நிலத்தில் நென்முளைவித்திடினும் விளை வெய்திடாது
பன்னாகந் தனக்கமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப் பயின்றிடாதே.
உஉ.

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள இருந்ததற்பின் பரிவினோ
டு [வேலான்
தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங் கைதொழுது சினங்கொள்
நீத்தநெடுங் கடலெழுபா ரடலவர் பெறுவோனு நிகழ்ச்சிபோய்யோ
கோத்தருமந் தனிலாண்மை கூறதோ கூறுகநீ சொற்றவேந்தே. உங.

கேவலந்தீர் வலியபகை கிடக்கமுதற் கிளர்மழைக்குக் கிரியோன்றே
ந்தும் [ன்
கோவலன்போயுரைத்தாலுங் குருநாடும் அரசுமவன் கொடுக்கமாட்டா
நாவலம்பூதலத்தரசர் நாடிரந்தோ மென்றுநம்மை நகையாவண்ணம்
காவலன்றன் படைவலியும் எமதுதடம் புயவலியுங் காணலாமே.உச.

அன்னநடை அரம்பையரை அவுணர்கவர்ந் திடவிமையோர் அரசற்
காக [றே
முன்னமவருடன்பொருது சிறைமீட்டானங்குலத்தோர் முதல்வனன்
மன்னவையில்யாங்காண மடவரலத் துகிலுரிந்தவலியோன்றன்பால்
இன்னமவன் குடைநிழற்கீழ் இருந்தக்காலெம்மையுல கென்சொ
லாதே. உரு.

கானெறிபோய்க் காந்துறைந்து கடவநாட் கழிந்ததற்பின் கானநீந்தி
ஈனமிலா வகைவந்தார் நந்துணைவ ரெனச்சிறிதும இரங்கானாகில்
மாநகரும் வளநாடு முரிமையுந்தன் மொழிப்படியே வழங்கானாகிற்
றனறியா தவன்பிறர்போய்க் கற்பித்தாலறிவனோ தாணிவேந்தே. உசு.

நகுலனிவை உரைத்ததற்பின் நன்றெனக்கை அமைத்தருளி நகுல
ன்சொல்லும் [டாய்
இகல்விசயன் றன்மொழியுந் திறல்வீமன் ஐயம்பியன யாவுங்கேட்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

புகலரிய வுணர்வுடையை திறலுடையை புகழுடையை புகனீயெ
ன்ன
முகிலனைய திருமேனி முதந்தனுக்கு மனமுருக மொழிகின்றனே. ௨௭.

சிந்தித்த படிநீயுஞ் சென்றலேன் இருந்தாலேன் செறுத்ததுறு
மைந்தர்க்கு முதல்வனிவை வழங்காமலிருந்தாலேன் வழங்கினலேன்
கொந்துற்ற குழலிவளு முடித்தாலேன் விரித்தாலேன் குறித்தசெய்கை
அந்தத்தின் முடியுமுடி வடியேற்குத் தெரியுமோ ஆதிமூர்த்தி. ௨௮.

முருகவிழ்க்கும் பசுந்துளவ முடியோனே அன்றலகை முலைப்பாலுண்
டு [ர்ந்தமாலே
மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப் பொதுவர்மனை வள
ஒருவருக்குந் தெரியாதிங் தன்மாயை யானறிவேன் உண்மையாகத்
திருவுளத்தில் எதுநினைந்த ததுவெனக்குங் கருத்தென்றன் றெய்வம
ன்னன். ௨௯.

இவ்வண்ணஞ் சாதேவனியம்புதலு நகைத்தருளி இகலோர்சொன்ன
அவ்வண்ணம் புகலாமல் விாதுரைத்த தேவனென்று அவனொடாங்
கோர்
பைவண்ண மணிக்கூடந் தனிலெய்திப் பாரதப்போர் பயிலாவண்ணம்
உய்வண்ணஞ் சொல்லுகநீ உபாயமெனத் தொழுதுரைத்தான் ஊன
வேலான். ௩௰.

(வே.) நீபா ரதவமரில் யாவரையு நோக்கிப்
பூபாரந் தீர்க்கப் புரிந்தாய் புயல்வண்ணு
கோபாலா போரேறே கோவிந்தா நீயன்றி
மாபாரா தங்காக்க மற்றர்கோல் வல்லாரோ. ௩௧.

பாராளக் கன்னனிகற் பார்த்தனையுங் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து காலிற் றளைபூட்டி
நோரகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம் மாபாரதமென்றன். ௩௨.

முன்னைநீ கூறியவை எல்லாம் முடித்தாலும்
என்னை நீகட்டுமா றெவ்வா றெனமாயன்
உன்னைநீ தானு முணராதா யுன்வடிவந்
தன்னைநீ காணத் தளைத்திடுவன் யானென்றன். ௩௩.

மாயவனும் அன்பன் மனமறிவான் கட்டுகவென்
றுய வடிவுபதி னாறு யிாங்கொண்டான்
தூயவனு மூலமாந் தோற்றமுணர்ந் தெவ்வுயிர்க்கும்
தாய வடியிணைக டன்காத்தி னுற்பிணித்தான். ௩௪.

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றளைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கத் தானேயா முன்னின்றன்
பூதேவ நுங்கனகப் பூங்கா நிழல்வைகும்
மாதேவ நுந்தேடிக் காணு மலாடியோன். ௩௫.

அன்பாலின்றென்னை அறிந்தேபிணித்தமைநன்
றென்பாதந்தன்னை இனிவிடுகவென்றுரைப்ப
வன்பாரதப்போரில் வந்தடைந்தேமைவரையும்
நின்பார்வையாற்காக்க வேண்டுநெடுமாலே. ௩௬.



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

என்றேன்றிறைஞ்சி இருதாமரைத்தாளில்
ஒன்றுங்கதிர்முடியாற் கோமென்றுரைத்தருளி
இன்றிங்கிருவோரும் இப்போதுரைத்தமொழி
ஒன்றும்பிறாறிய வோதாதொழியென்றான். ௩௭.

ஆண்டிருந்த வவைநீங்கி அறிவுடையோர் இருவோரும்
பாண்டவர்கண் முன்னெய்திப் பழுதில்புகழ்ப் பாஞ்சாலி
நீண்டகருங் குழல்சோா நின்றவளை முகநோக்கி
ஈண்டவரில் இளையோனுஞ் சந்துமிக வினிதென்றான். ௩௮.

தருமனுக்குங் கருத்ததுவே தமருடன்போர் புரியாமை
இருநிலத்தி லுடன்வாழ்தல் எனக்கு நினை வென்றுரைத்தான்
வரிமலர்க்கண் புனல்சோா மலர்மறந்த குழல்சோா
விரைமலர்ச்சேஞ் சீறடிமேல் வீழ்ந்தழுதாள் மின்னன்னாள். ௩௯.

சாலக் கனகன்றன் றன்மைந் தவனழனிந்த
காலத் தவனறைந்த கற்றூ ணிடைவந்தாய்
மூலப்பே ரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக் கிரிபோன்முன் நின்ற நெடுமாலே. ௪௰.

கற்றைக் குழல்பிடித்துக் கண்ணில்லான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
அற்றைக்கு மென்மானம் ஆர்வேறு காத்தாரே. ௪௧.

மன்றில் அழைத்தெனக்கு மாசளித்த மன்னவன்பாற்
சென்று தமக்கைந்தூர் திறல்வீர் பெற்றிருந்தால்
அன்று விரித்த கருங்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதினி யெம்பெருமா னென்றழுதாள். ௪௨.

தண்டிருந்த தீவன்காத்திற் றனுவிருந்த தவன்காத்தில்
வண்டிருந்த கருங்குழன்மேன் மாசிருந்த தவணிருந்தாள்
கண்டிருந்தீர் எல்லீருங் கருதலன்பா லூர்வேண்டி
உண்டிருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீ ருரையீரோ. ௪௩.

சண்டமுகில் உருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யானுக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்த்தருமன் றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண் டுவதென்றான். ௪௪.

சாத்தகிநின் றிவையுரைப்பச் சடைக்குழலா ணின்றாற்றக்
கோத்தருமன் முதலாய தலவேந்த ரைவரையும்
பார்த்தருளி யருள்பொழியும் பங்கயக்கண் ணெடுமாலும்
ஏத்தரிய பெருங்கற்பின் இளையாளுக் கிவையுரைத்தான். ௪௫.

தோல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூதுபோய் மீண்டெய்தி
நல்லாய்நின் பைங்கூந்த லுனே முடிக்கின்றேன்
எல்லாருங் காண வினிவிர்ப்ப தெண்ணியவப்
புல்லார்த மந்தப் புரமாதர் பூங்குழலே. ௪௬.

மெய்க்குழலாய் கேளாய் விரவா ருடற்புலத்துப்
புக்குழலா துங்கொழுவாம் போர்வா ளபிமன்னுத்

தொக்குழலும் வெங்கோன்மைத் தொல்வேந்தர் தங்குலமும்
இக்குழலுஞ் சோ முடியா தீராதென்றான். ௪௭.

பெண்ணீர்மை குன்றப் பெருந்திருவின் செங்கமலக்
கண்ணீர் துடைத்தொருதன் கண்ணீர்க் கருணையெனுந்
தெண்ணீர்மை யாலிருந்து தேற்றினான் சாற்றுகின்ற
மண்ணீர் அனலநிலம் வான்வடிவ மாமாயன். ௪௮.

துன்று பிணியோர் துறந்தோர் அடங்காதோர்
கன்றுவயிா மனத்தோர்கல் லாரிவளையோர்
ஒன்று முறைமை உணாா தவர்மகளிர்
என்றிவர்கள் மந்தணத்தில் எய்தப் பெறுதாரோ. ௪௯.

என்னக் கழறி இருந்தோருளைதவிர்த்து
நின்னைத் தவரில்லாய் நீயே கெனவுரைப்ப
மன்னர்க்கு மன்னவன்பால் மாமாயன் றூதாகிப்
பொன்னுற்ற நேமிப் பொருபரித்தேர் மேற்கொண்டான். ௫௰.

சங்க மணிமாசுஞ் சல்லிகையுந் தாரைகளும்
எங்கு முழங்க எழில்வெண் குடைநிழற்றப்
பொங்கு கவரி புடையிரட்ட எண்ணில்லா
அங்கம் ஒருநாலும் அவனிபருந் தற்சூழ. ௫௧.

கல்வரையும் பாவலக் கடுஞ்சுரமும் பூங்காவும்
நல்வரைய நீர்நாடு நாளிரண்டிற் சென்றருளித்
தொல்வரைய கோபுர நீண்மதிலுஞ் சூழ்ந்திலங்க
மல்வரைய தோளான் வளமா நகர்கண்டான். ௫௨.

(வே.) மேவு செந்துகிர்த் திரளுமா மரகத விதழுங்
சோலை வெண்கதிர்த் தாளமு நிரைநிரை குயிற்றித்
தாவு வெம்பரித் தேரினான் றனக்கெதி ரமைத்த
காவ ணங்களிற் றோன்றின பச்சிளங் கமுகம். ௫௩.

வம்பு லாமகில் சந்தனம் வருக்கைமா கந்தம்
சம்ப கந்தமா லம்பல திசைதொறுந் தயங்க
உம்பர் நாயகன் வாவறிந் துளங்களி கூர்ந்து
தும்பி பாடின தோகைநின் றாடின சோலை. ௫௪.

அணிகொள் அத்தின புரியெனும் அணங்குசெந் திருவின்
கணவ னுக்கெதிர் காட்டுநீ ராஞ்சனங் கடுப்ப
மணமி குத்தசெந் தாமரை மலருடன் சிறந்த
புணரி யிற்பெரும் புனலையுங் கொள்வன பொய்கை. ௫௫.

நடந்த நாயகன் கோலமாய் வேலைநீர் ஞாலம்
இடந்த நாளிடை அதுவழி யாகவந் தெழுந்து
படர்ந்த பாதலக் கங்கையப் படாமதில்சூழ்ந்து
கிடந்த தாமெனச் சிறந்தது தாழ்புனற் கிடங்கு. ௫௬.

அடிநிலத்திலே படிவன விடிமுகி லனைத்தும்
முடிநிலத்தினுக் குடுபதத்தினு முடிவில்லை
நெடியசக்கிரப் பொருப்பையு நிகரொறுதிதற்குப்
படிவதுத்தா மெனும்படி பாந்தது புரிசை. ௫௭.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பகலினுங்கடும் பரிதிதன் கதிர்பரப்பாமல்
இகலியெங்கணும் எறிந்துகால் பொருதலினேற்றிப்
புகலுகின்ற மந்தாகினித் தூங்கமே போல
அகல்விசும்பையு மிடைவன நெடுங்கொடியாடை. ருஅ.

புயங்கபூமியோ புரந்தரற்கமைத்த பொன்னுலகோ
தயங்குசெல்வநீ டளகையோ நிகரொனுந்தாத்த
இயங்குகார்வரை முழைதோறும் எழுவனபோல
வயங்குகாரகி னறும்புகை யுயிர்ப்பனமாடம். ருசு

மன்னர்வெள்ளமுஞ் சேனையுமெதிரோதிர் மயங்கிப்
பின்னுமுன்னுமெம் மருங்கினும்பெயரிடம்பெறமற்
றுன்னிநின்றவர் ஏதுமினேதுமினெனச்சொல்
என்னுமோசையே உள்ளனவிதிகள் எல்லாம். சுய.

வரையெலாம்பல வனமெலாங் கடலெலாம் வளைத்த
தரையெலாம்படு பொருளெலாந் தனித்தனி குவித்த
நிரையெலாங்கஞ்ச மலாவணிர்மையைப் புலவோர்
உரையெலாந்தொகுத் துரைக்கினும் உவமைவேறுண்டோ. சுக.

விரவுகான்மல ரினும்பல வீரரின் விதங்கள்
பாவைவெண்மண லினும்பல புரவியின் பந்தி
இரவில்வானமீ னினும்பல யானையின் கூட்டம்
நிரைகொள்கார்மகிற் றுளியினு மிகுத்ததேர் நிலையே. சுஉ.

ஆசிலாமொழி அந்தணர் ஆலயமொருபால்
மாசிலாமுடி மன்னவர் மாளிகையொருபாற்
காசிலாமதி அமைச்சர்தங் கடிமனையொருபாற்
பேசிலாதிரு வணிகர்தம் பேரிடமொருபால். சுங.

விரும்புமந்தணர் மனையெலாம் வேதமென்கீதம்
பரிந்தகோவினன் னிரையெலாம் பசுங்குழற்கீதம்
திருந்தாங்கெலா மங்கையாடல்செய்கீதம்
சுரும்புவார்குழன் மலரெலாந் தும்பியின்கீதம். சுச.

மங்கலந்திகழ் மனையெலாம் வலம்புரியோசை
திங்கடோயுமேற் றலமெலாஞ் செழுஞ்சிலம்போசை
அங்கண்மாநகர் அனைத்துமா முரசதிரோசை
எங்கணுங்கட வுளர்விழா வியன்முழவோசை. சுரு.

முன்றிலின்கணின் றிடம்பெற வாசர்மாமுடிகள்
ஒன்றேடொன்றறைந் தோற்றிமே லொளிர்பொறி தவழ்ந்து
சென்றுசென்றுறு திசைதோறுந் திகழ்ந்ததுசெம்பொற்
குன்றெனும்படி குருகுல நாயகன் கோயில். சுசு.

என்றிசைக்குநல் லொளிநிமிர் எழின்மணிமாடக்
குன்றிசைக்கும்வன் கோபுர நீணகர்குறுகிச்
சென்றிசைக்குளர் செண்பகமலர்தொறுஞ் சிறைத்தேன்
நின்றிசைக்கும்வண் சோலைவாயமர்ந்தனன் நெடுமால். சுஎ.

அன்றுதூதுகொண் டிலங்கைதீ விளைத்தவரைவர்க்
கின்றுதூதுவந் தெயிற்புறத் திறுத்தனரொன்னுத்

துன்றுகாவில்வண் டினமுரல் தொடையலான்றனக்குச்
சென்றுதூதுவர் புகன்றனர் சேவடி வணங்கி. ௬

தொல்லைநாயகன் வந்தனனென்றலுஞ் சுரும்பார்
மல்லன் மாலையான் ஏவலின் மாநகர்மாக்கள்
எல்லைநீண்மதில் வட்டம்யோசனை யெழுநூறுஞ்
செல்வமாநகர்த் தெருவினை யொப்பனை செய்தார். ௬

மின்னுமாழகிற் பல்லிய விதங்கண்முன்முழங்க
மன்னர்மன்னவன் எழுந்தனன் மாலெதிர்கொள்வான்
என்னைநீயவற் கெதிர்செல்வ தென்றுதன்மருகன்
றன்னைவன்பொடு தகைந்தனன் கொடுமைகூர் சகுனி. ௭

சீர்வலம்புரி திகிரிசேர் செங்கையான் றனக்குக்
கார்வலம்புரி கோயிலுங் காட்சியுமமைத்துப்
போர்வலம்புரி நிருபருமிளைஞரும் போற்றத்
தார்வலம்புரி யவனிருந்தனன்போலந் தவிசில். ௭

தொல்பகீரதி மைந்தனுந் துரோணனுமகனும்
வில்விதூரனுங் கிருபனு முதலியவேந்தர்
மல்கிழவிரு பத்துநூ றுயிரமகிபர்
செல்வநாயகற் கியோசனை யிரண்டெதிர் சென்றார். ௭

வந்துவந்திரு மருங்கினும் வணங்குமன்னவரைப்
பைந்துழாய்முடிப் பாமனுங் கண்மலர்பாப்பி
அந்தமாநகர் புகுந்தபின் ஆசனிற்புகாமற்
புந்திகூருள் விதூரன்வாழ் வளமனைபுகுந்தான். ௭

வேந்தர்யாரையும் விடைகொடுத்தகன்றபின் விமலன்
வாய்ந்தமாளிகை நடுவணோர் மண்டபங்குறுகி
ஆய்ந்துவல்லவர் நவமணியழுத்திய அரியே
றேந்துமாசனம் இடப்பொலிந் ததன்மிசை இருந்தான். ௭

இருந்துவந்தருளிறைவனை இறைஞ்சினனிறைஞ்சிப்
பெருந்துவந்தனைப் பிறப்பையுமிறப்பையும் பிரித்தான்
மருந்துவந்தனை அமரருக்கருளிய மாயோன்
விருந்துவந்தனன் என்றுநின்றுருகினன்விதூரன். ௭

கோடுகொண்டகைக் குரிசிலையலர்ந்தகோகனகக்
காடுகண்டெனக் கண்டுதன் கண்ணிணைகளியா
ஏடுகொண்டதார் இறைவனிப் பிறப்பையும் பிரித்தான்
வீடுகண்டவர்க் கிறப்பினிவேண்டுமோ வேண்டாம். ௭

உள்ளிநுணர்ந் துள்ளமுமுருகினனெழுந்து
துள்ளினன்விழுந்திணையடி சூடினன்றுயரைத்
தள்ளினன்மலர்த் தடக்கையாற் றத்துவ அமுதை
அள்ளினனெனக் கண்களாலருந்தினன் அளியோன். ௭

முன்னநீதுயின்றருளிய முதுபயோததியோ
பன்னகாதிபப் பாயலோபச்சைசையாலிலையோ
சொன்னநான்மறைச் சுருதியோ கருதிநீவருதற்
கென்னமாதவஞ் செய்ததிச்சிறுகுடிலென்றான். ௭

மும்மையாகிய புவனங்கள் முழுமையுமருந்தும்
எம்மையாளுடை நாயகன்விருந்தினுக்கிசைந்தான்
அம்மவென்றேனை யாறுநூறயிரமடையர்
தம்மைநோக்கினன் அவர்களும் விரைவுடன் சமைத்தார். ௭௯.

வந்தகோற்றவேல் வரிசிலைவயவருதினிக்கும்
கந்தடர்ப்பனகரிக்கும் வெங்கவனவாம்பரிக்கும்
ஐந்துபத்துநூ றயிரமாசர்க்குமேவர்க்கும்
இந்திரற்குமெய் தாவமுதெனும்படியியற்ற. ௮௰.

அமைத்தவாசநன் னீர்கொடுமஞ்சனமாடிச்
சமைத்தபைங்கறி அடிசிறம் விருப்பினாலருந்தி
உமைக்குநாயகன் ஊாவொழித்தருளினோனுதவ
இமைப்பிலாமூ தருந்தியவியல்பென இருந்தார். ௮௧.

வாசநீரும்வண் சுண்ணமு முறைமுறை வழங்கப்
பூசறுத்துளிப் பூசினர் சூடினர் புனைந்தார்
வீசுசாமரம் ஊட்டவெண்மதிக்குடை நிழற்றக்
கேசவன்றனிக் கேசரித்தவிசிடை கிளர்ந்தான். ௮௨.

ஞானகஞ்சுக விதுரன்வாழ் மனையினுயகனும்
போனகம்பரி வுடனுகர்ந் திருந்தவப்போழ்திற்
றனுமேருவுக் கப்புறந் தண்ணமுதருந்தப்
பானுவுங்குட திசைப்பெரும்பாவையிற்படிந்தான். ௮௩.

தாங்கவாரிதிப் புறத்தெதிர் மலைந்த வெஞ்சமரில்
ஊங்கோள் கூர்நெடும் படைகளாலுடன்றெழுந்தேகாத்
தூங்கமேழுடைக் கடவுடானிரை நிரை துணித்த
காங்கள்போன்றன கரைதோறும் வளர்துகிற்காடு. ௮௪.

கருதியந்தணர் யாவருந் தங்கடன் கழிப்பச்
சுருதியென்னும்வெஞ் சாபமேல் அம்புகை தொடுத்துப்
பருதிதன்பெரும் பகைவர்மேல் விடுதலிற் பாந்த
குருதியாமென நிவந்தெழச் சிவந்தது குடபால். ௮௫.

நீதியிற்புகல் பகலெலா நீராமகளிர்
மீதுறைத்தெழும் வெவ்வெயில்படாவகை விரித்துப்
போதுபுக்கதேன் றினம்படச் சுருக்கிய பூம்பட்
டாதபத்திரம் போன்றன தாமரை யடவி. ௮௬.

கலந்துமங்கல முழவுவெண்சங்கொடு கறங்க
மிலைந்தபூங்குழல் வனிதையர் மெய்விளக்கெடுப்ப
அலர்ந்ததாமரைத் தடமெலாங் குவிதல்கண்டங்கண்
மலர்ந்ததாமரை வாவிபோன் றனநகர்வட்டம். ௮௭.

ஊகபுங்கவன் மணிமுடிக்கோப்பனதீபம்
இருமருங்கினும் ஆயிரமாயிரமேந்த
அரிசுமந்தபே ராசனத்தமுதுடனிருந்த
பூவலன்றனைப் புண்ணியவிதுரனும்போற்றி. ௮௮.

பொங்காவணை போலிவறப் போந்தபின் போதுவர்
தங்கள்பாடியில் வளர்ந்துமா மருதிடை தவழ்ந்து

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

கங்கைமாநதி கால்வழி கருணையங்கடலே
ஐங்கரீதனி நடந்தவா றுணாத்தருளேன்றன். அகூ.

தோட்டுவந்துசெந் தேனுகர் சுரும்புசூழ் தொடையாய்
காட்டுவந்துமன் றிரிந்துதங் கடவநாட் கழித்து
நாட்டுவந்தபே ரைவர்க்கு நற்தரு நாடு
கேட்டுவந்தனம் என்றனன் விதுரானுங் கேட்டான். கூய.

மூழக்கினுயர் முரசுயர்த் தவன்றனக் குரிமை
வழக்கினலறிந் தடலா வுயர்த்தகோ வழங்கான்
தழக்கினலிரு திசையினு மாசெழச்சமரில்
உழக்கினலல துணர்வனே என்றுகொண்டுரைத்தான். கூக.

வாளைவாவியில் உகண்டெழ வளரிளங்கமுகின்
பாளைவாயளி மான்றெழும் பழனநாடுடையான்
காளைவாழ்வவர்க்களித்தில னெனிலெதிர் நடந்து
மூளைவாயுகமுடிப்பர்வெம்போரெனமொழிந்தான். கூஉ.

விரைந்துபாய்பரி மன்னவரிதம்படமெலிவுற்
றிரந்துவேண்டினுங் கிளைஞருக்கொருபொருளீயார்
பரந்தபோரினி லெதிரொதீர் படப்படப்பகைவர்
துரந்தபோதினி லுதவுவர் சொல்வனவெல்லாம். கூங.

என்றுபாரினியற்கையும் விதுரானுக்கியம்பி
வென்றுபோர்கெழுநேமியான் விடைகொடுத்தருளிக்
குன்றுபோல்புயக் காவலர்கொடுந்துடிகறங்க
மன்றன்மாமலர்ப்பாயலின் மீதுகண்வளர்ந்தான். கூச.

குளிருமாமதி முகத்தொளிர் குமுதவாய்மலர்த்தித்
தளவவாணகை பாப்பிவெண்சததளமலர்க்கை
அளவிலேதுவித்தளியோடு மகன்றிலாமையினற்
களிகொளாவிலக் கணிகையைப் போன்றதக்கங்குல். கூரு.

அளைந்தவாரிருட் கடல்பொற தொருபுடையண்டம்
பிளந்ததாமெனக் கரும்படாம் பீறியதென்ன
வளைந்தவேழ்கடல் வற்றிமேல் வடவையின்முகத்தீ
கிளர்ந்ததாமெனக் கிளர்ந்தனன் இரவிகீழ்த்திசையில். கூசு.

இகலும்வாளா வுயர்த்தவன் இருந்த தொல்பதியில்
அகிலநாயகன் ஒருதனி நடந்தவாறறிந்து
மகாவாரிதி அகன்றுமால் மருங்குறவளைந்த
திகிரிபோலவந் தெழுந்தனன் இரவிகீழ்த்திசையில். கூஎ.

(வே. சோதிவானநதி மைந்தனும்பழய சுருதியாலுயர்துரோணனும்
ஆதியாகவுயி ரினும்வியப்புற அடுத்தமன்னவரனேகரும்
நீதியாறுவகை யைந்துபத்தொடறுபத்தொடாயிரவர்-நிருபரும்
தீதிலாததிறல் அக்குரோணிபதி னென்றுபெற்றமிகுசேனையும். கூஅ.

தொக்கவெண்கவரி ஆலவட்டமிகு சொட்டைவாளமொடுதுகிலுடன்
கைக்களாசியிவை கொண்டுலாவிவரு கன்னிமங்கையர்களனைவ
ரும்
மிக்கவேதியரும் வல்லபல்கலை விதத்தினுள்ளவர்கள் யாவரும்
தக்கதம்பியரும் வந்துசூழவுயர் தாணிமேனிருபர்தம்பிரான். கூகூ.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

நிரைகதிர்க்கனக நீள்சுவர்ப்பவள உத்திரத்திடை நிரைத்தவொன்
பருமணிக்கிரண பத்மராக வயி ரத்துலாமிசை பரப்பிவெண்
தாளவர்க்க வயிடூர்யப்புதிய கோமளப்பலகை தைத்துமா
மரகதத்திஞெரு கோடிதூணிரைகள் வைத்தமண்டப மருங்கரோ. ௰.

முட்டநித்தில நிரைத்தபந்தரின் அகத்தசிறரி முகத்தகால்
வட்டமெத்தைகொ டமைத்தபீடிகையில் வாசவன்கோலென வை
கினன்
பட்டவர்த்தனரு மகுடவர்த்தனரும் வந்துவந்தெதிர் பணிந்தபின்
இட்டபொற்றவிசின் முறைமையாலினி திருக்கவென்றவரை ஏவியே
௰௧.

காவன்மன்னவர் முகங்கடோறுமீரு கண்பரப்பியமர் கருதுவோர்
ஏவலின்கண்வரு தூதனுமீடையன் இன்றுநம்மவையில் எய்தினல்
ஓவலின்றியெதிர் சென்றுகண்டுதொழு துறவுகூறின்மிக வுங்களுர்
தீவலஞ்செயவடர்ப்பனென்றுநனி சீறினன்முறைமைமாறினன்.௰௨.

இந்தவண்ணமுறை செய்துமன்னரும் இராசராசனும் இருப்பவே [ன்
தந்தவண்ணனுடன் வந்தவண்ணன் மனதந்துகண்டுயிலுணர்ந்தபி
கந்தவண்ணமலர் கொண்டுகைதொழுது காவலயிற்பல கடன்கழித்
திந்தவண்ணமு னிருந்தபோவையின் ஏயினனிசைகொள் வேயினன்.
௰௩.

துன்னுகங்கைமக னுந்துரோணனொடு சுதனுநீள்சிலை விதூரனும்
மன்னர்மன்னவன ஒழிந்தமன்னவரும் வந்துசேவடி வணங்கினர்
கன்னனுந் தவல கவிழ்ந்திருந்தனன் அழன்றுளஞ்சகுனி கருகினன்
முன்னர்நின்றவர்கள் இட்டபீடமிசை மொய்துழாய்முகிலும் எய்தின
ன். ௰௪.

முன்னகங்குடை கவித்தகாளமுகின் முன்னிருந்தபின் முகங்கொளா
என்னகந்தவ ஒழிந்து நென்னலிடை இந்தமாநகரை யெய்தியும்
பொன்னகங்கொள்புய விதூரனில்லிடை புகுந்ததென்கொல் இதுபுக
லெனப்
பன்னகந்தவ உயர்த்தகோவுமுரை பகாமாலுமிவை பகருவான். ௰௫.

என்னினின்னிலொரு பேதமில்லையது என்னினின்னிலிது வென்
னினும் [றன்
மின்னின் முன்னிலத விறனெடும்படை விதூரன்வந்தெதிர் விளம்பி
உன்னிலின்னமுள தோன்றுபஞ்சவர்உரைக்கவந்ததொரு தூதன்யான்
நின்னினின்னடிசில் உண்டுநின்னுடன் வெறுக்கவெண்ணுவது நீதி
யோ. ௰௬.

ஆவநல்கிய பதாகையாய்மதி அமைச்சரராயா சளிப்பினும்
தாவர்நல்லுரை மறுப்பினும்பிறர் புரிந்தநன்றிபல கொல்லினும்
ஒருவர்வாழ்மனையி லுண்டுபின்னுமவருடனுடன்றுபோரவுன்னுவோர்
இரவியுள்ளளவு மதியமுள்ளளவும் இவர்களேநரகிலெய்துவார். ௰௭.

சீதநாண்மலர் மடந்தைகேள்வனிவை செப்பலுந்தெரியில் ஒப்பிலா
நாதனுயகன் முகத்தில்வைத்தவரு ணயனனுகிழகிழ் நகைசெயாத்
தூதனுகிவரு தன்மைசொல்லுகென மன்னர்மன்னனிவை சொன்
னபின்
வேதனுறுமலர் உந்திவண்டுளவ விரைசெய்தாரவனும் உரைசெய்
தான். ௰௮

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

சூதினலா சிழந்துநின்றுவணவர் சொன்னசொல்லுவழ வாதுபோய்
ஒதிலார்களென வந்துதண்ணிழல் இலாதகானினிடை எய்தியுங்
தீதிலாவகை குறித்தநாள்பல கழித்துவந்தனர் செகத்தினிற்
கோதிலாததரு குலமகீபவவர் உரிமைநண்பொடு கொடுத்தியோ. ௱௯

சொல்லவாவுாக துவசநின்னுரிய துணைவர்தங்கவள அழைத்துநீ
வல்லவாறுசில நாடளித்தவர்க டம்முடன்கெழுமி வாழ்தியேல்
நல்லவாய்மைநிலை உடையையென்றாசர் நாடோறும்புகழ்வர் ந
ண்புகொண்
டல்லவாமென மறுத்தியேலறமும் ஆண்மையும்புகழும் அல்லவே. ௱௰

என்றுகேசவ னியம்பவங்கெதி ரிராசராசனும் இயம்புவான்
அன்றுசூதுபொரு துரிமையாவையும் இழந்துபோயினர்கள் ஐவரும்
இன்றுநீவிாகின் மீளவுங்கவா எண்ணிறனவரி னெளியனே
சென்றுகானிடை இன்னமுந்திரிவ துறுதியென்றுகனி சீறியே.
௱௰௧.

நீவெறுக்கிலேன் இருந்தமன்னவர் திகைக்கிலேன்பல நீவனக்கிலேன்
போய்நகைக்கிலேன் உரைத்தவுண்மைமொழி பொய்த்ததென்றமார்
புகலிலேன்
வெய்மலர்த்தொடையல் ஐவரொன்னுடன் மிகைத்துவெஞ்சமர் வி
ளக்கிலேன் [௱௰௨.
ஈயிருக்குமிடம் என்னினும்புவியில் யானவர்க்கா சிடங்கொடேன்.

கார்வழங்குரு மெனச்சினங்கொடிய கண்ணிலான்மதலை கழறவும்
பார்வழங்கநீவ வில்லலயாகிலவர் பாதியாயினும் வழங்குவாய்
தவர்வழங்குதட மார்பவென்னவது தானுமன்னவன் மறுப்பவைந்
தூர்வழங்குகென வுற்றிரந்தனனி வுலகெலாமுதவும் உந்தியான். ௱௰௩.

மாடளிக்குல நெருங்குபைந்துளவ மாலையாய்மகா வேலைசூழ்
நாடளித்திடவு மைந்துபேருடைய நகாளித்திடவும் வேண்டுமோ
காடளிக்கவத னிடைதிரிந்துறை காந்துபோயினர்கள் காணவோர்
வீடளிக்கினும் வெறுப்பரோவிதவண விடுகவென்றவன் விளம்பின
ன். ௱௰௪.

தந்தைகாதலுறு தன்மைகண்டிவளய தாய்பயந்தருளு தம்பியற்
கிந்தவாழ்வுமா சுங்கொடுத்தவனு நின்குலத்தொருவன் இங்குளான்
முந்துமாநிலம் அவனத்தினுக்குமீது முறைமையாலுரிய வாசனுக்
கிந்தமாநகரு நீகொடாதொழியின் என்னதாகுமன தாசியல். ௱௰௫.

ஒருகுலத்தினில் இாண்டுமன்னவர் உடன்பிறந்துரிமை எய்தினல்
இருகுலத்தவரு மொக்கவாழ்வுறுதல் எக்குலத்தினும் இயற்கையே
பொருகுலக்களிறு வளர்திசைக்கண்மீது புகழ்பாப்பியெழு புவிபெறும்
குருகுலத்தவர் இயற்கைநன்றென மொழிந்தனன்கரிய கோவலன்.
௱௰௬.

போராவவண துறந்தமாயனிவை பேசவன்பினெடு பின்வனயுஞ்
சீராவிவன உயர்த்தகோவும்விழி தீயெழும்படி செயிர்த்துளான்
பேராநிருபன் மணிநெடுஞ்சுடிகை ஆயிாங்கொடு பொறுத்தபார்
வீராமவா தல்லவோவுரிமை வேண்டுமோவெனவிளம்பினன். ௱௰௭.



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பொய்வளர்த்தமுடி மன்னனிவ்வகை புகன்றபின்பு புயவலியினால்
ஐவர்தங்களா சுங்கோடாமலடல் ஆண்மைகொண்டெதிர் அடர்த்தியேல்
மெய்வழங்கிவரு குருநிலத்தினிடை வந்துவெஞ்சமர் விளக்கவே
கைவழங்குகென நின்றதூணிடை அறைந்துரைக்குமிவை காவலன். ௱௰௮.

புன்பிறப்புடைய பொதுவர்தங்களோடு புறவிலாநிரை புரந்திடும்
உன்பிறப்புமா லோடுகோவியர் உணப்பிணித்தது மறந்துநீ
மன்பிறப்பிலுயர் குருகுலத்தவர்தம் வாய்மைதானுமொரு மாசிலா
என்பிறப்புமண ராமலோவவையில் இந்தவாசகம் இயம்பினாய். ௱௰௯.

ஏவிலங்குசிலை யைவர்வந்தணியின் யானிழிந்திவ ணிருப்பனோ
கோவிலங்குபொா வஞ்சுமோகாட குஞ்சாங்கள்பகை கொண்டகால்
மேவிலங்குமன் மலைத்தல்கையறைய வேண்டுமென்றதுநின் மேன்மையோ
நாவிலங்குமென எண்ணியோமிகவு நன்றுநன்றாசர் ஞாயமே. ௱௨௰.

அளிவருங்குழல் பிடித்துமன்னவையில் ஐவருக்குமரி யாவளாநான்
நெளிவருந்துகில் உரிந்தபோதருக நின்றுகண்டனர்கள் இல்லையோ
துளிவரும்புனல் பரிந்தருந்தியடு சோறுதின்றுடல் சுமந்துதோள்
எளிவரும்படி இருந்தபாவியரும் இன்றுமானநிலை உணர்வரோ. ௱௨௧.

அன்னையானவள் ஒருத்தியாமுதல் அளித்ததந்தையரும் ஐவராம்
பின்னையாசையொடு குருகுலத்துரிமை பெறுவராமொரு பிறப்பிலா
மின்னையாமிவர்க ளவரும்பரி வுடன்றனித்தனி விரும்புவார்
என்னையாமவரொ டொருகுலத்தாசன் என்பதம்மவிவை யென்கொலாம். ௱௨௨.

ஞாலமுற்றுமுடை யான்மொழிந்திட நகைத்துவண்டுவரை நாதனும்
சாலமுற்றுமினி அவர்கருத்தென நினைந்துபோவை தணந்துபோய்க்
கோலமுற்றசிலை விதுரன்வாழ்வுபெறு கோயில்சென்றுநனி குறுகினான்
சீலமற்றவர் சினத்தபோதுமொரு தீதிலாதவர் செயிர்ப்பரோ. ௱௨௩.

கரிந்துமாலைசரு காகவும்புதிய கமலவாண்முகம் வியர்ப்பவும்
திரிந்துகண்ணிணை சிவப்பவுங்கொடிய செய்யவாய்மலர் துடிப்பவும்
இருந்தபோவையி னெடிதுயிர்த்திடும் இராசராசனவ னுக்கிவன்
விருந்துசெய்தவுற வென்கொலென்றாசர் எதிர்விதூரன விளம்பினான். ௱௨௪.

வன்பினாலவனி வெளவவென்றுகொலென் மனையிலுண்டியை மறுத்தவன்
தன்பதாகினியொ டினிதருந்துவகை தன்னிலின்னமு தருத்தினான்
என்பிதாவொடு பிறந்துமின்றளவும் என்கையோதனம் அருந்தியும்
அன்புதானுடைய் னல்லனென்பகை தனக்குமுற்றபகை யல்லவோ. ௱௨௫.

முதல்விளைந்தொருவ னுடனியைந்தபொருள் பற்றியின்புற முயங்கினும்
அதிகமென்றுபொருள் ஒருவன்வேறுதரில் அவனையேயொழிய அறிவரோ
பொதுமடந்தையர் தமக்குமெண்ணிலது புதுமையல்லவவர் புதல்வனும்

விதுரானின்றவனெ டுறவுகொண்டதோர் வியப்பையென்சொலி வெ
றுப்பதே. ௱௨௬.

இன்னவாறிவன் உரைத்தபோதவன் எழுந்திருந்துவசை என்வனநீ
சொன்னவாய்தருதி சோரவாள்கொடு துளைத்துநீண்முடி துணிப்பன்
யான்
மன்னவாதரு தலத்திலேயொருவன் மைந்தனுநயிரை வேளவினுன்
என்னவானவர் நகைப்பரோயிவை இசைத்தநாவுடன் இருத்தியே.
௱௨௭.

ஈண்டவர்க்குதவி யாயதூதுவா இயைபவற்குலகம் எங்கணும்
நீண்டவற்குதவி யாயினேனென நினைத்துநீ யெனை அடர்த்தியோ
மாண்டவர்க்குதவி யாயபோறமும் இசையுமானமும் வளர்த்திடும்
பாண்டவர்க்குதவி யாகிலென்வனமுடி மன்னரானவர் பழிப்பரோ.
௱௨௮.

சொல்லிரண்டுபுக லேனினிச்சமரி னின்றுவெங்கணை தொடேனெ
று
வில்லிரண்டினும் உயர்ந்தவில்லதனை வேறிரண்டுபட வெட்டினுன்
மல்லிரண்டினையும் இருவாாகமுன் மலைந்தகாளமுகில் வந்துதன்
இல்லிரண்டுதினம் வைகுதற்குலகில் எண்ணிலாததவம் எய்தினுன்.
௱௨௯.

அந்தவில்லினை முரித்தவில்விதனை தாலயம்புகுத வச்சுதன்
சந்தவில்லுமான் வில்லுமன்னதொரு தாமவில்லினை முரிப்பதோ
முந்தவில்லியரில் எண்ணும்வில்லுடைய விசயன்வந்தமரின் முடுகி
னல் [௱௩௰.
எந்தவில்லியெதிர் நிற்கும்வில்லியினி என்றுகாவலர் இரங்கினர்.

காாவனத்தும்விடு தாரையன்னபல கணைகளேவியமர் காதும்வில்
வீாவனப்பழ துரைத்துநீபகையை எங்ஙனேதனிகோல்வெல்லுவாய்
பாாவனத்துமினி யைவாளும்வகை பண்ணுவித்தனை அழிந்ததுன்
போவனத்துமென உள்ளழிந்துசில பேசினுனுயர் பிதாமகன். ௱௩௧.

பிதாமகன்பரி வுடன்மனிந்துசில பேசநாசமுறு போனும்
மதாணிமார்பனும் விதுரானல்லதுவில் வல்லவீர்பிறர் இல்லையோ
உதாரசீலனுயர் அங்கர்கோன்வரிவில் ஒன்றுமேயமையும் உற்றெழும்
பதாதியோடமரில் ஐவரும்பட மலைந்தடர்ப்பநனி பாறவே. ௱௩௨.

நீயிருக்ககெடு விற்கையாசிரிய னிவனிருக்கநீகர் அற்றவன்
சேயிருக்கவிறன் மன்னரிப்படி திரண்டிருக்கவது சென்றுநீள்
வேயிருக்குமித ழிடையனுக்குநல் விருந்துசெய்தவன் வெறுக்கிலேன்
போயிருக்கிலேன் முரிக்கிலேன்சிலை மலைந்துநம்மொடெவர் போர்
செய்வார். ௱௩௩.

என்றுகூறவிறல் அங்கர் பூபதியும் யானிருக்கவிகல் விசயனைச்
சென்றுசீறியுயிர் கோல்லவல்லவர்கள் யார்கொலேன்றுரிமை செ
ப்புவீர்
கன்றினல்விள வெறிந்தகோபன்மகன் நின்றுதேர்தனி கடாவினும்
அன்றுபோரினிடை காணலாதுமென தாடல்வெஞ்சிலையின் ஆண்
மையே. ௱௩௪.

அம்பாத்தவ ருடன்றுசீற்ினுமோ ரம்பிலேயழிவர் அதிரநான்
வெம்பணிப்பகழி யேவிலாவியுடன் மீளுவானமரில் விசயனே
இம்பரிற்புகல ஒருதலத்தினு மெனக்குநேரொருவர் இல்லையென்
றும்பர்கற்பகழ நாணும்வண்மையின் உயர்ந்தவீரனிவை உரைசெய்
தான். ௩௱௩௫.

திசையனைத்தினும் வளர்ந்ததானவரை ஆவிவந்தொரு திசையி
ன்வாய்
நிசியெனப்பொருது வானவர்க்கா சளித்துவந்தவிற னீர்மையான்
விசையனுக்குநிகர் நீகொலோகடவுள் வெண்மதிக்குநிகர்வெள்ளி
யோ [ஆற்றினன். ௩௱௩௬.
அசைவில்விற்றெழிலும் வல்லையோவெனவொ ரசைவிலாதவன்

அவன்மொழிந்தமொழி தன்செவிப்படலும் அருகிருந்தமிழ் தருந்திநீ [ய்
இவனுடன்சிலர் பகைக்கின்மற்றவர்தம் இசையுமானமும் இயம்புவா
புவனமொன்றுபட வரினுமென்னொடுபொறுப்பாகிலெதிர் பொரவிடாய்
சிவனுமென்கணையை அஞ்சுமென்றுநனி சீறினனிரவி சிறுவனே.
௩௱௩௭.

இரவிமைந்தனொடு கங்கைமைந்தனெதிர் வாய்மையொன்றையும் இ
சைத்திலன்
பொரவறிந்திடுதும் அன்றுவெஞ்சமரின் என்றெழுந்துதனி போயினன்
அரவவெங்கொடி உயர்த்தகோவுமிகல் அரசருக்குவிடை உதவினன்
விரவுபைந்துளவ மாலையான்விதுரன் மனையினுற்றது விளம்புவாம்.
௩௱௩௮.

(வே.)பொருசிலை முரித்துவந்து கோயிலிற் புகுந்துநேமிக்
குருசிலை வணங்கியாங்கண் இருந்துளிக் தரிசினேக்கி
இருசிலை யுண்டென்றிந்த இருநிலத் தியம்புகின்ற
ஒருசிலை முரித்தசீற்றம் என்கொலோ உரைசெயென்றன். ௩௱௩௯.

ஆவது கருதானுகில் அமைச்சர்சொற் கேளானுகில்
வீவது குறியானுகில் விளைவதும் உணரானுகில்
நாவது காவானுகில் அவனுக்கா நடந்துபோரிற்
சாவது பழுதென்றன்றே சகத்துளோர் சாற்றுகிற்பார். ௩௱௪௰.

செல்வம்வந் துற்றகாலத் தெய்வமுஞ் சிறிதுபேணூர்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணூர்
வல்வினை விளைவும்பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர். ௩௱௪௧.

நினைக்கவுந் தொழவுமெட்டா நீயெழுந் தருளப்பெற்றுந்
தனக்கிது தகுதியென்று தமருடன் வாழவெண்ணூன்
மனக்கடுங் கனலினன்றன் மனத்தினல் உரைத்தவெஞ்சொல்
எனக்கியை யாமலன்றே இருஞ்சிலை யிறுத்ததென்றன். ௩௱௪௨.

மாயனு மகிழ்ந்துநோக்கி மாசுணம் உயர்த்தமன்னன்
போயருஞ் சேனையோடும் போர்க்களங் குறுகும்போது
நீயவர் அருகுசெல்லா தொழியினின் னேயமைந்தர்
தாயமுஞ் செல்வமுற்றுந் தாணியும் பெறுவரென்றன். ௩௱௪௩.

ஏற்றிய நறுநெய்வீசி இந்தனம் அடுக்கினாலுங்
காற்றுவந் துறுதபோது கடுங்கனல் கதுவவற்றே
நீற்றணி நிமலனன்ன நின்கைவில் இற்றதாகிற்
சீற்றவேல் அரசர்சேனை தென்புலம் படர்தநிண்ணம். ௱௪௪.

பன்னிய புரையில்கேள்விப் பயனுகர் தவத்தினானை
மன்னவன் மொழிந்தவெல்லாம் பொறுத்தியென் றருளிமாயோன்
அங்நகர் தன்னில்வண்மை அருளழ காண்மைசெல்லுங்
கன்னனைப் பயந்தகாதற் கன்னிதன் கோயில்புக்கான். ௱௪௫.

மண்டல மதியமன்ன வாண்முக மழைக்கணாளுந்
திண்டிறன் மருகன்றன்னைச் சென்றெதிர் கொண்டுகண்டு
வெண்டிரை மகாவேலை விரிபுனன் முகந்துதோன்றுங்
கொண்டலை மகிழ்ந்துகாணுந் துளிர்பசுந் தோகைபோன்றாள். ௱௪௬.

யானுறை இல்லின்வந்த தென்னமா தவமென்றேத்திக்
கானுறை மைந்தர்தம்மைக் கண்டனள் போலுமாகித்
தேனுறை துளவினான்றன் செய்யதா மரைக்கணோக்கி
வானுறை புரிசைமூதூர் வந்ததென் கருதியென்றாள். ௱௪௭.

நின்பெரும் புதல்வர்சொல்ல நெடும்புன னோடுவேண்டி
வன்புடை யரசர்கோமான் மனக்கருத் தறியவந்தேன்
தென்புல வேந்தன்வெஃகச் செருத்தொழில் புரிவனென்றான்
என்பல சொல்லிநாவை எதிர்க்கவே யியைந்ததென்றான். ௱௪௮.

தன்மைநான் உரைக்கக்கேண்மின் றந்தைதன் மனையினீயுங்
கன்னியா யிருந்துவாழுங் காலையோர் முனிவன்வந்து
சொன்னமந் திரமோரைந்தில் ஒன்றினாற் சூரன்றன்னை
முன்னினை யவனுமன்று வந்துநின் முன்புநின்றான். ௱௪௯.

கதிரவன் அருளினாலோர் கணத்திடைக் காதல்கூர
மதலையங் கொருவன்றன்னைப் பயந்தபின் வடுவென்றஞ்சி
மிதவையம் பேழைதன்னிற் பொதிந்துநீர் விட்டபொழ்து
நதியுமம் மகவைக்கங்கை நதியிடைப் படுத்ததன்றே. ௱௫௰.

காதலம் புதல்வன்றன்னைக் கண்ணிலா வரசன்பொற்றேர்ச்
சூதன்வந் தெடுத்துக்கொண்டு சுதனென வளர்த்தகாலை
ஆதவன் அவனையாருங் கன்னனென் றழைமினென்றான்
தாதையும் விசும்பிற்சொன்ன நாமமே தக்கதென்றான். ௱௫௧.

பண்புடைக் குமரன்கற்ற படைத்தொழில் பலவுங்கண்டு
நண்புடை யுரிமையெல்லா நல்கிமா முடியுஞ்சூட்டி
வண்பணி யுயர்த்தகோமான் வாழ்வவற் களித்தான்மற்றைத்
திண்பணித் தேர்வல்லோரில் அவனையார் செதுக்கவல்லார். ௱௫௨.

அந்தநன் மைந்தனாளை அருஞ்சிலை விசயனோடு
வந்தெதிர் மலையநின்றால் உறவுமற் றறியமாட்டான்
சிந்தையி லையந்தீர விதனைநீ தெளியச்செப்பிக்
கொந்தவிழ் அலங்கலானைக் கூட்டுதி விரைவினென்றான். ௱௫௩.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

தம்பியர் ஐந்துபேருந் தனித்தனி ஏவல்செய்ய
வம்பவிழ் அலங்கலோடு மாமணி மதுடஞ்சூடி
அம்புவி முழுதுநீயே ஆளலாம் வருகவென்றல்
உம்பர்கா வணையகையான் உன்னுரை மறுத்தானுகில். ௩௫௪.

எரியழ தருந்தக்கானம் எரித்தநாள் அகன்றுபோன
அரவினை அங்கர்கோமான் ஆசுகமாகக் கொண்டான்
வரிசிலை விசயன்றன்மேல் மறுகணை தொடாதவண்ணம்
ஒருவாம் வேண்டுகென்றன் உற்றவர்க் குறுதிசூழ்வான். ௩௫௫.

மன்றலந் தெரியல்வெய்யோன் மதலையென் மைந்தனென்ப
தன்றெனக் குரைத்தியாகில் அவனுடன் அனுகவொட்டேன்
சென்றுயிர் ஒழிக்குமாறு செருவினை விளைத்துப்பின்னை
இன்றெனக் குரைத்தியையா என்னினைந் தென்செய்தாயே. ௩௫௬.

கான்பட்ட கனலிற்காயுங் கணையினை விலக்கவெண்ணில்
வான்பட்ட புரவித்தேரோன் மகன்படு மகவான்மைந்தன்
தான்பட்டு மடியுஞ்சென்று தடாதினி யிருந்தேனுகில் [௩௫௭.
யான்பட்ட கொடுமைநன்றென் றென்பட்டாள் ஓங்கிவீழ்ந்தாள்.

தேக்குந்தி அகிலுஞ்சாந்துஞ் சிந்துநீர் நதிசூழ்செல்வக்
கோக்குநதி அரசன்பாவை குலைந்தழுங் கொடுமைகண்டு
மீக்குந்தி யுறிகடோறும் வெண்ணெயுந் தயிருமுண்ட
வாக்குந்தி மலரோன்பின்னு மனத்தளர் வகற்றினனே. ௩௫௮.

பைவருந் தலைகளைந்தும் படைத்தபன் னகமேபோல
ஐவரும் படுதனன்றே அங்கர்கோன் படுதனன்றே
உய்வருஞ் சமரிலாவி ஒருவர்போய் ஒருவருய்யார்
நைவருந் துயாமாறி நடப்பதே கருமமென்றன். ௩௫௯.

காளமா முகிலின்மேனிக் கரியநா யகனுந்தேற்றி
மீளமா தவத்தின்மிக்க விதுரன்வாழ் மனையிலெய்த
வாளமால் வரையின்வெய்யோன் குறுகினன் வருணன்றிக்கில்
நீளமால் யானைநெற்றி நிறத்தசெந் திலகம்போன்றே. ௩௬௰.

நாற்றிசை உலகுதன்னின் நான்மறை உணர்ந்தோர்யாரும்
போற்றிருண் மாலையென்னும் பொற்புடை அணங்குவைக
மாற்றிசை விலாதசெம்பொன் மண்டபந் தன்னிலாதி
மேற்றிசைக் கடவுளிட்ட வெயின்மணிப் பீடம்போன்றன். ௩௬௧.

கானெலா மலர்ந்தழல்லைக் கனநிழல் எழுந்ததென்ன
வானெலாம் வயங்குதாரை நிரைநிரை மலர்ந்துதோன்ற
வேனிலான் விழவமைத்த வெள்ளிவெண் கும்பம்போலத்
தூநிலா மதியம்வந்து குணதிசை தோன்றிற்றம்மா. ௩௬௨.

தூவிய நிலவுதோன்றத் துணைவரைப் பிரிந்தோர்கண்கள்
காவியுங் கமலமும்பைங் கருவிள மலரும்போன்ற
மேவிய மகளிர்தங்கண் மீனெறி பாவையேழுந்
தாவியல் உழையுங்காதற் சகோரமும் போன்றமாதோ. ௩௬௩.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

தந்தையுந் தம்பிமாருங் கன்னனுஞ் சதனிதானுஞ்
சிந்தையிற் றெளிந்தகல்விச் செழுமதி அமைச்சர்யாரும்
மூந்தா வுயர்த்தகோமான் ஏவலான் முழுதுமெண்ணி
மந்தண மிருப்பான்வந்தோர் மண்டபங் குறுகினரே. ௱௬௪.

தீதறு மதிவல்லோரைச் செழுமதிக் குடையானேக்கிப்
பாதவ வனத்துப்போன பாண்டவர் தம்மைமீண்டு
மேதக வழைத்துநாடு வேண்டுமின் என்றுமூட்டும்
யாதவன் றனித்துவந்தான் என்செய்வ தியம்புமென்றன். ௱௬௫.

போரும்படை மைந்தன்கூறத் தந்தையும் பொருதுகொல்லும்
இரும்புலி வலையிற்பட்டால் விடுவரோ எயினருள்ளார்
வாம்பில்வெஞ் சேனையோடு வளைந்தினி மாயன்றன்னைக்
கரும்பொழு தகலுமன்னே கொல்வதே கருமமென்றன். ௱௬௬.

கண்ணிலான் உரைத்தமாற்றங் கேட்டுமன் காவலோரில்
மண்ணிலார் இதற்குமன்பு தூதனை வளைந்துகொன்றார்
எண்ணிலா விந்தவெண்ணம் எவ்வுளிக் கற்றதென்று
வெண்ணிலா முறுவல்செய்து விகருணன் விளம்பினனே. ௱௬௭.

மூத்தவர் இளையோர்வேத முனிவார் பிணியின்மிக்கோர்
தோத்திர மொழியோர்மாதர் தூதரோன் றிவரைக்கொல்லிற்
பாத்திவர் தமக்குவேறு பாபமற் றிதனினில்லைப்
பூத்தேரி தொடையாய்பின்னு நாகினிற் புகுவரொன்றன். ௱௬௮.

பழியுடைப் பகைவரேனுந் தம்பெரும் பதியில்வந்தால்
அழிவுறக் கோறல்பாபம் ஆண்மையு மல்லவென்பர்
கழிகடற் சேனையேவிச் சங்குலில் வளைந்திட்டாலும் [௱௬௯.
எழிலுடைக் கொண்டல்வண்ணன் அகப்படான் எவர்க்குமென்றன்.

வெம்புய வலியான்மாதை விரிதுகில் உரிந்தவீரன்
தம்பியை முனிந்துசீறித் தமயனைநோக்கிச் சொன்னன்
வம்பவிழ் அலங்கன்மார்ப மந்தணம் உரைக்கலுற்றல்
இம்பர்மற் றியாதுசெய்ய இளைஞரை அழைத்ததென்றன். ௱௭௰.

அதிரதர் முதலாயுள்ள வனிகினி வளைந்துநிற்ப
எதிர்முகி றவழுங்கோயில் அழலினை எங்குமூட்டி
விதுரனும் அவனுஞ்சோ வெந்திறன் மலைவதல்லால்
மதிப்பிறி தில்லையின்னே வல்விரைந் தெழுமினென்றன். ௱௭௧.

செங்கதிர் எழுந்துசீறிற் செறியிரு ணிற்பதுண்டோ
இங்கிவன் இருந்தவில்லில் எரியிட வேண்டுமோதான்
வெங்கணை யொன்றினலே விளிந்திட வென்று மீள்வேன்
கங்குலின் எழுமினென்று கன்னனுங் கனன்றுசொன்னன். ௱௭௨.

பதிப்பெயாந் தேகினாவளப் பகைவரைக் கூடுமாகில்
விதிப்பயன் என்னநம்மை வெஞ்சமர் வெல்லவொட்டான்
மதிப்பதென் வேறுகள்ள மாயனை யிமைப்பிற்சென்று
சதிப்பதே கருமமென்று சௌபலன் றனுஞ்சொன்னன். ௱௭௩.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

கோல்லுவ தியற்கையல்லக் குழிபறித் தாக்கரோடு
மல்லரை யிருத்திமேலோர் ஆசனம் அதன்மேலாக்கி
எல்லிடை யழைத்துவீழ்த்தி இகலுடன் விலங்கிற்பூட்டித்
தொல்லருஞ் சிறையில்வைத்தல் தூதர்க்கு முரியதென்றான். ௱௭௪.

மாதுலன் உரைத்தமாற்றம் மருகனு மகிழ்ந்துகேட்டுப்
போதிடை யநேகமள்ளர் வருகெனப் புகன்றுதானும்
நீதியி னிருந்துதாழ நிலவறை சமைத்துப்பின்னை
ஆதிநா றயிரம்போ ராக்கரை யதனுள் வைத்தான். ௱௭௫.

மல்லர்பப் பாவர்தம்மை மற்றத னிாட்டிவைத்தான்
வில்லுடை வீர்தம்மை வேறத னிாட்டிவைத்தான்
பல்படை மதிவல்லோரைப் பதின்மடங் கவரில்வைத்தான்
அல்லிலோர் கடிகைதன்னில் அறிவனை அழைக்கவென்றான். ௱௭௬.

அடியவர் மனத்திலுள்ள வாரிருட் கந்துறீர்க்கும்
நெடியவன் இருக்குமென்று நிலவறை விாகிற்செய்த
கடியவன் இயற்கையஞ்சிக் கந்துலுங் கடிதீனேகப்
படியவர் துயிலும்போகப் பரிதியும் உதையஞ்செய்தான். ௱௭௭.

பெரும்பில வறைபைவேயின் பிளப்பினு னிரைத்துழடி
அரும்பெறன் மணிகளாலோர் ஆசனம் அதன்மேலாக்கிச்
சுரும்பிமிர் மாலைதூக்கித் தொழிலுடை விதானமாக்கி
வாம்பிலா வென்றிவேலான் மாறிலா வண்ணஞ்செய்தான். ௱௭௮.

சிாந்தரு சுடிகைநாகத் திரண்மணி பலவுஞ்சிந்தி
நிாந்தாம் அருவிவீழ நிறந்திகழ் உதயக்குன்றிற்
பாங்கெழும் அருக்கன்சூழ்ந்த படரிருட் கந்தல்கண்டு
புரந்தான் கோயிலிட்ட பொங்கொளித் தீபம்போன்றான். ௱௭௯.

தொடர்ந்தொளிர் உதயாராகத் தோடுற நெருங்கிமென்மேல்
அடர்ந்தளி பாந்துகாமன் ஆகமவேதம்பாடத்
தடங்கயன் மலைந்துலாவத் தாமரை முகழுங்காதன்
மடந்தையர் முகழுஞ்சோ மணம்பெற மலர்ந்தமாதோ. ௱௮௰.

இருந்துயில் உணர்ந்துவேந்தர் யாவரும் இரவிற்சற்றும்
வருந்துயில் இலாதகண்ணன் வாழ்பெருங் கோயில்புக்கார்
பெருந்துயி லனந்தயோகப் போவணைத் துயின்றமாலும்
அருந்துயில் உணர்ந்துகாவல அருங்கடன் அடைவிற்செய்தான். ௱௮௧.

மாதவன் இருந்தகோயில் வந்தடி வணங்கிமன்னன்
தூதுவர் ஆழியங்கைத் தோன்றலே துளவமாலே
யாதவர் குலத்தோரேறே எழுந்தருள் கென்றனின்றெம்
மேதகும் ஆசனென்றர் முகுந்தனும் விரைந்துசென்றான். ௱௮௨.

கந்தடர் களிற்றுவேந்துங் கண்ணிலா வாசுங்கங்கை
மைந்தனு முதலாயுள்ள மன்னரு மதிவல்லோருந்
தந்திர வகையுமெண்ணு ரியோசவன தன்வனச்சூழ
இந்திர னிருக்கையென்னக் கோயிலு டினிதிருந்தார். ௱௮௩.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

காமவேல் அரசரோடு நால்வகைச் சேனையோடும்
மாமுகில் வண்ணன்வந்தான் என்றனர் வாவுகண்டோர்
வேய்மருத் தொடையலானும் வேத்திர தானைநோக்கித்
தாமரைத் தடங்கண்மாயன் றன்னையே விடுகவென்றன். ௩௮௪.

தன்பெருஞ்சேனைநிற்கத் தண்டுழாய் அலங்கலானும்
இன்புற நகைத்துவேந்தர் இருந்தபே ரவையினெய்த
மின்புரை துவசநாக விடர்கர் மனத்தினானும்
அன்போடு திகிரியானை அதனிடை யிருக்கவென்றன். ௩௮௫.

(வே.) இறைவனெழிற்கதிர் மணிகளழுத்திய தவிசினிருத்தலுமே
நெறுநெறெனப்படு குரிசினெளித்தலு நிலவறையிற்புகலும்
மறலியெனத்தகு நிருபனியற்றிய விரகைமனத்துணரா
முறுதசினத்துடன் அடியதலத்துற முடிககனத்துறவே ௩௮௬.

அஞ்சினமஞ்சினம் என்றுவிரைந்துயர் அண்டர்பணிந்திடவுந்
துஞ்சினமின்றென வன்பணியின்கிளை துன்பமழுந்திடவும்
வஞ்சமனங்கொடு வஞ்சகனின்றிடு வஞ்சனைநன்றிதென
நெஞ்சின்வெதண்டுல சொன்றுபடும்படி நின்றுநிமிர்ந்தனனே. ௩௮௭.

மல்லாக்கர் குலத்தொடுபப்பார் வாளினர்வேலினர்போர்
வில்லினரிப்படி துற்றநிலத்துற மேவியவீரரொலாந்
தோல்வலயிடிக்கயர் வுற்றுயிரிற்றிடு சுடிகையாவெனவே
கல்லெனவுட்கினர் தத்தமுடிப்படு கால்கொடுதைத்திடவே. ௩௮௮.

அற்புதமங்கயர் நற்பதமுந்தலும் அக்குழியின்புடையே
சற்பதலந்தோறும் அற்றுவிழுந்தன தத்தகெடுந்தலைபோய்
முற்பவனன்போர முக்குவடுந்துணி பட்டுமுயங்கியபோன் [௩௮௯.
வெற்பெனநின்றனர் வெற்றுடலங்கொடு விற்படைகொண்டவரே.

மேல்வலியுற்றெதிர் வீசியெழிற்கரு மேகநிறத்திருமால்
கால்விசையிற்பட மோதுதலிற்பொரு காமர்புயத்துணைபோய்
நீலநிறக்கவின் வாசவன்வச்சிர நீள்படையிற்சிறகீர்
மால்வரையொத்தனர் வாகைபெறக்கதிர் வாளமெடுத்தவரே. ௩௯௰.

வெயில்விடுபைத்தலை அமளிமிசைத்துயில் விபுதர்களுக்கரியோன்
பயிலவுதைத்தலின் அவர்களுரத்திடை பதமலர்பட்டுருவா
மயில்கடவிக்கட வுளர்பகையைக்கதிர் மகுடமுருக்கியவேள் [௩௯௧.
அயில்கொடுகுத்திய நெடுவரையொத்தனர் அயில்களெடுத்தவரே.

மின்சுடிகைப்புய கங்கள்வெருக்கொளும் வெங்கருடக்கொடியோன்
வன்பதபத்ம நகங்கொடெடுத்துயர் வண்ககனத்திடலான்
முன்புவனத்திடை வந்தகவிக்கிறை மொய்ம்புணர்வுக்ககல்பேர்
என்புமலைக்குவ மங்கள்கொடுத்தனர் எஞ்சியபப்பாரே. ௩௯௨.

மைந்துபடைத்துயர் பஞ்சவர்சொற்படி வந்தமலர்க்கழலான்
உந்தவுதைத்துட லம்புதையப்பில மொன்றியொளித்திடலால்
அந்தணன்முற்பகல் வந்துபுடைத்திட வஞ்சிநிலத்திடைவீழ்
விந்தமொடொத்தனர் வன்குழியிற்றிகழ் வெங்கணரக்கருமே. ௩௯௩.

அந்தவிடத்தெறி பம்பாமொத்துட லஞ்சுழலச்சிறிதே
குந்தியுறித்தயிர் உண்டவர்பொற்கழல் கொண்டுசெழற்றுகலானி



Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

மூந்தமார்க்கமிழ் தந்தாமைக்கடன் முன்சுழலச்சுழலும்
மந்தாமோத்தனர் குந்தமெடுத்தெதிர் வந்துமலைந்தவரோ. ௱௯௪.

மூட்டியதோல்குரு தீக்கடன்மல்கலின் முட்டியகைவிரலால்
நெட்டுடல்பல்வகிர் பட்டதனுள்விழ நித்தர்செய்தோல்வினையான்
மட்டறவல்விற லுற்றெதிர்செல்கவி மைக்கடலெல்லையின்முன்
இட்டனகல்வரை யோத்தனர்வெல்கழல் எக்குலமல்லருமே. ௱௯௫.

எப்பொருணிற்பன வெக்கிரிநிற்பன வெக்கடனிற்பனவென்
றீப்புவனத்துயிர் முற்றுமயக்கற வுட்கினரோய்த்திமையோர்
மைப்புயலோத்தோளிர் பச்சைநிறத்தினன் வர்க்கமலர்க்கழலால்
ஒப்பறமட்குழீ உற்றவரைப்பட வோற்றிமீதீத்தலுமே. ௱௯௬.

கொண்டன்முழக்கென அம்புவியைக்கடல் கொண்டெழுதற்கதிருஞ்
சண்டமுழக்கென வன்பவனக்கிளை தந்தமுழக்கெனவே
வண்டினமொய்த்தெழ வண்டுளவத்தொடை வண்டுவரைத்திருமால்
அண்டமுகட்டுற நின்றுசிரித்தனன் அங்கணெருப்பெழவே. ௱௯௭.

ஒன்றுபடக்கடல் அம்புமுகப்பன உம்பர்குலத்தருவுஞ்
சென்றுமுரிப்பன வெண்டிசையிற்குல சிந்துரமெற்றுவவெண்
குன்றுநெரிப்பன பைம்பொனிறக்கிரி கொண்டுதீரிப்பனவாய்
அன்றுதனித்தனி நின்றுமலைத்தன அங்கையெனப்பலவே. ௱௯௮.

துகிர்தழ்வைத்தன வளைகண்முழக்கின தொடர்சிலகைத்தலமே
அகிலம் வெருக்கொள வரிமழுவெற்றின அவைசிலகைத்தலமே
புகலும் வடிக்கணை அயுதமெடுத்தன பொருசிலகைத்தலமே
தீகழ்விசயத்தொடு சிலைகள்குனித்தன சிலசிலகைத்தலமே. ௱௯௯.

வெங்கணையத்திரள் குந்தநிரைப்படை வெம்புமுலக்கைகள்போர்
பொங்கியவச்சிரம் உந்துகலப்பைகள் புண்கொளுவர்க்கமெலாம்
எந்துமலைத்தெழ செஞ்சுரிகைப்படை தண்டமெனப்பலபேர்
தங்கியசக்கிர பங்கிதரித்தன தன்பலகைத்தலமே. ௨௱.

சிலசிலகைத்தலம் அடுகழலிற்பல செறிகழல்கட்டினவே
சிலசிலகைத்தலம் இறுதுபுயத்திடை செறிதொடையிட்டனவே
சிலசிலகைத்தல மணிகொளுரத்திடை பணிகடிருத்தினவே [௨௱௧.
சிலசிலகைத்தலம் விரல்கணொடித்தன செறுநர்திகைத்திடவே.

மேலெழுபூங்கதிர் வாளுறைபோம்படி வீசினவான்புடையே
தோலினமேந்தின நீள்கவண்வேய்ந்தன சோரிகள்சூழ்ந்திடவே
ஞாலமெலாம்பொரு தோமரம்வாங்கின நாவொருமூன்றனவாஞ்
சூலமொடோங்கின பாசமொடேந்தின சூழ்பலபூங்கரமே. ௨௱௨.

மாயிருஞாலமெ லாம்வெயில்போயொரு மாகதசோலையுறப்
போயிருபாலும் வளைந்தெனவந்தெதிர் பொருமுனைவெம்படையோ
டாயிரமாயிரம் அங்கைபுறப்பட அண்டருமாதவரும்
யாயிரநான்மறை பாடிவியந்து பணிந்துபுகழ்ந்தனரோ. ௨௱௩.

ஆரணனே யானேபுவ னங்களனைத்தையுமன்றுதவுங்
காரணனேகரு ணைகரனேகம லாசனிகாவலனே
வாரணநேர்போது வேயொருபேரிட வந்தருளும்புயலே
காரணனேமுனி யேலெனநெஞ்சழ நாவுநடுங்கிடவே. ௨௱௪.

மாதவனேமுனி யேலெக்மையாளுடை வானவனேமுனியேல்
யாதவனேமுனி யேலிதயத்தி லிருப்பவனேமுனியேல்
ஆதவனேமுனி யேல்மதிவெங்கனல் ஆனவனேமுனியேல்
நீதவனேமுனி யேல்முனியேலென நின்றுபணிந்தனரே. ௨௱௫.

கங்கைமகன்கதி ரோன்மகனம்பிகை காதன்மகன்றலையாம்
அங்கவையின்கண் இருந்தநாதிபர் அடையவெழுந்தடைவே
செங்கைகுவித்த சிரத்தினாயுணர் வொன்றியசிந்தையராய்
எங்கள்பிழைப்பினை இன்றுபொறுத்தருள் என்றுதுதித்தனரே. ௨௱௬.

கண்ணபொறுத்தருள் வெண்ணெயருந்திய கள்வபொறுத்தருள்கார்
வண்ணபொறுத்தருள் பாமபொறுத்தருள் வாதபொறுத்தருணீ
திண்ணமனத்துணர் வொன்றுமிலாதவர் செய்தபெரும்பிழையென்
றண்ணன்மலர்க்கழன் முடிமிசைவைத்தெதிர் அன்றுபணிந்தனரே.
௨௱௭.

தேவரும்வாசவ னுஞ்சிவனுந்திசை முகனு நாதியரும்
யாவருமன்பினொ டாயிரநாமமும் எண்ணியிறைஞ்சுதலான்
மூவருமொன்றென நின்றருளுதனு முனிவுதவிர்ந்தருளா
மீவருமண்ட முறுந்திருமேனி யொடுக்கினன்மீளவுமே. ௨௱௮.

தன்னினுயர்ந்தவர் யாருமிலாவுகில் சதுமறையின்படியே
எங்கிலமுந்திரு வடியின்மறைந்திட இப்படிநின்றிடவும்
பின்னையுமஞ்சி அயர்ந்திலனெஞ்சு பெயர்ந்திலனுசனமுஞ் [௨௱௯.
சென்னியினுங்காம் வைத்திலன்வண்புகழ் சிறிதுமொழிந்திலனே.

தொல்லவையின்கண் இருந்தவனுக்கொரு துன்மதியாலெவனீ
கொல்லலினைந்தமை நன்றெனவன்றிறல் கூறினனெம்பெருமான்
ஒல்லலையினின்குல முற்றுமடிந்திட வுற்றுமலைந்தோர்கணத்
தெல்லையில்வெஞ்சமர் நூறுவன்வானுல கேறுவர் யாவருமே.௨௱௰.

அஞ்சினனின்னை அழித்திடநின்னுடன் அன்றுபெருஞ்சமர்வாய்
வெஞ்சுடராயுத மொன்றுமெடுக்கில மென்றுவிளம்பியதும்
எஞ்சமலைந்தெதிர் வந்துயிர்கொள்ளுது மென்றுதனித்தனியே
பஞ்சவர்கூறிய வஞ்சினவாசக மும்பழுதாமெனவே. ௨௱௰௧.

என்றுரையாடி நெடுங்கடல்வண்ணன் எழுந்தருளப்பிறகே
சென்றனரொம்முடி மன்னவரும்பணி சேர்கொடியோனையலால்
நின்றுபகார முரைத்தவர்தம்மை நிறுத்தியநந்தாமே
வன்றிறலங்கர் பிரானொடுகூறினன் மற்றெருவாசகமே. ௨௱௰௨.

வண்மையினுலுய ரங்கர்குலாதிப மதிகுலம்வாழ்வுறவந்
துண்மையினுலுயர் மன்னவரைவரு முன்னிலுனக்கிளையோர்
பெண்மையினுலுயர் குந்திவயிற்றிடை யொருமையினுலிதயத்
திண்மையினுலுய ருன்னையுமன்பொடு தினகானல்கினுல்.௨௱௰௩.

ஏயுநெடுங்கொடி முரசுடையோனை யெழிற்றருமன்றாவே
வாயுவழங்கினன் வீமனைநல்கினன் விசயனைவாசவனும்
ஆயுநிகழ்ந்திடு வேதமருத்துவ ரன்பொடளித்தனர்செந்
தேயுவெனுந்திற னகுலனையுஞ்சக தேவனையுஞ்சிறிதே. ௨௱௰௪.

அந்தணன்முன்றரு மந்திரமைந்தினில் அறுவரையுங்கடவுட்
குந்திபயந்தனள் யானினியென்பல கூறுவதுங்களினீர்
அந்தநிலம்பெறு வீர்தவிர்கிற்பெற வார்சிலர்வேறுரியார்
வந்தினியும்பியர் தம்மொடுசேர்கென மலர்மகணுயகனே. ௨௱௰௫

(வே.) கன்றல்விளவின் கனியுதிர்த்துங் கழையானிரையின் கணம் அழைத்துங்
குன்றன்மழையின் குலந்தடுத்துங் குலவுஞ்செல்வக் கோபாலா
இன்றலெனது பிறப்புணர்ந்தே னென்றெென்புருகி யெம்பியர்பாற்
சென்றலென்ன நீயறியச் செகத்தோரொன்றுஞ் சீரியரோ. ௨௱௰௬

இரவிக்குரிய திருமதலை இவ்வாறுரைப்ப விசைவண்டு
விரவித்துயிலுந் துழாய்மாலும் வேறோர்மொழியும் விளம்பாமல்
உரவிற்றடந்தோள் உரவோனை ஏகென்றருளி ஒருசார்வெம்
புரவித்தாமா னின்றவனை வருகென்றழைத்துப் புகல்கின்றான். ௨௱௰௭

போயேகானம் பலதிரிந்து புகன்றவிரதம் பொய்யாதோர்
ஆயேவந்த பாண்டவர்கள் ஐந்தூர்வேண்ட மறுத்ததற்குச்
சேயேயனையாய் சிலைமுனிவன் சேயேநாவளச் செருக்களத்தில்
நீயேயறிதி எனவுரைத்தான் நெடியோன்கரிய முடியோனே. ௨௱௰௮

தானுதிபனே உனக்குநிகர் தாணித்தலத்திற் சிலருண்டோ
ஞானுதிபனே போர்விளைந்தால் நாகக்கொடியோன் நயந்துன்னைச்
சேனுதிபனு கென்றலுஞ் செலுத்தேனென்ன நீமறுத்தி
ஆனாலுய்வர் ஐவருமற் றவர்பாலுனக்கு மன்புண்டாம். ௨௱௰௯

ஆயோதனத்தில் அடலரியே றனையான்றன்னை யிவ்வாறு
மாயோனுரைத்துச் செங்கனக மணியாழியைமண் ணிடைவீழ்த்தான்
சேயோனதனை எடுத்தவன்றன் செங்கைக்கொடுப்ப வாங்காமற்
றூயோயூர்கோள் பரிதிதனைச் சூழ்ந்ததகல்வான் மீதென்றான். ௨௱௨௰

வரித்தாமரைக்கட் டிருநெடுமால் வான்வாய்நோக்க வரிவிற்கைப்
பரித்தாமாவும் ஆழியுடன் பரிதிவடிவந் தனைப்பார்த்தான் [ம்
கிரித்தாழ்கவிகைப் பெருங்கள்வன் கிளர்நூன்முனிவன் புதல்வனையு
பிரித்தானவனுஞ் சூழற்றன் என்றாரிருந்த பேரவையோர். ௨௱௨௰௧

தனிவந்தகலுந் தூதனைப்போய்த் தானேயணுகித் தடஞ்சாப
முனிவன்புதல்வன் மோதிரந்தோட் டருஞ்சூள் முன்னர் மொழிகின்றான்
இனிவந்துறவா நின்றலும் எங்ஙன்றேளிவ தீவனையேறுத்
துனிவந்தாசர் முகநோக்கிச் சொன்னானிடியே றன்னானே. ௨௱௨௰௨

துளியார்மதுவின் வலம்புரித்தார்த் துரியோதனன்றன் சொற்றதுவும்
ஒளியாரவையில் வாள்வேந்தர் ஒருவர்க்கொருவர் உரைத்தனவுங்
களியானையினான் செவிப்படலுங் கலங்கிச்சித்தம் இவனென்னைத்
தெளியாவண்ணம் பேதித்தான் றிருமாலென்றே சிந்தித்தான். ௨௱௨௰௩

தண்ணந்துளவ முடியோனுந் தனித்தாங்கிருந்து தன்மனத்தின்
எண்ணம்பலித்த தெனவெண்ணி இளையோன்றனக்கு விடைநல்கி
விண்ணின்றமரர் துதிக்குமிசை விதுரான்மனையின் மேவியபின்
திண்ணங்கடவுட் தலவாசன் வருமாறிருந்து சிந்தித்தான். ௨௱௨௰௪

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அந்தக்கணத்தில் வந்திறைஞ்சும் அகண்டலனைத் தழீஇக்கொண்டு
கந்தத்துளவ முடியோனுங் கண்ணும்மனமுங் களிகூரத்
தந்தத்தொழிலோர் அரிசுமந்த தவிசினிடையே உடனிருத்தி
முந்தக்கருது கின்றவினை முடிப்பானுபாய மொழிகின்றன். உ௱உரு.

கிரியின்சிறகை அரிபடையாய் கேண்மோவாண்மோ தகவமரில்
வரிவெஞ்சிலைக்கை விசயனுக்கு மாறய்முனிந்து வருகின்றன்
எரியுங்கானில் விடவாவும் இவனுக்குற்ற பகையாகி
அரியின்புதல்வன் றனக்கொருபோ ரம்பாகியதார் அறியாதார். உ௱உசா.

கன்னன்விசயன் றனைக்கொல்லிற் கடற்பார்முழுதுங்கண்ணில்லா
மன்னன்புதல்வன் றனதேயாம் ஒழிந்தார்தாழ மடிந்திடுவார்
முன்னஞ்சூதின் மொழிந்தபகை முடியாதிருக்கில் வழக்கல்ல
என்னெஞ்சறிய நீயறிய எனக்கேவசையு நிலையாமே. உ௱உஎ.

கவசங்கனக குண்டலமென் றிரண்டும்புவனயிற் பார்தேந்தத்
திவசம்பொரினுங் கன்னனுயிர் சேதுப்பார்மண்ணிற் சிலருண்டோ
அவசங்கிளைஞர் உறத்துவனவர் ஆற்றக்களத்தில் அடுங்தாக்குத்
துவசம்படைத்தோன் றனைப்பயந்த துணைவாவின்றே சொன்னே
னே. உ௱உஅ.

வல்லார்வல்ல கலைஞருக்கும் மறைநூலவர்க்குங் கடவுளர்க்கும்
இல்லாதவர்க்கும்உள்ளவர்க்கும் இறந்தோரோவர்க்குந் துறந்தவர்க்குஞ்
சொல்லாதவர்க்குஞ் சொன்னவர்க்குஞ் சூழுஞ்சமய வாதியர்க்கும்
அல்லாதவர்க்கும் இரவிமகன் அதிதானங்கள் அளிக்கின்றன். உ௱உகூ.

மைந்தற்குறுதி வல்லையெனில் வல்லேமுனிவர் வடிவாகிச்
சந்தப்பனுவல் இசைமாலைத் தானுகாவன விரைந்தெய்தி
அந்தக்கவசதண்டலங்கள்அளியாயென்றலவையொன்றும் [உ௱௩௰.
இந்தப்பிறப்பின் மறுத்தறியான் உயிரேயெனினும் இசைந்திடுமே.

ஈண்டுமவனை நீகவரில் இருந்தேநூர்ந்திப்படியாசர்
தீண்டுவரினுஞ் செயிமரிற் றிண்டேர்விசயன் எதிர்நில்லார்
மூண்டுபோருவிற் கன்னனுந்தன் முன்னேயெய்தி முடிசிதறிப்
புரண்டுமடியும் எனவணங்கிப் புத்தேளரசும் போகின்றன். உ௱௩௧.

(வே.) தண்டுதானெனக் குனித்துட லமாத் தாளிணை தளர்ந்துத
ள்ளாடக் [நுரையை
கண்டியாவருங் கைதொழக் கவித்தகைக் குடையுடன் கங்கைநீர்
மொண்டுமேலுறச் சொரிந்தென விரிந்தவெண் ணரையுடன் மூப்பொ
ருவடிவங் [ந்தான். உ௱௩௨.
கொண்டதாமென ஒருமுனியாகியக் கோற்றவன்வாயில்சென் றடை

அடுத்ததானமும் பரிசிலு மிரவலர்க் கருளுடன் முற்பகலளவுங்
கொடுத்துநாயகன் புகுந்தன னுவளநீர் குறுகுமினெனக்கோயிற்
றடுத்துவாயிலோர் மீளவுமுனாத்தலுந் தலைவனுந்தருகெனவிரைவின்
விடுத்தானன்மறை முனியைமுன் காணு வேந்தனுந் தொழுதடி வீழ்ந்தா
ன். உ௱௩௩.

என்னமாதவம் புரிந்தனன் பரிந்துநீ ஈண்டெழுந் தருளுதற்கென்று
பொன்னினுசனத் திருத்திமெய் யருளுடன் பூசையுமுரிமையிற் புரிந்
தாங்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கன்னவேதியன் றளர்ந்தமென்னடையினல்ஆனதேயிற்பகலேன்று
சொன்னவேலையி னகைத்துனக் களிப்பனி சொன்னவையாவையு
மென்றன். ௨௱௩௰௪.

அருத்தியிதன்மற் றமார்போற் றருவினு மரிதுநீ யளித்தியோவென்று
விருத்தவேதியன் மொழிந்திட நகைத்துநீ மெய்யுயிர் விழைந்தீந்தாலுங்
கருத்தினுலுவந் தளித்திலே னெனிலெதிர் கறுத்தவர் கண்ணிணை சி
வப்ப [ன். ௨௱௩௰௫.
உருத்தபோரினிற் புறந்தரு நிருபர்போய் உறுபதமுறுவலேன் றுரைத்தா

வந்தவந்தணன் கவசகுண்டலங்களை வாங்கிநீ வழங்கெனக்கென்
னத்
தந்தனன்பெறு கெனவழங்குதலும்விண் டலத்திலோர் தனியசரீரி
இந்திரன்றனமாயவன் விரகினல் ஏவினன்வழங்கனீ யெனவுஞ்
சிந்தையின்கணோர் கலக்கமற்றளித்தனன் செஞ்சுடர்த் தினகான்
சிறுவன். ௨௱௩௰௬.

அண்டர்யாவரும் பூமழைபொழிந்தனர் அந்தா துந்துமி யார்த்துக்
கொண்டல்வாகனுங் கொண்டமெய் ஒழிந்துதன் கோலமெய் யுடன்
வெளிநின்றன்
கண்டுமாமனம் உருகிமெய்களித்திடுங் கன்னனுக் கங்நெடுங் கடவுள்
மண்டுபோர்தனில் வயந்தருமிதுவென மற்றெரு கொற்றவே லளித்தா
ன். ௨௱௩௰௭.

உண்மையாகவெஞ் சமர்முகத் தெதிர்படை யோன்றும் வந்துடற்பட
வொட்டாத் [கொடுத்தான்
திண்மையாலுயர் கவசகுண்டலங்களைச் சென்றிரந் தவற்கிவன்
எண்மையாயினும் கிளைஞரோ யிரப்பினும் ஈயலாப்புன்செல்வ ரியார்
வண்மையாளர்தம் மாருயிராயினு மாற்றலர் கேட்பினு மறரோ. ௨௱௩௰௮.

வாசவன்றனக்கு விடைகொடுத்ததற்பின் வந்தகாரியந்தனி முடிப்பான்
கேசவன்றனது தாதையோடுதித்த கேண்மைகூர் தெரிவையைக்கிட்
டித் [மையும்
தேசவன்றனது தூரிசில்பால்விரைவிற் செல்கெனப்பணிந்து சேயி
பாசவன்பாச முன்னுறப்பிணிப்பப்பாதபங் கயஞ்சிவப்பித்தாள். ௨௱௩௰௯.

வந்துகுந்திநின் கோயிலெய்தினளென வாயிலோருரைத்திட மைந்தன்
முந்துமன்புடன் றெழுதெதிர்கொண்டுநன் முறைமையால் ஆசனத்
திருத்தி [றுஞ்
இந்துவின்கதிர் கண்டுமேன்மேலுமற் றிரங்கவான் கரைகடந்தே
சிந்துவெண்டிரைநீர்ச் சிந்துவோத்துருகுந் தெரிவையோ டுரைசில
செப்பும். ௨௱௪௰.

அன்னைவந்ததென் னருந்தவப்பயனென் றன்பினல் இன்புறவணங்கி
என்னைவந்தவா றென்னமற்றவளும் ஈன்றதா யானுனக்கென்று
முன்னைவந்தொரு மந்திரந்தவமுனி மொழிந்ததுங் கதிரவனருளாற்
பின்னைவந்ததும் விடுத்ததுமனைத்தும் பெற்றதாய் மனங்கொளப் பி
ணித்தாள். ௨௱௪௰௧.

நாயனுர்விா கிதுவேனமனத்தான் மதித்துமண் டூதித்தகைவள்ளல்
நீயகாளேனப் பயந்தவளேனினு நின்மொழி நெஞ்சுறத்தேறேன்
பேயனுர்சிலர் போழிவின்மையாற் பெற்றதாய் எனக்கெனவந்து
தூயநாகரின் அமைந்ததோர்துகிலாற் றுன்பமுற் றென்புருவானுர்.
உ௱௪௨.

அடாதுசெய்தலிற் படாதுபட்டனரேனும் அங்கர்கோனகைமொழி கே
ட்டுத்
தடாதவன்புடைக் கொடாததுாய் மொழிப்பெருந் தையலும் ஐயுறக்க
லுழ்ந்து [யென்
படாமதன்றிவட் கேடாவதுவருதலும் பயந்திலேனெனி லெனமுன்
றெடாவிரித்தலைத் துடாவுறப்போர்த்தெதிர் ஈன்றதாயாகியே இருந்தா
ள். உ௱௪௫.

இருந்ததாயீன்றவன்றுபோலுருகி இருதடங் கொங்கைபால்சொரிந்தாள்
அருந்துமாபோல விளவலுமுருகி அந்தவான் கண்டகன்றனுன்
புரிந்தபோன்போ டிறுதறத்தழுவிப் பொன்முடி மோயினளுயிராப்
பரிந்துகானன்றே உனைவளர்த்தெடுக்கப் பாக்கியஞ் செய்திலேனெ
ன்றள். உ௱௪௪.

வருகநீமதலை இளைஞாைவருநின் மலாடிமாபிறல் வணைங்கி [சி
உரிமையான்மனமோத் தேவலேபுரிய வோர்தனிச்செய்யகோலோச்
அாசெலாம்வந்துன் கடைத்தலைவணங்க ஆண்மையுஞ் செல்வமு
ம் விளங்கக் [உ௱௪௫.
குருகுலாதிபர்க்குங் குரிசிலாய்வாழ்வு கூர்வதே கடனெனக் குறித்தாள்

பெற்றநீர்மகவன் பின்மையோவன்றிப் பெரும்பழி நாணியோவிடுத்தீர்
அற்றைநாட்டொடங்கி என்னையின்றளவும் ஆருயிர்த் துணையெனத்
தேறிக்
கொற்றமாமகுடம் புனைந்தாசளித்துக் கூடவுண்டுரிய தம்பியருஞ்
சுற்றமானவரும் என்னடிவணங்கத் தோற்றமு மேற்றமு மளித்தான்.
உ௱௪௬.

மடந்தைபோற்றிருமே கலைமணியுகமா சறத்திகழ் சூதினில்விரோதத்
திடந்தனிற்பாச முடனிசைத்திவையா னெடுக்கவோ தொடுக்கவோ எ
ன்றன் [ஞ்சோற்றுக்
திடம்படைத்தனவேல் இராசாாசனுக்குச் செருமுனைச் சென்றுசெ
கடன்கழிப்பதுவே இனியெனக்கான கருமமுந் தருமமுமென்றன்.
உ௱௪௭.

பின்னைவல்லபங்கண் மொழிந்தினிப்பலவும் பேசியென் பூசலோவி
ளைந்த
துன்னிவந்ததுமிங் கென்கலுழ்வது நீயுண்மையாயுள்ளவாறுரையாய்
என்னமைந்தனுமிப்பரிசினுலுரைப்பவிற்றறைதுறந்தவன்றையினும்
அன்னைநெஞ்சழிந்து இருகணீர்சொரிய அலறிவாய் குழறிநொந்தழு
தாள். உ௱௪௮.

ஆண்டுமாமக னிருகணீர்துடைத்தே அன்னையைப் பன்மொழிதே
ற்றி
மூண்டவல்வினைப்பயனலால்யாது முயற்சியின்வருவதொன்றுண்டோ
வேண்டுமெய்வாம் யாவையுந்தருவன்யான் வேண்டுவ வேண்டுக

வென்றன் [உ௱சகூ.
பாண்டுவின்றிரு மனைவியுமதற்குப் பரிவினுலின்னுரை பணித்தாள்.

பார்த்தன்வெஞ்சமரி னின்னுடன் பொருமேற் பகைப்பெரும் பாந்த
ளம் பகழ் [தாள்
கோத்தலும்பிழைத்த தாகினீமறுத்துங் கோவலென்றெருவாங் குறித்
வாய்த்தநின்தாவர் இளைஞரோன்றிவரை மலையலென்றெருவாங் கு
றித்தாள் [மொழிந்தான். உ௱ருய.
மூத்தவன்காதல் இளைஞர்தம்பொருட்டான் மொழிந்தவாகேட்டிவை

தெறுகணையொன்று தொடுக்கவுமலைந்து செருச்செய்வோன் சென்
னியோ டிருந்தால் [ழகோ
மறுகணைதொடுப்ப தாண்மையோவலியோ மானமோ மன்னவர்க் க
உறுகணையொன்று பார்த்தன்மேற்றெடுப்பே னொழிந்துபோருய்வனே
ன்றுரைத்தான் [ஞன். உ௱ருக.
தறுகணைற்றவர்க்குந் தமுகணுளர்க்குந் தண்ணளிசிறந்தசெங் கண்

பெருவாமிாண்டும் பெற்றபின்றன்னைப் பெற்றபாவையைக்காங் கு
வித்துத்
தருவாமிாண்டு எனக்குளவுலகிற் சாாசாங்களுக்கெலாந் தாயே
வெருவருமமரிற் பார்த்தனுலடியேன் வீழ்ந்தபோதவனிவர் காண
மருவருமலைப்பால் இனிதளித்தன்றன் மகனெனும்வாய்மையுமுரை
ப்பாய். உ௱ருஉ.

உய்வருந்திறல்வெம் போர்முடிப்பளவும்உனக்கியான்மகனெனுந் தன்
மை
ஐவருமறியா வண்ணநீகாப்பாய் அல்லதிங்கவர்சிறி தறியின்
மைவருங்கடற்பார் அனைத்தையுமெனக்கே வழங்குவர் வழங்கினல்
இனியேன் [தென்றன். உ௱ருங.
கைவருந்துவரவன் றனக்கலால்வழங்கேன் கடைப்பிடிக் கருமமீ

என்றலுமதுகேட் டன்றதாயொக்குமென்றுகொண்டவ்வா நேர்ந்தும்
என்றியாமென்மேல்அளவளாய்ப்போகாதென்னுயிருனக்குமறப்பெயர்வ
தென்றினியெனத்தன் இருகணீர்சொரிய விளைத்திளைத்தழுதழுதேங்கி
என்றருண்மதலை தனைத்தழீஇநிறுத்தி யாதவனிருந்துழிச் சென்றள்.
[உ௱ருச.

கண்ணனுங்குந்தி கன்னனேடுரைத்த கருத்தெலாந் திருத்தகக் கேட்
டாங் [தித்
கெண்ணமுமுடிந்த தெனமகிழ்ந்தந்த வணங்கையுமில்லிடை இருத்
தண்ணளியுடன்றன் பின்வருமாசர் தம்மையுமுறைமுறை நிறுத்திப்
பண்ணமர்தடந்தேர் மீதுகொண்டன்றே பாண்டவர்வளநகர் புகுந்
தான். உ௱ருரு.

தூதுபோயாவ துவசனேடுறுதி சொன்னதும் மறுத்தவன் சொல்லி
மோதுபோர்புரியத் துணிந்ததும் விதூான் மூரிவில்லிறுத்ததுங்கங்தற்
போதுபோய்வஞ்சம் விளைத்ததுங்கன்னன் புாந்தாற்கீந்ததும்பயந்த
மாதுபோய்வாங்கள் பெற்றதேயொழிய மற்றெலாமைத்துனர்க் குரை
த்தான். உ௱ருசு.

---

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

# NEIDATHAM.

# நைடதம்.

## நாட்டுப்படலம்.

(The Excellencies, Salubrity and Prosperity of the country Nishatha.)

கருவி மாமழை கலைமகள் உருவென விளங்கி
இருவி சும்பிடை பரந்துசென் றினமணி கொழிக்கும்
பாவை வெண்டிரை மேய்ந்துயர் பனிவரை யுயிர்த்த
உருவ வோடரித் தடங்கணாள் உருக்கொடு மீண்ட. ௧.

அன்னங் கண்படு தண்பணை நிடதநா டளிக்கு
மன்னர் மன்னவன் மண்டமர் கடந்தவொள் வேலின்
மின்னி யாங்கவன் முரசென விண்ணிடை யதிர்ந்து
பொன்னங்குன்றின்மேல் அவன்கொடை போன்மெனப் பொழிந்த. ௨.

விலகி வில்லுமிழ் விரிகதிர் மணிபல வரன்றிப்
பொலன்மு கட்டுயர் பொன்னெடுங் குன்றின்வீ ழருவி
துலவு வெண்டிரைக் குரைகட லுடுத்தபார் மடந்தை
அலர்மு லைத்தலைத் துயல்வரு மாரமொத் துளதால். ௩.

வேழ வெண்மருப் பெறிந்துவெண் ணித்திலம் வரன்றிக்
காழ கிற்றுணி சந்தொடு கையரிக் கொண்டு
கோழ ரைச்செழுங் குங்குமத் தடஞ்சினை சாடி
ஆழ்தி ரைக்கட லகடுகீண் டொழுகிய தன்றே. ௪.

கங்கை யென்றுல கேத்திய கடவுண்மா நதிவேல்
சங்கு சூலுளைந் தலறிய தடம்பணை தவழ்ந்து
கொங்கு யிர்த்தபூந் தடத்துலாய்க் குளம்பல நிரப்பி
அங்கண் மாநிலத் தமிழ்தெனப் பரந்ததை யன்றே. ௫.

ஒழுகு தீம்புனல் சிறைசெயும் ஓதையு முழுநர்
குழுவின் சும்மையு முழத்தியர் குரவையி னார்ப்பும்
கழனி வாழநெல் வான்முளை வித்துநர் கலிப்பும்
மழைமுழக்கொடு மாறுகொண் டொலித்தன மாதோ. ௬.

வள்ளவாய்ச்செழுங் கமலத்தில் வண்டுபாண் மிழற்றும்
அள்ள லங்கருஞ் சேற்றிடை யாமைகண் படுக்கும்
பள்ள நீர்ச்செழும் பணைதோறும் பணிலமுத் துயிர்க்குங்
கள்ள றமலர்ப் போதும்பரிற் களிமயி லகவும். எ.

பண்வணை வாய்த்தவழ் பணிலங்கள் உயிர்த்தவெண் முத்துங்
கண்ணுடைக்கரும் பீன்றவெண் முத்தமுங் கமழுந்
தண்ணந் தாமரை சோர்ந்தவெண் முத்தமுந் தயங்கி
வெண்ணி லாக்கதிர் விரித்தலிற் குமுதம்வாய் விள்ளும். அ.

விழுந்த வஞ்சிறை வண்டின மீதிப்பமேல் லரும்பு
கிழிந்து வார்தரு தேறலுங் கிளர்சினைப் பலவின்
பழங்க னிந்துவிழ் தேறலும் பழனங்க டோறும்
வழிந்து பாய்தலின் வானுற வளர்வன செந்நெல். கூ.

கூனி ரும்பினிற் குறைத்தரி சும்மையிற் கொடுபோய்
மேனி வந்துயர் வரையெனப் போர்பல வேய்ந்து
நீனி றக்கரும் பகட்டினிற் றெழித்துவை நீத்த
தூநி றத்தநெற் பண்டியிற் பற்பலர் தொகுப்பார். ய.

(வே.) பூமலி தடங்க டோறும் புனல்குடை மகளி ரீட்டம்
காமரு கழனி தோறுங் கடைச்சியர் தாவையீட்டம்
தேமலர்ச் சோலை தோறுஞ் செழுங்குயிற் றெழுதி யீட்டம்
கோமறு கிடங்க டோறுங் குணில்பொரு முரசினீட்டம். யக.

கறுவொடு மோதன்றே டொன்று காரண மின்றிச் சீறிப்
பொறியுடைக் குறும்பூழ் தம்மிற் போர்செயப் பொருத்து மோதை
செறிமயிர்த் தகர்க டம்மிற் றீயெழத் தாக்க நோக்கி
அறைகழல் வீ ரார்க்க மமலையை யவிக்கு மன்றே. யஉ.

மாதர்மென் முல்லை யீன்ற வாண்முகை யனைய மூரல்
கோதறு கருணை தீம்பால் கொழுங்கனி யிவற்றி னோடும்
ஆதுலர் யாவ ரென்ன வதிர்தான் முரசீற் சாற்றி
வேதியர்க் கருத்திப் பின்னர் விருந்தொடு நுகர்வர் மாதோ. யங.

முல்லையங் கோதை நல்லார் முகமதி வியர்வு தோன்ற
வல்லி நுண் மருங்கு நோவ வால்வளை வாய்விட் டார்ப்ப
மெல்லிதழ்க் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையு மோதை
கோல்புலி முழக்கமென்ன வயின்றொறுங் குளிறு மாதோ. யச.

பூங்கரும் புடைந்த தீஞ்சா றடுபுகை புயலென் றெண்ணி
மாங்குயிற் றெழுதி யாவும் வாய்விடா தொழிந்த மஞ்ஞை
தூங்கிசை வண்டுந் தேனுஞ் சுரும்பொடு ஞிமிறும் பாடத்
தேங்கமழ் சோலை தோறுஞ் சிறைவிரித் தாடு மாதோ. யரு.

அல்லியங் கோதை மாதர் அன்போடு வளர்த்த முல்லை
மெல்லரும் பீன்ற தென்ன விழாவயர் முழவினோடு
மல்லுயர் திணிதோண் மைந்தர் மங்கையர் வதுவை யாற்றும்
பல்லிய முழக்க மார்க்கும் பாவையோ டிகலு மாதோ. யசு.

பொரியரைத் தேமா நெற்றிப் பூங்கனி யிழிந்த தேனும்
விரிதலை யாம்பை யீன்ற மென்பழ னுகுத்த தேனும்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

முருகவிழ் சுனைவாய் விண்ட முட்புறக் கனியின் றேனுந்
துருதுபாய் தடமும் யாறுந் துறைவறப் பெருத மன்றே. ௰௭.

அருமறைக் கிழவ னுள்ளத் தவாக்கெட வன்பி னல்கும்
பெருநிதிக் குப்பை யோடு பெய்புனல் பெருகி யோடி
வரிவளை யலறி யீன்ற மணியிள நிலவு காலுந்
திருவநீள் கழனி தோறுஞ் செந்நெலை வளர்க்கு மாதோ. ௰௮

நிலவுவெண் முத்தும் பொன்னு நீணிற மணியுஞ் சாந்துந்
தலைமயக் குற்ற வாற்றற் றண்மதி தவழுங் கோட்டு
மலைவளம் பெரிதென் கேனோ வால்வளை பரந்து மேயும்
அலைவளம் பெரிதென் கேனோ யாதென வுரைவன் மாதோ. ௰௯.

உளங்கனிந் தாயரூதும் வேயிசை செவியி னோர்ந்து
துளங்குவெள் ளருவிக் குன்றிற் றோகைகண் டுஞ்சுந் தெண்ணீர்
வளங்கெழு மருத வேலி வண்டுதா லாட்ட நெய்தல்
இளங்களிக் குமரியன்ன மின்றுயில் கூரு மாதோ. ௨௰.

கடல்படு மமுது மல்லற் கான்படு மமுது மோங்கு
தடவரை யமுதுமொன்றித் தலைமயக் குற்ற வாற்றல்
உடைதிரை யமுதமொன்றே யுடையவிண் ணோடு கொல்லோ
நிடதநா டதற்கு நோய் நிகழ்த்தலாந் தகைமைத் தம்மா. ௨௧.

---

## நகரப்படலம்.

(The Excellencies &c. of the city of Vintam.)

குடவளைக்குலம் வயிறுளைந் தீன்மணி கொழிக்கு
மடுவில் வானக நருவுகாட் டியதுபோன் மதில்சூழ்
கடிகொண் மாநகர் அந்நிழல் கதுவிடா தகன்ற
புடைகொ ணீர்நக நடுத்தலைப் பொங்குபே ரகழ். ௧.

கண்ண கன்றபே ரகழ்யி னுழக்கிய கரிக
டண்ணந் தாமரைத் தாளெனத் தடக்கையாற் பிலத்தி
னண்ணுஞ் சேடனை யெடுத்ததன் சுடிகையினுப்பன்ன
உண்ணி வந்தோளிர் மணியினால் உற்கையென் றெறியும். ௨.

ஒற்றை யாழியந் தோவ னுயர்மதில் கடக்கப்
பெற்றி லாமையிற் பிறங்குபொற் கதவங்க டிறக்கும்
அற்ற நோக்குற வனந்நலா ரியற்பெற வணியக்
கற்றை வெண்மதி சாளரத் தாடியிற் காட்டும். ௩.

உறுவி கந்தவெண் மதியென விளங்கிய பித்தி
செறியு மாடங்கள் வெண்கதிர் பரப்பிய செவ்வி
நறவு யிர்த்தபைந் துணர்மலி கற்பக நாட்டை
வெறுவி தாமென வெண்ணகை புரிவது போலும் ௪.

வடிகொள் வெண்சுதை தீற்றிய மாடநீள் கழுத்திற்
படிய மைமுகில் கதிர்விடு பானிலாக் குழவி
முடியின் மீதுறத் தவழ்தலான் முழுமெயும் வெள்ளைப்
பொடிய ணிந்தருள் கறைமிடற் றண்ணலைப் பொருவும். ௫.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

மழைக்கண் மங்கையர் பயிறா மாகத மணியின்
இழைத்த செய்குன்றிற் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் றுலவுமா னினங்க
டழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கறிக்கும். சு.

வள்ள வாய்மலர் முகத்தியர் வதியுமே னிலையிற்
தள்ள றுமலர் நாற்றிய சுருங்கையிற் கதிர்கள்
உள்ளு றப்புகுந் துவாமதி யுடலூரிஞ்சுதலாற்
பிள்ளை வெண்மதி யாதனன் றெனப்பேரி துவக்கும் எ.

உருவின் மைந்தரில் வேனில்வேட் குடைந்தன ரில்லைப்
பொருளி லார்களிற் றனதனைப் பொருவிலா ரில்லைத்
தெருளின் மாக்களிற் சேடனிற் றுழ்தரு ரில்லை
அருளிலார்களில் ஐந்தரு நிகர்க்கிலா ரில்லை. அ.

மேனி வந்தோளிர் மாடத்தின் விழுத்தக நிரைத்த
பானி லாமணித் தசும்பினிற் றண்கதிர் பாப்பக்
கான றும்புன னிறைதலுங் கதிரவன் றடந்தேர்
மானி னங்குடித் தயர்வுயிர்த் தும்பரின் வாவும். கூ.

முருகு யிர்த்தவொள் ளகிற்புகை முகிலொடு முறழக்
குரும ணிச்சுடர் வெயில்விரி மாடநீள் கொடிகள்
புரிதிவானவ னடவுதேர்ப் பரியினைப் புடைத்தவ்
வருண னிற்றெழில் புரிந்தவன் காஞ்சிநீ தாற்றும். ய.

வரிவ ளைக்குலக் குவையினுன் மணிகளான் மணிக
டெரித நுங்கா வலவனல் வயின்வயின் றிரண்ட
விரிக நுப்புா வெண்மணற் குன்றினு லொலியாற்
பொருவி லாவண மறிதிரைக் கடலினைப் பொருவும். யக.

திங்கள் வெண்மணி நிலத்துவா மதிச்செழுங் கதிர்க
டங்கி வீழ்புனற் பெருக்கொடு தலைப்பெய்து விசும்பிற்
கங்கை யாழ்கடற் றலைமகன் களிப்புறக் களித்துப்
பொங்கு கற்புநூல் உரைத்தவை புகாற விளக்கும். யஉ.

தடங்கோ டாமரைத் தளிரிய லுறையுமிந் நகாம்
இடங்கொள் பூதல நகரெலாம் வென்றன மினிவான்
அடங்க வெல்லுது மெனவோர் வஞ்சின மறையாப்
படங்க ளுற்றிய பொன்றன பசியபொற் கொடிகள். யங.

அகனி லாமணி வட்டநீ ளரிமதர் மழைக்கண்
மகளிர் வாண்முக மதிகண்டு தீம்புனன் மல்கப்
புகரி றென்மலை நறுந்தற டுரிஞ்சுபூந் தேய்வைப்
பகரு மின்னுயிர்ப் பால்விளா யூட்டினர் பசர்வார். யச.

(வே.) வில்லுமிழு மாமணி துயிற்றிமிளிர் மாடத்
தொல்கிய துகிற்கொடிக ளும்பருல கெய்திப்
பல்லவ முயிர்த்துவளர் பைந்தருவின் மேவும்
வல்லிபடர் கின்றகொழு கொம்பென வயங்கும். யரு.

(வே.) மலைய மாதவ னுண்ணு மணிக்குவை
துலவு வார்கட னோர்சோலிற் றுற்றமே

அலகில் பல்வளஞ் சேர்த்திய வாவணம்
உலக முண்டருண் மால்வயி றொத்ததே. ௰௬.

நீடு மாவண நித்திலப் பந்தருட்
கேடில் கம்பல யாலிசை கேட்கிலார்
பாடல் வண்டொடு கானம் பகர்ந்திடக்
கோடல் செய்வர் நிறைதுறை யின்றெனெ. ௰௭.

துளிர்ப ளிக்குநீண் மாடக் கொடிகள் வான்
வெளிமு கட்டுயர் வெண்மதி தோயவன
ஒளிகொள் வெங்கதிர் வெம்மை யொழிந்திட
துளிகொள் தண்சுதை நக்குவ போன்றவே. ௰௮.

பத்தி மாட மணிக்கொடி பானுவின்
மெய்த்த மும்புறத் தைவால் வெங்கதிர்
கைத்த லங்களிற் காளிந் தீயைமடி
வைத்தி ருந்துதா லாட்டுதன் மானுமே. ௰௯.

யாணர் மேய் விாவியை நண்பகற்
காணுந் தோறுங் கனன்று கனலுமிழ்
கோவண வெம்மணிக் கொம்மை யெயிற்புறம்
வாண ஞாழல் சூழெயின் மானுமே. ௨௰.

(வே.) வளமலி யந்நகர் மன்னர் மன்னவன்
றவளயவிழ் நறுமலர்த் தண்ணந் தாரினன்
களகணு யுலகொரு மூன்றுங் காத்தருள்
நளனெனும் பெயரிய நாம வேலினன். ௨௧.

ஒன்னலர் மணிமுடி யுரிஞு தாளினன்
தன்னவி றேளினன் கமலக் கண்ணினன்
தன்னுயி ராமென வுலகிற் றங்கிய
மன்னுயி ரவனத்தையும் புரக்கு மாட்சியான். ௨௨.

பொருசிலை வேனில்வே ளவனைய பொற்பினன்
அருவரை யாமென வகன்ற மார்பினன்
கரைபொரு முடைதிரைக் கடலந் தானையான்
திருதுவெஞ் சினக்களி றனைய சீற்றத்தான். ௨௩.

வெங்கலி யிருள்கெட வெண்ணி லாவுமிழ்
திங்களங் கவிகையான் றிகிரி யொன்றினால்
அங்கண்மா நிலமுழு தளிக்கு மாற்றலான்
மங்குலி னெழுமடங் குதவும் வண்கையான். ௨௪.

அருளின துறையுணல் லறத்தின் வேலிசொற்
றெருளுறு கல்வியந் தெய்வமாக்கடல்
துரைகடற் புவிபுகழ் குணக்குன் றஞ்சுடர்
எரிதவ ழலங்கல்வேல் அரச ரேறனன். ௨௫.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

## சூதாடுபடலம்.

(Nala's gambling with Cali, a Personification of the Iron Age.)

மழகளி றனைய நம்பி பிறையென வளரு நாளிற்
கழைபுரை தோளி பின்னோர் கன்னியை யுயிர்த்தாண் மக்கள்
குழலினுங் கனிந்த வந்தீங் குதலைகேட் டுருகிவெய்ய
முழைபுகு சீயமன்னான் உவகையின் மூழ்கினானே. க:

நிழலுமிழ்ந் துதிரங் காலும் வயிரவா ணிடதர் கோமான்
எழுபுவி வேந்தர் யாரு மிடுதிறை கொணர்ந்தெஞ் ஞான்றுந்
தொழுதன ரேத்தி நிற்பத் தொடுகட லுடுத்த ஞால
முழுவது மொருகோ லோச்சி முறைவளா தளித்தா னன்றே. உ.

கோவடு குருதி வேலான் கொழுஞ்சுடர்ப் பட்டகாவலச்
சேவடி கழுவலின்றிச் செய்கடன் கழித்த னோக்கிக்
காவலற் சேருங் காலங் கருதுபு பன்னீ ராண்டு
மேவருந் தான்றி யுற்ற வெங்கலி மேயினானே. ௩.

(வே.) விட்புலத் தரசரும் ஏனை வேந்தரும்
வட்கவிம் மன்னவன் மல்லன் மார்பகம்
பெட்புறு மடந்தையைப் பிரிப்பல் யானெனப்
புட்கரன் பாற்கலி போயி னானரோ. ௪.

வருகலி புட்கரன் வதன நோக்குறக்
துணைகழ னளனெனுங் கொற்றவேந்தனே
ஒருகுடை நீழலி னுலகங் காத்திட
இருநிலக் கிழமைநீ இழந்த தென்கொலோ. ௫.

வாட்டிறல் வேந்தனை மடந்தை தன்னொடுங்
காட்டிடைப் புகுத்திமண் காக்கு மன்னர்நின்
றட்டுவணை தொழுநறுந் தாம நீண்முடி
சூட்டுவ னினக்கெனச் சொல்லி னானரோ. ௬.

சொல்லலுங் கழிமகிழ் தூங்கிப புட்கரன்
கொல்லிய வருந்திறற் கூற்று மஞ்சுறும்
மல்லுயர் திண்புய மன்னர் மன்னனை
வெல்லுமா றெங்ஙனம் விளம்பு வாயென்றான். ௭.

என்னவலை யாதும்நா னிழைத்த வஞ்சனை
விண்ணவ ராயினும் விலக்கற் பாலரோ
அண்ணலைச் சூதினாற் படுப்ப னஞ்சனீ
கண்ணுறும் யானும்வெங் கலியென் றனரோ. ௮.

முழையுறை கொடுவரி யனைய மொய்ம்பினான்
உழையினிற் போதுமென் றுரைத்து வெங்கலி
மழவிடை யுருக்கொடு நிற்ப வண்சுடர்
இழைதவழ் மார்பினா னிவர்ந்து போயினான். ௯.

உரவுநீர்க் கருங்கட லுலகு காவலன்
துணைகழல் பணிந்துதங் குறைகள் சாற்றுவான்
அரசர்கண் டுயிலமை முகிலினார்ப்புறும்
முரசுகண் டுயிலலா வாயில் முன்னினான். ௰.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

மன்னவற் கெம்வா வுரைத்தி வாயிலோய்
என்னலும் ஆங்கவ னெய்திக் கூறலுங்
கொன்னவில் வேலினன் கொணர்க வென்றனன்
அன்னவன் வருகென வவையி லெய்தினன். ௰க.

கவுகண தாகியோர் கவிகை நீழலில்
வளகட லுலகெலாம் புரக்கு மன்னவன் .
றவளயவிழ் தாமரைத் தாளில் வீழ்ந்தெழும்
இளவலோ டளவளா யிருக்குமேல்வையில். ௰உ.

கோல்சின வாகைவேற் குரிசின் மல்லலேற்
றேல்லுமிழ் மணிக்கொடி யுயர்த்த தென்னென
வல்லடு சூதினி லேற்ற மன்னனை
வெல்கொடி யீதென விளம்பி னனரோ. ௰௩.

சொல்லிய வவ்வுரை கேட்டுத் தூய்மணிக்
கல்லெனப் பணைத்துயர் கலவைத் தோளினன்
வெல்கொடி யுயரிய விடலை சூதுநீ
வல்லையே லாடுதும் வருகென்றேதினன். ௰௪.

நஞ்சினிற் கொடியவன் புணர்ப்பி னம்மிறை
வஞ்சகச் சூதினின் மனம்வைத் தானென
அஞ்சின ரமைச்சாவ் வாசர் கோமகன்
செஞ்சாண் டொழுதிவை செப்பன் மேயினர். ௰௫.

சீலநற் றருமமெய் சிதைக்குந் தெண்டிரை
வேலைமற் றிருநிலக் கிழமை வீழ்த்திடும்
மாலுறுத் திடுங்கவ றடன்மன்ன கேள்
கோலிழக் காசர்தங் கொள்கைத் தென்பவே. ௰௬.

கள்ளுண விரும்புதல் கழகஞ் சேர்தன் மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்த லொன்னலர்க்
கெள்ளிரு ளாட்பினில் இரியல் செய்திடல்
வள்ளியோ யறநெறி வழுக்கு மென்பவே. ௰௭.

ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் தூவினுக் கியைந்த சூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர். ௰௮.

எள்ளுக சூதினை யிகலில் வென்றதூஉங்
கள்ளமேற் கொளீஇவலை காந்துவேட்டுவர்
உள்ளுற வமைத்திடு முணவை யோர்கலாப்
புள்ளின மருந்தின போலு மென்பவே. ௰௯.

கலைக்கடல் கடந்துளோர் கழறுங் கட்டுரை
சிலைத்தழும் பிருந்ததோட் செம்மல் கேட்டுயிர்
உலப்பினு மறுக்கல னுரைத்த வாய்மைநீர்
விலக்குவ தென்னென விளம்பி னனரோ. உ௰.

மன்னவ னியைந்தவை மறுக்க லானென
இன்னலுற் றமைச்சாண் டிருப்ப வெங்கலி

துன்னிய தானுழம் தொடர்ந்த வாற்றினு
முன்னருஞ் சூதினின் முயல்கின் றனரோ. ௨௧.

நிழலுமிழ் வயிரவா ணிடதர் கோமகன்
ஒழுகொளிப் பூணினாய் ஒட்டம் யாதென
மழவிடை யதனையான் வைப்ப னீயுமுன்
எழுகடன் ஞாலமு மிசைக வென்றனன். ௨௨.

சூழ்வினைப் புணர்ப்பினாற் சொன்ன வாறியைந்
தாழ்கடற் புவிதொழு மாச னாடவெங்
காழ்மனக் கொடுங்கலி கவற்றின் வண்ணமாய்
வீழ்தலும் புட்கான் வென்றிட் டானரோ. ௨௩.

அனைத்தையுந் தோற்றனை யருவிபாய்கவுட்
சினக்களி மால்களி றனைய சீற்றத்தோய்
மனத்திடை நினைக்குவ தென்னை வல்லைநின்
புனைக்கொடிக் கிசைந்தினிப் பொருதும் யாமென்றான். ௨௪.

---

## நகர்நீங்குபடலம்.

(Nala and his wife deserting their city with a view to retire to the wilderness.)

என்றலு முறுவலித் திசைக்க லாதன்
ஒன்றுநீ யுரைத்திட லுலங்கொ டோளினாய்
வென்றநின் னகர்வயின் மேவ லேனெனாத்
துன்றுகா னகஞ்செலத் துணிதன் மேயினான். ௧.

வாட்டிறன் மன்னவன் கமல வாண்முகம்
ஈட்டரு மாசிய லிழந்த போதினும்
பாட்டளிக் கூந்தல்வேந் தவையுட் பைந்தொடை
சூட்டிய ஞான்றினுந் துலங்கு கின்றதே. ௨.

சாமரை யிரட்டுந ரடப்பை தாங்குநர்
தீமுகத் துமிழும்வா ளேந்திச் செல்குநர்
ஏமுற யாரையும் விலக்கி யேந்தறன்
கோமக ளினிதுறை கோயில் எய்தினான். ௩.

கற்றையங் கவரியுங் கால்செய் வட்டமுங்
கொற்றவெண் கவிகையு மின்றிக் கோதை வேன்
மற்றடந் தோளினான் வருதல் காண்டலும்
உற்றதை யெவன்கொலென் றுள்ளத் தெண்ணினாள். ௪.

எண்ணிவந் திறைஞ்சிய வெழிற்கோம் பன்னவள்
மண்ணிய மணிநிகர் வதன நோக்குறப்
புண்ணுழை வேலெனப் புகுந்த யாவையும்
நண்ணலர்க் கடந்தவே னம்பி கூறினான். ௫.

தாழ்தடக் கையினா னின்ன சாற்றலும்
வீழ்வாய் மடமயில் வெய்து யிர்ப்பொடு
மாழ்கினள் வருந்தினள் மழைக்க ணீருகுத்
தாழ்வலி யிதுவென வுள்ளந் தேறினாள். ௬.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இந்திரா சேனனேன் றிசைக்கும் பேருடை
மைந்தனு மழலைவாய்க் கொடியு மாழ்துற
துய்ந்திடக் கொணர்ந்துபே ரோசை போயநின்
றந்தைதன் வளநகர்ச் சார்க வென்றனன். ௭.

உயிர்நிகர் மக்களோ டுலங்கொ டோளினன்
செயிறு தந்தைபாற் செல்கென் றேதலும்
புயனறுங் கூந்தலாள் புண்ணி னூடெரி
அயினுழைந் தாலென வலமந் தேங்கினள். ௮.

நெடில்படு கானிடை தமியை நீங்கிப்போய்ப்
படுபால் அமளிமேற் பள்ளி கொள்ளவெங்
கடிநகர் அடைந்துமேல் லணையிற் கண்படில்
அடியனேற் கிதனினு மறனுண் டாங்கொலோ. ௯.

என்றவள் உரைத்தலு மடங்க லேறனன்
மென்றளிர் கவற்றுநின் மெல்லென் சீறடி
கன்றவெம் பால்படு கானி லேகுதற்
கொன்றுமே லெனதுயிர் உய்யு மோவென்றன். ௰.

பொற்பினுக் குறையுளாம் பொன்னங் கொம்பனாய்
அற்பினிற் பயந்தநம் மக்களாயிடை
எற்பிரிந் துறைகுவர் ஏனும் எங்ஙனம்
நிற்பிரிந் தாற்றுத னிகழ்த்து வாயென்றன். ௰௧.

கூற்றுறழ் வாகைவேற் குரிசின் மக்கடாம்
ஆற்றினு மாற்றலா தனுரின் மூழ்கினும்
மாற்றருங் கற்பினுர் மகிழ்நர் கான்செல
வேற்றுநா டுறைவது விழுமிதோ வென்றாள். ௰௨.

விரிகடல் அமுதமும் வேலை ஞாலமுஞ்
செருமகத் தழலுமிழ் சிறுகண் யானையும்
எரிமணிக் குப்பையும் எளிதின் எய்தலாம்
அருமகப் பெறுதன்மற் றரிய தென்பவே. ௰௩.

என்னலும் அவனிருங் கூந்தல் ஏந்திழை
மன்னவ மழலைவாய் மக்க டம்மொடு
மின்னது பரிதிவேல் வீமன் மாநகர்
துன்னுதும் யாமெனச் சொல்லி னளரோ. ௰௪.

கோற்றொடி செல்வர்பாற் குறை யிரந்துநின்
றேற்றயின் றுயிர்சுமந் திருத்த லிறிலா
ஆற்றலு மானமும் அறிவுங் கல்வியும்
மாற்றருஞ் சீர்த்தியு மாற்று மென்பவே. ௰௫.

மீக்கவெஞ் சமத்திடை வெருவி யோடினர்
ஒக்கருன் புறத்தனி யுலகில் வாழுநர்
புக்கவேட் டகத்தினில் உண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடியென் றுரைக்கும் வையமே. ௰௬.

என்றலுந் திருவுளம் இன்ன தாதமேன்
மன்றலந் தெரியலாய் மக்க டம்மைநம்



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

மீன்றிகழ் மானவேல் வீமன் மாநகர்
சென்றிடப் பணித்தருள் என்று செப்பினாள். ௧௭.

தண்டலில் பாகனை நோக்கித் தாதுசேர்
வண்டிமிர் தேரியலான் வருந்தி மக்களை
விண்டொடு புரிசைசூழ் விதர்ப்பன் றன்னுழைக்
கொண்டனை போகெனக் கூறி னானரோ. ௧௮.

தழுவிய தாதைதன் முகமுந் தாயர்தம்
முழுமதி யனையவாண் முகமு நோக்குற
விழிவழி நீருக விம்மி விம்மிநின்
றழுதனர் கண்டுளோர் அலக்கண் எய்தவே. ௧௯.

அலமரு மக்கடம் ஆகம் எங்கணும்
முலைவழி யொழுகுபா லனைப்ப மோந்துவாய்
புலர்தாப் பற்பல்காற் புல்லிக் கொண்டுகண்
கலுழ்தரு புனலினாற் கழீஇ னாளரோ. ௨௦.

மடவா றன்னொடு மதுகை வேந்தையும்
படுதுயர் ஒழிகெனத் தேற்றிப் பாகனுங்
குடலுயிர்ப் பிரித்தென வுவகை மக்களைக்
கொடிநெடுந் தேர்மிசை கொண்டு·போயினான். ௨௧.

மிகப்படு துன்பமும் விளையும் இன்பமும்
அகத்திடை நிகரென நோக்கும் ஐயனுந்
தகப்படு துயரொடு தளர்ந்து சாம்புமேன்
மகப்பிரி வினுந்துயர் வலிதீ யாவதே. ௨௨.

சிலதியர் பாப்பிய தேங்கொண் மெல்லிதழ்
மலர்மிசை மிதிப்பினும் வருந்து சீறடி
நிலமிசைப் படுபா லுறைப்ப நேரிழை
புலவுவேற் காளைபின் றொடர்ந்து போயினாள். ௨௩.

மடவா றன்னொடு மதுகை வேந்தனைக்
கடிமா சறுதகோ மறுகிற் காண்டலும்
இடியுறு மாவென வேங்கி யேங்கிநின்
றுடல்வெறுத் துயிருக வுழல்கின் றார்சிலர். ௨௪.

மண்ணிய மணிவரை யனைய மார்பினான்
பெண்ணலங் கனிந்தவிப் பேதை தன்னொடு
நண்ணருங் கானிடை நடத்தல் காணவோ
கண்ணிணை படைத்தனன் கமலத் தோனென்பார். ௨௫.

மல்லடு திணிபுய மன்னர் மன்னவன்
எல்லையி றுயருழந் தேகக் காண்டலும்
ஒல்லையில் வெடித்துயிர் ஒழிந்த தில்லையாற்
கல்லினும் வலியதே கவலு நெஞ்சென்பார். ௨௬.

தாயினும் அருள்புரி தாணி மன்னவன்
போயினன் கானிடை யென்ற போழ்தினின்
மாய்வுறப் பெற்றிலே மன்னர் மன்னன்பால்
ஏயபேர்அன்பினார் எம்மில் யாரென்றார். ௨௭.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

அடிதொழும் அரசரும் அமைச்சர் வெள்ளமும்
மடவியர் அனைவரு மைந்தர் ஈட்டமுங்
கொடிநெடு வீதிவாய்க் குறுகி யெங்கணுங்
கடன்மடை திறந்தெனக் கலுழ்ந்திட் டாரரோ. ௨௮.

பொய்யுறு தீமொழி புகல்கி லேனெனு
ஐயநீ யெம்மையிங் கருளில் வேந்து தன்
கையகப் படுத்தனை கானில் ஏகநின்
மெய்யினும் பொய்மையே விழுமி தாமென்பார். ௨௯.

எண்டிசைத் தலைவரும் எழில்கண் டேமுறத்
தொண்டைவாய் மடமயில் மாலை சூட்டுநாட்
புண்டரு கோட்டுவெங் களிற்றிற் போதால்
கண்டகண் ணிவற்றையுங் காணு மோவென்பார். ௩௰.

மன்னவன் ஏகுதற் கிரங்கி மாழ்குநர்
துன்னருங் கானிடை தொடர்ந்து செல்குநர்
இன்னுயிர் செகுப்பலென் றிசையில் புன்மையோன்
அந்நக ரிடைமுர சறைவித் தானரோ. ௩௧.

வசைபடு மன்னவன் வாய்மை யாலறை
விசிமுழ வொலிசெவி வெதும்பக் கேட்டலும்
இசைபடு மன்னனுக் கிரங்கி னோரெலாம்
அசுணமென் புள்ளென வலமந் தேங்கினார். ௩௨.

வருந்திமுன் போதரும் அமைச்சர் வாண்முகம்
புரிந்தன னோக்கிய பொருவில் வாய்மையான்
விரிந்தநூற் கேள்வியீர் அறத்தை வேரொடும்
அரிந்தநீர் எற்பிரிந் தாற்றல் ஆண்மையால். ௩௩.

மேவருஞ் சூதினிற் றோற்ற மேதினி
யாவையும் வென்றல தாள வெண்ணுதல்
கோவியல் அன்றவன் ஆணை மேற்கொளீஇ
நீவிரென் வாய்மையை நிறுத்து வீரென்றன். ௩௪.

முளியரில் வேய்ந்தவெங் கானில் மொய்துகள்
அளியொடு புலம்பினர் அழுத கட்கடைத்
துளியினில் அவித்தனர் தொடா வெந்திறற்
களிமதக் களிற்றினான் கானின் ஏகினான். ௩௫.

தீருதவெஞ் சினக்கலி செல்வன் பின்றொடர்
பரிசன மியாவுமெய் பதைத்து மீடா
முருகுறழ் பொற்பினான் முன்னர் ஏகிய
வருநெறி தெரிதர வஞ்ச மாற்றினான். ௩௬.

ஆற்றுவஞ் சனையினால் அழுத வாய்ந்தபொற்
கோற்றொடி தன்னொடுங் கொற்ற மன்னவன்
றேற்றுதல் காண்கிலார் துயர மெய்திநின்
றூற்றெழ கண்ணினர் உள்ள மாழ்கினார். ௩௭

ஆயினும் இனிதருள் புரியும் எம்பிரான்
றூயமென் மலரடிச் சுவடு காண்கிலேம்

607162A

Digitized by Google

Original from NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

போயினன் யாண்டேவர் புணர்ப்பி னுயதிம்
மாயமேன் றருநெறி மருங்கிற் றேடுவார். ௩௮.

தேடினர் புதமிடந் தெரிய லாமையில்
வாடினர் அருநெறி மருங்கின் ஓர்வழி
கூடினர் இன்னுயிர் கூற்றங் கைக்கொள
வீடின ராமென வீழ்ந்து விம்மினர். ௩௯.

கொன்னுவ யலங்கல்வேற் றுவவுத் தோளினன்
சென்னெறி கண்களிற் றெரியக் காண்கிலார்
இன்னலுற் றழுதழு தேங்கி யேங்கியத்
தொன்னகர் அடைந்தனர் தொடர்ந்து ளோரெலாம். ௪௰.

பறவைகள் குடம்பையுட் பார்ப்ப ருத்தில
கறவைகள் புனிற்றிளங் கன்றுக் கூட்டில
நறவுயிர்த் தலர்கில மலர்க ணுமவேல்
இறைவனே கினன்வனத் தென்ற பின்னரோ. ௪௧.

வான்மறந் தனதுளி வழங்கல் இன்னிசைத்
தேன்மறந் தனமட மகளிர் தேங்குழல்
பான்மறந் தனபசுங் குழவி பாய்கவுட்
கான்மறந் தனமதங் களிநல் யானையே. ௪௨.

அள்ளிலை வேற்கணர் அங்கை மீதுவைத்
தெள்ளநும் இன்மொழி பயிற்ற லின்மையால்
வள்ளவாய் ஆழ துண்ணும் வண்சிறைக்
கிள்ளையுந் தேன்மொழி கிளக்க லறற்தே. ௪௩.

வயம்பரி யிழந்தன வாவும் ஐங்கதி
ஏம்பலின் விழவணி யிழந்த கோமறு
காம்பல்வா யிழந்தன முறுவல் ஆகிற்
றீம்புகை யிழந்தன செம்பொன் மாடமே. ௪௪.

பாவலர் இழந்தனர் பரிசில் ஊண்பலி
தேவரு மிழந்தனர் கலியின் றீமையிற்
காவல னெடில்படு கானி லேகலால்
யாவரும் இழந்தனர் இன்பம் என்பவே. ௪௫.

அறந்தலை மயங்கின பொய்மை யார்ந்தன
மறந்தலை யெடுத்தன தீமை மல்கின
திறம்பின மனுநெறி தவங்க டேர்ந்தன
நிறைந்தன வஞ்சனை நேமி யெங்குமே. ௪௬.

---

## கான்புகு படலம்.

(Nala and his wife entering the wilderness.)

களிமயில் துனித்திடக் கால மன்றியுந்
துளிமுகில் பிலிற்றின துணர்த்த பூங்கொடி
முளிசின தளிர்த்தன முகைத்த பைந்தரு
களிகடற் றுணையா னடந்த கானமே. ௧.

வில்ளரும் அதரிடை வெதும்பு வெம்பால்
கள்ளவிழ் மலரொனக் குழைந்து காட்டின
ஒள்ளழற் கதிர்சுட வுலறு வெஞ்சுரம்
வள்ளவாய் மலர்விழ் மருதம் பொன்றதே. ௨.

ஊறுசெய் தூன்சுவைத் துடலம் வீக்கிய
ஆறலைக் கள்வரும் அளிய ராயினர்
வேறினி யுரைப்பதென் வெருவு மானொடு
மாறுகொள் உழுவையு மாற்றந் தீர்ந்தவே. ௩.

ஆயிடை யுயிர்நிக ரணங்க னோளொடு
மேயதன் னகர்வயின் விசும்பு பொழிந்துலாங்
காய்கதிர் நுழைகலாக் காவி லாடல்போற்
போயினன் அழலுமிழ் புலவு வேலினான். ௪.

அள்ளிலை வேலினான் ஏதம் ஆற்றிடைக்
கொள்ளைவண் டினமிழி நறவு கூட்டுணும்
வள்ளவாய் மலர்விழ் வாவி யங்கரைப்
புள்ளுருக் கொடுகலி போயி னானரோ. ௫.

வாவியின் மருங்குநன் மணிகள் சேர்த்தெனத்
தூவியம் புட்சிறை மென்புட் டோன்றலும்
ஓவிய மொழுதரும் உருவப் பைங்கொடி
காவியங் கண்ணிணை களிப்ப நோக்கினாள். ௬.

பன்மலர் கஞலிய பனிகொள் வாவியிற்
பொன்னவிர் கொடுஞ்சிறைப் புள்ளை நோக்குற
முன்னைநம் மணவினை முடித்த வஞ்சிறை
அன்னமென் புள்ளின தழகு வாய்ந்ததே. ௭.

மற்றுமோர் உயிரென வளர்த்த பூவையுஞ்
சொற்றருங் கிள்ளையு மறப்பல் தூமணிப்
பொற்றடந் தோளினாய் பொன்னம் புள்ளினைப்
பற்றிநீ தருகெனப் பணிந்து கூறினாள். ௮.

ஓர்துகி லிருவரும் உடுத்து மற்றையோர்
காரகிற் றீம்புகை கமழ நீவிகொண்
டேர்துடி யிருந்தன விலைகொள் பூணினாய்
வார்சிறைப் புள்ளினை வளைத்தும் என்றனன். ௯.

கருந்தடங் கண்ணிதன் னுள்ளங் காமுறத்
திருந்துவேற் றடக்கையான் றுகிலிற் சேர்த்தலும்
பொருந்திய துகிலொடு வஞ்சம் பூண்டெதிர்
இருந்தபுள் ளெந்தாத் தெழுந்து போயதே. ௰.

புனைதுகில் கவர்ந்துபைம் பொன்னி றத்தபுட்
பனியிரு விசும்பினிற் பறத்தல் காண்டலும்
மனைவிதன் அருந்துயர் நோக்கி மாழ்கினான்
வினைவலி யிதுவென மெலிவு நீக்கினான். ௰௧.

கல்லதர் நடந்துபூங் கமலம் வாட்டிய
மெல்லடி சிவப்புற வீழ் வாய்மயிற்

கொல்லுமே யெனமன முருகி யுந்தையூர்ச்
செல்லுநீ ணெறியிது வென்று செப்பினான். ௰௨.

ஆங்கது கேட்டலும் அழுது மாழ்கிநொந்
தீங்குநின் னடியனேன் பிழைத்த யாவைகொல்
பூங்கழற் குரிசிலோய் பொறியி லேன்றவன
நீங்கவோ விவ்வுரை நிகழ்த்தி னாயென்றாள். ௰௩.

செயிரறு மதிமுகம் பசப்பச் சிந்தைநொந்
தயர்வொடு கண்பனித் தவலங் கோடலு
மயிலியற் பேதைநிற் பிரிந்து வாழ்வனோ
உயிர்பிரிந் தாலுடல் உய்யு மோவென்றான். ௰௪.

முருகுயிர்த் தளியின மூசு பைங்குழற்
கருதரு பெருந்துயர் காண்கி லேனெனாப்
பரிநெடுந் தேரொடு பரிதி வானவன்
உரவுநீர்க் கருங்கடல் ஒளித்திட் டானரோ. ௰௫.

மாயிரு ஞாலமும் வானு நுங்கிய
பாயிருட் கங்குலிற் பாவை தன்னொடும்
போயரில் முற்றிய பொலிவின் மண்டப
மேயினன் அரசர்கோன் விதியின் கோட்பினால். ௰௬.

இன்னகிற் புகைதவழ்ந் திழுதின் மென்மைய
பன்மலர் அமளியிற் பள்ளி கொள்பவர்
புன்னுனை பரந்தவெம் பொடிகொள் பார்மிசை
மன்னினர் ஊழினும் வலிதி யாவதே. ௰௭.

அனிச்சமென் புதுமலர் அமளி மேவினும்
பனித்திடு மெய்யெனப் பதைத்து வாடுமென்
கனிப்படு கிளவிவெம் பொடியிற் கண்படில்
இனித்தமி யேனுயிர் எங்ஙன் உய்யுமே. ௰௮.

கண்ணகன் புவிக்கெலாங் கனக னாகிய
தண்மதி நெடுந்தடை விதர்ப்பன் றார்குழல்
நண்ணரும் இத்துயர் உழந்து நையுமேல்
எண்ணின்மற் றியார்துயர் எய்தி டாரோன்றான். ௰௯.

வளைகடல் உலகினில் மன்னர் தாடொழ
உளையரிப் பூந்தவி சுறையும் எம்பிரான்
முளியரில் எங்கணு முற்று மண்டபத்
தெளியர் போலிருத்திகொ லென்று விம்மினாள். ௨௰.

தடங்கணீர் துடைத்துமெய் தைவந் தாயிழை
நடுங்கலென் றற்றிடை நள்ளி யாமத்து
மடங்கல்போன் மொய்ம்புடை மன்னர் மன்னவன்
தடங்கைமேற் றுயின்றனள் பொன்னனங் கொம்பனாள். ௨௧.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

## பிரிவுறு படலம்.

(Nala's separation from his wife in the wilderness.)

விண்படு மின்னென மிளிரு மாகமும்
மண்படத் துயரொரு வடிவு கொண்டெனக்
கண்படு தோகையை நோக்கிக் காவலன்
புண்படு நெஞ்சொடு புலம்பி யெண்ணினன். க.

நண்ணரும் கானெலாந் தொடர்ந்து நண்ணுமேற்
கண்ணினல் இவடுயர் காண்க லாவதோ
பெண்ணரும் கலத்தினைப் பிரியிற் றந்தையூர்
அண்ணிய தவ்வுளி யடைந்து வைகுமால். உ.

விரிமலர்ப் பூங்குழல் விழிக்கில் ஈங்கிவட்
பிரிதுவ தரிதினிப் பிரிய வெண்ணிலோ
ஒருதுகி லாயதித் துகிலை யூறுசெய்
கருவியீங் கேதெனக் கருத்தில் எண்ணினன். ந.

எண்ணிய துணர்ந்திவட் பிரிப்ப முன்னமே
கண்ணிய வஞ்சகக் கலியும் வாளதாய்
நண்ணிமுன் கிடத்தலும் எடுத்து நாமவேல்
அண்ணலுந் துகினடு வரிந்திட்டானரோ. ச.

சில்லரி நெடுங்கணுள் தெருளு றவகை
மெல்லெனக் குடங்கையி னீக்கி வெய்துயிர்த்
தொல்லையில் உயிர்விடு முடம்பு போன்மென
அல்லலங் கடலிடை யழுந்தினனரோ. ரு.

செல்லும்வெந் துயரொடுஞ் செல்லக் காலெழா
தொல்லையின் மீளும்வெய் துயிர்க்கும் ஒண்ணுதல்
கல்லத ரிடைதனி யேகிற் பேய்க்கணங்
கொல்லுமென் றுருயிர் குழைந்து சாம்புமால். சு.

எழுமகன் றலினி யென்கோ லாமென
அழுமுயிர் துறந்தென வச்ச மேற்கொளா
விழுமிவட் காக்கென மெலிந்து தெய்வதந்
தொழுமினை யனபல துன்பம் எய்துமால். எ.

ஆயிடை யின்னணம் வருந்தி யன்புகூர்
வேய்புரை தோளியைப் பிரிந்து வெஞ்சின
மாயவெங் கொடுங்கலி வசத்த னதலிற்
போயினன் பித்தரிற் பொருவில் வாய்மையான். அ.

கள்ளிருட் போதில்வெங் கானி னுமவேல்
அள்ளிலைப் பூணினன் அகன்று போதலும்
விள்ளருந் துயரொடு மெலிந்து கண்படும்
பிள்ளைமா னேக்கிதன் செய்தி பேசுவாம். கூ.

நீடிய துயில்சிறி துணர்ந்து நேரிழை
ஆடகத் தொடிக்கையால் அவனைக் காண்கிலா
துாடினள் பதைத்தனள் உயிர்ப்பு வீங்கின
டேடினள் காந்தளஞ் செங்கை நீட்டியே. ய.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ஆயிடைக் காண்கிலா தழுங்கிச் செங்கடைப்
பாயரி நெடுங்கணீர் அருவி பாய்தாத்
தூயமென் மலர்க்கா னெரித்துத் துண்ணென
வாய்வெரீஇ யவ்வயி றதுக்கி மாழ்கினாள். ௰௧.

தெளித்தபூம் பள்ளியிற் சிறிது நீங்கினும்
அளப்பருந் துயரொடும் அவலம் எய்துவேன்
றளிப்பெயர்க் கங்குலிற் றமியன் மாழ்தற
ஒளித்துநீ தனிவிளை யாடில் உய்வெனோ. ௰௨.

(வே ) கான்றார் உயிரொழுகக் கண்ணீர் கவுளலைப்ப
ஊன்றேய் கணைபட் டுழலும் பிணையொத்தேன்
மான்றேர் அரசர் முடியுழுத வார்கழற்காற்
றேன்றலென் கண்களிக்க வின்னமுமென் றேன்றிலையே. ௰௩.

நோலர் போரேறே நிடதத்தர் கோமானே
ஆர வரைமார்பா வளியேன் உயிர்க் குயிரே
காரிருள்வா யான்புலம்பக் கானகத்து விட்டகன்றுஞ்
சாலையால் இன்னு மிதுவோநின் றண்ணளியே. ௰௪.

நெஞ்ச மெலிவே னினது தடந்தோளுங்
கஞ்ச மலர்முகமுங் காணாது கண்பனிப்ப
மஞ்சுதவழ் வெற்பரிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ. ௰௫.

ஞாலத் திருணடப்ப நாட்கமலம் வாய்நெகிழ்ப்ப
வேலைத் திரைமுகட்டில் வெய்யோன் எழுந்தனனால்
மாலைக் கதிர்வடிவேன் மன்னர் பெருமானே
காலைக் கடவக் கடன்கழிக்க வாராயோ. ௰௬.

வாவுமிள மான்காள் மயில்காள் மடப்பிடிகாள்
கூவுங் கரிய குயில்காள்மென் புள்ளினங்காள்
ஆவி யெனமேவி யகலோ மெனவகன்ற
காவலன்றன் போன வழியெனக்குக் காட்டீரோ. ௰௭.

என்று வுருகி யிருகண்ணீ ராலியுகத்
தன்னுத் தழும்பப் புலம்பித் தமியளாய்
மின்னார் இடைநுடங்கச் செல்வாள் விறல்வேந்தன்
பொன்னா ரடிநோக்கிப் பூங்கொடிபோல் வீழ்ந்தழுதாள். ௰௮.

ஐயன் கமல வடிச்சுவடு கண்ணுறலும்
வெய்ய துயாவிட மீதூர வாய்புலாச்
செய்ய கமல மலரிற் றிருவனையாள்
கையறவா னெஞ்சங் கலுழா வுயிர்சோர்ந்தாள். ௰௯.

இவ்வாறு துன்பக் கடலி னிடைமூழ்த
மைவார் தடங்கண் மடமாதின் செவ்விமுகஞ்
செவ்வாண் மதியமெனச் செங்கட் டுளையெயிற்று
வெவ்வா யரவம் உருத்து விழுங்கியதே. ௨௰.

நெய்த்தோர் ஒழுகி நிணம்பயிலும் வைவேலாய்
பைத்தோர் கொடுந்தறுகட் பாந்தள் விழுங்கியதால்

எய்த்தேன் உயிர்காத்தற் கெய்தா யெனவழுதாள்
மைத்தோய் குவளை மலர்நெடுங்கண் வாணுதலே. ௨௧.

பொங்கழல்வெங் கானகத்துப் பூவை யழுதால்சேட்
டங்கோர் சிலைக்கை யடல்வேடன் வந்தணுகி
வெங்கண் அரவெறிந்து வெவ்வா யிடைநின்றுங்
கொங்கவிழ மென்கூந்தற் கோதைதனை நீக்கினனால். ௨௨.

(வே.) வெய்ய வாயின் பகுவாயின் விடுத்தமடமான் எழினோக்கி
மையல்கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற்றடக்கை வயவேடன்
றெய்யின் முலைமேற் புல்லுதற்குத் தொடாத்துஞ்சா வருங்கற்பின்
றையன் முனிந்து நோக்குதலுஞ் சாம்பராயிற் றவனுடலே. ௨௩.

கற்பின் றழலாற் கொடுஞ்சிலைக்கை வேடனுடலங் கரியாக்கிப்
பொற்பின் றுறைபோய் நலங்கனிந்த பொன்னம்பாவை புலம்பெய்தி
வெற்பின் உயர்தோள் வேந்தகலும் வெங்கான்றுருவி யேகுறலும்
அற்பின் முனிவர் தவமியற்றுஞ் சாலைநோக்கி யருகணைந்தாள். ௨௪.

அடைந்த மாதின் முகநோக்கி யாரைநீவெவ் வழற்கானி
னடைந்துதனியே யித்தலையிற் போந்ததென்ன நளினமலர்த்
தடங்கண்கலுழ்ந்து புலம்பெய்துந் தன்மையென்கொல் சாற்றுகென
மடந்தை புகுந்த வாறனைத்து முனிவர்கேட்ப வகுத்துரைத்தாள். ௨௫.

கேட்டமுனிவர் உளமுருகிக் கிள்ளைமருட்டும் பணிமொழியாய்
வாட்டமொழிதி நிற்பிரிந்த வடிவேனளனைச் சின்னாளில்
நாட்டங்களிப்பக் கண்டுமுன்போ னலம்பெற்றிருத்தி யெனநவிலா
ஈட்டுந்தவத்து மறைக்கிழவர் இருக்கைநோக்கி யேகினரால். ௨௬.

பிதிர்ந்தபசும்பொற் றிதலைமுலைப் பெய்பூண்கோதைப் பிணைபோல்வா
எதிர்ந்தவணிகர் வழித்துணையா யேகக்கதிர்மா மணிவான்றி [ள்
அதிர்ந்துபுனல்வாய்ப் பெயாற்றங் கரையிலுறையு மளவிருளின்
முதிர்ந்தசினத்துப் பிறைக்கோட்டு மூரிக்களிறென் றணுகியதால். ௨௭.

அணுகியாங்குப் புலம்பெய்தும் அலர்ப்பூங்கோதை மயிலொழிய
வணிகமாக்கள் யாரையும்போர் மதமால்யானை கொன்றேகத் [கை
துணைவந் தடைந்தோர் யாவரையுந் தொலைத்து நடந்த பருஉத் தடக்
இணைவெண் கோட்டுக் களிறென்ன யென்கொல்லாத தெனத் தள
ர்ந்தாள். ௨௮.

சாதலொழிந்து வழிச்செல்வோர் துணையாயுள்ளந் தளர்வெய்திப்
பாதமலர்கொப் பளமெய்திப் பனிப்பப் பால்வெங் கான்றுறந்து
கோதைவடிவேல் வலனேந்துங் குவவுத்திணிதோட் சுவாகுவேனுஞ்
சேதுபதிதன் வளநகரிற் சென்றாள்விதர்ப்பன் சேயிழையே ௨௯.

துணிபட்டொழிந்த மென்றுகிலுஞ் சுடர்விட்டொளிர மண்ணுறை
மணியிற்றேன்றி மாசடைந்த வடிவும்விரித்த வார்குழலும்
பிணியுற்றுழலு நெஞ்சமுமாய்ப் பித்தேறினர்போற் கோமறுகின்
அணுகச்சேது பதிதாய்கண் டார்கோலிவளென் றையுற்றாள். ௩௰.

பொன்னம்பாவை யுடன்முழுதும் புகையுண்டென்னச் சவிமழுங்கு
மீன்னுண்மருங்குற் சில்லோதி யணங்கோவாசர் மடமகளோ



Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

என்னத்தெருளி னீங்கிவளை யீண்டுக்கொணர்தி ரெனமருங்கின்
மன்னுமகளிர் தமைப்பணிப்ப விடைகொண்டவரு மறுகணைந்தார். ௯௧.

வந்தமடமான் முகனோக்கி வரிவண்டுதேப் பொதியவிழ்ந்த
அந்தண்கமல மலர்கவற்றீ யழதுவாய்ந்த முகம்பசப்பச்
சிந்தைதளர்ந்து தனிபோதற் குற்றதெவன்கொல் சேயிழையாய்
உந்தையாருன் றலைவனெவன் உன்பேர்யாதிங் குரையென்றாள். ௯௨.

வீமன்புதல்வி புகழ்நிடத வேந்தர்கோமான் மனைக்கிழத்தி
நாமம்பகரிற் றமையந்தி யென்பா டங்கோ னண்ணலற்றுக்
காமர்நிதியும் வளநாடுஞ் சூதினிழந்து கானிடைப்போய்
யாமந்தன்னில் அவட்பிரிய வவளைத்தேடி யீண்டடைந்தேன். ௯௩.

அனையமடமான் உயிர்த்தோழி யானென்றுரைப்ப வகமகிழ்ந்து
தனியளாகிக் கொடுங்கானிற் றலைவன்பிரியத் தளர்ந்தேதுங்
கனைவண்டிமிருங் கருங்குழலைக் காணுமளவும் இங்ககரில்
இனையல்வாழி யிருத்தியென விசைந்தாங்கவளும் இருந்தனளால். ௯௪.

காதல்கூர்ந்து தன்மகளாஞ் சுனந்தை கதிர்வாண் முகனோக்கி
மாதர்நோக்கின் மடவாலை வருந்தாதளித்தி யெனலோடும்
ஏதமின்றி யவள்காப்ப விருந்தாண்மற்றிங் கிதுநிற்கக்
கோதைவடிவே னளற்குற்ற செய்தியனைத்துங் கூறுவாம். ௯௫.

## SCANDA PURANA.

# கந்தப் புராணம்.

### திருஅவதாரப்படலம்.

(The birth of Scanda from the frontal eye of Siva.)

பற்பகல் இனையவாற்றுற் படர்தலும் பின்னோர் வைகல்
முற்படும் அயன்மால் வேள்வி முதலவன் றிசைகாப் பாளர்
சொற்படு முனிவர் வானோர் யாவருந் தொல்லை மேரு
வெற்பினிற் குழுமிச் சூரான் மிகமெலிந் திரங்கிச் சொல்வார். ௧.

உலகினை அவுணற்கீந்து யோகிபோல் வைகி நம்பால்
மெலிவினைப் படுத்தி யாம்போய் வேண்டலும் இரக்கமெய்தி
மலைமக டன்னைவேட்டோர் மைந்தனைத் தந்து நம்மைத்
தலையளி புரியான் வாளா விருப்பதென் றனு வானேன். ௨.

இவறலும் இகலும் இன்றி யார்க்குமோர் பெற்றித்தாகி
அவரவர் வினைக ணாடி யதற்படு பொருளை நல்குஞ்
சிவனையாம் வெறுத்தல் குற்றஞ் சிறந்து நோன்பியற்றி டாது
தவறுசெய் தனமென் றெம்மை நோவதே தக்க தென்றார். ௩.

ஆயினும் அவன்றாள் போற்றி யடைபினன் கனைத்து மாதும்
தீயன வகலும் ஈது திண்ணமா மதனால் இன்னுங்
காய்கதிர் மதிசூழ் கின்ற கைலயங் கிரியின் முக்கண்
நாயகற் கிதனைக் கூற நாமெலாம் போதும் என்றார். ௪.

போதா விசைந்த காலைப் பொன்னலர் கமலப் புத்தேள்
மேதகு பரமன் செய்கை வினவியே ஏகல் வேண்டும்
தூதுவன் ஒருவன் றன்னைத் தூண்டிமுன் னறிதும் என்று
ஊதையங் கடவு டன்னை நோக்கியீ துரைக்க லுற்றான். ௫.

வடவரை யதனின் மூன்று மாண்குவ டெறிந்து வெளவி
உடல்சின வாவம் உட்க வுததியில் உய்த்த மைந்த
படர்மதி மிலைச்சுஞ் சென்னிப் பண்ணவன் செயலை வெள்ளிக்
கடிவரை நகர்த் தேகிக் கண்டனை மீள்தி யென்றான் ௬.

பல்லிதழ் வனசமேலான் இனையன பகர நோன்றாள்
வில்லுடை மதனவேளை விழித்தடு கடவுண் முன்னம்

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

செல்லுவ தரிது செல்லிற் றீமையே பயக்கு மென்பால்
ஒல்லுத லன்றிச் செய்கை யுள்ளமும் வெருவும் என்றான். எ.

கூற்றிது நிகழ்ந்த வெல்லைக் கோகன கத்து மேலோன்
சாற்றிலுக் காசை நோக்கிக் கம்பலை கொள்ளேல் யாண்டும்
ஊற்றமோ டுலவல் செய்யும் ஒருவனீ யுன்னை யன்றி
விற்றெரு தேவர் உண்டோ மேலிது புரிதற் பாலார். அ.

உற்றுளி யுதவி செய்வோர் உலப்புறு தேவையும் ஈவோர்
அற்றமி றவத்தோர் அற்றோர் அமர்புரி வீ ராவோர்
மற்றெரு பொருளும் வெஃகார் வருத்தமும் ஓரார் ஆவி
இற்றிட வரினும் எண்ணார் இனிதென மகிழ்வர் அன்றே. கூ.

ஆதலால் எங்கட் கெல்லாம் ஆற்றிடு முதவிக்காகப்
போதியால் ஐயவென்று புகழ்ச்சியால் இணையபல்வே
றேதிடு பொருண்மை கூற விசைந்தனன் எழுந்து தீயின்
காதலன் விடைகொண் டேகிக் கைலைமால் வரையிற்சென்றான். ய.

தன்றதன் புடையில் விழுங் குளிர்புனல் ஆற்றினுடி
மன்றலங் காமர்க் காவின் மலர்மணம் அளவில்வாரித்
தென்றியாய் அசைந்து மெல்லச் சினகாம் புகுதுமெல்லை
நின்றதோர் நந்தி காணா வுாப்பின னெடிது சீறி. யக.

பொற்பிரம் பொன்று பற்றிப் பொலன் முதற் கடையைப் போற்றி
நிற்புறும் ஆணை வள்ள னெடுஞ் சினத் தூப்பலோடுங்
கற்பொழி யெழிலி கான்ற கணையொலி கேட்ட பாம்பின்
முற்படர் கின்ற காலோன் மொய்ம்பிலன் வெருவி விழ்ந்தான். யஉ.

(வே.) ஒல்லென விழ்வுறும் உயிர்ப்பின் காவலன்
எல்லையில் அச்சமோ டாங்கி யெயெழீஇத்
தொல்லையில் உருக்கொடு தோன்றி நந்திதன்
மல்லலங் கழல்கள வணங்கிக் கூறுவான். யங.

மாலயன் மகபதி வானு ளோரொலாம்
ஆலமர் கடவுளை யடைதன் முன்னிநீ
காவலை தறிந்தவண கடிது செல்கென
மேலுரை செய்தனர் வினையி னேனுடன். யச.

கறுத்திடு மிடறுடைக் கடவு ளாடலைக்
குறிக்கரி தஞ்சுவல் குறுக வென்றியான்
மறுத்தனன் அவையர்தம் வருத்தங் கூறியே
ஒறுத்தென விடுத்தனர் உடைய வன்மையால். யரு.

ஆதலின் அடியனேன் அஞ்சி யஞ்சியே
மேதகு தென்றியாய் மெல்ல வந்தனன்
ஓதிட நினைந்திலன் உனக்கு மற்றிது
பேதைமை யுணர்விலேன் பிழைபொ றுத்திநீ. யசு.

தானவர் தொழவரு தகையில் சூரனல்
மானமி தொருவியே வருத்துற் றேய்ந்தனன்
ஆனதோன் றுணர்கிலேன் அறிவு மாழ்கினேன்
ஏனைய தேவரும் இணைய நீரரோ. யஎ.

அறைதரு கணத்தருள் ஆதி யாகிய
இறைவ நின் முனிவினுக் கிலக்குற் றரிவலச்
சிறியவேன் பொருட்டினுற் சீற்றங் கோடியோ
பொறைபுரிந் தருளெனப் போற்றி வேண்டினான். யஅ.

ஆண்டகை நந்தியெம் மடிகள் அவ்வழி
முண்டெழு தன்பெரு முனிவு தீர்ந்தியாம்
ஈண்டு நின் னுயிர்தனை ஈதும் நிற்கலை
மீண்டவண் போகென விடைதந் தேவினான். யகூ.

சீரிய நந்தியந் தேவன் ஏவலும்
மாருதம் அவனடி வணங்கி வல்லையில்
னோறு கயிலையை நீங்கி நீடுபொன்
மேருவில் விண்ணவர் குழுவை மேவினான். உய.

மேவரு காலினோன் விரிஞ்சன் மாயவன்
பூவடி வந்தனை புரிந்து நந்திதன்
காவலின் வன்மையு நிகழ்ந்த காரியம்
யாவையு முறைபட வியம்பி னானரோ. உக.

காற்றுளா வினவியே கமலக் கண்ணனும்
நாற்றிசை முகத்தனு நாகர் செம்மலுஞ்
சாற்றருந் துன்பினர் தம்மில் ஓர்ந்திடாத்
தேற்றமோ டினையன செப்பன் மேயினார். உஉ.

எந்தைதன் செய்கைதேர்ந் தேத நீயென
வெந்திறன் மருத்தினை விடுத்தும் ஆங்கவன்
நந்திதன் னாணையா னடுக்க முற்றிவண்
வந்தனன் அச்சுறு மனத்த னாகியே. உங.

மன்னிய கயிலைமால் வரையில் யாமெலாம்
இன்னினி யெகியே யீசன் றன்முனம்
உன்னருங் காலமோ டுற்ற வெங்குறை
பன்னுத றுணிபெனப் பலருங் கூறினார். உச.

இவ்வகை யவரெலாம் இசைந்து செம்பொனின்
மெய்வரை நீங்கியே வெள்ளி வெற்பினிற்
றெய்வதக் கோயின்முற் சென்று நந்தியை
அவ்விடை தொழுதிவை யறைதன் மேயினார். உரு.

(வே.) நந்தியந் தேவகே ணங்கள்பாற் றுன்பெலாம்
சிந்தைசெய் திடுதியத் தேவர்தே வற்கியாம்
வந்தவா றேதியே வல்லைநீ யெமையவன்
முந்துறக் காட்டெனா முகமனோ டுரைசெய்தார். உசா.

மற்றிவா றுரைசெயும் வான்வத் தொகையினை
நிற்றியால் என்றவண் நிறுவியே யுறையுள்போய்க்
கற்றைவார் சடைமுடிக் கண்ணுதற் கடவுடன்
பொற்றடந் தாள்களைத் தொழுதனன் புகலுவான். உஎ.

அண்ணலே உனதுபொன் னடிகளைக் காணிய
விண்ணுளோர் யாவரும் வேதன்மா லவனொடும்

நண்ணினார் என்றலு நந்தியைத் தேர்குறீஇத்
தண்ணிலா வேணியன் றருதியென் றுரைசெய்தான். ௨௮.

அருள்புரிந் திடுதலும் ஆதியம் பண்ணவன்
திருமலர்க் கால்களைச் சென்னியிற் சூடியே
விரைவுடன் மீண்டுறு வேதன்மால் ஆதியாம்
சுரரெலாம் வம்மெனத் தூயவன் கூவினான். ௨௯.

கூவியே யருளலுங் கொண்டல்பே ரொலியினிற்
றவிலா மகிழ்வுறுஞ் சாதகத் தன்மையாய்ப்
பூவினா யகன்முதற் புகலும்வா னவரெலாம்
தேவதே வன்முனஞ் செல்லுதன் மேயினார். ௩௰.

அம்மையோர் பங்குற வரியணைக் கண்ணுறும்
எம்மையாள் இறைவன்முன் னெய்தியே யாங்கவன்
செம்மைசேர் தாள்களைச் சென்னியாற் றாழ்ந்தெழீஇப்
பொய்மைதீர் அன்பினால் இனையன போற்றுவார். ௩௧.

(வே.) நோக்கினு நுழைகில நுவலு கின்றதோர்
வாக்கினும் அமைகில மதிப்ப வொண்கில
நீக்கரு நிலைமையி னிற்றி யெந்தைநீ
ஆக்கிய மாயமீ தறிகி லோமரோ. ௩௨.

இருமையும் ஒருமையும் இரண்டும் ஒன்றிய
ஒருமையும் அன்றென உலகம் யாவையும்
பெருமையின் இயற்றிய பெரும நின்செயல்
அருமறை யாவையும் அறியற் பாலவோ. ௩௩.

உருவொடு தொழில்பெய ரொன்றும் இன்றியே
பரவிய நீயவை பரித்து நிற்பது
விரவிய உயிரெலாம் வீடு தந்திடு
கருணைய தேயலாற் கருமம் யாவதே. ௩௪.

அவ்வுயி ரியாவுமுன் அருளி லாவழிச்
செய்வினை புரிகில சிறிதும் ஆதலால்
வெவ்விய நயப்பொடு வெறுப்பி லாதநீ
எவ்வகை யோவுல கியற்றுந் தன்மையே. ௩௫.

முன்னதின் முன்னென மொழிது மேயெனிற்
பின்னதின் பின்னுமாய்ப் பேசநிற்றியால்
அன்னவை யேயெனில் ஒழிந்த தல்லையோ
என்னையோ நின்னையாம் ஏத்து கின்றதே. ௩௬.

புல்லிய புரம்பொடித் ததுவுங் காமனை
ஒல்லென எரித்ததும் உனக்குச் சீர்த்தியோ
எல்லையில் விதிமுதல் அனைத்தும் ஈண்டுநின்
நல்லரு ளாணையே நடாத்து மென்கையால். ௩௭.

எங்களை முன்னரோ இயல்பின் ஈந்தனை
எங்களை யிவ்வா சியற்று வித்தனை
எங்களோ டொருவ னென்றிருத்தி நின்செயல்
எங்களில் அறிவரி தென்று போற்றினார். ௩௮.

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

(வே.) அவ்வகை யமரோல்லாம் அன்புசெய் தேத்தும் எல்லை
மைவரு மீடற்றுப் புத்தேண் மற்றவர் வதன நோக்கி
நோவ்வுறல் எய்தீச் சிந்தை நுணங்கினீர் நுங்கட் கின்னே
எவ்வா மெனினும் ஈதும் வேண்டின விசைத்தி ரோன்றன். ௩௯.

என்றலும் அமரர் சோல்வார் யாமெலாம் இங்காள் காறும்
வன்றிறல் அவுணர் தம்மால் வருந்தினம் அதனை நீக்கி
நன்றிகோ டோல்லையாக்க நண்ணுவா னுகநின்பால்
ஒன்றேரு வாம்வேண் டுற்றம் அதனியல் புரைத்தும் அன்றே. ௪௰.

ஆதியு நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வாவும் போக்கும் இன்பமுந் துன்பும் இன்றி
வேதமுங் கடந்து நின்ற விமலவோர் குமான் றன்னை
நீதா வேண்டு நின்பா னின்னையே நிகர்க்க வென்றர். ௪௧.

வந்திக்கு மலரோன் ஆதி வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்க ளிடர்செ யற்க புதல்வனைத் தருதுமென்னு
அந்திக்க நிகர்மெய் யண்ணல் அருள்புரிந் தறிஞானேறர்
சிந்திக்குந் தனது தோல்லைத் திருமுகம் ஆறுகோண்டான். ௪௨.

நிற்புறும் அமரர் யாரு நேஞ்சுதுண் ணென்ன நீடும்
அற்புத நீ ராகி யருண்மறை யுன்னிப் போற்றச்
சிற்பான் றன்கோண் டுள்ள திருமுகம் ஆறுதம்மிற்
போற்புறு நுதற்கண் டோறும் புலிங்கமோன் றேன்று தந்தான். ௪௩.

ஆவதோர் காவல யீசன் அறுமுக நுதற்கண் மாட்டே
மூவிரு போறிக டோன்றி முளரியான் முதலா யுள்ளோர்
ஏவரும் அணுகல் செல்லா வேல்லைதீர் வெம்மைத்தாகிப்
பூவுல கண்ட முற்றும் போள்ளேனப் பாய வன்றே. ௪௪.

மாதண்டங் துலவு நேமி வால்வளை வைா வோள்வாள்
கோதண்டம் பரித்தோன் வேதாக் குறித்துணர் வரிய சோதி
வேதண்டம் பாவிற் றென்ன மேதினி சூழ்ந்து விண்போய்
மூதண்டங் காறுஞ் சென்ற முதல்வன்கண் ணுதலீற் சேந்தீ. ௪௫.

(வே.) மங்கையோர் பங்குடை வள்ளல் ஏந்திய
சேங்கனல் ஊழியிற் சேறிவ தாமேன
அங்கவன் விழிபோழி யனலம் யாவையும்
எங்குள வுலகமும் ஈண்ட லுற்றவே. ௪௬.

ஆங்கணங் தழலேழ வகில முற்றுமாய்
ஓங்கிய கால்களும் உலைவுற் றேய்ந்தன
வாங்கிய திரைக்கடல் வறந்த தாயிடைத்
தீங்கனல் வடவையுஞ் சேருக்கு நீங்கிற்றல். ௪௭.

பக்கன பாகம் பதலை முற்றுற
நேக்கன பணிகண்மேய் நேளித்து நீங்கிய
திக்கயம் ஆற்றியே தியக்க முற்றன
தோக்கன வுயிர்த்தோகை துளக்கு முற்றவே. ௪௮.

காரணம் இல்லவன் கண்ணிற் கான்றதீ
போருள் புரிந்திடப் பிறந்த பான்மையால்

ஒருயிர் தம்மையும் ஒழிவு செய்தில
ஆரையும் எவற்றையும் அச்சஞ் செய்தவே. ௪௯.

அன்னதன் வெம்மைகண் டமலன் பாங்குறை
கன்னியும் வியர்த்தனள் கலங்கி யேயெழீஇப்
பொன்னடி நூபுரம் புலம்பித் தாக்குறத்
தன்னதோர் உறையுளைச் சார வோடினுள். ருய.

முண்டகன் ஆதியாய் முன்னர் நின்றுள
அண்டர்கள் யாவரும் அழல்கண் டஞ்சியே
விண்டனர் தலைத்தலை வெருவி யோடினர்
பண்டெழு விடத்தினுற் பட்ட பான்மைபோல். ருக.

தீங்கனல் அடர்தலுஞ் செம்பொற் கோவிலின்
யாங்கணு மாகியே யிருந்த பண்ணவர்
விங்கிய வுயிர்ப்பொடு மீண்டும் எந்தைதன்
பாங்கரில் வந்தனர் பரியு நெஞ்சினர். ருஉ.

வலைத்தலை மானென வன்னி சூழ்ந் துழித்
தலைத்தலை யிருந்துளார் தம்மின் மீள்தற
நலத்தகு கண்ணுத லுதற் சேர்ந்தனர்
கலத்தலை யகன்றிடாக் காகம் போலவே. ருங.

தோற்றிய நுதல்விழிச் சுடரின் சூழ்வினுக்
காற்றல ராகியே யடைந்து வானுளோர்
நாற்றடம் புயமுடை ஞான நாயகற்
போற்றிசெய் தினையன புகல்வ தாயினர். ரு௪.

வெந்திறல் அவுணரை வீட்டு தற்கொரு
மைந்தனை அருள்கென வந்து வேண்டினேம்
அந்தமில் அழலைநீ யருளல் செய்தனை
எந்தையே எங்ஙனம் யாங்கள் உய்வதே. ருரு.

பங்குறை உமையவள் பாணி யின்வரு
கங்கையேவ் வுலகமுங் கலந்த தாமென
இங்குநின் னுதல்விழி யிருந்து நீங்கிய
பொங்கழல் எங்கணும் பொள்ளேன் றீண்டிய. ருசா.

கற்றையஞ் சுடர்பொழி கனல்க ளின்றேகை
சுற்றியேவ் வுலகமுந் துவன்ற வுற்றவால்
மற்றொரு கணத்திடை மாற்றி டாயெனின்
முற்றுயிர்த் தொகையையு முடிவு செய்யுமால். ருஎ.

விஞ்சிய பொழல் வெம்மை யாற்றலா
தஞ்சினம் இரிந்தயாம் ஐய நின்னிரு
செஞ்சா ணடைந்தனந் தெரியி னீயலாற்
றஞ்சம துளதுகொல் எம்மைத் தாங்கவே. ருஅ.

மலைக்குறு மனத்தினேம் வருத்த முற்றவும்
உலக்குற நீக்கிநீ யொல்லை யெம்மிடை
அலக்கண தியற்றுதி யாயில் அன்னதை
விலக்குற நீரினர் வேறு யாவரோ. ருகூ.

நிறைமுடிப் பணிமிசை நிலனும் வானமும்
இறைமுடிக் கின்றவிவ் வெரியை நீக்கியே
பிறைமுடிக் கொண்டிடு பெரும வெம்முடை
குறைமுடித் தருளெனக் கூறி வேண்டினார். கூய.

அஞ்சலி லவர்புகழ் அண்ணல் ஆதியோர்
அஞ்சலி செய்திவை யறைந்து வேண்டலும
அஞ்சலி லஞ்சடை அணிந்த நாயகன்
அஞ்சலிர் என்றுகை யமைத்துக் கூறினன். கூக.

பொன்மலை வில்லினன் புதிதின் வந்திடு
தன்முகம் ஒன்றையுங் காந்து தாவில்சீர்
நன்முகம் ஐந்தொடு நண்ணி அத்துணைத்
தொன்மையின் இயற்கையாய்த் தோன்றி வைகினன். கூஉ.

தன்னரு ணிலைமையாற் சண்முக கத்திடை
நன்னுதல் விழிகளி னல்கு தீப்பொறி
இந்நில வரைப்புவான் ஈண்ட லுற்றவை
முன்னுற வரும்வகை முதல்வன் முன்னினன். கூந.

அந்தியம் பெருநிறத் தமலன் அவ்வகை
சிந்தைகொண் டிடுவுழிச் செறிந்த பொழன்
முந்தையில் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் றுறுகலும் மகிழ்ந்து நோக்கினன். கூச.

ஆதது காவலயில் அமரர் தங்களுள்
ஓதது செயலிலா வுலவைத் தேவையும்
முதது தீயையு முகத்தை நோக்குறு
மேதது கருணையால் விமலன் கூறுவான். கூரு.

நீங்களிச் சுடர்களை நெறியிற் றங்கியே
விங்குநீர்க் கங்கையில் விடுதிர் அன்னவை
ஆங்கவை சரவணம் அமர வுய்க்குமால்
ஈங்கிது நும்பணி என்றி யம்பினன். கூசு.

கூற்றுயிர் உண்டதாட் குழகன் இவ்வகை
சாற்றிய துணர்தலுந் தாழ்ந்து மும்முறை
போற்றினர் நடுங்கினர் புலம்பு நெஞ்சினர்
காற்றொடு கனலிவை கழறன் மெயினர். கூஎ.

ஒருநொடி யளவையின் உலகம் யாவுமாய்ப்
பெருகிய வித்தழல் பெரும நின்னுடை
திருவரு ணிலைமையாற் சிறுகிற் றதலால்
அர்தரி தடியமோம் ஆற்ற லாதமோ. கூஅ.

ஈற்றினை யுலகினுக் கிழைக்கு நின்கணே
தோற்றிய கனலினைச் சுமத்தற் கோர்கணம்
ஆற்றலை யுடையரோ யவனி கேள்வனும்
நாற்றிசை முகமுடை நளினத் தேவுமே. கூகூ.

பண்டெழு விடத்தினிற் பரந்த தீஞ்சுடர்
கண்டலு நின்றிலங் கவலுற் றெடினம்

அண்டவும் வெருவுதும் அவற்றை யாந்தலைக்
கொண்டனம் ஏதுதல் கூடற் பாலதோ. எய.

அப்பெருங் கனலினை அடைதற் குன்னினும்
வெப்புறும் எமதுளம் வியர்க்கும் யாக்கையும்
எப்பரி சேந்துவம் யாங்கள் என்றலுந்
துப்புறழ் படர்சடைப் பகவன் சொல்லுவான். எக.

ஒன்றொரு நொடியினில் உலக முற்றுமாய்த்
துன்றிய விச்சுடர் சுமந்து பொய்கையிற்
சென்றிட நுங்கள்பாற் றிண்மை யெய்துக
என்றலு நன்றென விசைந் துபோற்றினர். எஉ.

மற்றது தெரிதலும் மால யன்முதற்
சொற்றிடும் அமார்க டுணுக்க நீங்குற
இற்றது கொல்லெம தின்னல் இன்றெனு
உற்றனர் உவகையை யுடலும் விம்மினர். எங.

ஆங்கவண் அவர்தமை ஆதி நோக்கியித்
தீங்கனல் சாவணஞ் செறிந்தோர் செம்மலாய்
ஓங்குபு சூர்கிளைக் கொழிவு செய்யுமால்
ஈங்கினி யாவரும் ஏது வீரொன்றன். எச.

இறையவன் இனையன வியம்ப வுய்ந்தனங்
குறையில வினியெனக் கூறிக் கஞ்சமேல்
உறைபவன் ஆதியாம் உம்பர் அன்னவன்
அறைகழ லடிதொழு தங்க ணீங்கினர். எரு.

முன்னுறு மாருத முதல்வன் றள்கனை
வன்னியந் தேவொடு வணங்கி யெயெழீஇ
அன்னவன் அருளினற் சுடர்க ளாறையுஞ்
சென்னியின் மேற்கொடு சேறன் மேயினன். எசு.

ஆனுறு சடிநகர் அதனைத் தீர்ந்துராய்
எரிகெழு சுடர்முடி ஏந்தி மாருதம்
வருதலும் அயன்முதல் வானு ளோரெலாங்
கருதரு மகிழ்வொடு கண்டு கூறுவார். எஎ.

செந்தழன் மேனியன் றீயின் வண்ணமாய்த்
தந்தனன் குமானைத் தனது கண்ணினல்
உய்ந்திட யாமெலாம் உலகின் முன்னரோ
வந்திடு வீரனும் மதலை மானவே. எஅ.

தொன்னிலை யாம்பெறச் சூரன் பாடுற
இன்னமுஞ் சிலபகல் இருத்தலா லவன்
தன்னிகர் திருமகன் சாவ ணத்திடை
மன்னுபு குழவியாய் வளா நல்கினன். எகூ.

போற்றலர் புரமடு புனித நாயகன்
ஆற்றிடு செய்கைகள் அருளி னீர்மையால்
ஏற்றதோர் சான்றிவண் எரியைத் தந்ததுஞ்
சாற்றருங் கருணையிற் றலைமை யானதே. அய.

என்றிவை பற்பல வியம்பி யின்னினிப்
பொன்றினர் அவுணர்கள் புலம்பு நங்குறை
நன்றிவண் முடிந்தது நாமும் அத்தடஞ்
சென்றிடு வோமெனச் செப்பி னாரோ. அக.

உருப்பம தாகிய வொளிறு தீஞ்சுடர்
தரிப்பதோர் மருத்துவன் றம்முன் சென்றிடத்
திருப்பயின் மான்முதற் றேவர் வெள்ளியம்
பருப்பதம் ஒருவியே படர்தன் மேயினர். அஉ.

இறத்தலுங் கன்னலோன் றெரியுந் தீஞ்சுடர்
பொறுத்திடல் அரிதெனப் புலம்பிக் காலினேன்
மறுத்தலிற் பிறைமுடி வாதன் ஆணையாற்
றிறப்படு வன்னிதன் சென்னி சேர்த்தினன். அங.

சேர்த்தலும் ஒருபதந் தீயின் பண்ணவன்
வேர்த்துடல் புழுங்குற மெலிவிற் றுங்கியே
பேர்த்தொரு பதமிடப் பெறுது வல்லபோய்
ஆர்த்திடு கங்கையி னகத்துய்த் தானரோ. அச.

கூர்சுடர்ப் பண்ணவன் கொடுவந் துய்த்திடும்
ஆர்சுடர்த் தொகுதிவந் தடைய் முவெயில்
ஊர்சுடச் சிவந்தகண் ணொருவன் றுப்புறழ்
வார்சடைக் காந்தென வறந்த கங்கைநீர். அரு.

ஆனநுண் முறையினை யறிந்து கங்கைதன்
சிரமிசை ஏந்தியே சென்றோர் கன்னலிற்
சாவண மெனுந்தடந் தன்னிற் சேர்த்தினள்
மனையிதழ் ஆயிடை மல்குற் றுலென. அசு.

ஆவயின் காறும்வந் தரிய யன்முதற்
றேவர்கள் உவகையாற் றெரிந்து சூழ்ந்தனர்
மேவா வணியதாம் விளையு ணடியே
காவல்கொ ணாப்புடைக் காத லோனென. அஎ.

ஆணன் விண்ணகம் அச்சுதன் புவி
வாணன் முதலிய மாதி ரத்துளோர்
ஏாண வமார்கள் எண்டிக் காகியே
சீரணி சாவணஞ் சேர்ந்து போற்றினர். அஅ.

(வே) கங்கையும் ஒல்கப் புக்கக் கடுங்கனற் கடவுட் சோதி
அங்கிரு மூன்று முன்னர் அம்மைவாழ் இமயச் சாரற்
றங்கிய கமலம் பூத்த சாவணம் புகலு முக்கட்
புங்கவன் அருளாற் றென்மை போன்றது வறத்தல் இன்றி. அகூ.

விண்ணிடை யிழிந்த காலின் மேவரு கனலிற் றென்றும்
வண்ணவெண் கமலஞ் செய்ய முளரியை மாற தாகத்
தண்ணளி யோடு நல்கித் தரித்தெனச் சாவ ணப்பேர்க் [கூய.
கண்ணகன் பொய்கை யீசன் கட்டழன் மிசைக்கொண் டன்றே.

அருவமும் உருவு மாகி யநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்

கருணைகூர் முகங்கள் ஆறுங் காங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய. ௯௧.

தோன்றல்வந் திடலும் விண்பாற் றுந்துமி கறங்க லுற்ற
ஆன்றதோன் மறைக ளெல்லாம் ஆர்த்தன வயனு மாலும்
வான்றிகழ் மகத்தின் றேவு முனிவரு மலர்க டூவி
ஏன்றெமை யருள்க வென்றே யெத்திசை யெடுத்துச் சூழ்ந்தார். ௯௨.

ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு முனனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சாவ ணத்தின் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றல் அறுமுகங் கொண்டான் அன்றே. ௯௩.

மல்லலம் புவனத் துள்ள மன்னுயிர்க் கணங்கட் கெல்லாம்
ஒல்லையின் மகிழ்ச்சி யெய்தி உவகையின் குறிப்புண் டான
தொல்லையில் அவுண னுதுஞ் சூரனே முதலா யுள்ள
எல்லவர் தமக்கு மாயும் இருங்குறிப் புற்ற வந்நாள். ௯௪.

மறைகளின் முடிவாய் வாக்கான் மனத்தினல் அளக்கொ ணமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றதோர் நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சாவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளி னனே. ௯௫.

பாங்குறு தருச்சூழ் காலாய்ப் பஃறழைச் சினைமென் கொம்பாய்
நீங்கறப் புடைபோய் வானி னீங்கன பந்த ராகத்
தூங்கிய பழனுங் காயுந் துணர்களும் அகத்துட் டுன்ன
ஆங்கத னடுவட் பொய்கை யணிநிழல் அமர்ந்தான் ஐயன். ௯௬.

முடிபொறு தசையு நாகர் முதியகால் பலகை வையங்
தொடர்கனை மானே வானந் தூங்குபன் னணைந் தெண்ணீர்த்
தடமலர்ப் பாயலாகச் சாவண மஞ்ச மீதில்
அடைதரு மென்கான் மைந்தன் அசைப்பவீற் றிருந்தா னன்றே. ௯௭.

என்பெரு நாகர் சேடன் ஏந்தெழில் அரிமா னுகத்
தண்புவி புனற்பூம் பொய்கை தவிசிருப் பாக நாட்கோள்
விண்படர் விதான மாக வேலையந் தலைவன் காவல
ஒண்பக லாடிகாட்ட வுமைமகன் அங்கண் உற்றன். ௯௮.

தாணியி னடுவண் வைகுஞ் சாவணப் பொய்கை தன்னில்
விரைசெறி கமலப் போதில் வீற்றிருந் தருளுஞ் செவ்வேள்
பெருவடி வமைந்த மாயன் பிறங்கிய மனத்திற் றண்ணொன்
றெரிசுடர் விளக்கத் துச்சி யிருந்திடும் ஈசன் போன்றன். ௯௯.

பெருந்தரா நடுவ ணுகிப் பிறங்கிய சாவ ணத்தில்
இருந்தனிக் கமலம் ஒன்றிற் குமாவேள் இருந்த பான்மை
திருந்துநல் லண்டப் புத்தேள் சிந்தையாம் புண்டரீகப்
புரந்தனில் விரும்பித் தாதை வைகிய வியற்கை போலும். ௱.

பாசிலை பாவித் துள்ளி படுவன வுடுவைப் பாக
வீசுசை வலங்கா ராக வேறுசூழ் கமலம் எல்லாம்
ஆசறு பகலோ ராக வவற்றிடை மலர்ந்த கஞ்சத்
தேசுடை யிரவி யாகச் சிவனெனச் சேயங் குற்றன். ௱௧.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

மாலயன் எழில் மேலோன் வானவ ரானோர் யாரும்
பாலுற மானு மாவும் பறவையும் பிறவுஞ் சூழ
ஏலுறு குமான் கஞ்சத் திருந்தது பாமன் ஆதிக்
காவலயின் உயிர்க ணல்கிக் கமலமேல் இருத்தல் போலும். ௱௨.

சலங்கிளர் தாங்கத் தெய்வச் சாவணக் கமலப் போதின்
கலங்கெழ குமான் சேர்ந்த நான்முகத் திறைமேல் விட்டிப்
புலங்கிளர் உயிர்க ணல்கப் பொருந்துநற் பகலின் முன்னர்
இலங்கெழிற் பதும பீடத் தேறிய தன்மை போலும். ௱௩.

முண்டகம் ஒன்றின் வைகு முருகனைச் செங்கேள் வாவி
வண்டுளர் கமலக் காடு வான்புனற் றடத்தி னிற்றல்
அண்டர்கள் முதலோர் தம்பால் அன்றியெம் மெல்லாம் பீடங்
கொண்டருண் முறையின் என்று நோற்றிடு கொள்கைத் தன்றே. ௱௪.

அணங்குசெய் தோற்றத் துப்பின் அவிர்சுடர் குமாற் சூழ
மணங்கிளர் கமலக் காடு மலர்ந்தன வவனைச் சேர்வான்
றணங்கெழ புனலிற் புக்குத் தபனன்மே னாட்டஞ் சேர்த்தி
நுணங்கிழை மடவார் புல்லோர் நோற்றவ ணிற்றல் போலும். ௱௫.

ஒண்ணகை உயிர்க்குங் கஞ்சம் ஒருசில கமலம் வைத்த
தண்ணறு நறவைப் பஃறுட் டாமரை பரித்துச் சூழ்தல்
அண்ணலம் பொய்கை தற்சேர் அறுமுகப் பிள்ளை துய்ப்ப
வெண்ணெயுஞ் சங்குஞ் சூழ விட்டது போலும் அன்றே. ௱௬.

ஆழம் வனசத்தோடும் அணிமக ரந்தச் சேறும்
வேரியம் பூந்தண் டேனு முறைமுறை வீசிக் கையாற்
சோவே கொண்டு மேலோன் றிருவடி திளைப்ப வுய்த்தல்
வாரியந் தடாகம் அன்பால் வழிபடு வண்ணம் போலும். ௱௭.

பங்கயச் செம்மற் போது புதனிழ்ந் திழிந்து பாங்கர்
அந்தள விலைமேல் வீழ வவைபுறத் தசையு நீர்மை
சங்காற் குமாற் சூழச் சாவணப் பசும்பூந் தட்டிற்
றுங்கநல் விளக்கம் ஆட்டித் திரைக்கையாற் சுலவல் போலும். ௱௮.

காசுறழ் பதுமப் போது களாசிய தாக மீச்செல்
பாசடை கவிகை யாகப் பலநனை விளக்க மாக
வீசிதழ் கவரி யாக மீழற்றுபுள் ளியமதாக
மாசறு பொய்கை சேய்க்கு வளம்பட வொழுகிற் றன்றே. ௱௯.

அழனிவந் தன்ன கஞ்சத் தகன்றிடத் திரைக ளுப்புண்
உழிபட ராது சூழ்போந் துலவுவ தானை நீரால்
விழுமிய குமான் பொய்கை வெளியறு தமார் இட்ட
எழினிகள் இடையே மென்கால் எறிதலின் இாட்டல் போலும். ௱௰.

கொன்பெடை சேவ லாகும் எகினமோர் கோடியீசன்
தன்பெருங் குமாற் சூழத் தடத்தினின் மிழற்றல் எந்தை
பொன்பிறழ் பதுமன் செய்கை புரியுநாள் ஊர்தி யாவல்
என்புடை யிருத்தி யென்றே தனித்தனி யிரத்தல் போலும். ௱௰௧.

வளஞ்செறி யினைய பாலால் வண்சா வணமாம் பொய்கைத்
தளஞ்செறி பதுமம் ஒன்றிற் சாசா மியாவுங் காப்பான்

உளஞ்சேறி கருணை யெய்தி யொப்பிலாக் குமா மூர்த்தி
இளஞ்சிறு மதலை போல வினிதுவீற் றிருந்தான் மன்னோ. ௱௰௨.

தீர்த்திகைக் கங்கை தன்னிற் றிகழ்சா வணத்தில் வந்த
மூர்த்திகைக் குழவி யேபோன் முதற்புரி யாட னேக்கி
ஆர்த்திகை யுறுத வுள்ளத் தரிமுதல் அமார் யாருங்
கார்த்திகைத் தேரிவை மாரை விளித்திவை கழற லுற்றர். ௱௰௩.

சாற்றருஞ் சாவ ணத்திற் சண்முகத் தொருவ ளுகி
வீற்றிருந் தருளு கின்ற விமலனோர் குழவி போலத்
தோற்றினன் அவனுக் குங்க டுணைமுலை யமுதம் ஊட்டிப்
போற்றுதிர் நாளு மென்ன நன்றேனப் புகன்று போனர். ௱௰௪.

மறுவறும் ஆா லாது மாதர்மூ விருவர் தாமும்
நிறைதரு சாவ ணத்தி னிமலனை அடைந்து போற்ற
உறுநர்க டமக்கு வேண்டிற் றுதவுவோ னுத லாலே
அறுமுக ஒருவன் வேறய் அறுசிறர் உருவங் கொண்டான். ௱௰௫.

ஆறுரு வாத லோடும் அறுவரு மகிழ்ந்து வேறு
வேறுதாம் எடுத்துத் தத்தம் வியத்தகு துணைமென் கொங்கை
ஊறுபால் அமுதம் அன்னோற் குதவலு முறுவல் செய்து
மாறிலா வருளால் ஆற்ற வருந்தினன் போல வுண்டான். ௱௰௬.

உண்டபின் அறுவாாதும் ஓர்பெரு முதல்வன் றன்னைத்
தண்டழை பொதுழ நீபத் தண்ணிழற் பொய்கை தன்னில்
வண்டயி லுறுத கஞ்ச மாமலர்ப் பள்ளி சேர்த்திக் [௱௰௭.
கண்டுயில் செய்வித் தேத்தக் கருணையால் இணைய செய்வான்.

துயிலவோர் உருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சோற்
பயிலவோர் உருவம் ஆய்தன் பயோதாம் பவள வாய்வைத்
தயிலவோர் உருவ நக்காங் கமாவோர் உருவம் ஆடல்
இயையவோர் உருவம் வாளா விாங்கவோர் உருவஞ் செய்தான். ௱௰௮.

ஒருருத் தவழ மெல்ல வோருருத் தவழ்ந்து செல்ல
ஒருரு நிற்றல் செல்லா தொய்யென வெழுந்து விழ
ஒருரு விருக்கப் பொய்கை யோருரு வுழக்கிச் சூழ
ஒருருத் தாய்கண் வைக வோருவனே புரித லுற்றன். ௱௰௯.

ஆடவோ ருருவஞ் செங்கை அறையவோ ருருவ நின்று
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோர் உருவம் அங்கண்
ஓடவோ ருருவ மோர்பால் ஒளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன் மகன் புரித லுற்றன். ௱௨௰.

இத்திறம் இருமூன் றன யாக்கையுங் கணம தொன்றிற்
பத்துநூ றுய பேதப் படுவகை பாமாய் நின்ற
உத்தமக் குமான் சோ உயிர்தொறும் ஆட லேபோல்
வித்தக விளையாட் டின்ன மாயையால் விளைந்து செய்தான். ௱௨௰௧.

சிற்பா னுகி வந்த செய்யவேள் ஆடற் றன்மை
பற்பல திறமு நாடிப் பங்கயத் தயனு மாலுஞ்
சொற்படு மகத்தின் றேவு முனிவருஞ் சுாரும் யாரும்
அற்புத மகிழக் கண்டாங் கின்னவா றறைதல் உற்றர். ௱௨௰௨.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

சேயிவன் ஒருவ னேபல் சிறுருக் கொண்டு நம்முன்
ஏயெனும் அளவை தன்னில் எண்ணில்பே தகத்தனுகும்
ஆயினிக் குமா ரைட லறிவரி தெமக்கு மேலாம்
மாயமும் இயற்ற வல்ல வாம்பிலா வறிவன் மாதோ. ௱௨௩.

கைப்பயில் குழவி போலக் காட்டிய கடவுள் செய்யும்
இப்பெரு மாயை போல யாவரும் புரித றோர்
செப்பியென் வேறி யாமுஞ் செய்வதோன் றில்லை அன்னேன்
ஒப்பறு பானே யாமென் றுரைசெய்து தொழுது நின்றர். ௱௨௪.

அழல்படு மீன வர்க்கத் தனைவருங் குமான் ஆடன்
முழுவது நோக்கி நோக்கி முழுதுமற் புதநீர் எய்திக்
குழவிகள் ஒன்றே உள்ளங் கோடல்விட் டகலா தஞ்சி
வழிபடு கடவு ளோரிற் போற்றினர் மனங்கோ ளன்பால். ௱௨௫.

அம்புயம் உறழுஞ் செங்கேள் அறுமுகம் படைத்த கோல
நம்பிதன் வாவு தன்னை நவின்றனம் இனிமேல் எங்கண்
எம்பெரு முதல்வி தன்பால் இலக்கத்தோன் பதின்மர் செவ்வேள்
தம்பிய ராகி வந்த தன்மையை விளம்ப லுற்றேன். ௱௨௬.

---

## தேவர்புலம்புறுபடலம்.

(The lamentation of the celestial gods, on account of the removal of their king Indra from Swerga.)

அந்நா ளதனில் அவுணர்க் கிறையேவல்
தன்னுன் மிகவுந் தளர்ந்து சிலதேவர்
எந்நாளிப் புன்மை எமைநீங்தும் என்றிரங்கிப்
பொன்னுடு விட்டுப் புவிதன்னிற் போந்தனரோ. க.

தீந்தமிழின் வைப்பான தெக்கணதே யம்நண்ணி
மாந்தர்புகழ் காளி வனம்போந்து வானவர்தம்
வேந்துதனைக் கண்டு விரைநாண் மலரடிக்கீழ்ப்
போந்து பணிந்து புகழ்ந்து புகல்கின்றர். உ.

ஒன்றே தருமம் ஒழிந்து புவனமெலாஞ்
சென்றே அடுகின்ற தீயவுணர் தந்துடக்கில்
அன்றே எமைவிட் டகன்றய் உனக்கிதுவும்
நன்றே எமையாளு நாயகனு நீயன்றே. ௩.

கோட்டுக் களிற்றேடுங் கோளரியோ டும்புவியை
வாட்டுற் றிடுசூா வல்லியத்தின் றன்சிறையில்
ஈட்டுற்ற தேவ ரோனும்பசுக்க டம்மை யெலாங்
காட்டிக் கொடுத்துக் காந்ததென்கொல் காவலனே. ௪.

ஏனம் பசுமான் இரலை மரையடுத்த
ஊனும் வடியும் ஒலிகடலின் உள்ளபல
மீனுஞ் சுமந்து விறலசுரர்க் கேவல்செய்து
மானங் குறைந்து மறந்தோம் மறைகளுமே. ரு.

மையார் களத்தான் வாம்பெற்ற சூரனுக்குச்
செய்யாத ஏவலெல்லாஞ் செய்தோ நெறிநீதீ
எய்யாத மானம் இவையெல்லாந் தானிழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே. ௬.

முன்னாளுந் தந்தி முகத்தவுணன் ஏவல்செய்து
பன்னாள் உழன்றேம் பாமர் அதுதீர்த்தார்
பின்னாளுஞ் சூரன் பெயர்த்தும் எமைவருத்த
இந்நா டிரிந்தோம் இனித்தான் முடியாதோ. ௭.

எந்நாளு முன்வனப் புகலேன் றிருந்தவியாங்
துன்னு வவுணாற் சூழ்ந்து துயருழப்ப
உன்னு நுயிர்காத் தொளித்திங் கிருந்தனையால்
மன்னு உனக்குத் தகுமோ வசையன்றே. ௮.

சூரன் முதலாய்ச் சொலப்பட்ட வெவ்வசுரர்
வீரங் குலைந்து விளிவதற்கும் இவ்வுலகில்
ஆரும் பழிக்கத் திரிகின்றேம் ஆதலங்கள்
தீரும் படிக்குஞ் செயலொன்று செய்வாயே. ௯.

என்னுப் புலம்பி யியம்பி இரங்கித்தம்
மன்னுகிய மகவான் மாற்ற மவைகேளா
அன்னோர் மனங்கொண்ட வாதுலத்தைக் கண்டுநெடி
துன்னு வயாா வுயிா வுளைக்கின்றன். ௰.

மாயை யுதவ வருகின்ற வெஞ்சூரன்
தீய பெருவேள்வி செய்யத் தொடங்குமன்றே
போய நமதுரிமை பொன்னாடுந் தோற்றனமென்
றேயும் உணர்வால் உனக்கந் துரைத்திலமோ. ௰௧.

அற்றே மகஞ்செய் தமலன் றநுவாங்கள்
பெற்றே நமது பெருவளமுங் கைக்கொண்டு
சற்றேதும் அன்பில்லாத் தானவர்கோன் றழ்வான
துற்றே வலைநம்பாற் கொண்டான் துவலயத்தே. ௰௨.

நீள்வா ரிதியி னெடுமீன் பலசுமந்து
தாழ்வாம் பணிபலவுஞ் செய்து தளர்ந்துலகில்
வாழ்வாம் எனவே மதித்திருந்தோ மற்றதனைச்
சூழ்வால் ஒருதீமை சூரபன்மன் உன்னினனே. ௰௩.

என்னேயத் தீமை எனவே வினவுங்காற்
பொன்னே அனைய புலோமிசையைப் பற்றுதற்குங்
கொன்னே உனையுங் கொடுஞ்சிறையில் வைப்பதற்கு
முன்னே நினைத்தான் முறையில்லாத் தீயோனே. ௰௪.

ஆனசெயல் உன்னி அனிகந் தனைநம்பால்
வானுலகில் உய்ப்ப மதியால் அஃதுணர்ந்து
நானும் அவளு நடுநடுங்கி யச்சுற்று
மேனி காந்து விரைந்துவிண்ணை நீங்கினமால். ௰௫.

மீனும் வடியும் வியன்றசையுந் தான்சுமந்த
ஈனம் அதுவன்றி யீதோர் பழிசுமக்கின்

மானம் அழிய வருமே யஃதன்றித்
தீன முறுசிறையுந் தீராது வந்திடுமே. ௰௬.

வெய்யவர்தம் வன்சிறையில் வீழ்ன் முடிவில்லா
ஐயன் அடிகள் அருச்சித்து யாமெல்லாம்
உய்ய வவுணர் உயிரிழப்ப மாதவத்தைச்
செய்யு நெறியுண்டோ வெனச்சிந்தை செய்தனனே. ௰௭.

சிந்தை யதனில் இவைய செயலுன்னி
அந்தம் அறுதுயாத் தாழ நுமைவிட்டு
வந்து புவியின் மறைந்துதவஞ் செய்துமக்கண்
எந்தை அடிகள் அருச்சித் திருந்தனமே. ௰௮.

அல்லல் புரியும் அவுணர்பணி யால்வருந்தித்
தொல்லையுள மேன்மையெலாந் தோற்றனமே மற்றினிநாம்
எல்லவரும் வெள்ளிமலைக் கேகி இறைவனுக்குச்
சொல்லி நமது துயாகற்றிக் கொள்வோமே. ௰௯.

வம்மி னெனவுரைப்ப வானோர் அதுகேளா
வெம்மி னதுகண்ட வியன்கண் டகியெனவும்
அம்மென் மயிலெனவும் ஆடி நகைசெய்து
தம்மின் மகிழ்ந்து மதர்ப்பினொடு சாற்றலுற்றார். ௨௰.

கோவுநீ எங்கள் குரவனுநீ தேசிகனீ
தேவுநீ எல்லாத் திருவுநீ செய்தவநீ
ஆவிநீ மற்றை யறிவுநீ இன்பதுன்பம்
யாவுநீ யாகில் எமக்கோர் பாழமுண்டோ. ௨௧.

பாத்துப் பணித்த பணிசெய்து நின்றன்னை
ஏத்தித் திரிவ தெமக்குக் கடனதும்
நீத்துத் துயா நெறியுறுத்தி யேயென்றுங்
காத்துப் புரத்தல் உனக்குக் கடனையா. ௨௨.

தோா வவுணர் திறந்தன்னை முன்றடிந்தாய்
சூராதி யாருயிருங் கொள்ளுநெறி சூழ்கின்றாய்
பாராள் பவர்க்கும் பலமுனிவர்க் குஞ்சுரர்க்கும்
ஆராயி னீயன்றி யாரோ துணையாவார். ௨௩.

ஆதலால் எங்க ளலக்கண் அகற்றிடுவான்
காதலா யத்தன் கயிலைக் கெமைக்கொண்டு
போதிநீ யென்னப் புரந்தானு நன்றென்று
கோதிலா வுள்ளத் தொருசூழ்ச்சி கொண்டனனே. ௨௪.

அவ தொருவேலை யமார்கோன் றனெழுந்து
தேவர் தமைநோக்கிச் சிறிதிங் கிருத்திரென
ஏவனையும் ஆங்கண் இருத்தி ஒருதானே
பாவை யயிராணி பாங்கர் அணுகினனால். ௨௫.

## சயந்தன் புலம்புறு படலம்.

(The lamentation of Sayanta, the son of Indra.)

பாஞ்சுடர் நெடுங்கணை படுத்த பாயலில்
வருஞ்சசி யனையதோர் வாணு தற்சசி
தருஞ்சிறு குமாரனுஞ் சயந்தன் அவ்விடை
அருஞ்சிறை யிருந்தனன் அமரர் தம்மொடும். ௧.

வாலிதாம் அவுணர்சூழ் வைப்பில் இந்திரன்
கோலமா கியதனிக் குமரன் வைகுதல்
மேலைநாள் அமுதெழும் வேலை தன்னிடை
நீலமா முகிலுறை நீர்மை போலுமே. ௨.

மழைபுரை யவுணர்சூழ் வைப்பில் வாளொளி
தழுவிய வமரர்கட் சயந்தன் மேவினான்
கழிதரு பணிபல கவரச் சோர்தரு
முழுமதி யதனிடை முயலுற் றென்னவே. ௩.

வென்றிவில் லியற்றிய விசய நீர்மையாற்
கன்றிய காமெனக் காவற் சாலையிற்
பொன்றிகழ் வல்லிகள் பூண்டு பற்பகற்
றன்றுணைத் தாள்களிற் றழும்பு சேர்ந்துளான். ௪.

இயற்படு மானமும் இகலு நாணமும்
அயற்பட வெம்பழீஇ அனலஞ் சுற்றீட
உயிர்ப்பெனும் ஓதைநின் றுயிரா லைத்திடத்
துயர்ப்பெரும் பாவையூ டழுந்திச் சோர்குவான். ௫.

அண்டருஞ் சிறையினால் விடும் அல்லதேல்
எண்டரும் உகம்பல விடருண் மூழ்கலின்
மண்டுதோல் பழியற வலிதிற் றுஞ்சுமால்
உண்டநல் லமுதினால் அவையொ ழிந்துளான். ௬.

தணிப்பரும் வெஞ்சினத் தகுவர் மன்னவன்
பணிப்படு சிறைக்களம் பட்டுத் தம்முடல்
துணிப்புறு வாரொனத் துயர்கொண் டோர்கணங்
கணிப்பரும் உகங்களாய்க் கழித்து வைகுவான். ௭.

தேவியன் மாகதந் தெளித்துத் தீட்டிய
ஓவிய வுருவுமா குண்ட தன்மையான்
ஆவியம் புனலற தமருங் காவியம்
பூவியன் மென்றொடை புலர்ந்த தேயனான். ௮.

வியனுக நூற்றுடன் மீக்க வெட்டினுற்
றியலுறு சிறுவரை யெனினுந் துஞ்சுமேன்
மயல்சிறி தகலுமால் மாபின் வைகலுந்
துயில்கில னாதலால் அறத துன்பினான். ௯.

நெஞ்சழி துன்புட னீடு வைகலிற்
றுஞ்சிலன் வலிதுயிர் துறப்பும் ஆற்றலன்
எஞ்சுமோ ரிறைவரை இமையுங் கூட்டலன்
விஞ்சிய தவந்துயர் விளைக்கு மாங்கொலோ. ௰.

இலங்கிய மாகதத் தியன்ற பொன்குலாய்
கலங்கிளர் தன்வனப் பிழந்து நாடோறும்
அலங்கெழும் அவுணர்க டமைக்கண் டஞ்சியே
கலங்கினன் உய்வகை யாதுங் காண்கிலான். ௰௧.

சுந்தா மாகதத் தனது தொல்லுரு
வெந்துயர் இழைத்தலின் வெய்து யிர்ப்பென
வந்தெழ புகைப்பட மறைந்து கட்புனல்
சிந்திட உடனுடன் றிகழத் தோன்றுமால். ௰௨.

முழுதுறு தன்றுயர் முன்னி முன்னியே
இழுதையர் அவுணரும் இாங்கி ஏங்தற
அழுதிடுங் காப்பினோர் அச்சஞ் செய்தலும்
பழுதுகோல் என்றுவாய் பொத்தும் பாணியால். ௰௩.

இந்திரன் சசியொடும் இருந்த சூழல்போய்த்
தந்தனர் பற்றினர் தமரோ னச்சிலர்
முந்துறு காவலர் மொழிந்த பொய்யுரை
அந்தம தடையமுன் னயர்ந்து விழுமே. ௰௪.

ஐந்தரு நீழல நினைக்கும் ஆய்மலர்
தந்தமென் பள்ளியை உன்னுந் தானெனப்
புந்திகொண் மங்கையர் புணர்ப்பை யுட்கொளும்
இந்திரப் பெருவளன் எண்ணிச் சோருமே. ௰௫.

தன்னிவண இல்லதோர் தருவி னீழலில்
நன்னலங் துய்த்தியா னுளும் இன்புறும்
பொன்னகர் பூழியாய்ப் போங்கொ லோவென
உன்னிருங் தொன்மைபோல் உறுவ தென்றெனும். ௰௬.

ஈண்டையில் அவுணர்கோன் ஏவத் தாவனகள்
சேண்டோடர் துறக்கமேற் செல்ல னுடியே
காண்டது தம்முருக் காந்து போயினர்
யாண்டைய ரோவெமை ஈன்று ளாரோனும். ௰௭.

ஏயின துறக்கநா டிழிந்து தொல்லைநாட்
டாயொடு பயந்துள தந்தை பாகம்
போயினன் எனச்சிலர் புகலக் கேட்டனன்
ஆயிடை புகுந்தன வறிகி லேனெனும். ௰௮.

அண்டர்கள் ஒருசிலர் அயர்வு கூறவுட்
கொண்டனர் ஏகினர் துறுகி எந்தையைக்
கண்டன ரோகொலோ கலந்து ளார்கொலோ
விண்டன ரோகொலோ விளவே னேவெனும். ௰௯.

சீகா மிக்கதூர் செயிர்த்துச் செய்திடும்
ஆதல முழுவதும் அறைய அம்மையோர்
பாகம துடையநம் பாமன் மால்வரை
ஏகின னோகொலோ எந்தை யென்றிடும். ௨௰.

பொருந்தலர் கண்ணுறப் பொருட்டுத் தம்முருக்
காந்தன ரோவழிக் தாவர் கல்லாய்ப்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பொருந்தின ரோகொலோ புவனம் எங்குமாய்த்
தீர்ந்தன ரோகொலோ தெளிகி லேனெனும். உக.

மாண்கிளர் சூரபன் மாவின் ஏவலால்
ஏண்கிளர் அவுணர்கள் யாயைத் தந்தையை
நாண்கொடு பிணித்தீவ ணல்கப் போயினர்
காண்கில ரோகொலோ காந்த வாறெனும். உஉ.

அன்புடை யம்மனை யகத்தில் இங்கிவர்
வன்புடை அவுணர்கள் வாவு காண்பரோற்
றன்புடை மனத்தாய்த் துளங்கி ஏங்கியே
என்படு வார்கொலோ வறிகி லேனெனும். உரு.

பொன்னகர் சரிந்ததும் புதல்வ னுதமென்
றன்னையிம் முதுநகர் தந்து தானவர்
துன்னருஞ் சிறையிடு துயருங் கேட்டனள்
என்னிணைந் தீங்குமோ ஈன்ற தாயெனும். உச.

பன்னெடு மாயைகள் பயின்று தானவர்
அன்னையோ டத்தனை ஆய்ந்து பற்றியே
முன்னுறக் காண்டகு முறையின் உய்ப்பினும்
என்னுயிர் பின்னரும் இருக்குங் கொல்லெனும். உரு.

ஆற்றருஞ் செல்லலுற் றழுந்து பான்மையான்
மேற்றிகழ் பாஞ்சுடர் விமலற் போற்றியே
நோற்றனர் முத்தியி னுழைதற் றர்கொலோ
பேற்றினர் இருந்தசோற் பிறந்த தில்லெனும். உசு.

தீங்கதிர்ப் பகையொடு செருமு யன்றநாட்
டாங்கியேற் கொண்டுழித் தந்தம் இற்றிட
ஆங்ஙனம் வீழ்ந்ததால் அதற்கு மேற்பட
யாங்குசேன் றதுகொலோ யானை யென்றிடும். உஎ.

பிறப்புறு வைகலத் தொடடுப் பின்னரோ
இறப்புறு நாள்வரை யாவர்க் காயினும்
உறப்படு துப்பெலாம் ஊழின் ஊற்றமால்
வெறுப்பதென் அவுணரை வினையி னேனெனும். உஅ.

தாவறு தொன்னகர் விளியத் தந்தைதாய்
ஆவியோ டிரிந்திட வளிய னேர்மகன்
வீவருஞ் சிறைப்பட மேவல நாட்புரி
தீவினை யாவதோ தெரிகி லேனெனும். உகூ.

துப்புறழ் சடையினன் சூற் கீறிலா
அப்பெரும் வாத்தினை அளித்த தாலவன்
மெய்ப்பட விளிகிலன் வீடுஞ் செய்கிலன்
எப்பொழு தீச்சிறை தீரும் என்றிடும். ஙய.

மட்டறு வெறுக்கையு நகரும் வாழ்க்கையும்
விட்டனர் கடந்தனர் மேவல யோரென
உட்டெளிந் தகன்றிலன் உவர்பி ணித்திடப்
பட்டன னேகொலோ பாவி யேனெனும். ஙக.

மாற்றிலன் இவ்வுயிர் வசையு றவகை
போற்றிலன் தாவர்பாற் புதுந்த புன்கணைத்
தேற்றிலன் றமியனுந் தெளிக் லேன்சிறை
ஆற்றிலன் ஆற்றிலன் ஐய கோவெனும். ௩௨.

துறந்ததோ போறந் தொலையுந் தீம்பவஞ்
சிறந்ததோ மாதவப் பயனுந் தேய்ந்ததோ
குறைந்ததோ நன்னெறி கூடிற் றேகலி
இறந்ததோ மறைசிவன் இல்லை யோவெனும். ௩௩.

கூடலர் வருத்தலிற் தாவர் தங்களைத்
தேடினர் விரைவுடன் சென்ற தேவர்போல்
ஓடினர் புகாவகை யொழிந்து ளோரையும்
வீடருஞ் சிறையினில் வீட்டி னேனெனும். ௩௪.

அந்தியின் மறைமொழி அயர்த்து வைகினன்
சந்தியில் வினைகளுந் தழலும் ஓம்பலேன்
எந்தையை வழிபடும் இயல்பு நீக்கினன்
முந்தையின் உணர்ச்சியு முடிந்து ளேனெனும். ௩௫.

மெய்யுயிர் அகன்றிட விளிக் லேனெனில்
எய்யுறும் அலக்கணீத் தினிது மேவலன்
வையுறு நெடும்புரி வடிவம் வெந்தெனப்
பொய்யுடல் சுமந்தனன் புலம்புற் றேனெனும். ௩௬.

சொல்லுவ தென்பல தொல்லை வைகலின்
மெல்லென வாற்றிய வினையின் பான்மையால்
அல்லுறழ் மிடற்றினெம் மடிக ளேயெமக்
கெல்லையி லித்துயர் இயற்றி னனெனும். ௩௭.

ஆவியும் உலகமும் அனைத்து மாகியும்
ஓவியங் கருணையில் உருக்கொண் டாடல்செய்
தேவர்க டேவனுஞ் சிவன்மற் றல்லதை
ஏவரோன் துறையிராந் தீர்ந்த வாரோனும். ௩௮.

பெறலருந் திருவேலாம் பிழைத்துச் சூருயிர்
அறுவதும் அவுணர்கள் அழிந்து மாய்வதும்
சிறையிது கழிவதுந் தீர்வி லாவசை
இறுவதும் ஒருபகல் எய்து மோவெனும். ௩௯.

நூறெடர் கேள்வியோர் நுணங்குஞ் சிந்தைசேர்
கூறுடை மதிமுடிக் குழகன் றன்னருட்
பேறுடை யேனெனிற் பெருந்து யர்க்கடல்
ஏறுவன் வினையினேற் கில்லை கோல்லெனும். ௪௰.

இத்திறம் அளப்பில எண்ணி எண்ணியே
மெய்த்துய ருழந்துவெய் துயிர்த்து விம்மியே
அத்தலை ஆற்றிய வமரர் யாவருந்
தத்தமி லிரங்குறச் சயந்தன் வைகினன். ௪௧.

கண்டகன் உதாவகன் காளன் மாபெலன்
சண்டகன் சங்கனே சனுதி யாதியோர்

எண்டரும் அவுணர்கள் எண்ணி லோர்தழீஇக்
கொண்டனர் சிறைக்களங் குறுகிச் சுற்றினார். ௪௨.

(வே.) மன்னு நங்கோன் றன்பணி நில்லா மகவேந்தும்
மின்னு டானும் யாண்டுறை கின்றார் வினாவாகிச்
சொன்னால் உய்வீர் அல்லது மாவி தொலைவிப்போம்
முன்னு ளேபோல் எண்ணிலிர் உண்மை மொழிகென்றார். ௪௩.

என்னுங் காவல கேட்டச யந்தன் எம்மாயும்
மன்னும் வானின் றேடின கண்டா மற்றன்னோர்
பின்னங் குற்ற தன்மையும் ஓராம் பிணிநோயுட்
டுன்னுந் தீயோம் யாவ துரைத்துஞ் சூளென்றான். ௪௪.

விண்டோய் மன்னன் முன்னொரு நாண்மேல் லியற்றன்னைக்
கொண்டே போனான் இன்னுழி யென்று குறிகொள்ளோங்
கண்டோ மல்லங் கேட்டது மில்லங் கழிவெய்தப்
புண்டோய் கின்றேம் என்சொல்வ தென்றார் புலவோர்கள். ௪௫.

சொற்றார் இவ்வா றன்னது போழ்திற் றுணிவெய்தி
உற்றார் போலும் இங்கிவ ரெல்லாம் உளமொன்றி
எற்ற லுண்மை சொல்லுவர் இன்னே ரெனவெண்ணாச்
செற்ற ராதுங் காவலர் துன்பஞ் செய்கின்றார். ௪௬.

வெங்கஞ் சென்னக் காயெரி யென்ன மிகுதீஞ்சொன்
முன்னஞ் சொற்றே வைவர் தெளிப்பர் முரணோடுங்
கன்னஞ் செல்லத் தோமாம் உய்ப்பார் கடைகிற்பார்
சின்னஞ் செய்வார் போலுடன் முற்றுஞ் சேதிப்பார். ௪௭.

கண்டங் துண்டஞ் செய்திடும் அங்கங் கடிதொன்றிப்
பிண்டந் தன்னிற் கூடவே துண்டே போற்றல்
கொண்டங் கையால் வாள்கொடு மார்பங் குடைகிற்பார்
தண்டந் தன்னுன் மோதுவர் அன்னார் தலைகீள. ௪௮.

இத்தன் மைத்தாய்க் காவலர் யாரும் எண்ணில்லா
மெய்த்துன் பத்தைச் செய்திட மைந்தன் விண்ணோர்தங்
கொத்துந் தானும் ஆற்றலனாகித் தலைவெய்தி
நித்தன் றன்னை உன்னி ஆற்ற நிற்கின்றான். ௪௯.

சீற்றத் துப்போர் பல்படை கொண்டே செறுபோழ்தும்
ஆற்றத் துன்பம் பட்டத லான்மெய் யழிவாகி
ஈற்றுத் தன்மை சேர்ந்திலன் விண்ணோ ரிறைமைந்தன்
கூற்றிற் பட்டுச் செல்ல லுழக்குங் கொடியோர்போல். ௫௰.

நெஞ்சினில் வாலறி வெய்தினர் ஐம்புல நெறிநின்றும்
எஞ்சிய மேல்வினை போற்றில தேயென இறும்வண்ணந்
தஞ்செயல் வெய்யோர் செய்யவு மைந்தன் றவரோடும்
துஞ்சலன் ஊறும் பெற்றிலன் உற்றன் றுயரொன்றே. ௫௧.

மாடே சூழ்வோர் தம்மொடு மைந்தன் சிறைபுக்கான்
காடே போனான் இந்திரன் அன்னோர் கவலுற்றார்
பாடே விண்ணோர் தம்பத முக்கட் பானல்தம்
வீடே யல்லாற் றுன்பறும் ஆக்கம் வேறுண்டோ. ௫௨.

அந்தா வாளந் தோமரம் எஃகம் அடுதண்டம்
முந்தா யுற்ற பல்படை யாவு முரிவெய்தச்
செந்தார் மார்பிற் காவலர் கையுந் திறலெஞ்ச
நொந்தார் இன்னு செய்வது நீத்தார் நுவல்கின்றார். ருந.

வீவார் பின்னுள் அல்லது வேறோர் வினையத்தாற்
சாவார் எஞ்சார் போமிர் துண்டார் தவமிக்கார்
நோவார் நாமிங் காற்றிய பாலா னேய்நோந்தும்
ஆவா யாதுஞ் சொற்றிலர் என்றற் புதமுற்றார். ருச.

இன்னோர் யாரும் மைந்தனை வானோர் இனமோடு
மென்னே வாரும் பாங்கி னலைத்த வினையாலே
கைநோ வெய்தி வன்மையு நீங்கிக் கவலுற்றார்
முன்னோர் தம்பாற் செய்த துடன்சூழ் முறையேபோல். ருரு.

(வே.) அத்தகைய காவல் அவுணர்க் கணித்தாய
மொய்த்தோருசார் ஈண்டி முறைநீங் கலர்காப்ப
எய்த்த அமரருடன் இந்திரன்சேய் பண்ணவருள்
உத்தமனுங் கண்ணுதலை உன்னிப் புலம்புறுவான். ருசு.

வந்திப் பவர்பவங்கண் மாற்றுவோய் எத்தேவர்
சிந்தைக்கும் எட்டாச் சிவனே செழுஞ்சுடரோ
இந்தப் பிறவி யிடருழப்பச் செய்தனையோ
அந்தித்த நின்புணர்ப்பை யாரோ கடந்தாரோ. ருஎ.

கைநாகத் துக்குங் கயவாய்க்கும் நாரைக்கும்
பைநாகத் துக்கும் படருஞ் சிலந்திக்கும்
பின்னு கியவுயிர்க்கும் பேருண்மன் செய்தனையால்
எங்கா யகனே எமக்கின் றருளாயே. ருஅ.

கங்கை முடித்தாய் கறைமிடற்றாய் கண்ணுதலாய்
திங்கள் புனைந்தாய் சிவனே சிவனேயென்
றிங்குநின தடியேம் எல்லோர் களுமாற்ற
நங்கள் உயிர்க்குயிரா நாயகற்குங் கேட்டிலவோ. ருகூ.

பாசங்கொண் டாவி பலவும் பிணிப்போனும்
நேசங்கொண் டாங்கதனை நீக்கியருள் செய்வோனும்
ஈசன் சிவனென் றியம்பு மறையிழைத்த
ஆசொன்றும் இத்தீமை யார்தவிர்க்க வல்லாரோ. சுய.

நாரா யணனுமந்த நான்முகனு நாடரிதாப்
பேரா தியான பெருமான் உயிர்க்கெல்லாம்
ஆராயி னீயன்றி யாரோ துணையாவார்
வாராய் தமியேன் றுயாகற்ற வாராயோ. சுக.

சீற்றம் விளைத்துமனந் தேவர் தொகையலைப்பான்
கூற்ற மெனவே குறுகுற்ற அந்தகனும்
ஆற்றல் இழப்ப அகன்மார்பின் முத்தலையில்
ஏற்றிய வேலன்றே எமக்கேன் இரங்கலையே. சுஉ.

ஏங்கி அமரர் இரிந்தோட வேதூர்ந்த
ஓங்கு தாண்டத் துருக்கொண்ட தானவனைத்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தீங்கு பெறத்தடிந்து சின்னமாய் ஓர்சிறையை
வாங்கி யணிந்த அருளென்பால் வைத்திலையே. ௬௩.

ஞாலத் தினையளித்த நான்முகரு நின்றவற்றைப்
பாலித் தவரும் பிறரும் பணிந்திரங்க
ஓலக் கடலு ளுலகந் தொலைப்பவந்த
ஆலத்தை யுண்ட அருளே அயர்த்தனையே. ௬௪.

மோடி தாவந்த முக்க ணுடைக்காளி
ஓடி உலகுயிர்கள் உண்ணும் படியெழலும்
நாடி அவள்வெருவி நாணிச் செருக்ககல
ஆடியருள் செய்த அருளிங் கணுகாதோ. ௬௫.

பொற்றைக் கயிலைப் புகல்புக்க தேவர்தமைச்
செற்றத் துடனடவே சென்ற சலந்தரனை
ஒற்றைத் திகிரிப் படையால் உடல்பிளந்தே
அற்றைப் பகலவரை அஞ்சலென்றய் நீயன்றே. ௬௬.

நந்துற்ற கங்கை நதிசெறியுங் காசிதனிற்
றந்திக் கொடியோன் றவத்தோர் தமைத்துரந்து
வந்துற் றிடச்சினந்து வன்றே லினையுரித்த
அந்தக் கருணைக் களியமோம் பற்றிலமோ. ௬௭.

ஈரைஞ்சு சென்னி இருபான் புயங்கொண்டோர்
ஓரைஞ்ச ரக்கர் உலகலைப்ப அன்னவனை
வீரஞ்செய் தட்ட விமல எமையவுணர்
கோரஞ்செய் கின்ற கொடுந்தொழிலுட் கொள்ளாயோ. ௬௮.

பண்டை மகவான் பரிசுணராத் தக்கனைப்போல்
அண்டர்பிரா னின்னை அறியாதோர் வேள்விசெயத்
துண்டமது செய்து சுரரையவன் றேண்முரித்தாய்
தண்ட மதனையின்று தானவர்பாற் காட்டாயோ. ௬௯.

சிந்தப் புரங் கொடிய தீயவுணர் மூவரைத்தாம்
அந்தப் புரங்கண் டடல்செய்தாய் எம்பெருமான்
சந்தப் புரங்கொண்ட தானவரோ டொன்றுதும்
இந்தப் புரமும் எரிக்குதவ வொண்ணாதோ ௭௰.

அன்பா னவருக் கருளுதியாற் பத்திநெறி
என்பா லிலையால் இறையு மெனவழுத்தி
நன்பான் மதிமிலைச்சு நாயகனே நல்லருள்கூர்
உன்பான் மிகநொந்தே யோதிய தென்பேதைமையே. ௭௧.

ஆனாலுந் தீயேன் அழுங்க அருள்கொடுநீ
தானாக வந்து தலையளிசெய் தாண்டாயேல்
ஆனாத இத்துயரம் ஆறுமே ஆறியக்கால்
மேனா ளென யான் றுறக்கவளன் வேண்டிலனே. ௭௨.

வென்றி யாக்கரான் மேதகைய தானவரால்
அன்றி முனிவரால் அண்டரால் ஏனையரால்
ஒன்று செயலொன்றய் உறுதுயரத் தாழ்ந்ததன்றி
என்று மகிழ்வாய் இடாற் றிருந்தனமே. ௭௩.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

ஊற்று மதியுங் கிளர்வேம் பொறியாவும்
ஆற்றி நெடுமீலைந்த ஆதியே நின்னருளால்
ஏற்ற மீதுமலக்கண் ஏகில் இழந்தவளம்
போற்றுகிலே னேற்றல் புரிவேன் புரிவேனே. எசு.

தண்டேன் றுளிக்குந் தருநீழல் வாழ்வுவேஃகிக்
கொண்டேன் பெருந்துயாம் வான்பதமுங் கோதேன்றே
கண்டேன் பிறர்தம் பதத்தோவலவுங் கண்டனனுற்
றெண்டேன் சிவனேநின் றேல்பதமும் வேண்டுவனே. எரு.

அல்லற் பிறவி அலமாவிண் ணுடுறைந்து
தொல்லைத் திருநகருந் துன்பும் அலமலமாற்
றில்லைத் தனிநடஞ்செய் தேவே இனித்தமியேற்
கொல்லைத் துயர்நீத் துனது பதமருளே. எகூ.

ஒன்றாய் இருதிறமாய் ஓரைந்தாய் ஐயைந்தாய்
அன்றதி யின்மீட்டும் ஐந்தாய் அளப்பிலவாய்
நின்றாய் சிவனேயிந் நீர்மையெல்லாந் தீங்ககற்றி
நன்ற விகட்கு நலம்புரிதற் கேயன்றே. எஎ.

பொன்போலியுங் கொன்றைப் புரிசடையாய் இவ்வழிசேர்
துன்பம் அகற்றித் துறக்கத்துட் டாழாது
பின்புநனி நோற்றுப் பெறற்கரிதா நின்னடிக்கீழ்
இன்பம் ஒருதலையாய் எய்தவருள் செய்வாயே. எஅ.

(வே.) என்று பற்பல இரங்கியே விடஞ்செறிந் தேன்னச்
சென்று சென்றிடர் முடுற உணர்வெலாஞ் சிதைய
ஒன்றும் ஓர்கிலன் மயங்கினன் உயிர்கலந் துலையப் ·
பொன்றி னர்களின் மறிந்தனன் இந்திரன் புதல்வன். எகூ.

ஆங்க வன்றவனைப் போலவே அமாரும் அழுங்கி
ஏங்கி ஆருயிர் பதைத்திட இரங்கினர் விழ்ந்தார்
தூங்கும் வீழுறு பழமரஞ் சாய்தலுந் தொடர்ந்து
பாங்கர் சுற்றிய வல்லிகள் தியங்கிவீழ் பரிசின். அய.

---

## அண்டகோசப் படலம்.

(The Hindu description of the Earth and other portions of the Universe.)

தீயதோர் இவைய மாற்றஞ் செப்பலும் இதுநன் றெந்தை
ஏயின பணியி னிற்பன் இறையவன் எனக்குத் தந்த
ஆயிரத் தெட்டேன் றேதும் அண்டங்க ணிலைமை யாவும்
நீயுரை என்ன ஆசான் நிருபனுக் குரைக்க லுற்றன். க.

மேலுள பொருளுந் தத்தம் விளைவது நிற்க இப்பால்
மூலமாம் பகுதி தன்னின் முவளத்திடும் புந்தி புந்தி
ஏலுறும் அகந்தை ஒன்றில் எய்துமைம் புலனும் ஆங்கே
வாலிய ககனத் தோடு மண்ணிலங் காறும் வந்த. உ.

அப்பெரும் புவிக்குத் தானேர் ஆயிர கோடி அண்டம்
ஒப்பில வென்ன உண்டால் ஒன்றினுக் கொன்று மேலாய்ச்



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

செப்புறு நிலைமைத் தன்று தெரிந்திடிற் பரந்து வைகும்
வைப்பென லாதும் அன்ன மற்றவை ஐம்பொன் வண்ணம். ௩.

அங்கண்மா ஞாலத் தண்டம் ஆயிர கோடி தன்னில்
இந்தநீ பெற்ற அண்டம் ஆயிரத் தெட்டி னுள்ளுந்
துங்கமாம் அண்டம் ஒன்றின் இயற்கையைச் சொல்ல லுற்றேன்
செங்கைசேர் நெல்லி என்னச் சிந்தையிற் காண்டி அன்றே. ௪.

கதிரொழு துகளெண் மூன்று கசரக்கிர தத்த மாகும்
இதுதொகை இருநான் குற்ற இலாக்கையவ் விலாக்கை நான்காய்
உதிதரு யூகை என்ப யூகையெட் டியவை என்ப
அதனெரு மூன்று கொண்ட தங்குலத் தளவை யாமே. ௫.

அங்குலம் அறுநான் காதம் அதுகரங் கரமோர் நான்கு
தங்குத றனுவென் றதந் தனுவிரண் டதுவோர் தண்டம்
இந்துறு தண்ட மான இராயிரங் குரோசத் தெல்லை
பங்கமில் குரோச நான்கோர் யோசனைப் பால தாமே. ௬.

அந்தயோ சனையின் எல்லை ஐம்பதிற் றிரண்டு கோடி
வந்ததிவ் வண்டத் திற்கு மாயிரும் பரவை வைப்பு
முந்துமப் புவன மாது மொழிந்திடும் அண்டங் கட்கும்
இந்தவா றளவைத் தென்றே எண்ணுதி இலைகொள் வேலோய். ௭.

ஒண்புவி யினுக்குக் கீழாம் யோசனை ஐம்பான் கோடி
திண்புவி தனக்கு மேலாய்ச் சேர்தரும் அளவும் அஃதே
மண்புவி மேரு வுக்கு மாதிரம் அவை யோரொட்டும்
எண்படும் ஐம்பான் கோடி ககனத்தின் எல்லை யோடும். ௮.

அண்டமார் கடமோர் கோடி அதற்குமீ தீதிலோர் கோடி
திண்டிறற் காலச் செந்தீ உருத்திரர் செம்பொற் கோயின்
மீண்டழற் கற்றை யுள்ள தொருபது கோடி மீக்கண்
கொண்டெழு தூர எல்லை துணிக்கிலங் கோடியாமே. ௯.

அரித்தவி சுயர்ச்சி ஆங்கோர் ஆயிரம் அளவைத் தாகும்
பாத்தலும் அதற்கி ரட்டி படர்தரு காலச் செந்தீ
உருத்திரர் அழலின் மேனி யோசனை அயுத மாகுந்
திருத்தகு பலகை வாள்விற் செழுஞ்சரம் ஏந்திச் சேர்வர். ௰.

ஓங்கிய காலச் செந்தீ உருத்திரர் தம்மைப் போல
ஆங்கொரு பதியின் சூழ அன்னவர் ஏவ லாற்றிப்
பாங்குற ஒருபால் ஆங்கோர் பரிசன மேவும் அன்னோர்
பூங்கழல் வழுத்தி யாவு மதிக்கமட் புவனம் வைகும். ௰௧.

அன்னதோர் புவன மீக்கண் அடுக்குறு நிலைய வாகித்
துன்னுறு நாலெண் கோடி தொகைபடு நிரையத் தெல்லை
உன்னத மான கோடி ஒன்றெழ் முப்பான் மேலும்
பன்னிரண் டிலக்கம் அண்டத் தளவுறும் பரப்பு மன்னே. ௰௨.

உற்றிடு நிரைய மீதில் ஒன்றிலா இலக்க நூறு
பெற்றிடும் உயர்வு தன்னிற் பிறங்குமோர் புவனங் கீழ்பாற்
பற்றிய இரும்பு நாப்பண் பச்சிமம் பசும்பொற் சோதி
மற்றதன் மேல்பா கத்தில் வதிவர்கூர் மாண்டர் என்போர். ௰௩.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

காழக முகத்தர் கூர்வாய்க் கணிச்சியம் படைசேர் கையர்
ஊழியங் கனலு அன்ன உருவினர் எரியுங் கண்ணர்
மாழையம் பீட மீக்கண் வைதகூர் மாண்டர் தம்பாற்
சூழுருத் திராய் உள்ளோர் தொகுதியை அளக்கொ ணாதால். ௰௪.

அப்புவ னத்து மீதே அந்தாம் இலக்கம் ஒன்பான்
செப்புவர் அதனுக் தும்பர் சிறந்தபா தலங்கள் என்ப
ஒப்பறு பிலமொன் றற்கே ஒன்பஃ திலக்க மாக
இப்படி அறுபான் மூன்றும் இலக்கமேழ் பிலத்தின் எல்லை. ௰௫.

பாத்தினி லுறுங்க னிட்ட பாதலம் எட்டி லக்கம்
ஆத்தினுக் ககற்சி வெவ்வே றயுதமாம் அவைமுப் பாகம்
ஊத்ததும் அவுணர் கீழ்பால் ஒள்ளெயிற் றாகர் நாப்பண்
திருத்ததும் ஆக்கர் மேல்பாற் சிறந்துவீற் றிருந்து வாழ்வோர். ௰௬.

இதன்மிசை இலக்கம் ஒன்பான் ஆடகர் இருக்கை யாதும்
இதன்மிசை வெளியோர் கோடி இலக்கமும் இருப துண்டால்
இதன்மிசை களிறு பாந்தள் எட்டுடன் சேடன் ஏந்தும்
இதன்மிசை புவியின் ஈட்டம் எண்பஃ திலக்க மாமே. ௰௭.

ஈடுறு பிலங்கட் கெல்லாம் இறைவாய்ப் பாது காப்போர்
ஆடகர் தாமே நாகர் அவுணர்வா ளாக்கர் அன்னோர்
தாடொழு சனத்துக் கெல்லாங் கடமுதற் றனைாயீ றுகக்
கோடியோ னாம்பா னதுங் துணித்தவன கோடி அன்றே. ௰௮.

பலவகைப் பிலங்கட் கெல்லாம் பாமதாய் உற்ற தொல்பார்
உலகையும் அங்கண் உள்ள உயிரையும் உரைப்பான் கேட்டி
துலவிய சம்பு சாகங் குசைகிரா வுஞ்சங் கோதில்
இலவுகோ மேத கம்புட் காமிவை ஏழு தீவே. ௰௯.

கருதுமவ் வுலகின் உப்புப் பாறயிர் நெய்யே கன்னல்
இாதமா மதுநீ ராதும் எழுகடல் ஏழு தீவும்
வான்முறை வாவிச் சூழு மற்றதற் கப்பாற் சொன்ன
தனைமிக வளர்ந்து நிற்குஞ் சக்கிர வாள சையம். ௨௰.

அன்னதற் கப்பால் வேலை யாசனும் புறத்தில் ஆழி
பின்னது தனக்கும் அப்பாற் பேரிருள் சேர்ந்த ஞாலம்
மன்னவ காண்டி இன்னும் வலிகெழு பண்டத் தோடு
துன்னுமீப் பொருள்கள் யாவுஞ் சூழ்ந்துகொண் டிருக்கு மாதோ. ௨௧.

எல்லைதீர் முன்னைத் தீவோர் இலக்கமாங் கடலும் அற்றே
அல்லதீ வாது நேமி யதற்கதற் கிட்டி யாகச்
சொல்லினர் ஆங்கண் கண்ட தொகையிரு கோடி நல்கி
நல்லதோர் ஐம்பான் மேலு நான்கெனும் இலக்க மாமே. ௨௨.

ஐயிரு கோடி சொன்னத் தணிதலம் அதுசூழ் நேமிச்
சையமோர் அயுத மாதுஞ் சாதன் புறத்து நேமி
எய்திய கோடி மேலும் இருபதோ டிலக்கம் ஏழாம்
மையிருள் செறிந்த தாதும் எல்லைமேல் வதப்பா மன்னே. ௨௩.

ஆரிருள் உலக முப்பான் அஞ்செனுங் கோடி மேலும்
ஓரொரு பத்தோ டொன்பா னூறுநான் கயுத மாதும்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பேரிருள் சூழ்ந்த அண்டப் பித்திகை கனமோர் கோடி
பாரிடை யகலந் தேரிற் பாதியோ ரைம்பான் கோடி. உ௪.

கடைதரு தேரிநூ லாற்ற நாம்புகல் கணிதந் தன்னை
உடையதாந் திசையே இவ்வா றெழிந்தமா தீரத்தும் வைக்கில்
வடகோடு தென்றி கீழ்மேன் மற்றுள கோண முற்றும்
கோடிதரு கோடி கோடி நூறியோ சனையுண் டாதும். உரு.

முள்ளுடை மூல மான முண்டகத் தவிசின் மேய
வள்ளறன் வலது மொய்ம்பால் வந்திடு சாம்பு வேந்தன்
அள்ளுடை வேற்கை நம்பி அன்புடை விரத நோற்று
உள்ளதோ ரொல்வல முற்றும் ஒருதனிக் குடையுள் வைத்தான். உசு.

அங்கவன் றனது மைந்தர் அங்கதீ ரன்மே தாதி
துங்கமாம் வபுட்டு ஆதி புாதிட்டுத் துதிமான் றெல்சீர்
தங்குமவ் வியனே மீக்க தவனெடும் எழுவர் தாமம்
பங்குகொண் டேழு தீவும் பாதுகாத் தாசு செய்தார். உஎ.

(வே.) சீரியசம் புத்தீவு புரந்தவங்க தீரனேன்போன் றனருளுஞ் சீ
றுவாரயோர்
பாரதன்கிம் புருடனரி கேதுமாலோன் பத்திரா சுவத்தனளா விரதனே
ன்போன்
ஏருடைய இரமியனல் லேமப்பேரோன் இயற்குருவாம் ஒன்பதின்மர்
இவர்தம் போரல்
ஒரோருவர்க் கொவ்வொன்றய் நாவற்றீவை ஒன்பதுகண் டமதாக்கி
உதவினுனல். உஅ.

விண்ணுயர்சம் புத்தீவி னடுவுநின்ற மேருவரை செங்கமலப் போது
ட்டுப்போல
நண்ணுமதற் கியோசனையுன் னதமெண்பத்து நான்குளவா யிரமா
து ஞாலமாழ்ந்த
தெண்ணிரண்டா யிரஞ்சென்னி யகலமுப்பான் இராயிரமாம் பாரரை
யெல்வல இதனிற்பாதி
வண்ணமிகு மேகலைமுன் றதனிலுச்சி வாய்த்திடுமே கலையிற்பல் சி
கரமல்கும். உகூ.

மேருவரை அதற்குநடுப் பிரமன்மூதூர் மிக்கமனே வதியதற்கு மேலை
த்திக்கின்
நாரணன்வாழ் வைகுந்தம் வடகீழ்பாலி னுதனமர் சோவதிமா தீரங்
களேட்டும்
சீரியஇந் திரன்முதலாம் எண்மர்தேயந் தெற்குமுதல் வடக்களவு ம
ருங்கு தன்னின்
நேரியதோர் தேசமது செவ்வேபோது நெடும்பூழை ஒன்றுளது நினை
க மாதோ. ௩ய.

அந்தவரைக் கீழ்திசைமந் தரமாம்வெண்மை அதன்றெற்குக் கந்த
மா தனம்போன் மேல்பாற்
சுந்தரமாம் விபுலநீ லம்வடக்குச் சுபாசுபமா தவளப்போது கடம்பு ச
ம்பு

நந்தியதோர் போதியால் துணைபாலாதி நாற்றிசையில் வரைமீது நிற்குநா
வன்
முந்தியாண் டாயிரம்யோ சனையாமேன முத்தருவும் இதிற்பாதி மொழி
யுமெல்லை. ௯௧.

அத்தகைய கீழ்த்திசையில் அருணமேல்பால் அசீாதந்தென் றிசை
யின்மா னதமேஅல்லா
உத்தாத்தின் மாமடுநீர் நிலையாயோங்கும் உய்யானஞ் சயித்திரதங் கு
ணக்குவைகும்
வைத்தபெரு நந்தனங் தெக் கணத்திலோங்கும் வைபிரசங் குடக்கம
ரும் வடாதுபாங்கர்
மெத்துதுரு தாக்கியமுற் றிடுமிவ்வாறு மேருவரைச் சாாலிடை விரவும
ன்றே. ௯௨.

கடிகமழ நாவலொன்று தென்பானின்ற காரணத்தாற் பாரதன்றன் க
ண்டமுற்றும்
இடனுடைய நாவலந்தீ வெனப்பேர்பெற்ற இத்தருவின் றீங்கனிநீர்
ஆறுய்மேருத்
தடவரையைப் புடைசூழ்ந்து வடபாற்சென்று சாம்புநதப் பேர்பெறு
மச் சலிலந்துய்த்தோர்
உடன்முழுதும் பொன்னிறமாய் அயுதமேலு மொருமூவா யிரமாண்டங் கு
றுவான்றே. ௯௩.

நாற்றிசையில் வரைப்பாப்பு மேல்கீழ்தானு நவின்றிடுமே ருவிற்பாதி
அதற்குக்கீழ்பால்
மாற்றரிய மாலியவான் மேல்பாற்கந்த மாதனந்தென் றிசைநிசதம் ஏ
மகூடம்
ஏற்றவிமம் வடபானீ லஞ்சுவேதம் இயற்சிருங்கம் எட்டுவரை இறு
வாநீலம்
மேற்றிகழ்பொன் மணிகனகம் பணியேநீலம் வெண்மைமதி காந்த
மிவை மேனிதானே. ௯௪.

நிசதமொடு பொற்கூடம் இமயங்கீழ்மே னெடுங்கடலைத் தலைகூடி
நிமிருஞ்சோமன்
றிசையுளபூ தாழன்று மனையவெட்டுத் திண்கிரியும் இாயிரயோ ச
னைவான்செல்லும்
வசையில்கந்த மாதனமா லியவானென்னு மால்வரைக டமதகலம்
அயுதமற்றை
அசலமிரு மூன்றுமிா யிராமாந்தீவுள் அமருநவ கண்ட வெல்லை அறை
வன்மாதோ. ௯௫.

கோதில்வட கடன்முதலாச் சிருங்கங்காறுங் குருவருடஞ் சிருங்கமு
தற் சுவேதமட்டும்
நீதியா ணியவருடஞ் சுவேதநீல நெடுங்கிரியி னடுவணிா மியமாமேருப்
பூதாஞ்சூழ் வருடமளா விரதமாதும் பொலிந்தகந்த மாதனமேற் புணரி
நாப்பண்
கேதுமால் வருடமா லியவான்றெட்டுக் கீழ்க்கடலி னிறுவாய்ப்பத் தி
ரமதாமே. ௯௬.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

அம்புவியி னிசதமுதல் ஏமங்காறும் அரிவருடம் ஏமமுதலிமயநாப்பண்
கிம்புருடந் தென்கடற்தும் இமயமென்னுங் கிரிக்குநடுப் பாதமாங்
கேதுமாலோ
டிம்பர்புகழ் பத்திரமுப் பத்துநாலா யிரநின்ற வொன்பதினு யிரமாமே
ல்வல
உம்பர்தன துலகவனைய பாதமென்னும் ஒன்றேழிந்த கண்டமெட்டு
ம் உற்றுளார்க்கே. ௩௭.

ஆங்குருநாட் டுறைவோரோர் பொழுதினுய்பால் ஆடுவு மகடுவு மாகத்
தோன்றித்
தாங்கள்விழை விற்புணர்வர் அவர்க்கேதெய்வத் தருமலர்கள் உதவு
முணுக் கனியுங்காயும்
ஒங்குபச்சை நிறமாயுள் அயுதமேலும் ஒருமூவா யிரமதற்கு வடபாகத்
துப்
பாங்கமர்வர் முனிவர்சா ரணரோசித்தர் பதின்மூவா யிரவாயுள் படிகம்
வண்ணம். ௩௮.

பாவுபத்தி ராசுவத்தோர் கனிகாய்துய்ப்போர் பதின்மூவா யிரவாயுள் ப
டைத்தசேயோர்
இரமியத்தோர் பலநுகர்வோர் மதிநேர்மெய்யர் இராயிரமஞ் ஞூறயுதம்
யாண்டுபெற்றோர்
பொருவரிய இரணியத்தி னுள்ளோராலின் புன்கனியே மிசைதுவர்பூங்
துவளைபோல்வார்
வருடமவர்க் கொருபதினு யிரமேயன்றி மற்றுமீரண் டாயிரமாய்ச் சேர
ற்றதோன்னூல். ௩௯.

விராவுமளா விரதத்தோர் வெளியமெய்யர் மிசைவதுதீங் கரும்பிரதம்
அயுதமேலும்
இராயிரமா யுசுகேது மாலந்தன்னில் இருப்பவர்பைங் குவளைநறை
யினிதினுண்டல்
பாரளையுள கண்டகியின் கனியேயாயுள் பத்துளவா யிரமரிகண் டத்
துவாழ்வோர்
ஓராயிரமோ டோன்பதினு யிரமதெல்லை உணவுகனி காய்மதியம் ஒ
ளியதன்றே. ௪௰.

போற்றியகிம் புருடத்தோர் இறலித்தீய புன்கனியே மிசைவர்நிறம்
பொன்மையாயுள்
சாற்றியிடும் ஓயுதம் ஏமகூடத் தடவரைத்தென் பாலிமய வடபா
றன்னில்
ஏற்றமிகுங் கயிலைநிற்கும் இதற்குமீதே யிமையமுக் கட்பெருமான் உ
மையாளோடும்
வீற்றிருப்பன் ஊழிதனில் அண்டங்காறு மேலோடுகீழ் சென்றிடுமவ்
வெற்புமாதோ. ௪௧.

இந்தவிரு நான்குகண்டத் துறையுநீரார் இன்னல்பிணி நரைதிரைமூப்
பிளமைசோரார்
முந்தையுகம் போலேயிம் மூன்றினுள்ளு மொய்ம்புநிறை அறிவடல மு
யற்சியாயுள்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அந்தமில்சீர் முதலெல்லாம் ஒருதன்மைத்தாய் அடைதுவர்மன் பாாத
த்தில் அவதரித்து
வந்துபுரி வினைப்பயனை நுகர்வார்என்பர் வானமுகில் சென்றுபுனல்
வழங்காதங்கண். சஉ.

பாாதத்து ளாாவனி திழைத்துமற்றும் பஃறேழிலும் புரிந்தும்அறம் பா
பமீட்டிப்
போருள்பேள திகமெழவா யானமுன்றிற் பெறும்பயன்கோண் டுய்வ
ரென்பர் பெருமையாற்றல்
சீறிவு நீறையாயுள் உருவமுண்டி செய்கையுகங் களுக்கியைந்த திற
னேசேர்வர்
தோளைமுதற் பலபைங்கூழ் விளையுளாக்கந் தூயகனி காய்கந்தம் பி
றவுந்துய்ப்பார். சரு.

நாலிருகண் டத்தோரும் விண்ணுளோரும் நாகினரும அவ்விடத்தி ன
ண்ணிவைகும்
மேவலயிரு வினையாற்றி அவற்றிற்கேற்ற வினைப்பயன்க டுய்ப்பரோ
ன விளம்புமாற்றற்
சீலமிகும் பாாதமாங் கண்டமொன்றே தீவினைநல் வினையாதஞ் செ
ய்கைக்கெல்லாம்
மூலமுறு துறைபெறினே வந்துதேவர் முனிவர்களுந் தவம்பூசை முய
ல்வாங்கண். சச.

கவிபுகழும் பாதனுமிந் திரனும்பேரோன் கசேருகன்றும் பிாகனிக பத்
ாறுகன்
சவுமியனே மருதநுவன் வருணனேன்னுந் தநயருடன் குமரியெனு
ம் வனிதைதன்வன
உவகையுடன் உதவியவர் தத்தம்போால் ஒன்றற்கோ ாாயிாம்யோ ச
னயதாகப்
புவிபுகழ்பா ரதத்தைநவ கண்டமாக்கிப் போற்பினுடன் அவனவர்க்
கும் புரிந்தானன்றே. சரு.

கங்கைகவு தமையமுனை கவுரிவாணி காவிரிநன் மதைபாலி கம்பை
பம்பை
துங்கபத்தி ரிதசைகோ மதிபாஞ்சாலி சூரிசிகி பாகாளா தூதபாவை
சங்கவா கினிசிவைபா ரத்துவாசி சார்வரிசந் திாபாகை சாயுவேணி
பிங்கவலதுண் டவலதுமரி போருநைவேஃகா பேண்வணமுதல் ஆற
னந்தம் பெருகிநண்ணும். சசு.

மன்னுமயேந் திாமலயஞ் சையஞ்சத்தி மானிடமே பாரியாத் திாமா
விந்தம்
என்னுமலை ஓரேழுங் காஞ்சியாதி எழுநகருந் தானமொரா யிாமேலே
ட்டும்
பன்னுமரு மறைமுதலோர் மேயதெய்வம் பற்பலவுஞ் சுருதிமறை ப
யில்வுமேவி
மென்னெறிசேர் வதுதமரி கண்டமேவன மிலேச்சரிடம் ஒரோட்டும்
வியப்பிலாவே. சஎ.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இங்கிவைசம் புத்தீவின் இடனேதென்பால் இருங்கடல்சூழ் சாகாத்
தின் எல்லைதன்னிற்
றங்கியகோ மேதாதி அவற்குமைந்தர் சாந்தபய னச்சிரான்கோ தைய
னே நந்தன்
துங்கமிகு சிவனெடுகே மகன்சிறந்த துருவனிவர் போரலேழ் வருட
மாக்கி
அங்கவருக் கருள்புரிந்தான் கடவுள்வாயு ஆரியர்விந் தகர்தூகர் ஆண்
டுவாழ்வார். ௪௮.

சோமகமே சுமனஞ்சந் திரமழத்தந் துந்துமிவப் பிராசனகா ரதியந்
தோல்சீர்க்
கோமதமாம் எழுகிரியுஞ் சிவம்விபாவங் குளிரமுதஞ் சுகிரதமே அனுத்
தைசித்தி [நின்ற
மாமைதரு சிகாமேனும் ஆறங்கேழ மருவியிடுந் ததிக்கடலை வளைந்து
ஏமமுறு குசைத்தீவில் வபுட்டுவேன்னும் இறையவற்குஞ் சிறுவர்க
ளாய் எழவருண்டால். ௪௯.

சுப்பிரகன் உரோகிதனே திக்கன்மழகன் சுவேதனன்சித் தனன்வயி
த்தி யதனேன்றேதும்
இப்புதல்வர் போரலேழ் வருடமாக்கி ஈந்தனனுன் னதங்குமுதமாம்
வேகம்
வைப்புறுசந் தங்கமடந் துரோணம் வெய்ய மலையேழஞ் சோணை
வெள்ளி மதியேதோமை
ஒப்பறுநேத் திரைவிமோ சனைவிருத்தி ஓரேழ நதியுளதால் உலவை
புத்தேள். ௫௰.

தற்பகரே கபிலர்சா ரணர்நீலத்தர் தண்டர்விதண் டகாண்டைச் ச
னங்களாவார்
அப்புறநேய்ப் புணரிகிரா வுஞ்சதீபம் அதற்குமன்னன் புரதிட்டு அவன்
றன்மைந்தர்
மெய்ப்படுசா ரணன் கபிலன்கிருதிகீர்த்தி வேணுமா னிலம்பகனுற்பி
தனேயென்னச்
செப்புமவர் போரலேழ் வருடமாக்கிச் சிறப்புடனே அவரரசு செய்த
ற்கீந்தான். ௫௧.

மன்னுதசே சயமருவித் துருமம்புட்பம் வருத்த மீமவந்துதிம மந்தாரந்
தான்
என்னுமலை ஏழசிவை தூதபாவை ஐயம்புனிதை யேபோருணை யகி
லபாவை
சென்னெறிசேர் பந்தமேனு நதியோரேழ சேர்ந்துளது தபதர்சடா வ
கர்மதேகர்
பன்னுபுகழ் மேகாவர் சனங்களாவார் பங்கயனே அங்குடைய பகவ
னம்மா. ௫௨.

மற்றதனுக் கப்பாலை அளக்கர்கன்னல் வளைந்துடைய தீபஞ்சான்
மலியாமங்கட்
கொற்றவனுந் துதிமைந்தன் அவன்றன்மைந்தர் குசலன்வேலன் தே
வன்மதி அந்தகரான்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அற்றமிலா மனோகன்றுந் துமியாமன்னூர்க் களித்தனன்ஏழ் கூறக்கி
அசலமேழுஞ்
சொற்றிமிரஞ் சூரபிவா மனம்விருத்தந் துந்துமிதன் னியைபுண்ட ரீக
நீற்றும். ௫௩.

போதுதுழ தங்கவர் ஆதியாமம் புண்டரீக மனோபவஞ்சந் தீயமேன்
றேதுஞ்
சீதநதி ஏழுசெலும் புட்கலாதர் சிறந்திடுபுட் காரதரியற் சிசிரோன்
போர்
ஏதமிலா துறைசனங்கள் கடவுளீசன் இதற்தும்பபான் மதுக்கடல்
சூழ்ந் திருந்ததீபம்
மேததகோ மேதகமவ் வியனேதோன்னுள் வேந்தனவற் கேழமைந்
தர் மேனுள்வந்தார். ௫௪.

தூயவிமோ சனன்மோகன் சகலன்சோமன் சுதுமரன் குமரன்மணி
ச் சகனுமைந்தர்க்
காயதையேழ் கூறுபுரிந் தளித்தான்சிங்கம் அத்தம் உதை யஞ்சலங்கி
ரவுஞ்சம்அம்பி
கேயமிர மியங்கிரிஏழ் ஆதிதேனுக் கிளர்சபத்தி சுதுமாரி குமாரியிக்கு
மாயைநதி ஏழுளமந் தகார்மங்கர் மானசா ராமரக்கண் மதிமன்றெ
ய்வம். ௫௫.

புடையினது தூயபுனற் கடலேதீபம் புட்காமன் னன்தவன்றன் புத
ல்வரானோர்
அடல்கெழுஉத் தாதிமா வீரனென்போர்க் கதவனஇரு கூறுபடுத்தளி
த்தானென்ப [வெற்புக்
விடபமங்கேந் திரமருணம் வாரதநீலம் இந்திரமந் திரியமெனும் ஏழ
குடிவலசிவை உவைதாணி சுமவனசிங்கை குமரியெனும் எழுநதியு
ங் கொண்டுமேவும். ௫௬.

மேனியலர் வியனகார் நாகரோன்போர் மேவியமா பரிசனம்வெய் யவ
னேபுத்தேள்
ஆனதோர்புட் காதீவின் முடிவிலம்பான் ஆயிரம்யோ சனதன்னில்
அசலமொன்று
மானசோத் திரமெனவே சகடக்கால்போல் வட்டவணபெற் றிடும
தன்கண் மகவானுக்கும்
ஏவனயதோர் எழுவர்க்குங் குணபாலாதி எண்டிசையி னும்பதங்கள்
இசைந்தவன்றே. ௫௭.

பொங்குதிரைப் புணரிகளின் முடிவுதோறும் புடையுறவே வளர்ந்தோ
வ்வோர் பொருப்புநிற்கும்
இங்குளதோர் சாகமுதற் றீவுமுற்றும் இருப்பவர்க்கு நரைதிரைமூப் பி
ன்னலில்லை
அங்கவர்கள் கலியினிலும் புருடர்தன்வன அடைவர்பதி னயிரமாண்
டமர்வாப்பாற்
றங்கியது தமனியப்பார் அதவனச்சூழ்போய்த் தடம்பொருநே மிப்பொ
ருப்புச் சாருமன்றே. ௫௮.



Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

நேமிவரை அதற்கப்பாற் சுடரோயப்பா னிசிப்படலஞ் செய்யமணி நி
றனேமன்னர்
காமருசீர் இயக்கராக் கதரோவெம்பேய்க் கணங்களமர்ந் தீடுவர்தி
சைக் கடவுளோருந்
தாழுடைய மாதிரத்தின் மேருவின்கட் டங்குதல்போல் வைகுவாங் க
தனுக்கப்பாற்
றாமமுறழ் இருளுலகு புறத்துநேமி தொல்லையண்ட கடமுறையே
சூழுமன்றே ௫௯.

ஊழிதோறி யாற்றத்தம் உயிரைத்தாமே ஒழிவுசெய்தோ ருந்தேருளும் உ
ணர்விலோரும்
ஆழிவரைப் புறஞ்சூழ்வர் அதனுக்கப்பால் ஆரிருள்சேர் எல்லைதனில்
அயன்மாலீசன்
வாழுநகர் முன்றுண்டால் அண்டச்சார்பில் வாம்பில்பெருங் கணநிரை
கள் வதிந்துமல்கும்
சூழுறுசம் புத்தீவு முதலாயண்டச் சுவர்காறும் புவியென்பர் தொல்லை
யோரோ. ௬௰.

இப்புவியின் மேற்கணத்திவ் வுலகதாதும் இதன்மிசைதுய் யகலோக
கம் இதற்குமீதே
வைப்புடைய ஈரைங்கால் வயங்குதேயம் மற்றதன்மேல் எழுபுயலு
ம் வழங்குமெல்லை
முப்பதிறு யிரகோடி முகில்ஒவ்வொன்றை முறைசூழ்வுற் றீடுமதற்கு
முன்னாகச்
செப்பரிய கிம்புருடர் கருடராேனோர் சித்தர்கள்விஞ் சையர்இயக்கர்
சேருமதூர். ௬௧.

இங்கிதன்மேற் சுரநதிசேல் லிடனேஅப்பால் இரவிபதந் தாணிக்கோ
ர் இலக்கமாதும்
அங்கதனின் முப்பான்முக் கோடிதேவர் அருக்கனுடன் வழிக்கொள்
வர் அதற்குமீதே
திங்களுல கோரிலக்கம் உம்பர்தன்னிற் செறிதருதா ரகைஉலகம் இ
லக்கஞ்சேணிற்
பொங்கொளிசேர் புதனுலகீர் இலக்கமப்பாற் புகருலகம் ஈரிலக்கம்
பொருந்திற்றன்றே. ௬௨

அந்தாமேற் சேயுலகீரிலக்கமேலே அரசனுலகீரிலக்க மதற்குமேலே
மந்தனுல கீரிலக்கம் அதன்மேலோரேழ் மாமுனிவர் உலகிலக்கம் ஆ
குமப்பால்
அந்துருவன் உலகிலக்கம் புவலோகத்தின் அலத்தகைய தோகைபதி
னைந் திலக்கமாதும்
இந்தஉல கத்தின்மிசை உடையதெய்வம் எழுவகையா மருத்தினமுங்
கெழுவுமெல்லை. ௬௩.

தோகலோடு சேர்தருமிப் பதத்தின்மீது சுவலோகம் எண்பத்தைந் தி
லக்கமாங்கே
புகலோடு வானவரும் பிறரும்போற்றப் புரந்தான்வீற் றிருந்தாசு புரிவ
னப்பான்

மகலோகம் இருகோடி மார்க்கண்டாதி மாமுனிவர் பலர்சேறிவர் மற்றி
தன்மேல்
இகலோகம் பாவுசன லோகவெல்லை எண்கோடி பிதிர்தேவர் இரு
ப்பாங்கண். சுசு.

தவலோகம் உன்னதமீ ராறுகோடி சனகர்முத லாயுடைய அனகர்சே
ர்வர்
அவண்மேற்சத் தியலோகம் ஈரோண்கோடி அயனின்பத் துலகமல க
ளித்தந்தான [டி
நவைதீரும் பிரமபத மூன்றுகோடி நாரணன்வாழ் பேருலகம் ஒர்முக்கோ
சிவலோக நாற்கோடி அதற்குமீதே திகழண்ட கோளகையுங் கோடி
யாமே. சுரு.

வேதமொடு தந்திரமும் அவற்றின்சார்பா மீநூதிகளும் பிறநூலும் வேறு
வேறய்
ஓதிடுமண் டத்தியற்கை மலலவோவென்றல் உண்மைதெரிந் திடிற்
படைப்பும் உலப்பில்பேதம்
ஆதலினல் அவ்வவற்றின் றிரிபுமாடி அறிந்துஉனக் கீண்டுண்மை யது
வேசோற்றும்
ஏதமிலிவ் வண்டத்திற் புவனநூற்றெட் டிறையருள்சேர் உருத்திரர்த
ம் மிருக்கையாமே. சுசு.

(வே.) இந்த அண்டத்தின் இயற்கையே முன்னுனக் கிறைவன்
றந்த அண்டங்கள் ஆயிரத் தெட்டுமித் தகைமை
மைந்த நீசென்று காணுதி யெனவதுத் துரைப்ப
அந்தம் இல்லதோர் மகிழ்வுடன் உணர்ந்தனன் அரசன். சுஎ.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

# CASI KANDAM.

# காசி காண்டம்.

## குபேரனுலகுகண்ட அத்தியாயம்.

(The history of Kuvera, a demi-god, and King of Alaka.)

குடக்காய்த் தெங்கின் பழமுதிராக் குதிக்குங் கயவாய் நெடுவாளை
மடற்பூங் கமுகின் மிடறொடிக்கு மல்லல் வளங்கூர் காம்பிலியிற்
கடற்பா ரனைத்தும் இசைபோக்கிக் காம முதல முக்குறும்பின்
றொடர்ப்பா டறுத்த வேள்விதத்தன் என்ன வுளனுங் கொருமறை
யோன். க.

அன்ன மறையோன் பலகாலம் ஆற்றுந் தவத்தால் அருளொடுமோர்
கன்னற் குதவல மகவீன்றன் அவன்பேர் காம குணநிதியாம்
முன்னூற் கரும முடித்ததற்பின் மதியின் வளர்ந்து முதுக்குறைவாற்
பன்னு மறையின் பாப்பனைத்துங் கடந்தான் பனுவல் இனிதுணர்ந்
தான். உ.

இனைய காலை ஊழ்துரப்ப உள்ளம் வேறாய் எழிற்புதல்வன்
மனையினீட்டுபொருளனைத்துங் கவர்ந்து கொடுபோய் மதிமருட்டும்
வினையம் வல்லார் பொருஞ்சூதின் வாளா வழங்கி மேவரிய
தனது தொல்லை மறைநெறியுந் திறம்பி நாளுந் தவறிழைத்தான். ங.

தாதை மகன்யாண் டுளனென்று கேட்குந் தோறுந் தாய்வெருவி
ஓதற் ககன்றன் எனச்சூது மறைத்து மொழிய உணர்கிலனாய்த்
தீதி றவத்து வேள்விதத்தன் என்னுஞ் செழுநான் மறைவல்லோன்
காதற் புதல்வற் கருங்கயற்கட் காமர்க் கன்னி மணமுடித்தான். ச.

(வே.) ஆயு மைந்தனை வருகென அழைத்துநீ இழைக்குந்
தீய செய்தியை உந்தையின் றுணர்ந்திடிற் செயிர்த்துக்
காயும் என்னொடு நின்னையும் என்பது கருதி
மாய வெங்கவ றுடுதன் மறைத்தியான் மொழிந்தேன். ரு.

உந்தை செய்தியும் ஒழுக்கமும் உணர்கிலை அன்றி
மைந்த நங்குலக் கிழமையு மதிக்கிலை மறைதேர்
அந்த ணாளர்தஞ் சிறுவர்நல் லொழுக்கமீங் கறிந்துஞ்
சிந்தை செய்கிலை என்றுகண் கலுழ்ந்திவை செப்பும். சா.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

ஊற்றி நுந்துவாட் டடங்கணீர் வாநின் றுரைக்கு
மாற்றங் கோள்கலா தாங்கவன் உறைதலின் வஞ்சம்
வேற்றில் இன்புறல் கள்ளுணல் வேட்டம்வெங் கவறு
போற்றல் செய்துநர் புணர்ப்பினை யாவரோ தடுப்பார். ௭.

இன்ன தன்மையின் இசைந்துளான் றனையினி தீன்ற
அன்னை கண்படும் அமைதியிற் றந்தையாங் களித்த
மின்னு நன்மணி மெல்விரன் மோதிரங் கவர்ந்து
துன்ன நுங்கவ றுடுநர்க் கதனையுந் தோற்றன். ௮.

நினைவ நுந்தவம் ஆற்றிய நிகரினன் மறையோன்
மனைவி கையிடைக் கொடுத்ததன் மணிவிர லாழி
இனித ணிந்துளான் ஒருவனை மறுகிடை யெதிராப்
புனையும் ஆழிமற் றெனதெனா ஆங்கவன் புகல்வான். ௯.

பன்னற் கேள்வியோய் களவினிற் கொண்டிலன் பரிவால்
கென்னல் என்றுகில் சூதினுற் கவர்ந்துநின் பாலன்
மன்னு மோதிரம் இன்றுதோற் றனன்வனை கலன்கள்
பொன்னந் தூசிவை நாடோறும் பொருதுதோற் றவனுல். ௰.

தீதி னற்றவ மறைபயி னின்னிளஞ் சேயைச்
சூது வல்லவர் சிகாமணி யெனப்பலர் சொல்வார்
ஈத றிந்திலை போலுமென் றெதிர்ந்தவன் உரைப்பக்
காத நீர்ந்துளம் வெள்கினன் கலைமறைக் கிழவன். ௰௧.

நாளு நுந்தன தில்வயிற் போகிநான் மறையோன்
வாணி லாநகை புரிந்துதன் மனைவியை நோக்கி
ஏணில் சிந்தைநின் சிறுவன்யாண் டேகினன் என்னப்
பூணு லாழலை நீர்த்துறை புகுந்தனன் என்றள். ௰௨.

ஈது நிற்கயான் எண்ணையாட் டயர்வுழி யீந்த
தீதில் என்கையிற் சிறுவிரன் மோதிரந் தருகென்
றோத வுள்வெரீஇ நண்பகல் உறுகடன் கழிக்கப்
போதிர் துய்த்தபின் ஆழிநல் குவலெனப் புகன்றள். ௰௩.

நெறியி கந்துதம் மாபினன் னீால செய்யும்
அறிவின் மைந்தரைப் பெறுதலின் மகப்பெறு தருநற்
றுறைத னன்றுமற் றெருவனுல் உயர்குல முழுதுஞ்
சிறுமை யெய்திலாங் கவற்றுறந் துறுபழி தீர்ப்பார். ௰௪.

என்ன நூற்கடல் கடந்துளோர் உரைப்பதை எண்ணி
முன்னர் நின்றுபோய் மொழிந்திடு முகிழ்முலைத் துவர்வாய்ப்
பன்னி தன்றேடு மகத்துறந் தந்தணன் பரிந்தோர்
பொன்ன வாழலைப் பூவையைக் கடிமணம் புரிந்தான். ௰௫.

தந்தை நீத்தனன் றன்றேடுந் தாயினை யென்று
அந்தம் இல்லதோர் வெந்துயர்க் கடலிடை ஆழ்ந்து
முந்து செய்ததீத் தொழிலினை முன்னிநெஞ் சழிந்து
சிந்தை செய்தனன் செய்யுமா றென்னெனத் திகைத்தான். ௰௬.

கற்றி லேமிருங் கலைகளுங் கைப்பொருள் ஈட்டப்
பெற்றி லேமினி எங்ஙனுய் குவமெனப் பேதுற்

றற்ற மில்பசிக் கனல்கொளுந் திடவயர் பொழுதின்
ஒற்றை யாழியான் குடகடற் றிளையில்விழ்ந் தொளித்தான். ௰எ.

உற்ற ஞான்றுயர் சிவநிசி யாதலின் உவந்து
கற்றை வார்சடைக் கடவுளை அருச்சனை புரியும்
மற்றோர் வேதியன் பின்றொடர்ந் தாலய மருவி
அற்ற நோக்கினன் ஏற்றுமின் னமிழ்தெடுத் தயில்வான். ௰அ.

முருந்த வாணகை பங்கனை அருமறை முதல்வன்
புரிந்த பூசனை கண்டுயில் பொருந்தில னாக
வருந்தி நோக்குபு வைகறை யாமத்தி னளவும்
இருந்து மற்றவன் றுயில்வது கண்டனன் எழுந்தான். ௰கூ.

ஆண்டெ ழுந்துபோய் ஈசன்முன் னமிழ்தினை யெடுப்பக்
காண்டல் செய்கிலன் மழுங்கிய கனைசுடர் விளக்கைத்
தூண்டல் செய்துவெண் சோற்றினை யெடுத்தனன் விரைவின்
மீண்ட போதிலோர் வேதியன் காலிடை மிதித்தான். உ௰.

மிதித்த போதிலவ் வேதியன் றுண்ணென விழித்து
மதித் திடாதிவண் வந்திடு கள்வன்யார் என்னுக்
கொதித்த நெஞ்சினன் கூக்குரல் எழுப்பலுங் காப்போர்
அதிர்த்து வந்துகைப் படுத்துமற் றவன்றலை அறுத்தார். உக.

ஆக்கை நீத்திடு சிறுவனை அந்தகன் றூதர்
வீக்கி யேகலும் விடுமின்கள் விடுமின்கள் என்னுத்
தீக்க னன்றுமிழ் முவிலைக் காலவே றிரித்துக்
காக்கு மாறெழு கண்ணுதல் கணங்கள்வந் தடைந்த. உஉ.

நுதல் கிழித்தெழளிர் விழியினன் கணங்களை நோக்கிப்
பதம்வ ழுத்திவெங் கூற்றுவன் றூதுவர் பகர்வார்
முதுகு லத்தொழுக் கிகந்துதாய் மொழிவது முனிந்து
மதிம நுட்டுவெஞ் சூதினை வைகலும் இழைத்தோன். உ௩.

பஞ்சின் மெல்லடிப் பாவைதன் மணவயிற் பதைப்ப
அஞ்செஞ் சீறடிக் கூத்தியர் அணிமுலை தோய்ந்த
வஞ்சன் எந்தைநின் மாலியங் கவர்ந்தனன் இவன்மற்
றுஞ்சு போவதற் கிழைத்ததெத் தவமென உரைத்தார். உ௪.

ஈது கேட்டலுஞ் சிவநிசி தனிற்றுயில் இன்றி
மாது பாகனை அன்பொடு வழிபடக் கண்டான்
சோதி யஞ்சுடர் ஒளியுறத் தூண்டினன் அவற்றுற்
றீதொ ழிந்தனன் கலிங்கநாட் டிறைவனுய்ச் சேர்வான். உரு.

என்று கூறிய சிவகண நாதரை யிறைஞ்சிக்
கன்று வெஞ்சினக் கூற்றுவன் றூதுவர் கயிற்றின்
ஒன்ற விக்கிய சிறுவனை ஒல்லையின் விடுத்துத்
தென்றி சைக்கிறை நகர்வயிற் சென்றடைந் தனரால். உசா.

நீர்க்கு டக்கனி சுமந்துநீண் முடம்படு தெங்கிற்
கார்க்கு லந்துயில் கழனிசூழ் கலிங்கநா டளிக்கும்
ஆர்க்கும் வன்கழல் அருந்தமன் புதல்வனுகென்னப்
பேர்க்க ணிச்சியோன் அடியாரங் குரைத்தனர் போனர். உஎ.

ஈச னன்பர்தம் அருளினற் குணநீதி யென்போன்
காசு கண்படு புரிசைசூழ் கலிங்கர்கோன் மகவாய்
மாசி லாதநல் லோரையின் மகிழ்வுறத் தமனென்
றேசை போகிய பெயரோடும் உதித்தனன் அன்றே. ௨௮.

முற் பவத்துறு தொடர்ச்சியின் முதுக்குறை வெய்திச்
சிற்ப ரன்றிரு வாலயம் எங்கணுந் தீபம்
அற்பி னலமைத் தளப்பரும் அறம்புரிந் தீசன்
பொற்ப தத்தினில் வைகலும் பூசனை புரிந்தான். ௨௯.

இன்ன நல்லறம் பற்பல நாளிருந் தியற்றிப்
பின்னர் மாய்தலும் பிஞ்ஞகன் ஆலயந் தோறும்
மின்னு செஞ்சுடர் ஏற்றலாற் சுடர்மணி விளக்கம்
மன்னு கோநகர் அளகைக்கு மன்னவன் ஆனன். ௩௰.

அளகை மாநகர் இங்கிவன் முன்னினி தாண்ட
ஒளிறு வேலா செவனென மறையவன் உரைப்பக்
களிறு கூப்பிடக் கருணைசெய் கடவுளைப் பாவும்
வெளிறெ றிந்தநற் கேள்வியோர் இவைவிளம் புவரால். ௩௧.

விதிஅ ளித்திடு புலத்தியன் உதவுவிச் சிரவா
மதலை யாகிய வச்சிர வணன்றது மலர்த்தாள்
துதிசெய் தாங்கவன் அருளினற் சுடர்மணி அளகைப்
பதிபு ரந்தனன் பாற்மகற் பத்தினிற் பரிவால். ௩௨.

கற்பம் ஆங்கது கழிந்தபின் கமலவீட் டுறைவோன்
அற்பி னல்உயர் சாரசாம் அனைத்தையும் அளிப்பப்
பொற்செ ழுந்தரு நீழல்வாழ் புரந்தான் முதலோர்
உற்ப வித்தலும் ஈங்கிவன் தபோனய் உறைந்தான். ௩௩.

முன்னம் ஆலயத் தொண்சுடர் தூண்டலான் முறையே
இன்ன செல்வமும் அளகையும் பெற்றனன் என்னுப்
பொன்னந் தாதுகு கொன்றையான் காசியம் புரியின்
மன்னி ஆங்கொரு சிவலிங்க மகிழ்வொடும் அமைத்தான். ௩௪.

மாசில் சித்தமாந் தகழியின் அன்புநெய் வாக்கு
ஈசன் அன்றிவே றில்லெனுந் திட்பநுண் டிரியிற்
றேசு டைத்தனி ஞானவொண் செழுஞ்சுடர் ஏற்றி
ஆசில் கொள்கையோன் பற்பகல் யோகினில் அடைந்தான். ௩௫.

அன்ன காவலயில் ஆங்கவன் றவத்தினை வியந்து
முன்ன மூவெயின் முருக்கிய முக்கணெம் பெருமான்
பொன்ன வாஞ்சுணங் கரும்பிய புணர்முலை உமையாள்
தன்னெ டுஞ்சுடர்ப் பிழம்பென அவ்வுழிச் சார்ந்தான். ௩௬.

அளகை காவல ஆற்றிய அருந்தவ மகிழ்ந்தேம்
உளம்வி ழைந்தன உரைத்தியாம் உதவுவம் என்னுக்
களக ணுகிய கருமிடற் றெந்தையாந் துரைப்பத்
துளிகண் போர்த்திட நோக்கரி தாயிவை சொல்வான். ௩௭.

மாசில் ஆதவர் அளப்பிலர் எழுந்தென வயங்குந்
தேசு பூத்தநின் செழுமலர்ச் சேவடி காணக்

கூசு கின்றனன் கண்ணிணை கூசிடா வண்ணம்
ஈச நல்துதி அன்னதே வாமெனக் கென்றான். ௩௮.

காக்கு மாயனுங் கடிமலர்க் கமலநா யகனும்
வாக்கி னால்உயர் மனத்தினாற் காணொணா வடிவம்
நோக்கு மாறருள் புரிதலும் நோக்கிய பாவனை
நீக்கம் இன்றிவாழ் அன்னையைப் பார்த்திது நினைவான். ௩௯.

முன்ன வன்றிரு மேனியில் உறைந்திட முயன்ற
தென்ன நற்றவ மென்னினும் இவளென நோனா
துன்னி நோக்கலும் ஒருவிழி மறைந்திட இவன்யார்
துன்னு வஞ்சகன் எனஉமை அரனொடு சொன்னாள். ௪௰.

மாது நின்றவப் பெருமையை மதித்தனன் அல்லால்
யாது சொற்றனன் முனியலை இவன்விழி யருளேன்
றுதி நாயகன் அறைதலும் அம்பலத் தமர்ந்த
போத ரிக்கணாள் அளித்தலும் பொற்கணா னதுவே. ௪௧.

இழந்த தன்விழி பெறுதலும் இயக்கர்தம் பெருமான்
குழந்தை வெண்பிறைக் கண்ணியன் குரைகழல் வணங்காத்
தழைந்த அன்பினாற் பரையிரு தாமரைச் சரணம்
விழைந்து போற்றிநல் லுவகைமீ தூர்ந்தெழத் தொழுதான். ௪௨.

தொழுத வேந்தனைத் துணைமலர்க் கைகளாற் றைவந்
தெழுக இன்றுதொட் டென்னுயிர்த் தோழனீ யென்னப்
பழுதி னல்வாம் அருளிநீ பாவிய இலிங்கம்
விழையு நின்னுடை பெயரினால் விளங்குக என்றான். ௪௩.

இயக்கர் விஞ்சையர் துய்யகர் கின்னரர் இறைஞ்சி
வியக்க நீணிதிக் குபேரனும் பெயரொடு மேவிப்
பயக்கு நல்வளத் தளகையிற் பரிவின்வாழ் கென்ன
முயற்க ளங்கமின் மதிமுகத் துமையிவை மொழிந்தாள். ௪௪.

வாம ளித்தபின் வரிமிடற் றஞ்சிறை யறுகால்
அரவ வண்டிமிர் கொன்றையஞ் சடைமுடி அண்ணல்
உருவ மேகலை உமையொடு மறைதலுங் குபேரன்
பரிவின் வாழுமிவ் வளகையின் எனப்பகர்ந் தனரால். ௪௫.

---

## சூரியனுலகு சண்ட அத்தியாயம்.

(The glory of the Sun, and the excellency of the Gayatri.)

மின்பொருவு செங்கதிர் விரித்திருள் விழுங்கும்
பொன்பிறழும் ஒருருளின் ஏழ்புரவி பூண்ட
மன்பெரிய தேரினுறை வானவனை நோக்கி
அன்பொடு வணங்கவருள் செய்தனன் அகன்றான். ௧.

ஆதபன் அகன்றிடலும் அந்தணன் உரைப்பான்
யாதுதவம் ஆற்றுநர்கள் இவ்வுலகு சேர்வார்
போதல்புரி தேவினிலை என்புகல்தீர் என்னக்
காதலொடு விண்டுகண நாதர்கள் உரைப்பார். ௨.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

பூதமெவை யுந்தனி புரந்திடுவன் யாவன்
ஏதமற முத்தொழில் இயற்றிடுவன் யாவன்
வேதவடி வாய்நனி விளங்குமவன் யாவன்
மாதவ அவன்கோலிவன் என்னமறை சாற்றும். ௩.

இன்னகதிர் வானவனை யானென மதித்துப்
பொன்னடி பணிந்தினிது பூசனை புரிந்தோர்
மன்னுவர்கள் இப்பதம் வழுத்தல்புரி யாதோர்
துன்னவரி தாதுமிரு டுங்குலது சேர்வார். ௪.

(வே.) கதிய ளித்திடு காயத் திரிதனை
உதய காலையில் உச்சியின் மாலையில்
விதியின் ஓதல் விடுத்துறை கின்றவர்
பதிதர் ஆதுவர் ஏழு பகலினே. ௫.

(வே.) பொருவறு காயத் திரிதனை உதயம் பொருந்திடும் அளவினின் றுரைத்து [தில்
மருவுநண் பகலிற் பரிதியை நோக்கி நவின்றுபொன் மாலையம் பொழு
விரிகதிர் உடுக்கள் தோன்றிடு காறும் விழைவொடு மௌநமாய் இருந்து
திரிதரு புலங்கள் அடக்கினர் செபிக்கிற் செங்கதிர் உலகிடை சேர்வார். ௬.

மைந்துடை மருந்தே காசூர்த் தெறுவான் மாலையுங் காலையும் பகலும்
அந்தணர் உதவும் அருக்கியப் புனலை ஆதபன் இனிதுவந் தருள்வான்
முந்துசீர்க் காயத் திரியினுற் காலை மும்மறை அருக்கியம் புரிதல்
நந்தலில் சிறப்பார் உலகமோர் மூன்றுந் தானமாய் நல்குதல் பொருவும். ௭.

அறைவருங் காயத் திரிதனக் கிணையாய் அறைவதோன் றில்லையாங் கதுபோல்
நிறைபுனல் வளங்கூர் காசியம் பதிக்கு நிகர்தரு பதியுமாங் குறையும்
இறைவனை நிகர்க்குங் கடவுளும் இலையால் இயம்புகா யத்திரி எழுதா
மறையொடு கமல மலரினுன் முகற்கும் ஈன்றதாய் எனவதத் துணைப்பார். ௮.

தேர்வருந் தவத்துக் கோசிகன் காயத் திரிதனைச் செபித்தலால் அன்றோ
அருமறைப் பிரம இருடியாய்ப் படைக்கும் அருந்தொழிற் கொருவனுய் அமர்ந்தான்
பாவுநான் மறையும் அறுவகை நூலும் பயின்றுளான் அந்தணன் அல்லன்
பொருவில்சீர்க் காயத் திரிதனை விதியிற் புகன்றுளான் அந்தணன் ஆவான். ௯.

சிறந்தபல் லுயிர்க்கும் எண்பெருந் திசைக்கும் வியாபியாஞ் செங்கதிர்ச் செல்வன்
பிறந்ததும் பிறவா நிற்பதும் பிறக்கப் படுவதும் பேசிலாங் கவனே

அறிந்துணர் காயத் தீர்தவனை ஓதி அலர்கதிர்ச் செல்வனை அன்பால்
நறுந்துணர் தூவிக் கைதொழு பவரோ கண்ணுமிப் பதத்தில்வீற் றிருப்
பார். ௰.

அருக்கபூ சத்தில் அருக்கழ லத்தில் அருக்கஅத் தத்திலுத் திரத்திற்
றிருக்கிளர் அருக்க வாரமேன் பதனிற் செழுஞ்சுடர்ப் பரிதிவா னவ
னைக்
கருத்துற நினைத்து மெய்மகிழ் பொடிப்பக் கைதொழு திருகணீர் வார
மருக்கிளர் மலர்தூய் இறைஞ்சுவார் தமது மனத்தினில் விழைவது
பெறுவார். ௰௧.

பூசமா தத்தின் அருக்கவா ரத்திற் புலரியின் நீரிடைப் படிந்து
மாசறு தானம் ஓமநற் செபங்கண் மனமகிழ் சிறப்பவாங் கியற்றிப்
பேசரும் காமக் குரோதம்விட் டருளாற் பிறங்குசெங் கதிரவற் றொழு
வோர்
ஏசலில் வனப்பின் அரம்பையர் மருவ இரவிமன் பதத்தில்வீற் றிருப்
பார். ௰௨.

செம்பின்வள் ளத்திற் றண்புன னிறைத்துச் செய்யசாந் தறுதவெள்
ளரிசி
வம்பவிழ் அலரிப் போதுதூய் முழந்தாண் மண்ணிடை ஊன்றிமுன் உ
ரைத்த
ஐம்பதோ டிருபா னுமழும் ஓதி ஆங்கது சென்னிமட் டேந்தித்
தம்பொறி அடக்கி அருக்கியங் கொடுப்போர் தயங்குமிப் பதத்தினிற் சா
ர்வார். ௰௩.

மன்னுபேர் ஒளிகட் குறையுளாம் பரிதி வானவன் பெருமையை யா
ரோ
இன்னதென் றெடுத்து மொழிதவர் எம்மால் இயன்றன மொழிந்தன
மென்னுத்
தன்னமர் கணங்கண் மொழிதல்கேட் டன்னோர் தம்மொடும் விழை
வினுங் ககன்று
சென்னெறி அதனிற் புரந்தான் உறையும் உலதுகண் டுளமகிழ் சிற
ந்தான். ௰௪.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

# RAMAYANA.

# இராமாயணம்.

## பாயிரப் படலம்.

(A sketch of the History contained in the Ramayana.)

அரிதிரு விளையாட் டனந்தமற் றதன்மேற் சென்றிடுங் காலமும் அனந்தம்
உரைபெறு கதையும் அனந்தமற் றதனில் ஓர்கதை உம்பர்தம் பொருட்டால்
இருநில மீதில் இராமவ தாரம் எடுத்திகல் இராவணன் முதலாந்
திருவிலி அரக்கர் குலத்தைவேர் அறுக்கச் செங்கண்மால் திருவுளத் துணர்ந்தே. க.

திரிபுரப் பகைவன் அயன்முதற் றேவர் தம்மொடுஞ் சேணுல கிருந்தே
கருநிறத் தரக்கர் அறிவுற விரகிற் கருதிய மந்திரச் சூட்சி
வருகதை அனைத்தும் அறைந்தனர் அமரர் மற்றயல் நின்றநா ரதனுக்
கரிதவன் அகத்தின் அடக்குதற் கடங்கா தாதலின் அவனிவந் தடைந்தான். உ.

அடைந்தனன் இமயத் தடவரை மருங்கின் ஆண்டொரு முனிவனம் புலனுங்
கடந்துநற் றவத்துள் இருந்திடுங் காலத் தவனுடல் காந்துற மூடித்
துறந்துபுற் றெடுத்தோர் மலையெனத் தோன்றத் தொன்மறை நாதன் அதுகண்
டிடந்தா வளர்ந்த புற்றுள்வான் மீகர்க் கியம்புதும் எனமனத் தெண்ணி. ௩.

இருநிலத் தெழுந்த புற்றுடை நெடுநாள் இந்தியம் அடக்குவன் மீகன்
கருதுநற் றவத்தின் இருந்தமை அறிந்தே கருணையங் கடவுள்முன் உரைத்த
மருவருஞ் சூட்சி வருகதை அனைத்தும் மற்றவன் செவியிடைப் புகுதப்
பொருமுறத் தீண்ட புற்றின்வாய் அதனைப் பொருந்துற விரித்திவை புகல்வான். ௪.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

புலத்தியன் வழியில் உதித்த ராவணன்முன் புரிந்தநற் றவத்தினால் வி
யந்து
சலத்தொடு மதியம் புனைசடைக் கடவு டான்கொடுத் திடும்பெரு வ
ரத்தின்
வலத்தனைவ் வுலகுந் தனதடிப் படுத்தி மற்றவன் கிளையொடு மருவி
நிலத்தினிற் சிறக்கும் இலங்கையம் பதியி னெடும்பகல் அரசுவீற்
றிருந்தான். ௫.

இருந்திடும் அரக்கன் இமையவர் உலகங் கெடுத்துமற் றவர்தமை வ
ருத்தப்
புரந்தான் முதல புங்கவர் புலம்பிப் பொன்னகர் துறந்துபோய் அழியா
வரந்தரு கடவுள் ஆகிய மூவற் குரைப்பமற் றவரில்வா னதியைச்
சிரந்தனிற் புனைந்த தேவெடுத் துரைத்தான் றெசமுகத் தரக்கன து
ரமே. ௬.

மறந்திகழ் அரக்கன் மனித்தனைப் பொருளாய் மதித்திலன் மற்றொரு
திறத்தால்
இறந்திடா திருக்கும் படிபல வரமும் பெற்றனன் ஐயானவற் களித்
தேன்
நிறந்திகழ் திகிரிக் கடவுணின் விரகால் நீயவற் செகுத்திடா திருக்கின்
இறந்திடும் உலகம் எனச்சிவன் கூற எம்பிரான் றிருவிழை யாட்டி
ன். ௭.

மனிதரிற் பிறந்தே இராக்கதர் கிளையை மடித்திட மதித்திடுங் கருத்
தாற்
றினகரன் குலத்திற் றெசரதன் றனக்குச் சிறுவனாய்த் தானுதித் திட
வுந்
தனதுகைத் திகிரி சங்குமற் றனந்தன் றம்பிய ராய்உதித் திடவும்
பனிமலர்க் கமலத் தவிசுறை மடந்தை பார்மகள் வயிற்றுதித் திட
வும். ௮.

மறக்குணத் தரக்கன் றனக்குமுன் நந்தி வழங்கிய சாபமே வழியாய்த்
துறக்கம்விட் டமரர் யாவருங் குரங்காய்த் தொன்னில மீதுதித் திடவும்
மறைக்கொரு முதலா மாயன்மற் றிதெல்லாம் வகுத்துமற் றவரொடு நி
லத்திற்
பிறக்குமுன் உரைத்த சூட்சியீ தென்று பேசினன் பிறங்குயாழ் முனி
வன். ௯.

மாயவன் அரக்கர் தமைச்செகுப் பளவு மாநிலத் தொருவரும் அறியா
தேயிது மறைத்தும் என்றனன் அதனால் இந்தவான் புற்றின்வாய் அ
வனும்
நேயமோ டுரைத்து நீள்விசும் பேக நெடும்பகல் மாயனை நினைந்தே
தூயநற் றவத்தின் இருந்தவன் செவிக்குச் சுராமு தெனும்படி கேட்
டான். ௰.

கேட்டலுங் கருணைக் கடவுண்மா நிலத்தே கேடிலா திராமவ தாரந்
தோட்டலர் இதழிப் பாமனே முதல சுரரொடுந் தோன்றுறுஞ் சூட்சி

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

வாட்டமில் கருத்தின் மதித்தரி ராம ராமவென் றநுதினம் வழுத்திக்
கூட்டிய தலத்துக் கோதில்வான் மீகன் குறைவறு தகத்திடைக் குறி
த்தான். ௰௧.

கிறைபாம் பொருவள நினைதருந் தவத்தி னின்றஎன் செவிக்கழ
தெனவே
உறையுமிக் கதையின் வதுப்பினை உரைத்த தியாழ்முனி யெனமனத்
துணர்ந்து
கறைகமழ் துளபத் தண்ணறன் செய்கை நலத்தையு மனத்திடை
நயந்தே [௰௨.
மறைபயில் முனிவன் றவத்துறை முடித்து மாதவர் தம்மொடு மருவி.

மூவரும் ஒருவர் ஆகிய கடவுள் மொழிந்திடும் பாமரா சியமெய்த்
தேவருந் தமது பாடையின் உரைத்த திறத்தையும் அறிந்துவன் மீகன்
பாவரு வடநூற் பாப்பின்மற் றிதெல்லாம் பகுத்திசை பெறும்படி மதி
த்தே
காமரு பனுவ னுயகி அருளா னயந்திது கூறுவான் றுடங்கி. ௰௩.

நாதன் உரைத்த கதைமுத லாக நாரணன் அவனியிற் பிறந்து
சீர்பெறுஞ்சனகிதனமணம் புணர்ந்து தென்னிலங் காபுரி அடைந்து
போருறும் அரக்கர் குலத்தைவேர் அறுத்துப் புவிபுரந் தமரரை நிலை
யிட் [௰௪.
டேர்செய்வை குண்டத் திடையெழுந் தருளி இருந்திடுங் காதையிறுக.

மற்றிதற் குள்ளாய் வருங்கதை அனைத்தும் வகுத்திரா மாயணம் என
வே
சொற்றனன் உலகந் துதிப்பமற் றவனுஞ் சொல்லிய தொகைப்படி
எடுத்துக்
கற்றவர் புகழக் கவிபொழி கம்பன் கருதருந் தமிழினிக் கதைகள்
முற்றையும் விருத்தப் பாவினுல் மொழிந்தான் எனவெடுத் துரைத்த
பாயிரமே. ௰௫.

(வே.) நாரணன் விளையாட் டெல்லாம் நாரத முனிவன் கூற
வாரணக் கவிதை செய்தான் அறிந்துவான் மீகன் என்போன்
சீரணி சோழ னுட்டுத் திருவெழுந் தூரு வச்சன்
காரணி கோடையான் கம்பன் றமிழினிற் கவிதை செய்தான். ௰௬.

பாசமர் பத்துநூறு படலநூற் றெண்பத் தொன்று
கரைசெறி காண்டம் ஏழு கதைகளா யிரத்தெண் ணூறு
விரைசெறி விருத்தம் பன்னி ராயிரத் தெண்ணூற் றுறு
வரைசெறி கம்பன் சொன்ன வண்ணமும் எண்பத் தேழே. ௰௭.

அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன் றமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானுந் தமிழினிக் கதையை நாட்டிக்
கம்பநா டுடைய கோமான் கவிச்சக்ர வர்த்திபார்மே
னம்புபா மாலை யாலே நார்க்குமின் னமுதம் ஈந்தான். ௰௮.

இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம் எய்தி அரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஓங்கு நீழல் இருந்தாலுஞ்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

செம்பொன் மேரு அனையபுயத் திறல்சேர் ராமன் றிருக்கதையுட்
கம்ப நாடன் கவிதையைப்போற் கற்றோர்க் கிதயங்களி யாதால். ௰௯.

எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேற் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளிற்
கண்ணிய வாங்கர் முன்னே கவியாங் கேற்றி னனே. ௨௰.

(வே.) நடையி னின்றுயர் நாயகன் றேற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தொல்லைநன் மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே. ௨௧.

இறுவ ரம்பின் இராமவென் றலும்பர்
நிறுவர் என்பது நிச்சயம் ஆதலால்
மறுவி ரக்கதை கேட்டவர் வைகுண்டம்
பெறுவர் என்பது பேசுதல் வேண்டுமோ. ௨௨.

அன்ன தானம் அகிலநற் றனமுங்
கன்னி தானங் கபிலையின் றனமுஞ்
சொன்ன தானத்து றும்பலன் றேயுமால்
மன்னி ராமன் கதைமற வார்க்கரோ. ௨௩.

(வே.) இனையநற் காதை முற்றும் எழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக் கேட்
போர்
கனைகடற் புடவி மீதே காவலர்க் காசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலை விண்ணவன் பதத்தைச் சேர்வார். ௨௪.

வான்வளஞ் சுரக்க நீதி மறைநெறி முறையெந் நாளுந்
தான்வளர்ந் திடுக நல்லோர் தங்கிளை தழைத்து வாழ்கத்
தேன்வளர்ந் தறுத மாலைத் தேசாத ராமன் காதை
யானறிந் தளவிற் பாடல் இடைவிடா தெழுக அன்றே. ௨௫.

கலைமறை முனிவர் வாழ்கக் காரிகை யார்தங் கற்பு
நிலைபெற மன்னர் செங்கோல் நீணிலந் தன்னில் வாழ்க
அலைகடல் இலங்கை மூதூர் அரக்கர்வேர் அறுத்த வீரச்
சிலைபயில் இராமன் காதை செந்தமிழ் சிறந்து வாழ்க. ௨௬.

---

## திருஅவதாரப்படலம்.

(On the Incarnation of Vishnu in the person of Rama.)

உலப்பில்பல் யாண்டெலாம் உறுகண் இன்றியே
தலைப்பொறை ஆற்றினேன் றநயர் வந்திலர்
அலப்புநீர் உடுத்தபார் அளிக்கு மைந்தரை
நலப்புகழ் பெறவினி நல்க வேண்டுமால். ௧.

என்றலும் அரசனீ இரங்கல் இவ்வுல
கொன்றுமோ உலகமீர் ஏழும் ஓம்பிடும்

வன்றிறன் மைந்தலா வழங்கு மாமகம்
இன்றுநீ இயற்றுதற் கெழுக ஈண்டேன்றன். ௨.

ஆயதற் குரியன கலப்பை யாவையும்
ஏயெனக் சோணர்ந்தனர் இறைவற் கேந்தலுந்
தூயநற் புனல்படீஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்தியே சாலை புக்கினுன். ௩.

முழங்கழன் மூன்றையு மூட்டி ஆகுதி
வழங்கின்ன் ஈறு திங்கண் மாய்ந்தபின்
தழங்கிய துந்துமி தாவ வானகம்
விளங்கினர் விண்ணவர் வேயிலின் றேன்னவே. ௪.

முகமலர்ந் தருளோடு மோய்த்து வானுளோர்
அகவிணர் நறுமலர் தூவி ஆர்த்தேழத்
தகவுடை முனியுமத் தழலி னுப்பணே
மகவருள் ஆகுதி வழங்கி னுனரோ. ௫.

ஆயிடைக் கனலினின் றம்போற் றட்டமேற்
றூயநற் சுதைநிகர் பிண்டம் ஒன்றுசூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமோன் றேழுந்த தேந்தியே. ௬.

வைத்தது தரைமிசை மறுத்தும் அவ்வழி
தத்திய பூதமத் தவனும் வேந்தனை
உய்த்தபின் அமதுனக் குரிய மாதருக்
கத்தகு மாபினுல் அருளு வாய்என்றன். ௭.

மாமுனி பணித்திட மன்னர் மன்னனுந்
தூமமேன் சுரிகுழற் றேண்டைத் தூயவாய்க்
காமுறு கவுசலை காத்தின் ஓர்பகிர்
தாமறக் கோடுத்தனன் சங்கம் ஆர்த்தேழ. ௮.

கைகயன் றநயைதன் காத்தும் ஓர்பகிர்
செய்கையிற் கோடுத்தனன் றேவர் ஆர்த்தேழப்
போய்கையு நதிகளும் போழிலும் பூவணம்
வைதறுங் கோசலை மன்னர் மன்னனே. ௯.

நமித்திரர் நடுக்குறு நலங்கோண் மோய்ம்புடை
நிமித்திர மாபுளான் நெறிகோ ணீர்மையிற்
சுமித்திரைக் களித்தனன் சார்க்கு வேந்தினிச்
சமித்ததேம் பகையெனத் தமரோ டார்ப்பவே. ௰.

பின்னுமப் பேருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தவை
தன்னையுஞ் சுமித்திரை தனக்கு நல்கினுன்
ஒன்னலர்க் கிடமும்வே றுலகின் ஓங்கிய
மன்னுயிர் தமக்குநீள் வலமுந் துள்ளவே. ௰௧.

வாம்பரி வேள்வியு மகவை நல்குவ
தாம்புரை ஆகுதி பிறவும் அந்தணன்
ஓம்பிட முடித்தபின் உலகு காவலன்
ஏம்பலோ டேழுந்தனன் யாரும் ஏத்தவே. ௰௨.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

முருடொடு பல்லிய முழங்கி ஆர்த்தெழ
மருடரும் உலகினில் வறுமை நீங்கிடத்
தெருடரு கடன்முறை சிறப்பி னோடுசெய்
தருடரும் அவையினில் அரசன் எய்தினான். ௰௩.

செய்முறைக் கடனறந் திறம்பல் இன்றியே
ஐம்முறைக் கடவுளர்க் கீந்து விண்ணுளோர்க்
கம்முறைக் களித்துநீ டந்த ணாளர்க்குங்
கைமிசைப் பொழிந்தனன் கனக மாரியே. ௰௪.

வேந்தர்கட் கரசொடு வெறுக்கை தேர்பரி
வாய்ந்தநற் றுகிலொடும் வரிசைக் கொப்பன
ஈந்தனன் பல்லியந் துவைப்ப ஏகிநீர்
தோய்ந்தனன் சரயுநற் றுறைக்கண் எய்தியே. ௰௫.

முரசினங் கறங்கிட முத்த வெண்குடை
விரசிமே னிழற்றிட வேந்தர் சூழ்ந்திட
அரசவை அடைந்துளி அயனு நாணுறும்
உரைசெறி முனிவன்றாழ் வணங்கி ஓங்கினான். ௰௬.

அரியநற் றவமுடை வசிட்டன் ஆணையால்
இரவலநற் சிருங்கமா முனிவன் றடோழா
உரியபற் பலவுரை பயிற்றி உய்ந்தனன்
பெரியநற் றவவினிப் பெறுவ தியாதென்றான். ௰௭.

வாங்கிய துயரொழி மன்னவன் பின்னரும்
பாங்குறுங் கடன்முறை பலபயிற் றல்கொண்
டோங்கிய உவகையின் ஆசி யோடெழா
நீங்கினன் இருந்தனன் நேமி வேந்தனே. ௰௮.

எந்தைநின் அருளினால் இடரு நீங்கியே
உய்ந்தனன் அடியனேன் றுரைப்ப ஒண்டவன்
சிந்தையின் மகிழ்ச்சியால் வாழ்த்தித் தேர்மிசை
வந்தமா தவரொடும் வழிக்கொண் டேகினான். ௰௯.

தெரிவையர் மூவருஞ் சிறிது நாட்செல
மருவிய வயாவொடு வருத்தந் துய்த்தபின்
பொருவறு திருமுகம் அன்றிப் பொற்பினீர்
உருவமு மதியமோ டொப்பத் தோன்றினார். ௨௰.

ஆயிடைப் பருவம்வந் தடைந்த எல்லையின்
மாயிரும் புவிமகள் வாழ்வின் ஓங்கிட
வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்புகழ்
தூயகர்க் கடகமும் எழுந்து துள்ளவே. ௨௧.

சித்தரும் இயக்கருந் தெரிவை மார்களும்
வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்
நித்தலு முறைமுறை நெருங்கி ஆர்த்தெழத்
தத்துற லொழிந்துநற் றருமம் ஓங்கவே. ௨௨.

ஒருபகல் உலகெலாம் உதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரும் அவனை அஞ்சனக்

கருமுகிற் கொளுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை. ௨௩.

ஆசையும் விசும்புநின் றமரர் ஆர்த்தெழ
வாசவன் முதலினர் வணங்கி வாழ்த்துறப்
பூசமு மீனமும் போலிய நல்கினாள்
மாசறு கேகயன் மாது மைந்தனை. ௨௪.

தளையவிழ் தருவுடைச் சயில கோபனுங்
கிளையும்அந் தாமிசைக் கெழுமி ஆர்த்தெழ
அளைபுகும் அரவினோ டலவன் வாழ்வுற
இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி. ௨௫.

படங்கிளர் பஃறலைப் பாந்தள் ஏந்துபார்
நடங்கிளர் தாமறை நவில நாடக
மடங்கலு மகமுமே வாழ்வின் ஓங்கிட
விடங்கிளர் விழியினாண் மீட்டும் ஈன்றனள். ௨௬.

ஆடினர் அரம்பையர் அமுத யாழிசை
பாடினர் கின்னரர் துவைத்த பல்லியம்
வீடினர் அரக்கரென் றுவக்கும் விம்மலால்
ஓடினர் உலாவினர் உம்பர் முற்றுமே. ௨௭.

ஓடினர் அரசன்மாட் டுவகை கூறிநின்
றாடினர் சிலதியர் அந்த ணாளர்கள்
கூடினர் நாளொடு கோளு நின்றமை
நாடினர் உலகிடை நவையின் றென்னவே. ௨௮.

மேடமா மதித்திதி விளங்கு பஞ்சமி
நீடுநாள் பாவலகர்க் கடக நீதிசேர்
ஆடவர் திலகன துதைய ராசிகோ
ணாடிலே காதசர் உச்ச நால்வரே. ௨௯.

என்றனர் சாதகம் இறைவற் கேனையர்
தன்றமக் குந்தது முறையிற் றன்றெரிந்
தோன்றிய தமனியத் தெழுதி ஓதினார்
வன்றிறற் சுரர்தரு வாழ்த்தே டுப்பவே. ௩௰.

மாமுனி தன்னொடு மன்னர் மன்னவன்
ஏமுறு புனல்படிந் தித்ததோ டின்பொரு
டாமுற வழங்கிவெண் சங்கம் ஆர்த்தெழக்
கோமகார் திருமுகங் குறுகி நோக்கினான். ௩௧.

நோக்கினன் களிப்பெழ நுணுங்கு கேள்விநூல்
ஆக்கிய முனிவனை வணங்கி ஐயஎன்
பாக்கியம் பலித்ததிப் பாலர் என்றுபார்
காக்குறும் அரசனுங் கழறன் மேயினான். ௩௨.

ஆலயம் புதுக்குக அந்த ணாளர்தஞ்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைக்கச் சந்தியுங்
காலையும் அருள்புரி கடவு ளர்க்கினி
மாலையுந் தீபமும் வழங்க என்றனன். ௩௩.



Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

படைதவிர்ந் திடுகதம் பதிக ளேயினி
விடைபெறு துகமுடி வேந்தர் வேதியர்
நடைபெறு நியமமு நவையின் றுதுக
கடவுளர் விழாவோடு களிப்ப வெங்கணும். ௩௪.

இறைதவிர்ந் திடுகபார் ஆண்டோ ரேழோடேழ்
நிறைநிதிச் சாலதான் நீக்கி யாவையு
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை என்றனன் அரசர் கோமகன். ௩௫.

என்புளி வள்ளுவர் யானை மீமிசை
வன்பறை அறைதர நகா மாந்தரும்
மின்புரை நுசுப்பினர் தாமும் விம்மலால்
இன்பமென் றளப்பரும் அளக்கர் எய்தினர். ௩௬.

ஆர்த்தனர் மும்முறை அன்பி னுவுடல்
போர்த்தனர் புளகம்வேர் பொடிப்ப நீணிதி
தூர்த்தனர் எதிரெதிர் சொல்லி னேர்க்கெலாந்
தீர்த்தனென் றறிந்ததோ அவர்தஞ் சிந்தையே. ௩௭.

பண்வணையும் ஆயமுந் திரளும் பாங்கரும்
கண்ணகன் றிருநகர் களிப்புக் கைமீதுத்
தெண்ணேயுங் களபமும் இழுது நானமுஞ்
சுண்ணமுந் தூவினர் சொல்லி னேர்க்கெலாம். ௩௮.

(வே.) இத்தகை மாநகர் ஈறு நாளுஞ்
சித்த முறுங்களி யோடு சிறந்தே
தத்தமை ஒன்றும் உணர்ந்திலர் தாழ்வின்
மெய்த்தவ னும்ம விதிப்ப மதித்தான் ௩௯.

காமல யத்தளர் கைக்கரி எய்த்தே
அராவண யிற்றுயில் வோயென அந்நாள்
விராவி அளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராமன் எனப்பெயர் ஈந்தன னன்றே. ௪௰.

காதலம் உற்றேளிர் நெல்லி கடுப்ப
விாத மறைப்பொருண் மெய்நெறி கண்ட
வாதன் மதித்திடு மற்றைய ஒளியைப்
பாதன் எனப்பெயர் பன்னினன் அன்றே. ௪௧.

உலக்கினர் வஞ்சகர் உம்பரும் உய்ந்தார்
நிலக்கொடி யுந்துயர் நீத்தனள் இந்த
விலக்கரு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவன் என்றும் இசைத்தனன் முனிவன். ௪௨.

முத்துருக் கொண்டுசெம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக் குமெழில் உடையவி வொளியால்
எத்திருக் குங்கெடும் என்பதை எண்ணிச்
சத்துருக் கனெனச் சாற்றின னும்ம. ௪௩.

பொய்வழி யின்முனி புகலரு முறையால்
இவ்வழி பெயர்கள் இசைத்துளி இறைவன்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கைவழ் நதிபெறு கலைதெரி மறையோர்
மெய்வழி உவரி நிறைத்தனன் மென்மேல். ௪௪.

காவியு மலருறு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை அலதோர்
ஆவியும் உடலமும் இலதென அருளின்
மேவினன் உலகிடை வேந்தர்கள் வேந்தன். ௪௫.

அழுதுகு குதலையோ டணிநடை பயிலாத்
தீமரம தறவரு தினகரன் எனவுந்
தமரம துடன்வளர் சதுமறை யெனவுந்
தமர்க ணிலமகள் துறைவற வளர்நாள். ௪௬.

சவுளமோ டுபநய விதிமுறை தருதற்
றிவளவ தெனவொரு துறைபிறி திலதாய்
உவடரு மறையினொ டொழிவறு கலையுந்
தவழ்மதி புனையா னிகர்முனி தாவே. ௪௭.

யானையும் இரதமும் இவுளியு முதலாம்
ஏனைய பிறவும வியல்பினி னடையுற்
றூனுறு படைபல சிலையோடு பயிலா
வானவர் தனிமுதல் கிளையோடு வளர்நாள். ௪௮.

அருமறை முனிவரும் அமரரும் அவனித்
திருவுறு நகருறை சனமென இடரோ
டிருவினை துணிதரும் இவரினின் இவணின்
றொருபொழு தகல்கிலம் எனவவண் உறைவார். ௪௯.

ஐயனும் இளவலும் அணிநில மகடன்
செய்தவம் உடைமைக டெரிதா நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியு மருவா
நெய்துழ லுறுமிளை யெனநனி திரிவார். ௫௰.

பரதனும் இளவலும் ஒருகொடி பகிரா
தீரதமும் இவுளியும் இவரினு மறைநூல்
உரைதரு பொருளினும் ஒழிவிலர் எமையாள்
வரதனும் இளவலும் எனமரு வினரே. ௫௧.

வீரனும் இளைஞரும் வெறிபொழில் களின்வாய்
ஈரமோ டுறைதரு முனிவர ரிடைபோய்
ஓர்பொழு தணிநகர் உறைபவர் எதிரக்
கார்வரு பயிரென வளருவர் களியால். ௫௨.

ஏழைய ரனைவரும் இவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர் கிளைகளும் இனையார்
வாழிய எனவவர் மனனுறு கடவுட்
டாழ்துவர் கவுசலை தசரதன் எனவே. ௫௩.

கடல்கரு முகிலொளிர் கமலம தலரா
வடவரை யுடன்வரு செயலென மறையுந்
தடவுதல் அறிவரு தனிமுத லவனும்
புடைவரும் இளவலும் எனநனி புகல்வார். ௫௪.

Digitized by Google Original from NEW YORK PUBLIC LIBRARY

எதிர்வரு மவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர
எதுவினை இடரில இனிதுநு மனையு
மதிதரு குமரரும் வலியர்கோ லெனுமால். ருரு.

அஃதைய நினையெம தாசென உடையர்க்
கிஃதொரு பொருளல தெமதுயிர் உடனேழ்
மகிதல முழுதையும் உறுதுவை மலரோன்
உதுபகல் அளவென உரைநனி புகல்வார். ருசு.

(வே.) இப்பரி சணிநகர் உறையும் யாவரும்
மெய்ப்புடன் வழுத்தவும் இளைய வீரர்கள்
தப்பற அடிநிழ றழுவி ஏத்தவு
முப்பாம் பொருளுக்கு முதல்வன் வைகுறும். ருஎ.

அரசர்தம் பெருமகன் அகிலம் யாவையும்
விரசுறு தனிக்குடை விளங்க வென்றிசேர்
முரசொலி கறங்கிட முனிவர் ஏத்துறக்
கரைசெயற் கரியதோர் களிப்பின் வைகினான். ருஅ.

நனைவரு கற்பக நாட்டு நன்னகர்க்
கனையனென் றெவர்களும் அயிர்ப்பச் சிந்தையான்
நினையவும் அரியது விசும்பி னீண்டதோர்
புனைமணி மண்டபம் பொலிய எய்தியே. ருகூ.

தூயமேல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயுயர் விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயகன் இவன்கோலென் றயிர்த்து நாட்டமோர்
ஆயிரம் இல்லென ஐய நீங்குவார் சுய.

அப்பெருந் திருவொடும் அகில நாதனென்
றெப்பெரும் புவனமும் இறைஞ்சி ஏத்தவே
தப்பறுந் தருமமுந் தயாவுந் தாங்கியே
ஒப்புர வுடனவன் உவந்து வாழுநாள். சுக.

மடங்கல்போன் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகம்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொணான் முகனையும் படைப்பன் ஈண்டெனத்
தொடங்கிய கோசிக முனிவன் றேன்றினான். சுஉ.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

# NEETHINERI VILAKKAM.

# நீதிநெறிவிளக்கம்.

(On Wealth, Charity, Penance, and Bliss.)

நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்,—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று. க.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்,—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. உ.

தொடங்குங்காற் றுன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி,—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர இன்பத்தை முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது. ௩.

கல்வியே கற்புடைப் பெண்டிர்அப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச்,—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமும் உண்டு சிலர்க்கு. ௪.

எத்துணைய வாயினுங் கல்வி இடமறிந்
துய்த்துணர் வில்லெனின் இல்லாகும்,—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை இன்றெனின் என்னும் அஃதுண்டேற்
பொன்மலர் நாற்றம் உடைத்து. ௫.

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லு,—நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று. ௬.

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்,—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. ௭.

நெடும்பகற் கற்ற அவையத் துதவா
துடைந்துளார் உட்குவருங் கல்வி,—கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால். அ.

வருந்தித்தாங் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்,—கருந்தனங்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். கூ.

எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவா,—மனைத்தக்காண்
மாண்பிலா ளாயின் மணமக னல்லறம்
பூண்ட புலப்படா போல். ய.

இன்சொல்லன் றாழ்நடையன் ஆயினுமொன் றில்லானேல்
வன்சொல்லின் அல்லது வாய்திறவா,—என்சொலினுங்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய அல்ல பிற. யக.

இவறன்மை கண்டும் உடையாரை யாருங்
குறையிரந்துங் குற்றேவல் செய்ப,—பெரிதுந்தா
முற்பக லோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்
கற்பன்றே கல்லாமை அன்று. யஉ.

கற்றார்க்குக் கல்வி நலனே நலனல்லான்
மற்றோர் அணிகலம் வேண்டாவா,—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டாம் யாரோ
அழகுக் கழகு செய்வார். யங.

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉங்
கற்றனம் என்று களியற்க,—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழலாய்
கொல்லுலைக் கூடந் தினல். யச.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க,—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெலாம்
எற்றே இவர்க்குநாம் என்று. யரு.

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமுஞ் செல்வம் எனப்படும்,—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின். யசு.

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப,—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு. யஎ.

விலக்கிய ஓம்பி விதித்தனவே செய்யு
கலத்தகையார் நல்வினையுந் தீதே,—புலப்பகையை

வென்றென நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று
தம்பாடு தம்மிற் கொளின். ௰அ.

தன்வன வியப்பிப்பான் றற்புகழ்த நீச்சுடர்
நன்னீர்ச் சொரிந்து வளர்த்தற்றற், - றன்வன
வியவாமை அன்றே வியப்பாவ தின்ப
நயவாமை அன்றே நலம். ௰௯.

பிறாாற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமை நோற்பதொன் றுண்டு,—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ந்து சொலல். ௨௰.

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை,—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுரைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமைச் சூழ்ந்து சொலல். ௨௧.

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்,—திறப்படூஉந்
தீவினை அஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல். ௨௨.

கற்பன ஊழற்றூர் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவாய் அங்காத்தன்,—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மின் என்பவே மாப்பறவை
புல்லுரு வஞ்சுவ போல். ௨௩.

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணசையினூர் வாய்ச்சோா,—தாக்கணங்கு
மாணவாம் பெண்மை உடைத்தெனினும் பெண்ணலம்
பேடு கொளப்படுவ தில். ௨௪.

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிறிதன்று,—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன். ௨௫.

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார்,—மாத்தகைய
அந்தப் புரத்தது பூனை புறங்கடைய
கந்துகொல் பூழ்க்கைக் களிறு. ௨௬.

கண்ணிற் சொலிச்செவியி னோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந்,—தண்ணளியான்
மன்பதை ஓம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு. ௨௭.

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்ற
மடிகொன்று பால்கொளலு மாண்பே,—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. ௨௮.

இன்று கொளற்பால நாளைக்கொளப் பொறன்
நின்று குறையிரப்ப நேர்படான்,—சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடனலன் வேந்தும் அலன். ௨௯.

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப துடுத்துண்ப துண்ணா,—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம். ௩௰

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றே டுவணையாத் தெரிதந்துங்,—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை அன்று. ௩௧.

ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு,—நேர்நின்று
காக்கைவெளி தென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு. ௩௨.

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சிமற் றில்லாது,—மண்டேரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
போர பெருமூச் செறிந்து. ௩௩.

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. ௩௪.

கல்எணைக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா,—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு. ௩௫.

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்த்தப்பிற்
றூங்குங் களிறே துயருறா,—ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. ௩௬.

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையின் ஏக்கழுத்த மிக்குடைய—மாகொல்
பகைமுகத்த ஒள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு. ௩௭.

களைகணைத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்,—தளர்நடைய
தானுடம் பென்று புகழுடம் போம்புதற்கே
தானுடம் பட்டார்க டாம். ௩௮.

தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக,—பின்னர்ச்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

சிறுவரை ஆனுயிம் மன்ற தமக்காங்
கிறுவரை இல்லை எனின். ௩௯.

கலனழிந்த கற்புடைப் பெண்டிரும் ஐந்து
புலனுெருங்கப் பொய்யொழிந் தாரும்,—கொலைஞாட்பின்
மொய்ம்புடை வீரும் அஞ்சார் மாண்மறலி
தும்பை முடிசூ டினும். ௪௰.

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும், விழலர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோ டுதற்கு. ௪௧.

இகழின் இகழ்ந்தாங் கிறைமகன் ஒன்று
புகழினும் ஒக்கப் புகழ்ப,—இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
நீர்வழிப் பட்ட புணை. ௪௨.

செவிசுடச் சென்றங் கிடித்தறிவு மூட்டி
வெதுளினும் வாய்வெரீஇப் போா,—கவுண்மதத்த
கைமா வயத்ததே பாகுமற் றெத்திறத்தும்
அம்மாண் பினவே அமைச்சு. ௪௩.

கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க,—ஒவ்வொருகால்
எண்மையன் ஏனும் அரியன் பெரிதம்மா
கண்ணிலன் உள்வியர்ப்பி னன். ௪௪.

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார்,—வெதுளின்மற்
காதன்மை உண்டே இறைமாண்டார்க் கேதிலரும்
ஆர்வலரும் இல்லை அவர்க்கு. ௪௫.

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலங் காண்டுமென் றெள்ளற்க,—பன்னெடுநாட்
காத்தவை எல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும். ௪௬.

உறுதிபயப்ப கடைபோகா ஏனும்
இறுவரை காறு முயல்ப,—இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க நீதன்றல் அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. ௪௭.

முயலாது வைத்தும் முயற்றின்மை யாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்னர்,—மயலாயும்
ஊற்றமி றாவிளக்கம் ஊழுண்மை காண்டுமென்
றேற்றார் எறிகான் முகத்து. ௪௮.

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே,—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி. ௪௯.

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து,—மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதேரிந்
தாள்வினை ஆளப் படும். ருய.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணு யினர். ருக.

சிறிய பகையெனினும் ஓம்புக தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்,—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. ருஉ.

புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார்
அகப்பகை ஒன்றஞ்சிக் காப்ப,—அனைத்துலகுஞ்
சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை. ருங.

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டுங்,—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. ருச.

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யார் வினைசூழ்ந்து
வட்கார் திறத்தாய் நின்றார்க்குத்,—திட்பமாம்
நாளுலந்த தன்றே நடுவன் நடுவன்மை
வாளா கிடப்பன் மறந்து. ருரு.

மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தவையுந் தீயவே ஆகும்,—எனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர். ருசு.

இனியவர் என்சொலினும் இன்சொல்லே இன்னார்
கனியு மொழியுங் கடுவே — அனல்கொளுந்தும்
வெங்காம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். ருஎ.

பொய்குறளை வன்சொற் பயனிலஎன் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது,—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். ருஅ.

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார், — பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். ருகூ.

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவுந்,—தவம்விற்றுங்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கூனும்பும் வாழ்வும் உரிமைவிற் றுண்பதூஉந்
தானோம்பிக் காத்த றலை. ௬௰.

இடைதெரிந் தச்சுறுத்து வஞ்சித் தெளியார்
உடைமைகொண் டேமாப்பார் செல்வ,—மடநல்லார்
பொம்மன் முலைபோற் பெருத்திடினு மற்றவர்
நுண்ணிடைபோற் றேய்ந்து விடும். ௬௧.

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா, – முற்றும்
வாவா வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா தீரா. ௬௨.

தத்த நிலைக்குந் குடிமைக்குந் தப்பாமை
ஒத்த கடப்பாட்டிற் றளுன்றி,—எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாதும் பொருள். ௬௩.

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வங்
குலமகளே ஏனையோர் செல்வங்,—கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில். ௬௪.

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோர்
நல்குரவே போலு நனிநல்ல,—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். ௬௫.

ஈகை அரிதெனினுஞ் சொல்லினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா,—நாகொன்று
தீவினைக் கம்மியனுல் வாய்ப்பூட் டிடப்படின்மற்
றவார் இவரோன்செய் வார். ௬௬.

சொல்வன்மை உண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல,—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். ௬௭.

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமேனிற் றாழ்வரோ தாழார்,—அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார். ௬௮.

செயக்கடவ அல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிகம் என்னுஞ்,—செயிர்த்துளைப்பின்
நெஞ்சுநோம் என்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று. ௬௯.

அல்லன செய்யினும் ஆகுலங் கூழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப,—அல்லாற்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்க செய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பார் ஆர். ௭௰.

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்,—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போற்
கைவிதிர்த் தஞ்சப் படும். எக.

தெய்வமுள தென்பார் தீயசெயப் புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றேறுக்குந்,—தெய்வம்
இலதென்பார்க் கில்லலத்தம் இன்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன். எஉ.

தீயசெயற் செய்வார் ஆக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல,—தீயன
நல்லன ஆகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல். எங.

நன்மக்கள் செங்நாத் தழும்பிருக்க நாள்வாயுஞ்
செங்நெறிச் செல்வாரிற் கீழல்லர்,—முன்னனத்தம்
ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்ளுடைவார்
தீய செயினுஞ் சில. எச.

பிறன்வரை நின்றள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே ஆயினும் ஆக,—சிறுவரையும்
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்நடுங்க உண்ணடுங்கு நோய். எரு.

கருமஞ் சிதையாமை கல்வி கெடாமை
தருமமுந் தாழ்வு படாமை,—பெரிதுந்தம்
இன்னலமுந் தன்றமை ஏரிளங் கொம்பன்னர்
நன்னலந் துய்த்தல் நலம். எசு.

கொலைலயஞ்சார் பொய்நாணர் மானமும் ஓம்பார்
களவொன்றே ஏனையவுஞ் செய்வார்,—பழியோடு
பாவமிஃ தென்னர் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப்பட் டார். எஎ.

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி ஏனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார்,—நறுவிய
ஆயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர். எஅ.

அன்போ டருளுடையர் ஏனும் உயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தாரார்,—புன்புலாற்
பொய்க்குடில் ஓம்புவரோ போதத்தாற் றம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார். எகூ.

சிற்றின்பஞ் சின்னீர தாயினும் அஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப,—முற்றுந்தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில். அய.

எவ்வினையர் ஏனும் இணைவிழைச்சொன் றில்லெனிற்
றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்,—அவ்வினை

சாத்தல் இலரேல் எனைத்துணையர் ஆயினுந்
தூர்த்தருந் தூர்ப்பார் அலர். ௮௧.

பாபாப்பி னேடே பலபல செய்தாங்
கிரவுபகற் பாழக் கிறைப்ப,—ஒருவாற்றன்
நல்லாற்றின் ஊக்கிற் பதறிக் குலைகுலைப
எவ்வாற்றன் உய்வர் இவர். ௮௨.

இளைய முதுதவம் ஆற்றுது நோற்றேன்
றுளைவின்று கண்பாடும் ஊழே,–விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாருந்
தாழாமை நோற்பார் தவம். ௮௩.

நல்லவை செய்யத் தொடங்கினு நோனமை
அல்லன அல்லவற்றிற் கொண்டுய்க்கும்,—எல்லி
வியனெறிச் செல்வாரை ஆறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல். ௮௪.

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுகம் அன்று பிறிதொன்றே, —கஞ்சுகம்
எப்புலமுங் காவாமை மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா தீது. ௮௫.

வஞ்சித்தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்,—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. ௮௬.

மறைவெளிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பாக்குங்,—கழிமுடைப்
புன்புலா னுற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து. ௮௭.

மெலியார் விழினும் ஒருவாற்றன் உய்ப
வலியார்மற் றென்றனும் உய்யார்,—நிலைதப்பி
நொய்ய சழக்கென வீழாது வீழினும்
உய்யுமால் உய்யா பிற. ௮௮.

எவரோவர் எத்திறத்தர் அத்திறத்தர் ஆய்நின்
றவாவர்க் காவன கூறி,—எவரோவர்க்கும்
முப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையான்
எப்பாலு நிற்ப தென. ௮௯.

மெய்யுணர்ந்தார் பொய்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி
கைவருதல் கண்ணுப் புலங்காப்பார்,–மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழிநாண நீள்கதவாச்
சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து. ௯௰.

கற்றுத் துறைபோய காதலர்க்குக் கற்பினுள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போன்,—முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றேன்றுவதே இன்பம்
இறந்தவெலாந் துன்பமல தில். ௯௧.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப்
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச்சென் றார். கூஉ.

ஐயந் திரிபின் றளந்துத்தீ யிற்றெளிந்து
மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார்,—தம்முளே
காண்பதே காட்சி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள். கூ௩.

---

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

# NALADIAR.

# நாலடியார்.

### யாக்கை நிலையாமை.

### (On the transitory nature of the body.)

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர்,—நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டால்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில். ௧.

வாழ்நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்,–வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல். ௨.

மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் கங்கே பிணப்பறையாய்,–பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம். ௩.

சென்றே எறிப ஒருகால் சிறுவரை
நின்றே எறிப பறையினை,–நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூட்டித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து. ௪.

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்,– மணங்கொண்டீண்
டுண்டுண் டுடென்னும் உணர்வினாச் சாற்றுமே
தொண்டொண்டொ டென்னும் பறை. ௫.

நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்கிலென் பல்லோர் பழிக்கிலென்
றேற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால். ௬.

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித், – தடுமாற்றந்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தீர்ப்போம்யாம் என்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல். எ.

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையால் ஆய பயன்கொள்க,—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றங்கே
நிலையாது நீத்து விடும். அ.

புன்னுனிமே னீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை,—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றான் எனப்படுத லான். கூ.

கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்,—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து. ய.

---

## அறன் வலியுறுத்தல்.

## (On propriety of Conduct.)

அகத்தாரே வாழ்வாரோன் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி இருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செயா தார். க.

ஆவாநாம் ஆக்க நசைஇ அறமறந்து
போவாநாம் என்னப் புலநெஞ்சே,—ஓவாது
நின்றுருற்றி வாழ்தி எனினுநின் வாழ்நாட்கள்
சென்றன செய்வ துரை. உ.

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை,—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை இகந்தொருவு வார். ௩.

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க,—கரும்பூரச்
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போதும் உடம்பு. ச.

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர். ரு.

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம். சா.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

மக்களால் ஆய பெரும்பயனும் ஆயுங்கால்
எத்துணையும் ஆற்றப் பலவானுற்,—றெக்க
உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும். எ.

உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிற்தாப் போர்த்து விடும். அ.

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார். கூ.

மான அருங்கல நீக்கி இரவென்னும்
ஈன விழிவினால் வாழ்வேன்மன்,—ஈனத்தால்
ஊட்டியகை கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்தும் எனின். ய.

---

## தூய்தன்மை.

(On Impurity of m[illegible]d and body.)

மாக்கேழ் மடநல்லாய் என்றாற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கில்லை,—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல். க.

தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானுன்,—மீப்போர்வை
பொய்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைமறியாப் பார்க்கப் படும். உ.

தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய ஒழியுமே,—எக்காலும்
உண்டி வினையுள் உறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல். ௩.

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவனோ
உண்ணீர்க் களைந்தக்கா னுங்குநுன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன். ச.

முல்லைமுகை முறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவனோ
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன். ரு.

துடருங் கோழவுங் குருதியும் என்புந்
தொடரு நரம்பொடு தோலும்,—இடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள். சு.

ஊறி உவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலக்குங் கும்பத்தைப்,—பேதை
பெருந்தோளி பெய்வளாய் என்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு. எ.

பண்டம் அறியார் படுசாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன்,—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்து
முடைச்சாகா டச்சிற் றுளி. அ.

கழிந்தார் இடுதலைக் கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி,—ஒழிந்தாரைப்
போற்றிநெறி நின்மின் இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாகச் சிரித்து. கூ.

உயிர்போயார் வெண்டலை உட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்,—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ணம் என்பதனுற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர். ௰.

---

## துறவு.

(On Renouncing Temporal Good.)

விளக்குப் புகஇருள் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் இல்லதாம் பாவம்,—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது. க.

நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்,—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையார் இல். உ.

இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா,—மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்ப
தலையாயார் தாமுய்யக் கொண்டு. ௩.

துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளை
இன்பமே காமுறுவர் ஏழையார்,—இன்பம்
இடைதெரிந் தின்னுமை நோக்கி மனையா
டடையொழிந்தார் ஆன்றமைந் தார். ௪.

கோன்னே கழிந்தன் றிளமையும் இன்னே
பிணியோடு மூப்பும்வருமாற் றுணிவோன்றி
என்னேடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு. ரு.

மாண்ட குணத்தோடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்,—பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மென்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார். சு.

ஊக்கித்தாங் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவைத் தவர். எ.

தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப் பன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்,—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன். அ.

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்,—கைவாய்
கலங்காமற் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும். சு.

துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்
இன்பமே காமுறுவர் ஏழையார்,—இன்பம்
இசைதோறு மற்றதன் இன்னுமை நோக்கிப்
பசைதல் பரியாதார் மேல். ய.

---

## சினமின்மை.

(On the Folly of Anger.)

மதித்திறப் பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க,—மிதித்தேறி
ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று. க.

தண்டாச் சிறப்பிற்றம் இன்னுயிரைத் தாங்காது
கண்டுழி எல்லாந் துறப்பவோ,—மண்டி
அடிபெயரா தாற்ற இளிவந்த போழ்தின்
முடிகிற்கும் உள்ளத் தவர். உ.

காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்,—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. ஙா.

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்,—ஆர்த்த
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ். ௪.

இளையான் அடக்கம் அடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்,—எல்லாம்
ஒறுக்கு மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. ௫.

கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்,—ஒல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு. ௬.

மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை என்னார் அறிவுடையர்,—ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று. ௭.

நெடுங்காலம் ஓடினு நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும்,—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம். ௮.

உபகாரஞ் செய்ததனை ஓராதே தங்கண்
அபகார மாற்றச் செயினும்,—உபகாரந்
தான்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில். ௯.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கவ்வினார் ஈங்கில்லை,—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்லுபவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு. ௰.

---

## பொறையுடைமை.

### (On Humility.)

கோதை அருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாதும் உரையற்க,—பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும் ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று. ௧.

நேரல்லர் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்,—றேரும்
புகழ்மையாய்க் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாய்க் கொண்டு விடும். ௨.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

காதலார் சொல்லுங் கடுஞ்சொல்லு வந்துரைக்கும்
ஏதிலார் இன்சொல்லிற் றீதாமோ,—போதெல்லாம்
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின். ௩.

அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து,—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்தல் அரிது. ௪.

வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்ற ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்கப் பொறாஅயிற்
றூற்றாதே தூர விடல். ௫.

இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவின் அல்லது,—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானகநாட
விலங்கிற்கும் விள்ளல் அரிது. ௬.

பெரியார் பெருநட்புக் கோடறுஞ் செய்த
அரிய பொறுப்பவோ ன்றன்றே,—அரியரோ
ஒல்லென் னருவி உயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர். ௭.

வற்றிமற் றற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்றம் அறிய உரையற்க,—அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவோ தம்மைத்
துறக்குந் துணிவிலா தார் ௮.

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க,—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட
பழியாகா வாறே தலை. ௯.

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க,—வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல். ௰.

---

## பிறர்மனை நயவாமை.

(On not Coveting a neighbor's Wife.)

அச்சம் பெரிதால் அதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையா,—னிச்சலுந்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றாரம்
நம்பற்க நாணுடை யார். ௧.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றா நச்சுவார்ச் சேரா,–பிறன்றாம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள். ௨.

புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற் காப்பச்சம்
எக்காலும் அச்சந் தருமால் எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல். ௩.

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்துறையும்
ஆணின்மை செய்யுங்கால் அச்சமா,—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்பம் எனக்கெனைத்தாற் கூறு. ௪.

செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ,—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றரோ இம்மை
அலியாகி ஆடியுண் பார். ௫.

பல்லார் அறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க,–மெல்லியற்
காதன் மனையாளும் இல்லாளா என்னொருவன்
எதின் மனையாளை நோக்கு. ௬.

அம்பல் அயலெடுப்ப அஞ்சித் தமர்பரீஇ
வம்பல ன்பெண்மரீஇ மைந்துற்று,–நம்பு
நிலையிலா நெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து. ௭.

பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் டங்காம நோயோ.—கொடிதே
விரவாரு நாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ளாறி விடும். ௮.

அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்,—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும். ௯.

ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாது,–நீருட்
துளிப்பினுங் காமஞ் சுடுமே துன்றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும். ௰.

---

## ஈகை.

(On the duty of Charity)

இல்லா இடத்தும் இயைந்த அளவினால்
உள்ள இடம்போற் பெரிதுவந்து,—மெல்லக்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

கோடையோடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவாம் ஆண்டைக் கதவு. ௧.

முன்னரோ சாநாண் முனிதக்க மூப்பு
பின்னரும் பீடளிக்கு நோயுள,—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து. ௨.

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்புந் தொடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால். ௩.

இம்மி அரிசித் துணையானும் வைகலு
நும்மில் இயைவ கொடுத்துண்மின்,—உம்மை
கொடாதவர் என்பது கண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர். ௪.

மறுமையும் இம்மையு நோக்கி ஒருவற்
குறுமற் றியைவ கொடுத்தல்,—வறுமையால்
ஈதல் இயையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி யுறும். ௫.

நடுவூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றுப் பனை. ௬.

பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகஞ்
செயற்பால செய்யா விடினுங்,—கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை உலகுய்யு மாறு. ௭.

ஏற்றகை மாற்றாமை என்னானுந் தாம்வரையா
ஆற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்,—ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து. ௮.

இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க,—முறைப்புதவின்
ஐயம் புகுந்தவசி கைக்கண் கடிஞைபோற்
பைய நிறைத்து விடும். ௯.

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்ப
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படுஞ் சொல்.* ௰.

---

## பழவினை.

(On the Entailment of moral actions on the Soul in its Transmigrations.)

பல்லாவுள் உய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்,—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தாற்செய்த
கிழவனை நாடிக் கோளற்கு. க.

உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்
ஒருவழி நில்லாமை கண்டும்,—ஒருவழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து. உ.

வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவ ராற்றன்
விளங்காய் திரட்டினார் இல்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல். ந.

உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பால் அனையவும் அன்னவாம் மாரி
வறப்பிற்றருவாரும் இல்லை அதனைச்
சிறப்பிற் றணிப்பாரும் இல். ச.

தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடிழிந்து வாழ்வார்
நினைப்ப கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பயன் அல்லாற் பிற. ரு.

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதீரோ,—கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று. சு.

இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்,–அடம்பம்பூ
அன்னங் கிழிக்கும் அலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும். எ.

அறியாரும் அல்லர் அறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல்,—வழியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும். அ.

ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் எத்துணையும்
வேண்டார்மற் றீய வினைப்பயன் அல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுதல் அரிது. கூ.

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றகா ஆமிடத்தே யாதுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
இறுகாலத் தென்னை அறிவு. ய.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

## மெய்மை.

(On Truth.)

இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை,—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ செய்நன்றி
கொன்றாரிற் குற்றம் உடைத்து. ௧.

தக்காருந் தக்கவர் அல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்றல் இலாஅவர்,—அக்காரம்
யாவரோ தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரோ தின்னினும் வேம்பு. ௨.

காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்,—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையோம் என்பார் சிலர். ௩.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்
தடுவது போலுந் துயர். ௪.

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉங்
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல். ௫.

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்,—தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய். ௬.

தன்னை இகழ்வாரைத் தானவரின் முன்னிகழ
என்னை அவரொடு பட்டது,—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கும் உறும். ௭.

ஆவே றுருவின ஆயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்,—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு. ௮.

யாவர் உலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாவர் உபாயத்தின் வாழாதார்,—யாவர்
இடையாக இன்னாத எய்தாதார் யாவர்
கடைபோகச் செல்வமுய்த் தார். ௯.

தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்காணத் தேரிற் பிறிதில்லை,—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயனின்றேற்
கூற்றங்கொண் டோடும் பொழுது. ௰.

## தீ வி னை ய ச் ச ம்.

(On the fear of Evil.)

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு,—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறி வாளர் வயிறு. ௧.

இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர்,—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டு வைப்பார். ௨.

அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே,—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால். ௩.

நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் அதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்,—பாப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து. ௪.

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்,—வரிசையா
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. ௫.

சான்றோர் எனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தார்க்குச்
சான்றண்மை சாந்தார்க ணில்லாயிற்,—சார்ந்தோய்கேள்
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
பாம்பகத்துக் கண்ட துடைத்து. ௬.

யாவர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேருந் தகைமை உடையவர்,—சாரற்
கனமணி நின்றிமைக்கு நாடகேண் மாக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு. ௭.

உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலாய்க்
கள்ளத்தான் நட்டார் கழிகேண்மை,—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும். ௮.

ஒக்கிய ஒள்வாடன் ஒன்னார்கைப் பட்டக்கால்
ஊக்கம் அழிப்பதூஉ மெய்யாகும்,—ஆக்கம்
இருமையுஞ் சென்று சுடுதலால் நல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு. ௯.

மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழியென் னெஞ்சே,—எனைத்துஞ்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு. ௰.

## கல்வி.

(On Learning.)

குஞ்சி அழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல,—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னு நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு. ௧.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றமுளவாற் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்மர் அறுக்கு மருந்து. ௨.

களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்த ராயினுங் கற்றுணர்ந்தார் தம்மைத்
தலைநிலத்து வைக்கப் படும். ௩.

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர்செறின் வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. ௪.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல,—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடையார் கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. ௫.

தோணி இயக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார்,—காணாய்
அவன்றுணையா ஆறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல். ௬.

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட்—குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி. ௭.

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு. ௮.

கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு. ௯.

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாங்—கலகல
கூவுந்துணை யல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஉந் துணைஅறிவார் இல். ௰.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

## குடிப்பிறப்பு.

(On the high birth of a family.)

உடுக்கை யலறி யுடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் டலைவந்தக் கண்ணும் அரிமாக்
கோடிப்புற் கறிக்குமோ மற்று. க.

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது,—வான்றோயு
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு. உ.

இருக்கை எழலும் எதிர்செல்வும் ஏனை
விடுப்ப ஒழுகலோ டின்ன,—குடிப்பிறந்தார்
குன்று ஒழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று உணாற்பாற் றன்று. ௩.

நல்லவை செய்யின் இயல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்,—எல்லாம்
உணருங் குடிப்பிறப்பான் ஊதியம் என்றே
புணரும் ஒருவற் கெனின். ௪.

கல்லாமை அச்சங் கயவர் தொழிலச்சஞ்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்,—எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம் அறத்தீர
மாணுக் குடிப்பிறந் தால். ரு.

இனநன்மை இன்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை எல்லாங்,—கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே உள. ௬.

செய்கை அழிந்து சிதண்மண்டிற் றயினும்
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்
எவ்வம் உழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. எ.

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போற்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார். அ.

செல்லா இடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்,—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாப்போற்
பொருமா றாற்றுதல் இன்று. கூ.

ஏற்றொன்றும் இல்லா இடத்துங் குடிப்பிறந்தார்
ஆற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத்,—தூற்றும்
ஆற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்காற்
றேற்றெனத் தெண்ணீர் படும். ௰.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

## ADVERTISEMENT.

The Rules of Poetry, and the method in which words are combined, have been considered insuperable obstacles to the separation of the words in Tamil Verse. The want of such a separation tends greatly to obscure the language, and impede the progress of the learner. An attempt is made, in the following selections from the Cural, to obviate this difficulty. This method of dividing words, with the use of diacritical marks, is recommended to the particular attention of Tamil Scholars.

### EXPLANATIONS.

1. *Elision*, in every case, is marked by an Apostrophe (—') in the place of the omitted letter.—This is of two kinds:

(a.) When the (—') follows a *mute*; as த்,' ட்,' &c. it shows that *short* உ is elided. To this there are a very few exceptions; as, நீல்' உண், for நீலம் உண்; and is to be read நீலுண், &c.

(b.) When the (—') follows a *liquid*; as ம,' வ,' ல,' &c. it shows that a *mute* is elided.

The succeeding letter, in connection with the Rules of Tamil Grammar, at once indicates what letter is wanting; as, in அகர' முதல, the Grammarian knows that no other letter than ம் can be wanting.—So, in நற்ற' டோழார், ள் will, by comparison, be seen to be the letter wanted.

In all cases, where words are thus separated and marked, in *reading* the letters are to be made to coalesce just as if written together. Thus, ஐந்த' அவித்தான் is to be pronounced as if written, ஐந்தவித்தான்; and ஊற்' ஓசை, as if ஊறோசை, &c.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

2. *Permutation* is indicated by a turned comma (‘—) inserted before the permuted letter; thus, ‘நற் ‘றர் stands for நல்தார். This change is marked only in the case of the *initial* letters of words. The rules of Permutation will readily indicate the proper letter. To make this easy to those who are not familiar with these rules, a table of Permutations is inserted below.

---

## விளம்பரம்.

தமிழிலே உள்ள செய்யுணடைக்குரிய விதிகளும் பதங்கள் புணரும் வகையும் பாட்டைப் பதச்சொற்களாகப் பிரித்தற்கு மிகுந்த விக்கினமாயிருக்கின்றனவென்று கொள்ளப்படுகின்றது. பதச் சொற்பிரிவு இல்லாததினாலே அப்பாஷையும் மயக்கமாகி, சற்றோர்க்குங் கல்வித் தேற்றத்துக்கு இடையூறுகின்றது. இவ் விக்கினங்களை அகற்றும் நோக்கமாய் பின் வருங் குறளிலே ஒரு உபாயம் எடுத்திருக்கின்றது. இவ்விதமே சில அறிகுறிகள் வழிபாய்ப் பதங்களைப் பிரிக்கும் வகையைத் தமிழ் வித்துவான்கள் எடுத்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

## விளக்கம்.

க. யாதொரு பதத்திலே கெடுதல்விகாரம் வருமாயின், அவ்விகாரம் அங்ஙனம் இடும் உலோபஅறிகுறி (—’) என்னுங் குறியினால் விளங்கும்; இது இருவகைத்து:—

(a.) உலோபஅறிகுறி (—’) த்’ ட்’ முதலிய ஒற்றெழுத்தின் பின்வரில், பெரும் பான்மை பற்றி உக-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ரம் கெட்டதென்று விளக்கும். இதற்கு வழுவமைதி; நீல்' உண், முதலிய சில அரும் பதங்களாம்.

(b.) உலோபஅறிகுறி(—') ம', வ', முதலிய உயிர்மெய்கட்குப் பின்வரில், ஒற்றுக் கெட்டுப்போயிற்றெனவிளங்கும். அந்த உலோபக் குறிக்குப் பின்னின்ற எழுத்தானது தமிழ் இலக்கண விதிகளுக்கு இசைய, கெட்டுப்போன எழுத்து இன்னதென்று விளக்கும். உதாரணமாய் அகர' முதல எனவரின், மகர ஒற்றுக் கெட்டதென்று இலக்கணிகளுக்கு விளங்கும். அவ்வாறே-நற்று' டொழாஅர் எனவரின் இலக்கண விதிகளுக்கு ஒப்ப ளகர ஒற்றுக் கெட்டதென்று விளங்கும். பதங்களை இவ்வாறு பிரித்துக் குறியிட்டிருந்தாலும், வாசிக்கும் வேளையிலே அவைகளை இணைத்தெழுதினாற் போலப் புணர்த்தி வாசிக்க வேண்டியது. உதாரணமாய், ஐந்த' அவித்தான் என்பதையும் ஊற்' ஓசை என்பதையும் ஐந்தவித்தான் ஊற்றோசை என இணைத்தெழுதியிருந்தாற் போற் புணர்த்தி வாசிக்கவும்.

உ. திரிதல்விகாரம் வருமாயின் அவ்விகாரம் அங்ஙனந் திரிந்த எழுத்திற்கு முன்னர் இடும் ஆதேச அறிகுறி('—)என்னுங் குறியினால் விளங்கும். உதாரணமாய், 'னற்,'றள், என்பது நல்தாள் என்பதற்காய் நிற்கின்றது. இத்திரிபு விகாரம் பதங்களின் முதலின் மாத்திரங் குறிக்கபபட்டிருக்கின்றது. திரிபு விகார விதிகள், திரிந்த எழுத்து இன்னதென்று தெளிவாய் விளக்கும்; அவ்விதிகளை அறியாதார்க்கு உபயோகமாகப் பின்னர் வருந் திரிபுவிகாரவாய்பாடு சேர்க்கப் பட்டது.

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

# திரிபுவிகாரவாய்பாடு.

(Permutation Table.)

| இடம் | உதாகாணம் | திரிப்புப்புணர்ச்சி | பொருட்சந்தி |
|---|---|---|---|
| பெரும்பாலும் குற்றியல் | உ–ய. | இ–ய பெரும்பாலும் | அல்வழி வேற்றுமை. |
| " குறிலணை | ண்–க, ச, ப. | ட்–க, ச, ப. | வேற்றுமை. |
| " " | ன்–க, ச, ப. | ற்–க, ச, ப. | " |
| குறிலணையா | ண்–ந | ண | அல்வழி வேற்று. |
| " | ன்–ந | ன | " " |
| " | ம்–க, ச, த. | ங்–க, ஞ்–ச, ந்–த. பெரும். | " " |
| குறிலணை | ம்–ந | ந்-ந பெரும்பாலும் | வேற்றுமை. |
| " | ம்-ஞ | ஞ்–ஞ " | " |
| பெரும்பாலும் குறிலணை | ல்–க, ச,த,ப. | ற்-க,ற் ச,ற் ற,ற் ப | அல்வழி வேற்று. |
| | ள்–க, ச,த,ப. | ட்-க,ட்ச,ட்ட,ட்ப | " " |
| குறிலணயா | ல்–த | ற | அல்வழிபெரும்பா. |
| | ள்–த | ட | " " |
| சிறுபாலும் குறிலணை | ல்–த } | ஃ–ற | அல்வழி |
| " " | ள்–த | ஃ–ட | " |
| குறிலணையா | ல்–ந | ன | அல்வழிபெரும்பா. |
| " | ள்–ந | ண | " " |
| சுட்டு | வ்–க,ச, த, ப. | ஃ-க,ஃச,ஃத,ஃப | அல்வழி வேற்று. |
| " | வ்–ஞ, ந, ம. | ஞ்–ஞ, ந்-ந, ம்–ம. | " " |
| பெரும்பாலும் குறிலணை | ண்–த | ண்-ட, ட்-டபெரு. | " " |
| " " | ள்–த | ட்-ட பெரு. | " " |
| " " | ண்–ந | ண்-ண " | " " |
| " " | ள்–ந | ண்·ண " | " " |
| " " | ன்–த | ன்-ற, ற்-ற, பெரு. | " " |
| " " | ல்–த | ற்-ற. " | " " |
| " " | ன்–ந | ன்–ன " | " " |
| " " | ல் -ந | ன்–ன " | " " |

# CURAL.

---

# திருவள்ளுவர் குறள்,

## பரிமேலழகர் உரை.

---

### க. அதிகாரம்.

## கடவுள்வாழ்த்து.

(On the Praise of God.)

க. அகர' முதல எழுத்த்' எல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

பதஉரை. அகரமாகிய முதலை உடைய, எழுத்துக்கள் எல்லாம்; (அதுபோல) ஆதிபகவனாகிய முதலை உடைத்து உலகு; எ.—று.

விருத்திஉரை. இது தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்ட்'உவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தான் அன்றி நாத மாத்திரையான இயல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வான் அன்றி இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க. தமிழ் எழுத்துக்கே அன்றி வட எழுத்துக்கும் முதலாதல் நோக்கி "எழுத்த்' எல்லாம்" என்றார். "ஆதிபகவன்" என்னும் இருபெயர்ஒட்டு பண்புத்தொகை வடநூன் முடிபு. "உலகு" என்றது, ஈண்டு உயிர்கள் மேல் நின்றது. காணப்பட்ட உலகாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின் "ஆதிபகவன் முதற்றே"



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

என உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினரே-னும், உலகிற்கு முதல் "ஆதிபகவன்" என்பது கருத்-த்'ஆகக் கொள்க. ஏகாரந் தேற்றத்தின் கண்வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்ப-ட்டது.

உ. கற்றதனல் ஆய பயன் என் கொல் வாலறிவ'
'னற்ற' 'டொழாஅர் எனின்.

ப. எல்லா நூல்களையுங் கற்ற ஆக்கக்கல்வி அ-றிவால் ஆய பயன் யாது! மெய் உணர்வினை உடை-யவனது நல்ல தாள்களைத் தொழார் ஆயின்; எ-று.

வி. எவன் என்னும் வினாப்பெயர் "என்" என்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது. "கொல்" என்பது அசை நிலை. பிறவிப்பிணிக்கு மருந்த்'ஆகலின் "நற்-'றாள்" என்றார். ஆகம அறிவிற்குப் பயன் அவன் 'றாளைத் தொழுது பிறவி அறுத்தல் என்பது, இத-னாற் கூறப்பட்டது.

ா. மலர் மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார்
நில'மிசை நீடு வாழ்வார்.

ப. மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப் பட்ட அடிகளைச் சேர்ந்தார் எல்லா உலகிற்கும் மே-லாய வீட்ட்'உலகின்கண் அழிவ்' இன்றி வாழ்வார்; எ-று.

வி. அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்-கண் அவர் நினைந்த வடிவொடு விரைந்து சேறலின் "ஏகினான்" என இறந்த காலத்தாற் கூறினார்: என்-னை, "வாராக்காலத்து நிகழுங் காலத்துமோ ராங்கு வ-ரூஉம் வினைச்சொற் கிளவி இறந்த காலத்துக் குறிப்-பொடு கிளத்தல் விரைந்த பொருள என்மனார் புல-வர்" என்பத' ஒத்தாகலின். இதனைப் பூமேல் நடந்தா-ன் என்பத்'ஓர் பெயர் பற்றிப் பிறிது கடவுட்கு ஏற்-றுவாரும் உளர். சேர்தல் = இடைவிடாது நினைத்தல்.

ச. வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்க்,'
யாண்டும் இடும்பை இல.

Digitized by Google Original from NEW YORK PUBLIC LIBRARY

ப. ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன் அடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உள ஆகா; எ—று.

வி. பிறவித் துன்பங்களாவன, தன்னைப்பற்றிவருவனவும் பிற உயிர்களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையால் வருந் துன்பங்கள். "அடிசேர்ந்தார்க்கு" அவ்விரண்டும் இன்மையின் அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவாயின.

௫. இருள் சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

ப. மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும் உள ஆகா, இறைவனது மெய்மை சேர்ந்தபுகழை விரும்பினார் இடத்து; எ-று.

வி. இன்ன தன்மைத்து என ஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை "இருள்" என்றும், நல்வினையும் பிறத்தற்கு ஏதுவாகலால் "இருவினையுஞ் சேரா" என்றும் கூறினார். இறைமைக் குணங்கள் இலராயினாரை உடையர் எனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றவும் உடைய இறைவன் புகழே "பொருள் சேர் புகழ்" எனப்பட்டது. புரிதல் = எப்பொழுதுஞ் சொல்லுதல்.

௬. பொறி வாயில் ஐந்த்' அவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

ப. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் பொறிகளை வழியாக உடைய ஐந்த்' அவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றார் பிறப்ப்'இன்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார்; எ—று.

வி. புலன்கள் ஐந்த்'ஆகலான் அவற்றின் கட் செல்லுகின்ற அவாவும் ஐந்த்'ஆயிற்று. "ஒழுக்க

நெறி'' ஐந்த்'அவித்தானுற் சொல்லப்பட்டமையின், ஆண்டை ஆறன்'உருபுசெய்யுட்கிழமைக்கண் வந்தது. இவை நான்கு பாட்டானும், இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவன் நெறி நிற்றலுஞ் செய்தார் வீடு பெறுவார் என்பது கூறப்பட்டது.

எ. தனக்க்' உவமை இல்லாதான் 'றள் சேர்ந்தார்க்க்' அல்லான்
மனக் கவலை மாற்றல் அரிது.

ப. ஒரு ஆற்றானும் தனக்கு நிகரில்லாதவன் தாளைச் சேர்ந்தார்க்கு அல்லது, மனத்தின்கண் நிகழுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது; எ—று.

வி. "உறற்பால நீண்டா விடுதல் அரிது'' என்றாற் போல் இண்டு "அருமை' இன்மைமேல் நின்றது. தாள் சேராதார் பிறவிக்கு ஏதுவாய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையிற் பிறந்து அவற்றான் வருந் துன்பங்களுள் அழுந்துவர் என்பதாம்.

அ. அற ஆழி அந்தணன் 'றள்சேர்ந்தார்க்க்' அல்லாற்
பிற ஆழி நீந்தல் அரிது.

ப. அறக் கடல் ஆகிய அந்தணனது தாள் ஆகிய புணையைச் சேர்ந்தார்க்கு அல்லது, அதனிற்பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது; எ—று.

வி. அறம் பொருள் இன்பம் என உடன்எண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான், ஏனைப் பொருளும் இன்பமும் "பிற'' என்னப்பட்டன. பலவேறுவகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவனாகலின் "அற ஆழி அந்தணன்'' என்றார். "அறஆழி'' என்பதனைத் தருமச் சக்கரம் ஆக்கி அதனை உடைய அந்தணன் என உரைப்பாரும் உளர். அப்புணையைச்சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே அழுந்துவாராகலின், "நீந்தல் அரிது'' என்றார். இஃது ஏகதேச உருவகம்.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

௯. கோள் இல் பொறியிற் குணம் இலவே எண் குணத்தான்
  தாளை வணங்காத் தலை.

ப. தத்தமக்கு ஏற்ற புலன்களைக் கொள்கை இல்லாத பொறிகள்போலப் பயன்படுதல் உடைய அல்ல, எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாளை வணங்காத் தலைகள்; எ—று.

வி. எண்குணங்களாவன; தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களை நீக்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை: இவ்வாறு சைவாகமத்தில் சொல்லப்பட்டன. அணிமாவை முதலாக உடையன் எனவுங் கடை இல்லாத அறிவை முதலாக உடையன் எனவுங் கூறுவாரும் உளர். காணாத கண் முதலியன போல வணங்காத்தலைகள் பயன் இல எனத் தலையின்மேல் வைத்துக் கூறினாரேனும், இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயன் இல என்பதுங் கொள்க. இவைமூன்றுபாட்டானும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் செய்யாவழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

௰. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
  இறைவன் அடி சேராதார்.

ப. இறைவன்அடி என்னும் புணையைச் சேர்ந்தவர் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர்; அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவார்; எ—று.

வி. காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரை இன்றி வருதலிற் "பிறவிப்பெருங்கடல்" என்றார். சேர்ந்தார் என்பது சொல்லெச்சம். உலக் இயல்பை நினையாது இறைவன் அடியையே நினைப்பவருக்குப் பிறவி அறுதலும் இவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃது அறாமையும் ஆகிய இரண்டும் இதனால் நியமிக்கப் பட்டன.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

## உ. அதிகாரம்.

# வான்சிறப்பு.

(The Excellence of Rain.)

வான்சிறப்பு; அஃதாவது, அக்கடவுளது ஆணையால் உலகமும் அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழையது சிறப்புக் கூறுதல். அதிகார முறையும் இதனானே விளங்கும்.

க. வா' 'னின்ற்' உலகம் வழங்கி வருதலாற்
'றன் அமிழ்தம் என்ற்' உணாற் பாற்று.

ப. மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெற்று வருதலால் அம்மழைதான் உலகத்திற்கு அமிர்தம் என்று உணரும் பான்மை உடைத்து; எ—று.

வி. நிற்ப என்பது, "நின்று" எனத் திரிந்து நின்றது. "உலகம்" என்பது ஈண்டு உயிர்களை. அவை நிலைபெற்று வருதல்ஆவது, பிறப்பு இடையறாமையின் எஞ்ஞான்றும் உடம்பொடு காணப்பட்டு வருதல். அமிழ்தம் உண்டார் சாவாது நிலைபெறுதலின் உலகத்தை நிலைபெறுத்துகின்ற வானை "அமிழ்தம் என்ற்' உணர்க" என்றார்.

உ. துப்பார்க்குத் துப்பாய துப்ப்' ஆக்கித் துப்பார்க்குத்
துப்ப்' ஆயதூஉ' மழை.

ப. உண்பார்க்கு நல்ல உணவுகளை உளவாக்கி அவற்றை உண்கின்றார்க்குத் தானும் உணவாய் நிற்பதும் மழை; எ—று.

வி. தானும் உணவாதல் ஆவது, தண்ணீராய் உண்ணப்படுதல். சிறப்புடைய உயர்திணைமேல் வைத்துக் கூறினமையின் அஃறிணைக்கும் இஃது ஒக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கிவருதல் உடையவாயின என்பதாம்.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

௩. விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்த்'
உண் 'ணின்ற்' உடற்றும் பசி.

ப. மழை வேண்டுங் காலத்துப் பெய்யாது பொய்க்கும் ஆயிற் கடலாற் சூழப்பட்ட அகன்ற உலகத்தின்கண் நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி; எ—று.

வி. கடல் உடைத்தாயினும் அதனாற் பயன் இல்லை என்பார் "விரிநீர் வியன் உலகத்து" என்றார். உணவ்' இன்மையிற் பசியான் உயிர்கள் இறக்கும் என்பதாம்.

௪. ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்
வாரி வளங் குன்றிக் கால்.

ப. உழவர் ஏரால் உழுதலைச் செய்யார், மழை என்னும் வருவாய் தன்பயன் குன்றின்; எ—று.

வி. குன்றியக்கால் என்றது குறைந்து நின்றது. உணவ்'இன்மைக்குக் காரணங் கூறியவாறு.

௫. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்ற்' ஆங்கே
எடுப்பதூஉம் எல்லா' மழை.

ப. பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம், அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப் பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம், இவை எல்லாம் வல்லது மழை; எ—று.

வி. "மற்று" வினைமாற்றின்கண் வந்தது. "ஆங்கு" என்பது மறுதலைத் தொழில்உவமத்தின்கண் வந்த உவமைச்சொல். கேடும் ஆக்கமும் எய்துதற்கு உரியார் மக்களாதலிற் "கெட்டார்க்கு" என்றார். "எல்லாம்" என்றது அம்மக்கண் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கடாம் பலவாதல் நோக்கி. வல்லது என்பது அவாய்நிலையான் வந்தது. மழையினது ஆற்றல் கூறியவாறு.

௬. விசும்பிற் 'றுளி வீழின் அல்லான் மற்ற்' ஆங்கே
பசும் புற் 'றலை காண்ப்' அரிது.

ப. மேகத்திற் 'றுளி விழிற் காண்பத்' அல்லது

வீழாதாயின் அப்பொழுதே பசும் புல்லினது தலையுங் காண்டல் அரிது; எ—று.

வி. "விசும்பு" ஆகுபெயர். "மற்று" வினைமாற்றின்கண் வந்தது. இழிவு சிறப்ப்' உம்மை, விகாரத்தாற் 'றொக்கது. ஓர் அறிவ்' உயிரும் இல்லை என்பதாம்.

எ. நெடுங் கடலுந் தன் 'னீர்மை குன்றுந் தடிந்த்' எழிலி
தா' 'னல்காதாகி விடின்.

ப. அளவு இல்லாத கடலுந் தன் இயல்பு குறையும், மேகம் தான் அதனைக்குறைத்து அதன்கட்பெய்யாமல் விடுமாயின்; எ—று.

வி. உம்மை சிறப்ப்' உம்மை. தன் இயல்பு குறைதல் ஆவது, நீர் வாழ் உயிர்கள் பிறவாமையும் மணி முதலிய படாமையும் ஆம். இண்டு குறைத்தல் என்பது, முகத்தலை. அது "கடல்குறைபடுத்த நீர், கடல் குறைபட எறிந்து" என்பதனானும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழைவேண்டும் என்பதாம். இவை எழுபாட்டானும் உலகம் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

அ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

ப. தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவா, மழை பெய்யாதாயின்; எ—று.

வி. நைமித்தியத்தோடு கூடிய நித்தியம் என்றார் ஆகலிற் "செல்லாது" என்றார். நித்தியத்திற் 'றாழ்வுதீரச்செய்வது நைமித்தியம் ஆதலின், அதனை முற்கூறினார். உம்மை சிறப்ப்'உம்மை.

கூ. தானந் தவம் இரண்டுந் தங்கா வியன் உலகம்
வானம் வழங்காத்' எனின்.

ப. அகன்ற உலகின்கட் 'டானமுந் தவமும் ஆய இரண்டு அறமும் உளவாகா, மழை பெய்யாதாயின்; எ—று.

Digitized by Google

Original from NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798 Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

வி. தானம்ஆவது, அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவம்ஆவது, மனம் பொறிவழிச் செல்லாமல் நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின் மேலும் நின்றன.

௰. நீர்இன்ற்' அமையாத்' உலக்' எனின் யார் யார்க்கும்
வான்இன்ற்' அமையாத்' ஒழுக்கு.

ப. எவ்வகை மேம்பாட்டார்க்கும் நீரை இன்றி உலகியல் அமையாதாயின், அந்நீர் இடையறாது ஒழுகும் ஒழுக்கம் வானை இன்றி அமையாது; எ—று.

வி. பொருள் இன்பங்களை உலகியல் என்றார். அவை இம்மைக்கண்ண ஆகலின்; இடையறாதொழுகல்=எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாதல். நீர் இன்று அமையாது உலகு என்பது எல்லாரானும் தெளியப்படுதலின் அதுபோல ஒழுக்கமும் வான் இன்று அமையாமை தெளியப்படும் என்பார் "நீர் இன்ற்' அமையாத்' உலக்' எனின்" என்றார். இதனை நீரை அன்றி அமையாது உலகு ஆயின் எத்திறத்தார்க்கும் மழையை இன்றி ஒழுக்கம் நிரம்பாது என உரைப்பாரும் உளர். இவை மூன்று பாட்டானும் அறம் பொருள் இன்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது.

---

௩. அதிகாரம்.

## நீத்தார் பெருமை.

(The Greatness of Ascetics.)

நீத்தார் பெருமை. அஃதாவது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வறமுதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின், இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

க. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் 'றுணிவு.

ப. தமக்க்' உரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தாரது பெருமையைப் பார்க்கில் விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் இதுவே விழுமிதெனை விரும்பும் நூல்களது துணிவு; எ—று.

வி. உரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தல் ஆவது, தத்தம் வருணத்திற்கும் நிலைமைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாது ஒழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந் தேயும்; பாவந்தேய அறியாமை நீங்-கும்; அறியாமை நீங்க நித்த அநித்தங்களது வேறு-பாட்டு உணர்வும், அழிதன் மாலைய ஆய இம்மை மறுமை இன்பங்களின் உவர்ப்பும், பிறவித்துன்பங்-களுந் தோன்றும்; அவைதோன்ற வீட்டின்கண் ஆசை உண்டாம்; அஃது உண்டாகப் பிறவிக்குக் காரண-மாகிய யோக முயற்சி உண்டாம்; அஃது உண்டாக மெய் உணர்வு பிறந்து புறப்பற்றாகிய எனது என்ப-தும் அகப்பற்றாகிய யான் என்பதும் விடும்; ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே உவர்த்து விடுதல் எனக் கொள்க. பனுவல் எனப் பொதுப்-படக் கூறியதனுன் ஒன்றை ஒன்று ஒவ்வாத சமய நூல்கள் எல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவு என்பது பெற்றும். செய்தாரது துணிவு பனுவன் மேல் ஏற்றப் பட்டது.

உ. துறந்தார் பெருமை துவணக் கூறின் வையத்த்'
இறந்தாரை எண்ணிக் கொண்ட்' அற்று.

ப. இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமை இவ்வளவென்று எண்ணற் கூறி அறியலுற்றால் அளவு படாமையான், இவ்வுலகத்துப் பிறந்து இறந்தாரை எண்ணி இத்தனையர் என அறியலுற்றாற் போலும்; எ—று.

வி. முடியாது என்பதாம். கொண்டால் என்னும் வினை எச்சங் கொண்டு எனத் திரிந்து நின்றது.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

௩. இருமை வகை தெரிந்த்' ஈண்ட்' அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்ற்' உலகு.

ப. பிறப்பு வீடு என்னும் இரண்டினது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்த்' அறிந்து, அப்பிறப்பு அறுத்தற்கு இப்பிறப்பின்கண் துற அறத்தைப் பூண்டாரது பெருமையே உலகின்கண் உயர்ந்தது; எ—று.

வி. "தெரிமாண் 'டமிழ் மும்மைத்' என்னம் பொருப்பன்" என் புழிப் போல "இருமை" என்பது ஈண்டு எண்ணின்கண் நின்றது. பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது; இதனாற் 'றிகிரி உருட்டி உலகமுழுத்' ஆண்ட அரசர் முதலாயினோர் பெருமை பிரிக்கப் பட்டது. இவை மூன்று பாட்டானும் நீத்தாரது பெருமையே எல்லாப் பெருமையினும் மிக்கது என்பது கூறப்பட்டது.

௪. உரன் என்னுந் தோட்டியான் ஓர் ஐந்துங் காப்பான்
வரன் என்னும் வைப்புக்க்' ஓர் வித்து.

ப. திண்மை என்னுந் தோட்டியாற் பொறிகளாகிய யானை ஐந்தனையுந் தத்தம் புலன்கள்மேற் செல்லாமற் காப்பான் எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்பட்ட வீட்டு நிலத்தினுக்கு ஓர் வித்தாம்; எ—று.

வி. இஃது ஏகதேச உருவகம். திண்மை ஈண்டு அறிவின மேற்று. அந் நிலத்திற் சென்று முளைத்தலின் "வித்து" என்றார். ஈண்டுப் பிறந்து இறந்து வரும் மகன் அல்லன் என்பதாம்.

௫. ஐந்த்' அவித்தான் ஆற்றல் அகல் விசும்ப்' உளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி.

ப. புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தனையும் அடக்கினனது வலிக்கு அகன்ற வானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையுஞ் சான்று; எ—று.

வி. ஐந்தும் என்னும் முற்ற்' உம்மையும் ஆற்ற-

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

திரு என்னும் நான்கன் உருபும் செய்யுள்விகாரத்தாற் றொக்கன. தான் ஐந்த், அவியாது சாபம் எய்தி நின்று, அவித்தானது ஆற்றல் உணர்த்தினான் ஆதலின், "இந்திரனே சாலுங் கரி" என்றார்.

௬. செயற்க்' அரிய செய்வர் பெரியர், சிறியர்
செயற்க்' அரிய செய்கலாதார்.

ப. ஒத்த பிறப்பினராய மக்களுட் செய்தற்கு எளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்; அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றை செய்யமாட்டாதார் சிறியர்; எ—று.

வி. செய்தற்கு எளிய ஆவன, மனம் வேண்டிய ஆறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களிற் செலுத்தலும் வெஃகுதலும் வெகுளலும் முதலாயின. செய்தற்கு அரிய ஆவன, இயம நியம முதலாய எண்வகை யோக உறுப்புகள். நீரிற் பலகால் மூழ்கல் முதலாய நாலிருவழக்கிற் றாபத பக்கம் என்பாரும் உளர். அவை நியமத்துள்ளே அடங்கலின் நீத்தாரது பெருமைக்கு ஏலாமை அறிக.

௭. சுவை ஒளி ஊற்' ஓசை நாற்றம் என்ற்' ஐந்தின்
வகை தேர்வான் கட்டே உலகு.

ப. சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தனது கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின்கண்ணதே உலகம்; எ—று.

வி. அவற்றின் கூறுபாடாவன, பூதங்கட்கு முதலாகிய அவைதாம் ஐந்தும் அவற்றின்கண் தோன்றிய அப்பூதங்கள் ஐந்தும் அவற்றின் கூறிய ஞானேந்திரியங்கள் ஐந்துங் கருமேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். "வகைதெரிவான் கட்டு" என உடம்பொடு புணர்த்ததனால் தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற்கருவியாகிய மான் அகங்கார மனங்களும் அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம்;

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதலாவது, மூலப்பகுதி ஒன்றிற்றோன்றியது அன்மையிற் பகுதியே ஆவதல்லது விகுதி ஆகாது எனவும், அதன்கட்டோன்றிய மானும் அதன்கட்டோன்றிய அகங்காரமும் அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளும் ஆகிய எழுந் தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும் தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடைய எனவும், அவற்றின்கட்டோன்றிய மனமும் ஞானேந்திரியங்களும் கருமேந்திரியங்களும் பூதங்களும் ஆகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மையின் விகுதியே ஆவதல்லது பகுதியாகாதெனவும், புருடன் தான் ஒன்றிற்றோன்றாமையானும் தன்கட்டோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும், சாங்கிய நூலுள் ஓதிய ஆற்றான் ஆராய்தல். இவ்விருபத்தைந்தும் அல்லது உலகெனப் பிறிதொன்று இல்லையென உலகினது உண்மை அறிதலின் அவன் அறிவின்கண்ணதாயிற்று. இவை நான்குபாட்டானும் பெருமைக்கு ஏது ஐந்தவித்தலும் யோகப் பயிற்சியும் தத்துவ உணர்வும் என்பன கூறப்பட்டன.

அ. நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டிவிடும்.

ப. நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நில உலகத்தின்கண் அவர் ஆணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்; எ-று

வி. "நிறைமொழி" என்பது அருளிற் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தே விடுமொழி. காட்டுதல்=பயனான் உணர்த்துதல்.

கூ. குணம் என்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

ப. துறவு, மெய்யுணர்வு, அவாஇன்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கண் நின்ற

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

முனிவரது வெகுளி தான்உள்ள அளவு கணமே ஆயி னும் வெகுளப்பட்டாரற் 'றடுத்தல் அரிது; எ-று.

வி. சலியாமையும் பெருமையும் பற்றிக் குணங்-களைக் குன்றாக உருவகஞ் செய்தார். குணம் சாதி ஒருமை. அநாதியாய் வருகின்ற ஆறுபற்றி ஒரோ வழி வெகுளி தோன்றிய பொழுதே அதனை மெய்-யுணர்வு அழிக்கும் ஆதலிற் "கணமேயும்" என்றும், "நிறைமொழி மாந்தர்" ஆகலிற் "காத்தல் அரிது," என்றுங், கூறினர். இவை இரண்டு பாட்டானும் அவர் ஆணை கூறப்பட்டது.

ய. அந்தணர் என்போர் அறவோர் மற்ற்' எவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்ட்' ஒழுகலான்.

ப. எல்லா உயிர்கள் மேலுஞ் செவ்விய தண்-ணளியைப் பூண்டு ஒழுகலான், அந்தணர் என்று சொல்லப்படுவார் துறவறத்தின் நின்றார்; எ—று.

வி. பூணுதல் = விரதமாகக் கோடல். அந்தணர் என்பது அழகிய தட்பத்தை உடையாரென ஏதுப் பெயராகலின், அஃது அவ்வருள்உடையார் மேல் அன்றிச் செல்லாது என்பது கருத்து. அவ்வாறு ஆணை உடையராயினும் உயிர்கண்மாட்டு அருள் உ-டையர் என்பது இதனாற் கூறப்பட்டது.

---

௪. அதிகாரம்.

# அறன்வலியுறுத்தல்.

**(The Power of Virtue.)**

அறன்வலியுறுத்தல். அஃதாவது அம்முனிவரால் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப்பொருளும் இன்பமும் போலாது அறன் இம்மை மறுமை வீ-டு என்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகாரமுறையை-யும் இதனானே விளங்கும். "அவை, சிறப்புடை மா-

பிற்பொருளும் இன்பமும் அறத்துவழிபடூஉந் தோ-
ற்றம்போல" என்றார் பிறரும்.

க. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
கக்கம் எவனோ உயிர்க்கு.

ப. வீடு பேற்றையுந் தரும்; துறக்க முதலிய செ
ல்வத்தையுந் தரும்; ஆதலான் உயிர்கட்கு அறத்தின்
மிக்க ஆக்கம் யாது; எ—று.

வி. எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு
"சிறப்பு" எனப்பட்டது. ஆக்கந்தருவதனை "ஆ-
க்கம்" என்றார். ஆக்கம்=மேன்மேல் உயர்தல்.
ஈண்டு "உயிர்" என்றது மக்கள் உயிரை; சிறப்புஞ்
செல்வமும் எய்துதற்குரியது அதுவே ஆகலின்.
இதனான் அறத்தின் மிக்க உறுதி இல்லை என்பது
கூறப்பட்டது.

உ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

ப. ஒருவனுக்கு அறஞ் செய்தலின் மேற்பட்ட
ஆக்கமும் இல்லை; அதனை மயக்கத்தான் மறத்தலின்
மேற்பட்ட கேடும் இல்லை; எ—று.

வி. "அறத்தின் ஊங்க் ஆக்கமும் இல்லை" என
மேற்சொல்லியதனையே அனுவதித்தார், அதனாற்
கேடுவருதல் கூறுதற்பயன் நோக்கி: இதனால் அது
செய்யாதவழிக் கேடுவருதல் கூறப்பட்டது.

௩. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

ப. தத்தமக்கு இயலுந் திறத்தான் அறமாகிய
நல்வினையை ஒழியாதே அஃது எய்தும் இடத்தான்
எல்லாஞ் செய்க; எ—று.

வி. இயலுந்திறமாவது, இல்லறம் பொருள் அள-
விற்கேற்பவும் துறவறம் யாக்கை நிலைக்கேற்பவுஞ்
செய்தல். ஒவாமை=இடைவிடாமை. எய்தும் இட-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

மாவன, மனம் வாக்குக் காயம் என்பன: அவற்றாற் செய்யும் அறங்களாவன, முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலும் என இவை. இதனான் அது செய்யும் ஆறு கூறப்பட்டது.

ச. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்த்' அறன்
ஆகுல நீர பிற.

ப. அவ்வாற்றான் அறஞ் செய்வான் தன் மனத்-தின்கண் குற்றம் உடையன் அல்லன் ஆக; அவ்வளவே அறனாவது: அஃது ஒழிந்த சொல்லும் வேடமும் அறன் என்னப்படா; ஆரவார நீர்மைய; எ—று.

வி. குற்றம், தீயன சிந்தித்தல். பிறர் அறிதல் வேண்டிச் செய்கின்ற ஆகலின் "ஆகுல நீர" என்றார். மனது மாசுடையனாயவழி அதன் வழிய ஆகிய மொழி மெய்களாற் செய்வன பயன் இல என்பதா-உம் பெறப்பட்டது.

ரு. அழுக்காற்' அவா வெகுளி இன்னாச் சொல் 'நான்கும்
இழுக்கா இயன்றத்' அறம்.

ப. பிறர் ஆக்கம் பொறாமையும், புலன்கள்மேற் செல்கின்ற அவாவும், அவை ஏதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், அது பற்றிவருங் கடுஞ்சொல்-லும் ஆகிய இந்நான்கனையுங் கடிந்து இடையறாது நடந்தது, அறம் ஆவது; எ—று.

வி. இதனான் இவற்றோடு விரவி இயன்றது அறம் எனப்படாது என்பதாஉங் கொள்க; இவை இரண்-டுபாட்டானும் அறத்தினது இயல்பு கூறப்பட்டது.

சு. அன்ற்' அறிவாம் என்னாத்' அறஞ்செய்க மற்ற்' அது
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

ப. யாம் இது பொழுது இளையம்; ஆதலின், இ-றக்கும் ஞான்று செய்தும் எனக்கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க: அவ்வாறு செய்த அறம் இவ்-வுடம்பின்நின்றும் உயிர் போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம்; எ—று.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

வி. "மற்று" என்பது அசைநிலை. "பொன்றுந் துணை" என்றார், செய்த உடம்பு அழியவும் உயி-ரோடு ஒன்றி வினை உடம்பினுஞ் சேறலின். இதனான் இவ்வியல்பிற்று ஆகிய அறத்தினை நிலையாத யாக்கை நிலையின பொழுதே செய்க என்பது கூறப்பட்டது.

எ. அறத்து ஆறு இது என வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தானிடை.

ப. அறத்தின் பயன் இது என்று யாம் ஆகம அளவையான் உணர்த்தல் வேண்டா; சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடைக் காட்சி அளவை தன்னானே உணரப்படும்; எ—று.

வி. பயனை "ஆறு" என்றார், பின்னதாகலின். "என" என்னும் எச்சத்தாற் சொல்லாகிய ஆகம அளவையும், "பொறுத்தானோடு ஊர்ந்தானிடை" என்றதனாற் காட்சி அளவையும், பெற்றாம். உணரப் படும் என்பது சொல்லெச்சம். இதனாற் "பொன்-றுந்துணை" ஆதல் தெளிவிக்கப்பட்டது.

அ. வீழ் நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது ஒருவன்
வாழ் நாள் வழி அடைக்குங் கல்.

ப. செய்யாது கழியுநாள் உளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின், அச்செயல் அவன் யாக்-கையொடு கூடுநாள் வரும் வழியை வராமல் அ-டைக்குங் கல்லாம்; எ—று.

வி. ஐவகைக் குற்றத்தான் வரும் இருவகை வி-னையும் உயிர் யாக்கையோடு கூடிநின்று, அவ்வினை-களது இருவகைப் பயனையும் நுகருமாதலான், அந் நாள் முழுவதும் "வாழ்நாள்" எனப்பட்டது. கு-ற்றங்கள் ஐந்தாவன, அவிச்சை அகங்காரம் அவா விழைவு வெறுப்பு என்பன. இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசம் என்ப. வினை இரண்டாவன, நல்வினை தீவினை என்பன. பயன் இரண்டாவன,



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இன்பம் துன்பம் என்பன. இதனான் அறம் வீடு பயக்கும் என்பது கூறப்பட்டது.

௯. அறத்தான் வருவதே இன்ப' மற்ற' எல்லாம்
புறத்த புகழும் இல.

ப. இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது. அதனோடு பொருந்தாது வருவன எல்லாம் இன்பமாயினுந் துன்பத்திடத்த; அதுவேயும் அன்றிப் புகழும் உடைய அல்ல; எ—று.

வி. ஆன் உருபு இண்டு உடனிகழ்ச்சிக்கண் வந்தது; "தூங்கு கையான் ஓங்கு நடைய" என்புளிப்போல. இன்பம்= காமநுகர்ச்சி. அஃதாவது காமத்துப்பாவின் முதற்கண் சொல்லுவது. இன்பத்துப்புறம் எனவே துன்பம் ஆயிற்று. பாவத்தான் வரும் பிறன்இல்விழைவு முதலாயின அக்கணத்து இன்பமாய்த் தோன்றுமாயினும் பின் துன்பமாய் விளைதலிற் "புறத்த" என்றார். அறத்தொடு வாராதன "புகழும்இல" எனவே, வருவது புகழும் உடைத்து என்பது பெற்றாம். இதனான் அறஞ்செய்வாரே இம்மை இன்பமும் புகழும் எய்துவர் என்பது கூறப்பட்டது.

௰. செயற் பாலத்' ஒரும் அறனே ஒருவற்க்'
உயற் பாலத்' ஒரும் பழி.

ப. ஒருவனுக்குச் செய்தற்பான்மையது நல்வினையே; ஒழிதற் பான்மையது தீவினையே; எ—று.

வி. "ஒரும்" என்பன இரண்டும் அசை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் "பழி" என்றார். இதனாற் செய்வதும் ஒழிவதும் நியமிக்கப்பட்டது.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

ரு. அதிகாரம்.

# இல்வாழ்க்கை.

(On the Domestic State.)

இல்வாழ்க்கை: அஃதாவது, இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இந்நிலை அறஞ்செய்தற்குரிய இருவகை நிலையுண் முதலாதலின், இஃது அறன்வலியுறுத்தலின் :பின்வைக்கப்பட்டது.

க. இல்வாழ்வான் என்பான் இயல்ப்' உடைய மூவர்க்கும்
நல்லாற்றி' 'னின்ற துவண.

ப. இல்லறத்தோடு கூடிவாழ்வான் என்று சொல்லப்படுவான் அற இயல்பினை உடைய ஏனை மூவர்க்கும் அவர் செல்லு நல்லொழுக்க நெறிக்கண் நிலை பெற்ற துணையாம்; எ—று.

வி. "இல்" என்பது ஆகுபெயர். "என்பான்" எனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. ஏனைய மூவராவார் ஆசாரியன் இடத்தில் நின்று ஓதலும் விரதங்காத்தலும் ஆகிய பிரமசாரிய ஒழுக்கத்தானும், இல்லைவிட்டுத் தீயோடு வனத்தின்கட் சென்று மனையாள் வழிபடத் தவஞ் செய்யும் ஒழுக்கத்தானும், முற்றத்துறந்த யோக ஒழுக்கத்தானும், என இவர். இவருண் முன்னை இருவரையும் பிறர்மதமேற் கொண்டு கூறினார். இவர் இவ்வொழுக்க நெறிகளை முடியச் செல்லும் அளவும் அச் செலவிற்குப் பசி நோய் குளிர் முதலியவற்றால் இடையூறுவாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய உதவி அவ்வநெறிகளின் வழுவாமற் செலுத்துதலான் "நல்லாற்றி' 'னின்றதுணை" என்றார்.

உ. துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துவண.

ப. களைகணுனவராற் 'றுறக்கப்பட்டார்க்கும் நல்கூர்ந்தார்க்கும் ஒருவரும் இன்றித் தன்பால் வந்து

இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்று சொல்லப்படுவான் துணை; எ—று.

வி. துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவ்வக் கலைகளாய் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவுமுதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும், "துணை" என்றார். இவை இரண்டு பாட்டானும் இந்நிலை எல்லா உபகாரத்திற்கும் உரித்தாதல் கூறப்பட்டது.

௩. தென்புலத்தார் தெய்வம் விருந்த்' ஒக்க 'றன் என்ற்'ஆங்க்'
ஐம்புலத்த்' ஆற்' ஓம்ப' 'றலை.

ப. பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தான் என்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம்; எ—று.

வி. பிதிரராவார் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி. அவர்க்கு இடந் தென்திசையாகலின் "தென்புலத்தார்" என்றார். "தெய்வம்" என்பது சாதி ஒருமை. "விருந்து" என்பது புதுமை; அஃது ஈண்டு ஆகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேல் நின்றது. அவர் இருவகையர்: பண்ட்' அறிவுண்மையிற் குறித்து வந்தாரும் அஃத்' இன்மையிற் குறியாது வந்தாரும் என இவர். ஒக்கல்=சுற்றம். எல்லா அறங்கட்குந் தான் உளனாய் நின்று செய்ய வேண்டுதலின் தன்னை ஓம்பலும் அறனாயிற்று. என்ற என்பது விகாரமாயிற்று. "ஆங்கு" அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனாகலின் "ஐம்புலம்" என்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறில் ஒன்ற்' ஆயிற்று; இவ்வைம்புலத்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலான், என்பது அறிக.

௪. பழி அஞ்சிப் பாத்த்' ஊண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

ப. பொருள் செய்யுங்காற் பாவத்திற்கு அஞ்சி ஈட்டிய பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்குந் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன் வழி உலகத்து எஞ்ஞான்றும நிற்றல் அல்லது இறத்தல் இல்லை; எ—று.

வி. பாவத்தான் வந்த பிறன் பொருளைப் பகுத்த்' உண்ணின் அறம் பொருள் உடையார்மேலும் பாவம் தன்மேலுமாய் நின்று வழி எஞ்சும் ஆகலிற் "பழி அஞ்சி" என்றார். வாழ்வானது உடைமை வாழ்க்கைமேல் ஏற்றப்பட்டது.

௫. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ப. ஒருவன் இல்வாழ்க்கை தன் துணைவியோடு செய்பத்தகும் அன்பினையும் பிறர்க்குப் பகுத்த்' உண்டலாகிய அறத்தினையும் உடைத்தாயின், அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனும் ஆம்; எ— று.

வி. நிரனிறை: இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகாத வழி இல்லறங் கடைபோகாமையின், அன்ப்' உடைமை பண்பாயிற்று; அறன் உடைமை பயனாயிற்று. இவை மூன்றுபாட்டானும் இந்நிலையில் நின்றான் அறஞ்செய்யும் ஆறு கூறப்பட்டது.

௬. அறத்த்' ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்த்' ஆற்றிற்
போஒய்ப் பெறுவத்' எவன்.

ப. ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின்வழியே செலுத்துவனாயின், அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது; எ—று.

வி. "புறத்தாறு" இல்லைவிட்டு வனத்துச்செல்லு நிலை. அந்நிலை இனிது பயன் உடைத்து என்பார் "போஒய்ப் பெறுவத்' எவன்" என்றார்.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

௭. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை.

ப. இவ்வாழ்க்கைக்கண் நின்று அதற்கு உரிய இயல்பொடு கூடி வாழ்பவன் என்று சொல்லப்படுவான் புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்; எ—று.

வி. முற்றத் துறந்தவர் விட்டமையின், "முயல்வார்" என்றது மூன்றாம் நிலையில் நின்றாரை. அந்நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளும் எனவும் முயலாது வைத்துப் பயன் எய்துதலின் "தலை" எனவுங் கூறினார்.

௮. ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரி' 'னோன்மை உடைத்து.

ப. தவஞ் செய்வாரையுந் தத்தம் நெறியில் ஒழுகப்பண்ணித் தானுந் தன் அறத்திலே தவறாத இல்வாழ்க்கை அத்தவஞ் செய்வோர் நிலையினும் பொறை உடைத்து; எ—று.

வி. பசி முதலிய இடையூறு நீக்கலின் "ஆற்றின் ஒழுக்கி" என்றார். "நோற்பார்" என்பது ஆகுபெயர். நோற்பார் நிலைக்கு அவர்தம்மை உற்ற நோய் அல்லது இல்வாழ்வார் நிலைபோற் பிறரை உற்ற நோயும் பொறுத்தல் இன்மையின் "நோற்பாரி' 'னோன்மை உடைத்து" என்றார்.

௰. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பத்' இல்லாயி' 'னன்று.

ப. இருவகை அறத்தினும் நூல்களான் அறன் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இவ்வாழ்க்கையே: ஏனைத் துறவறமோவெனில், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவத்' இல்லையாயின் அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாக நன்று; எ—று.

வி. ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. இதனாற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின், "அது" என்னுஞ்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

சுட்டுப் பெயர் அறன்மேல் நின்றது. "பிறன் பழிப்பது" என்பது கூடா ஒழுக்கத்தை. இவை நான்கு பாட்டானும் இந்நிலையே பயன் உடைத்தென இதன் சிறப்புக் கூறப் பட்டது.

ய. வையத்து வாழ்வ்' ஆங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

ப. இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே எனினும் வானின்கண் உறையுந் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும்; எ—று.

வி. பின் தேவனாய் அவ்வறப்பயன் நுகர்தல் ஒருதலை ஆகலின், "தெய்வத்துள் வைக்கப்படும்" என்றார். துறவறம் மனத்தையும் பொறிகளையும் பொறுத்து அடக்கவல்ல அருமை உடைத்தாய வழியே, அவற்றை ஒறுக்கவேண்டாது ஐம்புல இன்பங்களால் ஆரத்துய்க்கும் மேன்மை உடைய இல்வாழ்க்கையோடு அறம் என ஒருங்கு எண்ணப்படுவதென்ற ஆறாயிற்று. இதனான் இந்நிலையது மறுமைப் பயன் கூறப்பட்டது. இம்மைப்பயன் புகழ்: அதனை இறுதிக்கட் கூறுப.

---

அ. அதிகாரம்.

## அன்புடைமை.

(On the Possession of Love.)

அன்புடைமை. அஃதாவது, அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதல் உடையனாதல். அதிகாரமுறையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிற உயிரின்மேல் அருள்பிறத்தலும் அன்பின்பயனாதலின் இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பு இல்வழி இல்லறம் இனிது நடவாமை, "அறவோர்க்க்-

அளித்தலும் அந்தணர் ஓம்பலுந் துறவோர்க்' கெதி-ரலுந் தொல்லோர் சிறப்பின் விருந்த்' எதிர் கோட-லும் இழந்தவென்னை'' என்பதனானும்; அஃது அருள் பிறத்தல், அருள் என்னும் அன்பீன் குழவி என்ப-தனானும், அறிக.

க. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன் கணீர் பூச' 'றரும்.

ப. அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்து வை-க்குந் தாள் உளதோ? தம்மால் அன்பு செய்யப்பட்-டாரது துன்பங்கண்டுழி அன்புடையார் கண் பொ-ழிகின்ற புல்லிய கண்ணீரே உள்நின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்; எ-று.

வி. உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சி அளவைக்கு எய்தாதாகிலும் அனுமான அளவைய-வெளிப்படும் என்பதாம். இதனால் அன்பினது உண்மை உணர்த்தப்பட்டது.

உ. அன்ப்' இலார் எல்லாந்தமக்க்' உரியர் அன்ப்' உடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

ப. அன்பு இல்லாதார் பிறர்க்குப் பயன் படா-மையின் எல்லாப் பொருளாலுந் தமக்கே உரியர். அன்புடையார் அவற்றானே அன்றித் தம்உடம்பா-னும் பிறர்க்குஉரியர்; எ- று.

வி. ஆன் உருபுகளும் பிரிநிலை ஏகாரமும் விகார-த்தால் தொக்கன. என்பு ஆகுபெயர். என்பும் உ-ரியராதல், தன் அகம்புக்க குறுநடைப்புறவின் தகுதி கண்டு அஞ்சித்துலைபுக்கோன் முதலாயினோர்கட் காண்க.

ங. அன்போட்' இயைந்த வழக்க்' என்ப ஆர்-உயிர்க்க்'
என்போட்' இயைந்த தொடர்பு.

ப. பெறுதற்கு அரிய மக்கள் உயிர்க்கு உடம்-போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு

பொருந்துதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவார் அறிந்தோர்; எ—று.

வி. பிறப்பினது அருமை பிறந்த உயிர்கண்மேல் ஏற்றப்பட்டது. "இயைந்த" என்பது உபசார வழக்கு. "வழக்கு" ஆகுபெயர். உடம்போடு இயைந்தல்லது அன்புசெய்யல் ஆகாமையின், அது செய்தற் பொருட்டு இத்தொடர்ச்சி உள்ளதாயிற்று என்பதாம். ஆகவே இத்தொடர்ச்சிப் பயன் அன்புடைமை என்று ஆயிற்று.

> ச. அன்ப்' ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனு'
> நண்ப்' என்னு' நாடாச் சிறப்பு.

ப. ஒருவனுக்குத் தொடர்ப்' உடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையார் பிறர்மாட்டும் விருப்பம் உடைமையைத் தரும்; விருப்பம் உடைமை தான் இவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பு என்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்; எ—று.

வி. உடைமை= உடையனுந்தன்மை. யாரும் நண்ப்' ஆதல் எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏது ஆகலின், அதனை "நாடாச்சிறப்பு" என்றார்.

> ரு. அன்ப்' உற்ற்' அமர்ந்த வழக்க்' என்ப வையகத்த்'
> இன்ப்' உற்றார் எய்துஞ் சிறப்பு.

ப. அன்ப்' உடையாராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின்பயன் என்று சொல்லுவர் அறிந்தார், இவ்வுலகத்தில் வாழ்க்கைக்கண் நின்று இன்பம் நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென்று எய்தும் பேர்-இன்பத்தினை; எ—று.

வி. "வழக்கு" ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடி இன்ப்' உறுவாராகலின் "இன்ப்' உற்றார் எய்துஞ்சிறப்பு" என்றார். தவத்தாலே துன்ப்' உற்று எய்துந் துறக்க இன்பத்தினை இண்டும் இன்ப்' உற்று எய்துதல் அன்பானே அன்றி இல்லை என்பதாம்.



Digitized by Google Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

௬. அறத்திற்கே அன்பு சார்ப்' என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

ப. அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் சிலர் அறியார்; ஏனை மறத்திற்கும் அவ்அன்பே துணையாவது; எ—று.

வி. ஒருவன் செய்த பகைமைபற்றி உள்ளத்தும் அறம் நிகழ்ந்தவழி அவனை நட்ப்' ஆகக்கருதி அவன்மேல் அன்பு செய்ய அதுநீங்கும் ஆகலின், மறத்தை நீக்குதற்குந் துணையாம் என்பார் "மறத்திற்கும் அஃதே துணை" என்றார். "துன்பத்திற்கு யாரே துணையாவார்" என்புழிப்போல. இவை ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

௭. என்ப்' இலதனை வெயிற் போலக் காயுமே
அன்ப்' இலதனை அறம்.

ப. என்பு இல்லா உடம்பை வெயிற் காய்ந்தாற் போலக் காயும் அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள்; எ—று.

வி. "என்ப்'இலது" என்பதனான் உடம்பு என்பதூஉம், 'அன்ப்'இலது' என்பதனான் உயிர் என்பதூஉம், பெற்றாம். வெறுப்பு இன்றி எங்கும் ஒருதன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன் இயல்பாற் சென்று கெடுமாறுபோல அத்தன்மைத்தாகிய அறத்தின் முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயும் என வெயில் அறங்களின்மேல் ஏற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்பு உண்மையின. இவ்வாறு "அல்லவை செய்தார்க்' அறங்கூற்றம்" எனப் பிறருங் கூறினார்.

௮. அன்ப்' அகத்த்' இல்லா உயிர் வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றன் மாந்தளிர்த்த்' அற்று.

ப. மனத்தின்கண் அன்பு இல்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல் வன்பாரின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற் போலும்; எ—று.

வி. கூடாதென்பதாம். வன்பார்= வன்னிலம். வற்றல் என்பது பால்விளங்கா அஃறிணைப்படர்க்கைப்பெயர்.

௯. புறத்த்' உறுப்ப்' எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்த்' உறுப்ப்' அன்ப்' இலவர்க்கு.

ப. யாக்கை அகத்தின்கணின்று இல்லறத்துக்கு உறுப்பாகிய அன்புஉடையர் அல்லாதார்க்கு ஏனைப்புறத்தின்கணின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறஞ்செய்தற்கு என்ன உதவியைச் செய்யும்; எ—று.

வி புறத்த்'உறுப்பாவன இடனும் பொருளும் ஏவல்செய்வோரும் முதலாயின. துணையோடு கூடாதவழி அவற்றாற் பயன் இன்மையின் "எவன்செய்யும்" என்றார். உறுப்புப்போறலின் "உறுப்பு" எனப்பட்டது. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்கள் எல்லாம் என்ன பயனைச் செய்யும் மனத்தின்கண் உறுப்பாகிய அன்பு இல்லாதார்க்கு என உரைப்பாரும் உளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயையாமை அறிக.

௰. அன்பின்வழியத்' உயிர்நிலை அஃத்'இலார்க்க்'
என்பு தோல் போர்த்த உடம்பு.

ப. அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாவது. அவ்வன்பு இல்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம், உயிர் நின்றன ஆகா; எ—று.

வி. இல்லறம் பயவாமை இன்னன ஆயின. இவை நான்கு பாட்டானும் அன்ப்' இல்வழிப் படுங் குற்றங் கூறப்பட்டது.

---

௯. அதிகாரம்.

## விருந்த்'ஓம்பல்.

(On Hospitality.)

விருந்த்' ஓம்பல். அஃதாவது, இருவகை விருந்தினரையும் புறந்தருதல். தென்புலத்தார் முதலிய ஐம்புலத்துண் முன்னைய இரண்டுங் கட்புலன் ஆகாதாரை நினைந்து செய்வன ஆகலானும், பின்னைய இரண்டும் பிறர்க்கு ஈதல் அன்மையானும், இடைநின்ற விருந்த்' ஓம்பல் சிறப்ப்'உடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறாகாத அன்புடை இருவர் கூடி அல்லது செய்யப்படாமையின், இஃது அன்ப்' உடைமையின் பின் வைக்கப்பட்டது.

௧. இருந்த்' ஓம்பி இல்வாழ்வத்' எல்லாம் விருந்த்' ஓம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

ப. மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்வின் கண் இருந்து பொருள்களைப் போற்றிவாழுஞ் செய்கை எல்லாம் விருந்தினரைப் பேணி அவர்க்கு உபசாரஞ் செய்தற் பொருட்டு; எ—று.

வி. எனவே, வேளாண்மை செய்யாதவழி இல்வின்கண் இருத்தலும் பொருள்களுங் காரணமாக வருந் துன்ப செய்கைகட்க்'எல்லாம் பயன் இல்லை என்பதாம்.

௨. விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்த்' எனினும் வேண்டற் பாற்ற்' அன்று.

ப. உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினுந் தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்வின்புறத்தாகத் தானே உண்டல் விரும்புதன் முறைமை உடைத்தன்று; எ—று.

வி. சாவாமருந்து= சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்து இன்றியே ஒருகால் தான் உண்டலைச் சாவாமருந்து என்பார் உளராயினும் ஒழிக

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

என்று உரைப்பினும் அமையும். இவை இரண்டு-பாட்டானும் விருந்த்' ஓம்பலின் சிறப்புக் கூறப்-பட்டது.

ரு. வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

ப. தன்னை நோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானது இல்வாழ்க்கை நல்குரவான் வருந்திக் கெடுதல் இல்லை; எ—று.

வி. நாடோறும் விருந்த்' ஓம்புவானுக்கு அதனாற் பொருள் தொலையாது மேன்மேற் கிளைக்கும் என்-பதாம்.

சு. அகன் அமர்ந்து செய்யாள் உறையு' முகன் அமர்ந்து
நல் விருந்த்' ஓம்புவான் இல்.

ப. திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும், முகம் இனியனாய்த் தக்கவிருந்தினரைப் பேணுவானது இ-ல்லின்கண்; எ—று.

வி. மன மகிழ்தற்குக் காரணம் தன் செல்வம் நல்-வழிப்படுதல். தகுதி, ஞான ஒழுக்கங்களான் உயர்தல். இதனாற் பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறிய ஆறு.

ரு. வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ விருந்த்' ஓம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

ப. முன்னே விருந்தினரை மிசைவித்துப் பின் மி-க்கதனைத் தான் மிசைவானது விளைபுலத்துக்கு வி-த்த்' இடுதலும் வேண்டுமோ வேண்டா; எ—று.

வி. "கொல்" என்பது அசைநிலை. தானே விளை-யும் என்பது குறிப்ப்' எச்சம். இவை மூன்று பாட்டானும் விருந்த்' ஓம்புவார் இம்மைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

கூ. செல்விருந்த்' ஓம்பி வரு'விருந்து பார்த்த்' இருப்பா'
'னல்-விருந்து வானத் தவர்க்கு.

ப. தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செ-ல்லக்கடவ விருந்தினைப் பார்த்துத் தான் அதனோடு

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

உண்ண இருப்பான் மறுபிறப்பில் தேவனாய் வானின் உள்ளார்க்கு நல்விருந்தாம்; எ—று.

வி. "வருவிருந்து" என்பது இடவழுஅமைதி. "நல்விருந்து" எய்தாவிருந்து. இதனான் மறுமைக்-கண் எய்தும் பயன்கூறப்பட்டது.

௭. இனைத் துணைத்த்' என்பத்' ஒன்ற்' இல்லை விருந்தின்
'றுணைத்துணை வேள்விப் பயன்.

ப. விருந்த்' ஓம்பலாகிய வேள்வியின் பயன் இ-ன்ன அளவிற்று என்பத்' ஓர் அளவுடைத்து அன்று; அதற்கு அவ்விருந்தின் தகுதிஅளவே அளவு; எ—று.

வி. ஐம்பெருவேள்வியில் ஒன்றாகலின் "வேள்வி" என்றும், பொருள்அளவு "தான் சிறிதாயினுந் தக்கார் கைப்பட்டக்கால் வான்சிறிதாப் போர்க்கும்" ஆக-லின் "இனைத்துணைத்த்' என்பத்' ஒன்றில்லை" என்-றுங், கூறினார். இதனான் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது.

௮. பரிந்த்' ஓம்பிப்பற்ற்' அற்றேம் என்பர் விருந்த்' ஓம்பி
வேள்வி தலைப்படாதார்.

ப. நிலையாப் பொருள்களை வருந்திக் காத்துப் பின் அதனை இழந்து, இது பொழுது யாம் பற்றுக்-கோடு இலம் ஆயினேம் என்று இரங்குவர், அப்-பொருளான் விருந்தினரை ஓம்பி வேள்விப் பயனை எய்தும் பொறியிலார்; எ—று.

வி. "ஈட்டிய ஒண் பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்" ஆகலின், "பரிந்த்' ஓம்பி" என்றார். "வேள்வி" ஆகுபெயர்.

௯. உடைமையுள் இன்மை விருந்த்' ஓம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

ப. உடைமைக்காலத்து இன்மையாவது விருந்த்' ஓம்பலை இகழும் பேதைமை. அஃது அறிந்தார் மா-ட்டு உளத்' ஆகாது; பேதையார் மாட்டே உளதாம்; எ—று.

வி. உடைமை = பொருள் உடையனுந் தன்மை அப்பொருளாற் கொள்ளும் பயனை இழப்பித்து உடைமையை இன்மையே ஆக்கலின் "உடைமையை" இன்மையாக உபசரித்தார். பேதைமையான் விருந்' ஓம்பலை இகழிற் பொருணின்ற வழியும் அதனுற் பயன் இல்லை என்பதாம். இவை இரண்டுபாட்டா-னும் விருந்' ஓம்பாவழிப் படுங் குற்றங் கூறப்ப-ட்டது.

ய. மோப்பக் குழையும் அனிச்ச' முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

ப. அனிச்சப்பூ மோந்துழி அன்றிக் குழையாது; விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்; எ—று.

வி. "அனிச்சம்" ஆகுபெயர். சேய்மைக்கட் க-ண்டுளி இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன் சொல்லும், அவைபற்றி உடன்பட்டவழி நன்ற' ஆ-ற்றலும், என விருந்' ஓம்புவார்க்கு இன்றிஅமையாத மூன்றனுள் முதலாய இன் முகம் இல்வழிச் சேய்மைக்கண்ணே வாடி நீங்கும் ஆதலிற், 'றீண்டியவழி அ-ல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்-லியர் என்பதாம். இதனுல் விருந்த்' ஓம்புவார்க்கு மு-தற்கண் இன்முகம்வேண்டும் என்பது கூறப்பட்டது.

---

யக. அதிகாரம்.

## செய் நன்றி அறிதல்.

(On Gratitude.)

செய் நன்றி அறிதல். அஃதாவது, தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்திஇல் குற்றஞ் செய்

நன்றி கோறலே ஆகவின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு இஃது இனியவை கூறலின் பின் வைக்கப்பட்டது.

௧. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வான் அகமு' மாற்றல் அரிது.

ப. தனக்கு முன் ஒரு உதவி செய்யாத்' இருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண் உலகும் கைமாருகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது; எ—று.

வி. கைமாறுகள் எல்லாங் காரணம் உடைய ஆகலின், காரணம் இல்லா உதவிக்கு ஆற்ருவாயின. செய்யாமைச் செய்த என்று பாடம்ஓதி மறித்து உதவ மாட்டாமைஉள்ள இடத்துச் செய்த உதவி என்று உரைப்பாரும் உளர்.

௨. காலத்தினுற் செய்த நன்றி சிறித்' எனினு'
ஞாலத்தின் மாணப் பெரிது.

ப. ஒருவனுக்கு இறுதிவந்த எல்லேக்கண் ஒருவன் செய்த உபகாரந் தன்னை நோக்கச் சிறிதாய் இருந்ததாயினும், அக்காலந் தன்னை நோக்க நில உலகத்தினும் மிகப்பெரிது; எ—று.

வி. அக்கால நோக்குவதல்லது பொருள் நோக்கல் ஆகாது என்பதாம். "காலத்தினுல்" என்பது வேற்றுமை மயக்கம்.

௩. பயன் 'றூக்கார் செய்த உதவி நயன் 'றூக்கி'
'னன்மை கடலிற் பேரிது.

ப. இவர்க்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராய்தல் இலராய்ச் செய்த உதவியாகிய வீரம்உடைமையை ஆராயின், அந்த நன்மை கடலினும் மிகப் பெரிதாம்; எ—று.

வி. இவை மூன்றுபாட்டானும் முறையே காரணம் இன்றிச் செய்ததூஉங் காலத்தினுற் செய்ததூஉம் அளவிலவாதல் கூறப்பட்டன.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

௪. தினைத் துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்.

ப. தமக்குத் தினை அளவிற்றாகிய உபகாரத்தை ஒருவன் செய்தான் ஆயினும், அதனை அவ்வளவிற்றாகக் கருதாது பனை அளவிற்றாகக் கருதுவர் அக் கருத்தின் பயன் தெரிவார்; எ—று.

வி. தினை பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சிலஅளவை. "அக்கருத்தின் பயன்" ஆவது, அங்ஙனங் கருதுவார்க்கு வரும் பயன்.

௫. உதவி வரைத்த்' அன்ற்' உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

ப. கைமாறான உதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானும் ஆகிய மூவகையானும் முன் செய்த உதவி அளவிற்றன்று; அதனைச் செய்வித்துக் கொண்டவர்தம் அமைதி அளவிற்று; எ—று.

வி. சால்பு எவ்வளவு பெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாம் என்பார் "சால்பின் வரைத்து" என்றார். இவை இரண்டுபாட்டானும் மூன்றும் அல்லாத உதவி மாத்திரமும் அறிவார்க்குச் செய்த வழிப் பெரிதாம் என்று கூறப்பட்டது.

௬. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் 'டுப்பாயார் நட்பு.

ப. துன்பகாலத்துத் தனக்குப் பற்றுக் கோடாயினாரது நட்பை விடாத்' ஒழிக; அறிவ்' ஒழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக; எ—று.

வி. கேண்மை = கேளாந்தன்மை. இம்மைக்கு உறுதி கூறுவார் மறுமைக்கு உறுதியும் உடன் கூறினார்.

௭. எழுமை எழு பிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.

ப. தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

நட்பினை எழுமையினையுடைய தம் எழுவகைப் பிற-ப்பினு நினைப்பார் நல்லோர்; எ—று.

வி. "எழுமை" என்றது வினைப்பயன் தொடரும் எழுபிறப்பினை; அது வளையாபதியுட் கண்டது. எழு-வகைப் பிறப்பு மேலே உரைத்தாம். விரைவுதோன்-றத் "துடைத்தவர்" என்றார். இவை இரண்டுபாட்-டானும் நன்றி செய்தாரது நட்பு விடல்ஆகாது என்றது கூறப்பட்டது.

அ. நன்றி மறப்பது நன்ற்' அன்று நன்ற்' அல்லத்'
அன்றே மறப்பது நன்று.

ப. ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறன் அன்று; அவன் செய்த தீமை-யைச் செய்த பொழுதே மறப்பது அறன்; எ—று.

வி. இரண்டும் ஒருங்கே செய்யப்பட்டவழி மற-ப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு.

கூ. கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த
ஒன்று நன்ற்' உள்ளக் கெடும்.

ப. தமக்கு முன் ஒரு நன்மை செய்தவர் பின் கொன்றாலொத்த இன்னாதவற்றைச் செய்தார் ஆயி-னும், அவை எல்லாம் அவர் செய்த நன்மை ஒன்-றனையும் நினைக்க இல்லையாம்; எ—று.

வி. தினைத்துணை பனைத்துணையாகக் கொள்ளப்-படுதலின், அவ்வொன்றுமே அவற்றை எல்லாங் கெ-டுக்கும் என்பதாம். இதனான், நன்ற்' அல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது.

ய. எந் நன்றி கொன்றார்க்கும் உய்வ்' உண்டாம் உய்வ்' இல்லைச்
செய் நன்றி கொன்ற மகற்கு.

ப. பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும் பாவ-த்தை நீங்கும் வாயில் உண்டாம்; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு அஃது இல்லை; எ-று.

வி. பெரிய அறங்களைச் சிதைத்தலாவது, ஆன்-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

மூலை அறுத்தலும், மகளிர் கருச் சிதைத்தலும், பார்ப்பார்த் தபுதலும், முதலிய பாதகங்களைச் செய்தல். இதனாற் செய்நன்றி கோறலின் கொடுமை கூறப்பட்டது.

---

## ௰௨. அதிகாரம்.

# நடுவு நிலைமை.

(On Equity.)

நடுவு நிலைமை. அஃதாவது, பகை நொதுமல் நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலைமை. இது நன்றி செய்தார் மாட்டு அந் நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே, அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்குச் செய்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.

க. தகுதிஎன ஒன்று நன்றே, பகுதியாற்
பாற்பட்ட் ஒழுகப் பெறின்.

ப. நடுவு நிலைமை என்று சொல்லப்படும் ஓர் அறமுமே நன்று, பகை நொதுமல் நண்பு என்னும் பகுதி தோறும் தன்முறைமையை விடாது ஒழுகப் பெறின்; எ—று.

வி. தகுதியுடையதனைத் "தகுதி" என்றார். "ஊராணோர் தேவகுலம்" என்பதுபோலப், "பகுதியான்" என்புழி ஆன் உருபு தோறும் என்பதன் பொருட்டாய் நின்றது. "பெறின்" என்பது அவ்வொழுக்கத்த் அருமை தோன்ற நின்றது. இதனான் நடுவு நிலைமையது சிறப்புக் கூறப்பட்டது.

உ. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவ்' இன்றி
எச்சத்திற்க்' ஏமாப்ப்' உடைத்து.

ப. நடுவு நிலைமையை உடையவனது செல்வம் பிறர் செல்வம் போல் அழிவின்றி, அவன் வழிவி-

துள்ளார்க்கும் வலியாதலை உடைத்து; எ—று.

வி. விகாரத்தாற் றொக்க எச்சவும்மையான் இறக்குந்துணையும் அவன்றனக்கும் ஏமாப்ப்' உடைத்து என்பது பெற்றாம். அறத்தொடு வருதலின், அன்னதாயிற்று. தான் இறந்தழி எஞ்சி நிற்பதாகலில் "எச்சம்" என்றார்.

௩. நன்றே தரினு' நடுவ்' இகந்த்' ஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

ப. தீங்க்' இன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு நிற்றலை ஒழிந்து உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழிய விடுக; எ— று.

வி. நன்மை பயவாமையின், "நன்றேதரினும்" என்றார். இகத்தலான் என்பது "இகந்து" எனத் திரிந்து நின்றது. இவை இரண்டுபாட்டானும் முறையே நடுவு நிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும் ஏனைச் செல்வந் தீங்குபயத்தலுங் கூறப்பட்டன.

௪. தக்கார் தகவ்' இலர் என்பத்' அவர் அவர்
எச்சத்தாற் காணப்படும்.

ப. இவர் நடுவு நிலைமை உடையர், இவர் நடுவு நிலைமை இலர், என்னும் விசேடம் அவரவருடைய நன் மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்; எ—று.

வி. தக்கார்க்கு எச்சம் உண்டாதலுந் தகவிலார்க்கு இல்லையாதலும் ஒருதலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின. இதனாற் 'றக்காரையும் தகவிலாரையும் அறியும் ஆறு கூறப்பட்டது.

௫. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்க்' அணி.

ப தீவினையாற் கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கு'ம் முன்னே அமைந்து கிடந்தன; அவ்வாற்-

றை அறிந்து அவை காரணமாக மனத்திற் கோடாமையே அறிவான மைந்தர்க்’ அழகாவது; எ—று.

வி. அவை காரணமாகக் கோடுதலாவது, அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக் குறித்தும் பெருக்கம் வருதலைக் குறித்தும் ஒருதலைக்கண் நிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதல் அன்று, என உண்மை உணர்ந்து நடுவுநிற்றல். சால்பினை அழகு செய்தலிர், “சான்றோர்க்’ அணி” என்றார்.

௬. கெடுவல் யான் என்பத்’ அறிக தன் ’னஞ்ச’
நடுவ்’ ஒரீஇ அல்ல செயின்.

ப. ஒருவன் தன் நெஞ்சம் நடுவு நிற்றலை ஒழிந்து நடு அல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், அந்நினைவை யான் கெட்க கடவனென்று உணரும் உற்பாதமாக அறிக; எ—று.

வி. நினைத்தலுஞ் செய்தலோடு ஒக்குமாதலிற் “செயின்” என்றார்.

௭. கெடுவாக வையாத்’ உலக’ நடுவாக
நன்றிக்கட் ’டங்கியான் ’ழ்வு.

ப. நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை வறுமையென்று கருதார் உயர்ந்தோர்; எ—று.

வி. “கெடு” என்பது முதனிலைத் தொழிற் பெயர். செல்வம் என்றுகொள்வர் என்பது குறிப்ப்’ எச்சம். இவை மூன்றுபாட்டானும் முறையே கேடும் பெருக்கமுங் கோடுதலால் வாராவென்பதூஉங், கோடுதல் கேட்டிற்கு ஏது என்பதூஉம், கோடாதவன் ’ழ்வு கேடன்றென்பதூஉம், கூறப்பட்டன.

௮. சமஞ் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்த்’ ஒருபாற்
கோடாமை சான்றோர்க்க்’ அணி.

ப முன்னேதான் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்குந் துலாம்போல, இ-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

லக்கணங்களான் அமைந்து ஒருபக்கத்துக் கோடா-மை சான்றோர்க்கு அழகாம்; எ—று.

வி. உவமையடையாகிய சமஞ் செய்தலுஞ் சீர்-தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற் கோடாமையும் உவமைக்கண்-ணுங், கூட்டி; சான்றோர் சீர்தூக்கலாவது தொடை-விடைகளாற் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறு-ணர்தலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்வு-ள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதல-கவும் உரைக்க, இலக்கணங்களான் அமைதல். இரு-வழியும் ஏற்பன கொள்க.

௬. சொற்–கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்–கோட்டம் இன்மை பெறின்.

ப. நடுவு நிலைமையாவது சொல்லின்கட் கோடுதல் இல்லாததாம்; அஃது அறனுவது மனத்தின்கட் கோ-ட்டமில்லாமையைத் திண்ணிதாகப்பெறின்; எ—று.

வி. சொல் ஊழான் அறுத்துச் சொல்லுஞ் சொல். காரணம்பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடு-மாயின் அறங் கிடந்தவாறு சொல்லுதல் நடுவு நிலை-யாமெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவு நிலைமை அன்று என்பது கூறப்-பட்டது.

௰. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்.

ப. பிறர் பொருளையுந் தம்பொருள்போலப் பே-ணி வாணிகஞ் செய்வார்க்கு நன்றாய வாணிகம்; எ-று.

வி. பிறவுந் தம்போற் செய்தலாவது, கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நா-டிச் செய்தல். இப்பாட்டு மூன்றனுண் முன்னைய இரண்டும் அவையத்தாரை நோக்கின; ஏனையது வா-ணிகரை நோக்கிற்று: அவ்விருதிறத்தார்க்கும் இவ்வ-றம் வேறாகச் சிறந்தமையின்.

௰௩. அதிகாரம்.

# அடக்கம்உடைமை.

(On Self—Control.)

அடக்கம் உடைமை. அஃதாவது, மெய்மொழி மனங்கள் தீநெறிக்கட் செல்லாது அடங்குதல் உடையனாதல். அஃது ஏதிலார் குற்றம்போற் 'றங்குற்றங் காணு நடுவு நிலைமையானுக்காகலின், அது நடுவு நிலைமையின்:பின் வைக்கப்பட்டது.

க. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்.

ப. ஒருவனை அடக்கமாகிய அறம் பின் தேவருலகத்தும், அடங்காமையாகிய பாவந் தங்குதற்கரிய இருளின் கண்ணுஞ், செலுத்தும்; எ—று.

வி. இருள் என்பது ஓர் நரகவிசேடம். "எல்லாம் பொருளிற் பிறந்துவிடும்" என்பதுபோல "உய்த்துவிடும்" என்பது ஒரு சொல்லாய் நின்றது.

உ. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின் ஊங்க்' இல்லை உயிர்க்கு.

ப. உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வம் இல்லையாகலான், அவ் அடக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு அழியாமற் காக்க; எ—று.

வி. உயிர் என்பது சாதி ஒருமை; அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது; அறிந்தடங்கிப் பயன் கொள்வது அதுவேயாகலின்.

௩. செறிவ்' அறிந்து சீர்மை பயக்கும் அறிவ்' அறிந்த்'
ஆற்றின் அடங்கப் பெறின்.

ப. அடங்குதலே நமக்கு அறிவாவத்' என்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கப் பெறின், அவ்வடக்கம்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

நல்லோரான் அறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்-
தைக் கொடுக்கும்; எ—று.

வி. இல்வாழ்வானுக்கு அடங்கு நெறியாவது மெ-
ய்முதலியமூன்றுந் தன் வயத்தவாதல்.

ச. நிலையிற் 'றிரியாத்' அடங்கியான் 'றோற்ற'
மலையினு மாணப் பெரிது.

ப. இல்வாழ்க்கையாகிய தன்னெறியின் வேறுப-
டாது நின்று அடங்கினவனது உயர்ச்சி மலையினும்
மிகப் பெரிது; எ—று.

வி. திரியாதடங்குதல் = பொறிகளாற் புலன்களை
நுகராநின்றே அடங்குதல். மலை ஆகுபெயர்.

ரு. எல்லார்க்கு' நன்றாம் பணிதல் அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

ப. பெருமிதமின்றி அடங்குதல் எல்லார்க்கும்
ஒப்ப நன்றே எனினும், அவ்வெல்லாருள்ளுஞ் செ-
ல்வம் உடையார்க்கே வேறொரு செல்வமாஞ் சிறப்-
பினையுடைத்து; எ—று.

வி. பெருமிதத்தினைச் செய்யுங் கல்வியுங் குடிப்
பிறப்பும் உடையார் அஃது இன்றி அவைதம்மானே
அடங்கியவழிச் சிறந்து காட்டும் ஆகலின் "செல்வ-
ர்க்கே செல்வந் தகைத்து" என்றார். செல்வத்தகை-
த்து என்றது மெலிந்து நின்றது. பொதுவென்பா-
ரையும் உடன்பட்டுச் சிறப்பாதல் கூறியவாறு. இ-
வை ஐந்து பாட்டானும் பொதுவகையான் அடக்-
கத்துச்சிறப்புக் கூறப்பட்டது.

சா. ஒருமையுள் ஆமைபோல் ஐந்த்' அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்' உடைத்து.

ப. ஆமைபோல் ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐ-
ம்பொறிகளையும் அடக்கவல்லன் ஆயின், அவ்வன்மை
அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் மாணுதலையுடை-
த்து; எ—று.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

வி. ஆமை ஐந்துறுப்புக்களையும் இடர்புகுதாமல் அடக்கும் ஆறு போல, இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகாமல் அடக்கவேண்டும் என்பார், "ஆமை-போல்" என்றார். ஒருமைக்கட் செய்த வினையின் பயன் எழுமைதோறுந் தொடரும் என்பது இத-னான் அறிக. இதனான் மெய்யடக்கங் கூறப்பட்டது.

எ. யா காவாராயினு' நாகாக்க, காவாக்காற்
சோகாப்பர் சொல்ல்' இழுக்குப் பட்டு.

ப. தம்மாற் காக்கப்படுவன எல்லாவற்றையுங் காக்க மாட்டாராயினும், நா ஒன்றனையுங் காக்க; அ-தனைக் காவாராயிற் சொற் குற்றத்தின்கட் பட்டுத் தாமே துன்புறுவர்; எ—று.

வி. "யா" என்பது, அஃறிணைப்பன்மை வினைப்-பெயர். அஃது இண்டு எஞ்சாமை உணர நின்றது. முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. சொற்குற்றம் =சொல்லின்கட் டோன்றுங் குற்றம். "எமாப்பர்" "செம்மாப்பர்" என்பன போலச் சோகாப்பர் எ-ன்பது ஒரு சொல்.

அ. ஒன்றானுந் தீச் சொற் பொருட் பயன் உண்டாயி'
'னன்ற்' ஆகாதாகி விடும்.

ப. தீயவாகிய சொற்களின் பொருளாற் பிறர்க்கு வருந் துன்பம் ஒன்றாயினும் ஒருவன் பக்கல் உண்-டாவதாயின், அவனுக்குப் பிற அறங்களான் உண்-டான நன்மை தீதாய்விடும்; எ—று.

வி. தீயசொல்லாவன= தீங்குபயக்கும் பொய் கு-றளை கடுஞ்சொல் என்பன. ஒருவன் நல்லவாகச் சொல்லுஞ் சொற்களின் கண்ணே ஒன்றாயினுந் தீச்-சொற்படும் பொருளினது பயன் பிறர்க்கு உண்டா-வதாயின் என்று உரைப்பாரும் உளர்.

கூ. தீயினாற் சுட்டபுண் உள் ஆறும், ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

ப. ஒருவனை ஒருவன் தீயினாற் சுட்டபுண் மெ-



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ப்க்கட்கிடப்பினு மனத்தின்கண் அப்பொழுதே ஆறும்; அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவினாற் சுட்டவடு அதன்கண்ணும் என்ஞான்றும் மாறாது; எ-று.

வி. ஆறிப்போதலாற் 'தீயிற் சுட்டதனைப் "புண்" என்றும், மாறாமையினால் நாவினாற் சுட்டதனை "வடு" என்றுங் கூறினார். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற் றொழிலால்ஒக்கும். மாறாமையாற் 'தீயின் வெவ்வுரை கொடிது என்பது போதாவின், இது குறிப்பான் வந்த வேற்றுமை அலங்காரம். இவை மூன்று பாட்டானும் மொழியடக்கங் கூறப்பட்டது.

௰. கதங் காத்துக் கற்ற்' அடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம் பார்க்கும் ஆற்றி' 'னுழைந்து.

ப. மனத்தின்கண் வெகுளி தோன்றாமற் காத்துக் கல்வியுடையனாய் அடங்குதலை வல்லவனது செவ்வியை அறக்கடவுள் பாரா நிற்கும், அவனை அடையு நெறியின்கண் நின்று; எ—று.

வி. "அடங்கல்" மனம்புறத்துப் பரவாது அறத்தின் கண்ணே நிற்றல். "செவ்வி" தன்குறை கூறுதற்கு ஏற்ற மனமொழி முகங்கள் இனியனாங் காலம். இனி இப்பெற்றியானை அறந் தானே சென்றடையும் என்பதாம். இதனான் மனஅடக்கங் கூறப்பட்டது.

---

௰௪. அதிகாரம்.

## ஒழுக்கம்உடைமை.

(Observance of prescribed Rules.)

ஒழுக்கம் உடைமை. அஃதாவது, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை உடையனாதல். இது மெய் முதலிய அடங்கினார்க்கு அல்லது முடியாதாகலின், அடக்கம் உடைமையின் பின் வைக்கப்பட்டது.

க. ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ப. ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத்தருதலான், அவ் ஒழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்; எ—று.

வி. உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலிற் பொதுப்படக் கூறினார். சுட்டுவருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்பந் தருவதாயது ஒழுக்கம் என்பது பெற்றாம். உயிர் எல்லாப் பொருளினுஞ் சிறந்ததாயினும், ஒழுக்கம் போல விழுப்பந் தாராமையின், "உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.

உ. பரிந்த்' ஓம்பிக்காக்க ஒழுக்கந் தெரிந்த்' ஓம்பித்
தேரினும் அஃதே துணை.

ப. ஒழுக்கத்தினை ஒன்றானும் அழிவுபடாமற் பேணி வருந்தியுங்காக்க; அறங்கள் பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் இருமைக்குந் துணையாவது யாதென்று மனத்தை ஒருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமேயாகலான்; எ—று.

வி. பரிந்தும் என்னும் முற்றும்மை விகாரத்தாற் 'றொக்கது. இவை இரண்டுபாட்டானும் ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது.

௩. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ப. எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கு ஏற்ற ஒழுக்கம் உடைமை குலன் உடைமையாம்; அவ்வொழுக்கத்திற் 'றவறுதல் வருணத்திற் 'றாழ்ந்த வருணமாய் விடும்; எ—று.

வி. பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும், ஒழுக்கம் உடையராக, உயர்குலத்தாராவர். ஆகவிற் "குடிமை" ஆம் என்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும், ஒழுக்கத்திற் 'றவறத், தாழ்ந்தவருணத்தாராவாராகலின், "இழிந்த பிறப்பாய்-

விடும்'' என்றுங் கூறியவாறு. உள்வழிப்படுங் குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிது என்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ்விரைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனாக ஓதப்பட்டன.

௪. மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்ப்' ஒழுக்கங் குன்றக் கெடும்.

ப. கற்ற வேதத்தினை மறந்தாராயினும், அவ்வருணங் கெடாமையிற், பின்னும் அஃது ஓதிக் கொளலாம். அந்தணர் உயர்ந்த வருணந் தன் ஒழுக்கங் குன்றக் கெடும்; எ—று.

வி. மறந்தவழி இழிகுலத்தானுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான் "மறப்பினும்'' என்றார். சிறப்புடைய வருணத்துக்கு மொழியவே ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும்.

ரு. அழுக்காறுடையான்கண் ஆக்கம் போன்ற்' இல்லை
ஒழுக்கமிலான்கண் உயர்வு.

ப. அழுக்காறுடையான் மாட்டு ஆக்கம் இல்லாதாற் போல, ஒழுக்கம் இல்லாதவன் மாட்டும் உயர்ச்சி இல்லை; எ—று.

வி. உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சிஇல்லை என்பது பெற்றாம்; என்னை, கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றமு நல் கூர்தலின். உயர்வு=உயர்குலமாதல்.

௬. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்க்' அறிந்து.

ப. செய்தற்கருமைநோக்கி ஒழுக்கத்தாற் சுருங்கார், மனவலியுடையர்; அவ் இழுக்கத்தாற் 'றமக்கு இழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றை அறிந்து; எ-று.

வி. ஒழுக்கத்திற் சுருக்கம் அதனையுடையார் மேல் ஏற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, "உரவோர்'' என்றார்.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

எ. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி.

ப. எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டை எய்துவர். அதனின் இழுக்குதலானே தாம் எய்துதற்கு உரித்தல்லாத பழியை எய்துவர்; எ—று.

வி. பகைபற்றி அடாப்பழி கூறியவழி, அதனையும் இழுக்கம் பற்றி உலகம் அடுக்கும் என்று கொள்ளும் ஆகலின், "எய்துவர் எய்தாப்பழி" என்றார். இவை ஐந்து பாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங் குணமும் இல்வழிப்படுங் குற்றமுங் கூறப்பட்டன

அ. நன்றிக்கு வித்தாகு' நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

ப. ஒருவனுக்கு நல்ல ஒழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும். தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும்; எ—று.

வி. "நன்றிக்கு வித்தாகும்" என்றதனாற் 'தீய ஒழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், "இடும்பைதரும்" என்பதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும், பெற்றாம். ஒன்றுநின்றே அவற்றை முடிக்கும் ஆகலின், இதனாற் பின்விளைவு கூறப்பட்டது.

கூ. ஒழுக்கம் உடையவர்க்க்' ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

ப. மறந்துந் தீயசொற்களைத் தம வாயாற் சொல்லுந் தொழில்கள் ஒழுக்கம் உடையவர்க்கு முடியா; எ—று.

வி. தீயசொற்களாவன, பிறர்க்குத் தீங்குபயக்கும் பொய்முதலியவும், வருணத்திற்குரிய அல்லனவும் ஆம். அவற்றது பன்மையாற் சொல்லுதற் றொழில் பலவாயின. சொல் சாதி ஒருமை. சொல்லெனவே அமைந்திருக்க, "வாயால்" என வேண்டாது கூறினார், நல்ல சொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டிய தன்

சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாத்பரியம் என்ப.

௰. உலகத்தோட்' ஒட்ட ஒழுகல் பல கற்றுங்
கல்லார் அறிவிலாதார்.

ப. உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார் பலநூல்களைக் கற்றாராயினும் அறிவிலாதார்; எ—று.

வி. உலகத்தொடு பொருந்த ஒழுகுதலாவது, உயர்ந்தோர் பலரும் ஒழுகிய ஆற்றான் ஒழுகுதல். அறநூல் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து, சொல்லாதவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான், அவையும் அடங்க, "உலகத்தோட்' ஒட்ட" என்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின், அவ்வொழுகுதலைக் கல்லாதார் "பலகற்றும் அறிவிலார்" என்றுங் கூறினார். ஒழுகுதலைக் கற்றலாவது, அடிப்படுதல். இவை இரண்டுபாட்டானுஞ் சொல்லானுஞ் செயலானும் வரும் ஒழுக்கங்களெல்லாம் ஒருவாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன.

---

௰௬. அதிகாரம்.

## பொறையுடைமை.

(On Patience.)

ப. பொறையுடைமை. அஃதாவது, காரணம்பற்றியாதல், மடமையானாதல் ஒருவன் தம்மை மிகை செய்த வழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலையுடையராதல். நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின் பின் வைக்கப்பட்டது.

௧. அகழ்வாரைத் தாங்கு' நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த' 'றலை.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ப. தன்னை அகழ்கின்றாரை வீழாமற் றாங்குவதாய நிலம் போல, தம்மை அவமதிப்பாரைப் பொறுத்த றலையாய அறம்; எ—று.

வி. இகழ்தல்=மிகையாயின செய்தலுஞ் சொல்லலும்.

உ. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினு' நன்று.

ப. பொறை நன்றாகலாற் 'றாம் ஒறுத்தற்குஇயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க: அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப்பொறையினும் நன்று; எ—று.

வி. மிகையென்றது மேற்சொல்லியன இரண்டனையும். பொறுத்தாலும் உட்கொள்ளப் படுதலின், மறத்தலை "அதனினுநன்று" என்றார்.

ங. இன்மையுள் இன்மை விருந்த்' ஓரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

ப. ஒருவனுக்கு வறுமையுள் வைத்து வறுமையாவது விருந்தினரை ஏற்றுக்கொள்ளாது நீக்குதல். அதுபோல வன்மையுள் வைத்து வன்மையாவது அறிவின்மையான் மிகைசெய்தாரைப் பொறுத்தல்; எ—று.

வி. இஃது எடுத்துக்காட்ட' உவமை. அறன் அல்லாத விருந்தோரால் பொருளுடைமை ஆகாத வாறுபோல, மடவார்ப் பொறையும் மேன்மை ஆகாதென்பது கருத்து.

ச. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப்படும்.

ப. ஒருவன் சால்புடைமை தன்கணின்று நீங்காமையை வேண்டுவனாயின், அவனாற் பொறையுடைமையைத் தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும் எ—று.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

வி. பொறையுடையார்க்கல்லது சால்பில்லையென்ப தாயிற்று. இவை நான்குபாட்டானும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது.

ரு. ஒறுத்தாரை ஒன்ருக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

ப. பிறன்றமக்குத் தீங்கு செய்த வழிப் பொறாது அவனை ஒறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக்கொள்ளார். அதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்துகொள்வர்; எ—று.

வி. ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனோடு ஒத்தலின், "ஒன்ருகவையாரே" என்றார். பொதிந்து வைத்தல் = சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல்.

சு. ஒறுத்தார்க்க்' ஒருநாவளஇன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

ப. தமக்குத் தீங்கு செய்தவனை ஒறுத்தார்க்கு உண்டாவது, அவ்வொருநாளை இன்பமே. அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியும் அளவும் புகழ் உண்டாம்; எ—று.

வி. "ஒருநாளை இன்பம்," அந்நாளொன்றினுங் கருதியது முடித்தேம் எனத் தருக்கியிருக்கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம்பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடை உலகம் என்னுஞ்சொல் வருவித்துரைக்கப்பட்டது.

எ. திறனல்ல தற்பிறர் செய்யினு' நேர் நொந்த்'
அறன் அல்ல செய்யாமை நன்று.

ப. செய்யத் தகாத கொடியவற்றைத் தன் கட் பிறர் செய்தாராயினும், அவர்க்கு அதனல் வருந் துன்பத்திற்கு நொந்து தான் அறன் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று; எ—று.

வி. உம்மை சிறப்ப்' உம்மை. துன்பத்திற்கு நோ-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

திலாவது, "உம்மை, எரிவாய் நிரயத்து வீழ்ப்பச் கொல் என்று பரிதல்".

அ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந் தந்
தகுதியான் வென்று விடல்.

ப. மனச் செருக்காற் 'றங்கட் 'டீயவற்றைச் செய்தாரைத் தார்தம்முடைய பொறையான் வென்று விடுக; எ—று.

வி. தாமும் அவர்கட் 'டீயவற்றைச் செய்து தோலாது, பொறையான் அவரின் மேம்பட்டு வெல்க என்பதாம். இவைநான்கு பாட்டானும் பிறர் செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது.

கூ. துறந்தாரிற் 'றூய்மை உடையர் இறந்தார் வாய்
இன்னுச் சொன் 'னேற்கிற்பவர்.

ப. இல்வாழ்க்கைக்கண் நின்றேயுந் துறந்தாரைப் போலத் தூய்மையுடையார்,நெறியைக் கடந்தார்வாய் இன்னுச் சொல்லைப் பொறுப்பவர்; எ—று.

வி. தூய்மை=மனமாசின்மை. "வாய்" என வேண்டாது கூறினர்; வேண்டியது அதன் இழிபுமுடித்தற்கு.

ய. உண்ணுது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னுச்சொன் 'னேற்பாரிற் பின்.

ப. விரதங்களான் ஊணைத் தவிர்ந்து, உற்றநோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்; அவர் பெரியவராவது தம்மைப் பிறர் சொல்லும் இன்னுத சொல்லைப் பொறுப்பாரிற்பின்; எ—று.

வி. பிறர்=அறிவில்லார். 'தோலாமைக்க்' ஏதுவாகிய இருவகைப் பற்றெடு நின்றே நோற்றலின், "இன்னுச்சொன் 'னேற்பாரிற்பின்" என்றூர். இவை இரண்டு பாட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது.



Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

௰௮. அதிகாரம்.

# வெஃகாமை.

(Against Covetousness.)

ப. வெஃகாமை. அஃதாவது, பிறர்க்குரிய பொருளை வெளவக்கருதாமை. பிறர் உடைமைக் கண்டவழிப் பொறாமையேயன்றி அதனைத் தான் வெளவக் கருதுதலுங் குற்றமென்றற்கு இஃது அழுக்காறாமையின் பின்வைக்கப்பட்டது.

௧. நடுஇன்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

ப. பிறர்க்குரியன கோடல் நமக்கு அறன் அன்று என்னு நடுவு நிலைமையின்றி, அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமாயின், அவ்வெஃகுதல் அவன் குடியைக் கெடச் செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும்; எ—று.

வி. குடியை வளரச் செய்து பல நன்மையும் பயக்கும் இயல்பு பற்றி, வெஃகின் என்பார் "நன்பொருள் வெஃகின்" என்றார். பொன்ற என்பது பொன்றி எனத் திரிந்து நின்றது. செய்து என்பது சொல்லெச்சம்.

௨. படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்
நடுஅன்மை நாணுபவர்.

ப. பிறர்பொருளை வெளவினாற் 'றமக்கு வரும் பயனை விரும்பி அதுவெளவுதற்குப் பழியின்கண்ணே படுஞ் செயல்களைச் செய்யார், நடுவு நிலைமை அன்மையை அஞ்சுவார்; எ—று.

வி. நடுவு = ஒருவன் பொருட்குப் பிறன் உரியன் அல்லன் என்னும் நடுவு.

௩. சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டுபவர்.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ப. பிறர்பால் வெளவிய பொருளாற் றும்எய்து நிலையில்லாத இன்பத்தை விரும்பி, அவர் மாட்டு அறன் அல்லாத செயல்களைச் செய்யார், அறத்தான் வருநிலையுடைய் இன்பத்தைக் காதலிப்பார்; எ—று.

வி. பாவத்தான் வருதலின் அப்பொழுதே அழியும் என்பார் "சிற்றின்பம்" என்றார். மற்றை இன்பம் என்பது "மற்றின்பம்" எனநின்றது.

ச. இலம் என்று வெஃகுதல் செய்யார் புலம் வென்ற
புன்மையில் காட்சியவர்.

ப. யாம் வறியம் என்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விருப்புதல் செய்யார், ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார்; எ—று.

வி. வெல்லுதல்=பாவநெறிக்கட் செல்லவிடாமை. புலம் வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலும் இல்லையாயிற்று. புன்மையில்காட்சி=பொருள்களைத் திரிபின்றியுணர்தல்.

ரு. அஃகி அகன்ற அறிவ்' என்னும் யார் மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

ப. நுண்ணிதாய் எல்லா நூல்களினுஞ் சென்ற தம்அறிவுஎன்ன பயத்தவாம், பொருளை விரும்பியாவர் மாட்டும் அறிவொடு படாத செயல்களை அறிவுடையார் செய்வாராயின்; எ—று.

வி. யார்மாட்டும் வெறியசெய்தல்=தக்கார் மாட்டுந் தகாதார் மாட்டும் இழிந்தனவுங் கடியனவு முதலிய செய்தல். அறிவிற்குப் பயன் அவை செய்யாமையாகலின் "அறிவ்' என்னும்" என்றார்.

சு. அருள் வெஃகி ஆற்றின்க' 'ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாதசூழக் கெடும்.

ப. அருளாகிய அறத்தை விரும்பி அதற்கு வழியாகிய இல்லறத்தின்கணின்றவன், பிறர் பொருளை அ-

வாவி அதனை வருவிக்குங் குற்ற நெறிகளை எண்ணக் கெடும்; எ—று.

வி. இல்லற நெறியால் அறிவு முதிர்ந்ததுழியல்லது துறக்கப்படாமையின் அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல்=இரண்டறமுஞ் சேர இழத்தல். சூழ்ந்த துணையானே கெடுமெனவே, செய்தாற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது.

எ. வேண்டற்க வெஃகி ஆம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்க்' அரிதாம் பயன்.

ப. பிறர் பொருளை அவாவிக் கொண்டதினலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக; பின் அநுபவிக்குங்கால், அவ்வாக்கத்தின்பயன் நன்றுதவில்லையாதலான்; எ—று.

வி. "விளை" என்பது முதனிலைத் தொழிற்பெயர். இவை எழு பாட்டானும் வெஃகுதலின் குற்றங் கூறப்பட்டது.

அ. அஃகாமை செல்வத்திற்க்' இயாத்' எனின் வெஃகாமை
வேண்டும் பிறன் கைப்பொருள்.

ப. சுருங்கன் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக் காரணம் யாதென்றொருன் ஆராயின், அது பிறன் வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம்; எ—று.

வி. அஃகாமை ஆகுபெயர். வெஃகாதான் செல்வம் அஃகாதென்பதாயிற்று.

கூ. அறன் அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்
திறன் அறிந்த்' ஆங்கே திரு.

ப. இஃது அறன் என்று அறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரைத் திருமக'டான் அடைதற் காங் கூற்றினை அறிந்துஅக்கூற்றானே சென்றடையும்; எ—று.

வி. அடைதற்காங் கூறு, காலமும் இடனுஞ் செ-

வ்வியு முதலாயின. இவை இரண்டுபாட்டானும் வெ-ஃகாமையின் குற்றங் கூறப்பட்டது.

ய. இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு.

ப. பின் விளைவதறியா ஒருவன் பிறன்பொருளை வௌவக்கருதின், அக்கருத்து அவனுக்கு இறுதியை-ப் பயக்கும்: அப்பொருளை வேண்டாமை என்னுஞ் செல்வம் வெற்றியைப்பயக்கும்; எ—று.

வி. பகையும் பாவமும் பெருகலின் "இறலீனும்" என்றும், அப்பொருளைவேண்டி உழல்வோர் யாவ-ரையுங் கீழ்ப்படுத்தலின், "விறலீனும்" என்றுங் கூ-றினர். செருக்கு ஆகுபெயர். இதனால் அவ்விருமை-யும் ஒருங்குகூறப் பட்டன.

---

உக. அதிகாரம்.

# தீவினை அச்சம்.

(On the Fear of Sin.)

ப. தீவினைஅச்சம். அஃதாவது, பாவங்களாயின செய்தற்' அஞ்சுதல். இதனன்மெய்யின்கணிகழும் பாவங்களெல்லாந் தொகுத்து விலக்குகின்றாராகலின், இது பயனில சொல்லாமையின் பின் வைக்கப்பட்-டது.

க. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

ப. தீவினையென்று சொல்லப்படு மயக்கத்தை மு-ன்செய்ததீவினை யுடையார் அஞ்சார்: அஃதிலாரகிய சிரியார் அஞ்சுவார்; எ—று.

வி. "தீவினையென்னுஞ்செருக்கு" எனக் காரியங் காரணமாக உபசரிக்கப்பட்டது. மேற்றொட்டுச்செ-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

ய்து கைவந்தமையான், "அஞ்சார்" என்றுஞ், செ-
ய்தறியாமையான் "அஞ்சுவர்" என்றுங் கூறினர்.

உ. தீயவைதீய பயத்தலாற்—'றீயவை
தீயினும் அஞ்சப்படும்.

ப. தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீ-
வினைகள் பின் அஃதொழிந்து துன்பமேபயத் தலால்
அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனாற் றீயினும்
அஞ்சப்படும்; எ—று.

வி. பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும்
பிறிதோருடம்பினும் சென்று சுடுத 'றீக்கின்மையிற்
'றீயினும்அஞ்சப்படுவதாயிற்று.

ஙூ. அறிவினுள் எல்லாந் தலையென்பதீய
செறுவார்க்குஞ் செய்யாவிடல்.

ப. தமக்குறுதிநாடும் அறிவுகளெல்லாவற்றுள்ளு-
ம் தலையாய அறிவென்று சொல்லுவார் நல்லோர் த-
ம்மைச் செறுவார் மாட்டுந் தீவினைகளைச் செய்யாது
விடுதலை; எ—று.

வி. விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதலென்-
றுஞ், செய்யத்தகு வழியுஞ் செய்யாதொழியவே ந-
மக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்த்தி அதனை
அறிவினுளெல்லாந் தலையென்றுங் கூறினர். செய்யா-
து என்றது செய்யா எனக் கடைக் குறைந்து நின்ற-
து. இவை மூன்றுபாட்டானும் தீவினைக்' அஞ்ச
வேண்டுமென்பது கூறப் பட்டது.

ரு. இலன் என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன் ஆகு மற்றும்பெயர்த்து,

ப. யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொரு-
ட்டுப் பிறற்குக் கேட்டைஒருவன் செய்யாதொழிக;
செய்வனாயிற் பெயர்த்தும் வறியனும்; எ—று.

வி. அன் விகுதி மூன்றனித்தன்மை; "உளனாலென்-
றுரைஉண்டு" என்பதனாலும் அறிக. இலமென்று
பாடம் ஓதுவாரும் உளர். அத்தீவினையாற் பிறவிதோ-

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

றும் இலனும் என்பதாம். பொருளான் வறியனெனக்கருதித் தீயவைசெய்யற்க, செய்யின் அப்பொருளானே அன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனுமென்றுரைப்பாருமுளர். மற்றும் அசைநிலை.

௫. தீப்பால தான் பிறர் கட் செய்யற்கநோய்ப்பால
தன்னை அடல்வேண்டாதான்.

ப. துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கடன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன் தீமைக் கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர் மாட்டுச் செய்யாது ஒழிக; எ—று.

வி. செய்யின் அப்பாவங்கள் அடுதல் ஒருதலை என்பதாம்.

௭. எனைப் பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின் சென்ற்’ அடும்.

ப. எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனை ஒருவாற்றாற் றப்புவர்; அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக்கொல்லும்; எ—று.

வி. “வீயாதுடம்பொடு நின்றவுயிருமில்லை” என்புழியும், வீயாமை நீங்காமைக் கண் வந்தது.

௮. தீயவைசெய்தார் கெடுத்’—‘னிழ’ ‘றன்னை
வீயாத்’ அடியுறைந்த்’ அற்று.

ப. பிறர்க்குத் தீவினைசெய்தார் தாங் கெடுதல் எத்தன்மைத் தெனில் ஒருவனிழல் நெடிதாகப் போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கட்டங்கிய தன்மைத்து; எ—று.

வி. இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனாகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழி, உருப்பதாயதீவினையைச் செய்தார் பின் அதனாற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாரும் உளர். அஃது உரையன்றென்பதற்கு அடியுறைந்த நிழறன்னை வீந்தற்று என்னாது “வீயாதடியுறைந்தற்று” என்ற பா-

டமேகரியாயிற்று. மேல்வீயாது பின் சென்றடுமென்றார். இண்டு அதனை உவமையான் விளக்கினார்.

கூ. தன்னைத் தான்காதலனாயின் எனைத்' தொன்றுந்
துன்னற்க தீவினைப்பால்.

ப. ஒருவன் றன்னைத்தான் காதல் செய்தலுடையவனாயிற் 'றீவினையாகிய பகுதி எத்துணையும் சிறிதொன்றாயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக; எ—று.

வி. நல்வினை தீவினைஎன வினைப்பகுதி இரண்டாகலிற் றீவினைப்பால என்றார். பிறர்மாட்டுச் செய்ததீவினை தன்மாட்டுத்துன்பம் பயத்தல் விளக்கினாராதலிற், 'றன்னைத் தான்காதலனாயின்என்றார். இவை ஆறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய்யிற் றாங்கெடுவரென்பது கூறப்பட்டது.

ய. அருங்கேடன் என்பத்' அறிக மருங்கோடித்
தீவினைசெய்யான் எனின்.

ப. ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட்சென்று பிறர் மாட்டுத் தீவினைசெய்யானாயின், அவனை அரிதாய கேட்டையுடையனென்பதறிக; எ—று.

வி. அருமை—இன்மை. அருங்கேடன் என்பதனைச் "சென்று சேர்கல்லாப் புள்ளப் புள்ளிலென்றாழ்வியன்குளம்" என்பதுபோலக் கொள்க. ஓடி என்னும் வினை எச்சம் செய்யான் என்னும் எதிர்மறையுட் செய்தலோடு முடிந்தது. இதனாற் 'றீவினைசெய்யாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது.

---

# PERYA PURANAM.

# பெரியபுராணம்.

தடுத்தாட்கொண்ட புராணம்.

(History of Suntera, a zealous votary of the Siva Sect.)

கங்கையு மதியும் பாம்புங் கடுக்கையு முடிமேல் வைத்த
அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் தமக்கு நாடு
மங்கையர் வதன சீத மதியிரு மருங்கும் ஓடிச்
செங்கயல் குழைகள் நாடுந் திருமுனைப் பாடி நாடு. க.

பெருகிய வளத்தான் மீக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தான் மீக்க வளம்பதி வாய்மை குன்றுத்
திருமறை யவர்க ணீடுந் திருநாவல் ஊராம் அன்றே. உ.

மாதொரு பாக னார்க்கு வழிவழி அடிமை செய்யும்
வேதியர் குலத்துட் டோன்றி மேம்படு சடைய னருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பாற்
றீதகன் றுலகம் உய்யத் திருஅவ தாரஞ் செய்தார். ங.

தம்பிரான் அருளி னாலே தவத்தினான் மிக்கார் போற்று
நம்பியா ரூரர் என்றே நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படைச் சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனாண் அரையின் மீன்னத் தெருவிற்றேர் உருட்டு நாளில். ச.

நரசிங்க முனையர் என்னு நாடுஆள் அரசர் கண்டு
பரவருங் காதல் கூரப் பயந்தவர் தம்பாற் சென்று
விரவிய நண்பி னாலே வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரற் கேற்ப அன்பினான் மகன்மைக் கொண்டார். ரு.

பெருமைசால் அரசர் காதற் பிள்ளையாய்ப் பின்னுந் தங்கள்
வருமுறை மரபின் வைகி வளர்ந்துமங் கலஞ்செய் கோலத்
தருமறை முந்நூல் சாத்தி அளவி றேல் கலைகள் ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவஞ் செய்தார். சா.

தந்தையார் சடைய னார்தந் தனித்திரு மகற்குச் சைவ
அந்தணர் குலத்துட் டங்கள் அரும்பெரு மரபுக் கேற்ப
வந்தவோர் சிறப்பிற் புத்தூர்ச் சடங்கவி மறையோன் றன்பாற்
செந்திரு அனைய கன்னி மணத்திறஞ் செப்பி விட்டார். எ.

குலமுதல் அறிவு மிக்க கோத்திர முறையுந் தேர்ந்தார்
நலமிகு முதியோர் சொல்லச் சடங்கவி நன்மை ஏற்று
மலர்தரு முகத்த னாகி மணம்புரி செயலின் வாய்மை
பலவுடன் பேசி ஒத்த பண்பினால் அன்பு நேர்ந்தான். அ.

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ள றன்னைப்
பெற்றவர் தம்பாற் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாத்திக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்துநா ளோலை விட்டார். கூ.

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயற் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர்ச் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரு மைந்தரும் பணிந்து கொண்டார். ௰.

மகிழ்ச்சியான் மணமீக் கூறி மங்கல வினைக ளெல்லாம்
புகழ்ச்சியாற் பொலிந்து தோன்றப் போற்றிய தொழில ராகி
இகழ்ச்சியொன் றானும் இன்றி ஏந்துபூ மாலைப் பந்தர்
நிகழ்ச்சியின் மைந்தர் ஈண்டி நீண்முளை சாத்தி னார்கள். ௰க.

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தார் செய்யத்
துணைமலர்க் கோதைத் தாமச் சுரும்பணை தோளி னானைப்
புணர்மணத் திருநாண் முன்னாட் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொனாண் காப்புச் சேர்த்தார் ௰உ.

மாமறை விதிவழாமன் மணத்துறைக் கடன்கள் ஆற்றித்
தூமறை மூதூர்க் கங்குன் மங்கலந் துவன்றி ஆர்ப்பத்
தேமரு தொடையன் மார்பன் றிருமணக் கோலங் காணக்
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ் செய்தான். ௰ங.

காலைசெய் வினைகண் முற்றிக் கணிதநூற் புலவர் சொன்ன
வேலைவந் தணையா முன்னர் விதிமணக் கோலங் கொள்வான்
நூலசைந் திலங்கு மார்பி னுணங்கிய கேள்வி மேலோன்
மாலையுந் தாரும் பொங்க மஞ்சன சாலை புக்கான். ௰ச.

வாசநெய் ஊட்டிமிக்க மலர்விரை அடுத்த தூநீர்ப்
பாசனத் தமைந்த பாங்கர் பருமணிப் பைம்பொற் றிண்கால்
ஆசனத் தணிநீ ராட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கினியான் மேனி எழில்பெற விளக்கினார்கள். ௰ரு.

அகில்விரைத் தூப மேய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி
முகினுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தந் தூய செங்கை
உகிர்நுதி முறையிற் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தார். ௰சு.

தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட அமைந்தசந் தனச்சே றட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பான்மறை முந்நூன் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான். ௰எ.

தூமலர்ப் பிணையன் மாலைத் துணரிணர்க் கண்ணிக் கோதைத்
தாமமென் றிணைய வேறு தகுதியான் அமையச் சாத்தி

மாமணி அணிந்த தூய வளரொளி இருள்கால் சீக்கு
நாமநீள் கலன்கள் சாத்தி நன்மணக் கோலங் கொண்டான். ௰௮.

மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியா ரூரர் நாதன்
றன்னடி மனத்துட் கொண்டு தகுந்திரு நீறு சாத்திப்
பொன்னணி மணியார் யோகப் புரவிமேற் கொண்டு போந்தார். ௰௯.

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி யெடுப்ப மாதர்
நயந்துபல் லாண்டு போற்ற நான்மறை ஒலியி னோங்க
வியந்துயிர் விரும்ப வந்து விரவினர்க் கின்பஞ் செய்தே
உயர்ந்தவா கனயா னங்கண் மிசைக்கொண்டார் உழைய ராஞர்.௨௰

மங்கல கீத நாத மறையவர் குழாங்க ளோடு
தொங்கலும் விரையுஞ் சூழ்ந்த மைந்தருந் துவன்றிச் சூழப்
பங்கய முகையைச் சாய்த்துப் பணைத்தெழுந் தணியின் மிக்க
குங்குமக் குயத்தினரும் பரந்தெழு கொள்கைத் தாகி. ௨௧.

அருங்கடி யெழுந்த போதின் ஆர்த்தவெள் வளைக ளாலும்
இருங்குழை மகரத் தாலும் இலங்கொளி மணிக ளாலு
நெருங்கிய பீலிச் சோலை நீனிறத் தரங்கத் தாலுங்
கருங்கடல் கிளர்ந்த தென்னக் காட்சியிற் பொலிந்த தன்றே. ௨௨.

நெருங்குது ரியங்கள் ஏங்க நிரைத்தசா மரைக ளோங்கப்
பெருங்குடை மிடைந்து செல்லப் பிறங்குபூங் கொடிக ளாட
அருங்கடி மணம்வந் தேய்ந்த அன்றுதொட் டென்றும் அன்பில்
வருங்குல மறையோர் புத்தூர் மணம்வந்த புத்தூ ராமால். ௨௩.

நிறைகுடந் தூப தீப நெருங்குபா லிகைகள் ஏந்தி
நறைமலர் அறுகு சுண்ண நறும்பொரி பலவும் வீசி
உறைமலி கலவைச் சாந்தின் உறுபுன றெளித்து வீதி
மறையவர் மடவார் வள்ளன் மணமெதிர் கொள்ள வந்தார். ௨௪.

கண்கௗெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவி பேதை என்பார்
மண்களி கூர வந்த மணங்கண்டு வாழ்ந்தோம் என்பார்
பண்களி னிறைந்த கீதம் பாடுவா ராடு வார்கள். ௨௫.

ஆண்டகை அருளி னேக்கின் வெள்ளத்து ளலைந்தோ மென்பார்
தாண்டிய பரியு நம்பாற் றகுதிபி னடந்த தென்பார்
பூண்டயங் கிவனே காணும் புண்ணிய மூர்த்தி யென்பார்
ஈண்டிய மடவார் கூட்டம் இன்னன இசைப்பச் சென்றார். ௨௬.

வருமணக் கோலத் தெங்கள் வள்ளலார் தெள்ளும் வாசத்
திருமணப் பந்தர் முன்பு சென்றுவெண் சங்க மெங்கும்
பெருமழைக் குலத்தி னார்ப்பப் பரிமிசை இழிந்து பேணும்
ஒருமணத் திறத்தி னங்கு நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன். ௨௭.

(வேறு.) ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த
சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்
மேலுற எழுந்துமிகு கீழுற அகழ்ந்தும்
மாலும் அயனுக்கும் அரி யாரொருவர் வந்தார். ௮௨.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

கண்ணிடை கரந்தகதிர் வெண்படமெ னச்சூழ்
புண்ணிய நுதற்புனித நீறுபொலி வெய்தத்
தண்மதி முதிர்ந்துகதிர் சாய்வதென மீதே
வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க. ௨௯.

காதிலணி கண்டிகை வடிந்தகுழை தாழச்
சோதிமணி மார்பின்மிசை நூலினொடு தோளின்
மீதுபுனை உத்தரிய வெண்டுகி லுடங்க
ஆதவ மறைக்குடை அணிக்கரம் விளங்க. ௩௰.

பண்டிசரி கோவண உடைப் பழைமைகூரக்
கொண்டதொர் சழங்கலுடை ஆர்ந்தழகு கொள்ள
வெண்டுகி லுடன்குசை முடிந்துவிடு வேணுத்
தண்டொருகை கொண்டுகழ றள்ளுநடை கொள்ள. ௩௧.

மெய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ
அத்தகைய மூப்பெனும் அதன்படிவ மேயோ
மெய்த்தநெறி வைதிகம் விளைத்தமுத லேயோ
இத்தகைய வேடமென ஐயமுற எய்தி. ௩௨.

வந்து திருமாமறை மணத்தொழி லொடங்கும்
பந்தரிடை நம்பியெதிர் பன்னுசபை முன்னின்
றிந்தமொழி கேண்மினெதிர் யாவர்களும் என்றான்
முந்தமறை யாயிர மொழிந்ததிரு வாயான். ௩௩.

என்றுரைசெய் அந்தணனை எண்ணில்மறை யோரு
மன்றல்வினை மங்கல மடங்கலன யானு
நன்றுமது நல்வரவு நங்கட்வம் என்றே
நின்றதிவ னீர்மொழிமி னீர்மொழி வதென்றார். ௩௪.

பின்றுகனு நாவலர் பெருந்தகையை நோக்கி
என்னிடையு நின்னிடையு நின்ற இசை வால்யான்
முன்னுடைய தோர்பெரு வழக்கினை முடித்தே
நின்னுடைய வேள்வியினை நீமுயறி யென்றான். ௩௫.

நெற்றிவிழி யான்மொழிய நின்றநக ரில்லான்
உற்றதொர் வழக்கெனிடை நீயுடைய துண்டேன்
மற்றது முடித்தலது யான்வதுவை செய்யேன்
முற்றவிது சொல்லுகென எல்லைமுடி வில்லான். ௩௬.

ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ தென்றான்
றேவரையு மாலயன்மு தற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேற்டிமை யாயுடைய எம்மான். ௩௭

(வே.) என்றான் இறையோன் இதுகேட்டவர் எம்மருங்கு
நின்றார் இருந்தார் இவனென்னினைந் தான்கொலென்று
சென்றார் வெகுண்டார் சிரித்தார்திரு நாவலூரன்
நன்றான் மறையோன் மொழியென்றெதிர் நோக்கிநக்கான். ௩௮.

நக்கான் முகநோக்கி நடுங்கிநுடங் கியார்க்கு
மிக்கான் மிசையுத் தரியத்துகி ருங்கிமேற்சென்

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

றக்காலம் உன்றந்தைதன் றந்தையா ளோலையீதால்
இக்காரியத்தை நீயின்று சிரித்ததென் ஏடவென்ருன். ஙகூ.

மாசிலா மரபில்வந்த வள்ளல்வே தியனைநோக்கி
நேசமுன் கிடந்தசிந்தை நெகிழ்ச்சியாற் சிரிப்புநீங்கி
ஆசிலந் தணர்கள்வேருேர் அந்தணர்க் கடிமையாதல்
பேசவின் றுன்னைக்கேட்டோம் பித்தனே மறையோனென்ருர். சய.

பித்தனு மாகப்பின்னும் பேயனு மாகநீயின்
றெத்தனை தீங்குசொன்ன யாதுமற் றவற்ருறணேன்
அத்தனைக் கென்னையென்றும் அறிந்திலை யாகினின்று
வித்தகம் பேசவேண்டாம் பணிசெய்ய வேண்டுமென்ருர், சக.

கண்டதோர் வடிவாலுள்ளங் காதல்செய் துருகாநிற்குங்
கொண்டதோர் பித்தவார்த்தை கோபமு முடனேயாக்கும்
உண்டோரா ளோலையென்னும் அதனுண்மை யறிவேனென்று
தொண்டனு ரோலைகாட்டு கென்றனர் துவணைவனுரை. சஉ.

ஓலைகாட் டென்றுநம்பி உரைக்கநீ ஓலைகாணற்
பாலையோ அவைமுன்காட்டப் பணிசெயற் பாலையென்ற
வேலையி ஞவலூரர் வெகுண்டுமேல் விரைந்துசென்று
மாலயன் ருேடராதானை வலிந்துபின் ருேடரலுற்றன். சஙு.

ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்தணாளன்
காவணத் திடையேயோடக் கடிதுபின் ருேடர்ந்துநம்பி
பூவணத் தவரையுற்ருர் மேவலார் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையினுரை டார்தொடர்ந் தெட்டவல்லார் சச.

மறைகளா யினமுன்போற்றி மலர்ப்பதம் பற்றிநின்ற
இறைவனைத் தொடர்ந்துபற்றி எழுதுமா ளோலைவாங்கி
அறைகழ லண்ணலாளாய் அந்தணர் செய்தலென்ன
முறையெனக் கீறியிட்டார் முறையிட்டான் முடிவிலாதான். சரு.

அருமறை முறையிட்டின்னம் அறிவதற் கரியான்பற்றி
ஒருமுறை முறையோவென்ன உழைநின்ருர் விலகியிந்தப்
பெருமுறை யுலகிலில்லா நெறிகொண்டு பிணங்குகின்ற
திருமறை முனிவரேநீர் எங்குளீர் செப்புமென்ருர். சசு.

என்றலு நின்ற ஐயர் இங்குளே னிருப்புஞ்செய்த
தன்றிந்த வெண்ணெய்நல்லூ ரதுநிற்க அறத்தாறின்றி
வன்றிறல் செய்தென்கையில் ஆவணம் வலியவாங்கி
நின்றிவன் கிழித்துத்தானே நீரப்பிறு னடிமையென்ருன். சஎ.

குழைமறை காதினனைக் கோதிலா ரூரனேக்கிப்
பழையமன் ருடிபோலும் இவனென்று பண்பின்மிக்க
விழைவுறு மனமும்பொங்க வெண்ணெய்நல் லூராயேலுன்
பிழைநெறி வழக்கையாங்கே பேசநீ போதாயென்ருர். சஅ.

வேதிய னதனைக்கேட்டு வெண்ணெய்நல் லூரிலேநீ
போதினு நன்றுமற்றைப் புனிதநான்மறையோர்முன்னர்
ஆதியுன் மூலவோலை காட்டிநீ யடிமையாதல்
சாதிப்ப னென்றுமுன்னே தண்டினைத் தாங்கிச்சென்ருர்.. சகூ.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

செல்லுநான் மறையோன்றன்பின் திருமுகக் காந்தஞ்சேர்ந்த
வல்லிரும் பணையுமாபோல் வள்ளலுங் கடிதுசென்றான்
எல்லையில் சுற்றத்தாரும் இதுவென்னு மென்றுசொல்ல
நல்ல அந்தணர்கள்வாழும் வெண்ணெய்நல் லூரைநண்ணி. ருய.

வேதபா ரகரின்மிக்கார் விளங்குபே ரவைமுன்சென்று
நாதநான் மறையோன்சொல்லு நாவலூ ராரூரன்றான்
சாதலென் னடியானென்னக் காட்டிய ஓலைகீறி
மூதறி வீர்முன்போந்தான் இதுமற்றென் முறைப்பாடென்றான். ருக.

அந்தண ரவையின்மிக்கார் மறையவ ரடிமையாதல்
இந்தமா நிலத்திலில்லை என்சொன்னாய் ஐயாவென்றார்
வந்தவா றிசைவேயன்றே வழக்கிவன் கிழித்தவோலை
தந்தைதன் றந்தைநேர்ந்த தென்றனன் றனியாய்நின்றான். ருஉ.

இசைவினா லெழுதுமோலை காட்டினா லிகலின்று
விசையினால் வலியவாங்கிக் கிழிப்பது வெற்றியாமோ
தசையெலாம் ஒடுங்கமூத்தான் வழக்கினைச்சாரச்சொன்னான்
அசைவிலா ரூரனெண்ண மென்னென்றார் அவையின்மிக்கார். ருங.

அனைத்துநூல் உணர்ந்தீராதி சைவனென் றறிவீரென்னைத்
தனக்குவே றடிமையென்றிவ் வந்தணன் சாதித்தானேல்
மனத்தினா லுணர்தற்கெட்டா மாயையென் சொல்லுகேன்யான்
எனக்கிது தெளிய வொண்ணா தென்றன னெண்ணமிக்கான். ருச.

அவ்வுரை அவையின்முன்பு நம்பியா ரூரர்சொல்லச்
செவ்விய மறையோர்நின்ற திருமறை முனியைநோக்கி
இவ்வுல கின்கணீரின் றிவரைநும் மடிமையென்ற
வெவ்வுரை யெம்முன்போற்ற வேண்டுமென் றுரைத்துமீண்டும். ருரு.

ஆட்சியி லாவணத்தி லன்றிமற் றயலார்தங்கள்
சாட்சியின் மூன்றிலொன்று காட்டுவா யென்னமுன்னே
மூட்சியிற் கிழித்தவோலை படியோலை மூலவோலை
மாட்சியிற்காட்டவைத்தே னென்றனன் மாயைவல்லான். ருசா.

வல்லையேற் காட்டிங்கென்ன மறையவன் வலிசெய்யாமற்
சொல்லநீர் வல்லிராகிற் காட்டுவே னென்றுசொல்லச்
செல்வநான் மறையோர்நாங்க ளுங்குற வொட்டோமென்றார்
அல்லநீர்த் தாளநின்றா ராவணங் கொண்டுசென்றார். ருஎ.

இருண்மறை மீடற்றோன்கையி லோலைகண் டவையோரேவ
அருள்பெறு கரணத்தானும் ஆவணந் தொழுதுவாங்கிச்
சுருள்பெறு மடியைநீக்கி விரித்தனன் றொன்மைநோக்கித்
தெருள்பெறு சவையோர்கேட்ப வாசகஞ்செப்புகின்றான். ருஅ.

அருமறை நாவலாதி சைவனா ரூரன்செய்கைப்
பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக் கியானுமென்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை
இருமையா லெழுதிநேர்ந்தேன் இதற்கிவை யென்னெழுத்து. ருகூ.

வாசகங் கேட்டபின்னர் மற்றுமே லெழுத்தும் இட்டார்
ஆசிலா எழுத்தைநோக்கி அவையோர்க்கு மென்றபின்னர்

மாசிலா மறையோரையா மற்றுங்கள் பேரனார்தந்
தேசுடை எழுத்தேயாகிற் றெளியப்பார்த் தறிமினென்றார். ௬௰.

அந்தணர் கூறவின்னும் ஆளோலை யிவனேகாண்பான்
றந்தைதன் றந்தைதான்வே றெழுதுகைச் சாத்துண்டாகில்
இந்தவா வணத்தினோடும் எழுத்துநே ரொப்புநோக்கி
வந்தது மொழிமினென்றான் வலிய ஆட்கொள்ளும்வள்ளல். ௬௧.

திரண்டமா மறையோர்தாமுந் திருநாவ லூரர்கோமுன்
மருண்டது தெளியமற்ற மறையவ னெழுத்தாலோலை
அரண்டது காப்பில்வேறோன் றழைத்துட னொப்புநோக்கி
இரண்டுமொத் திருந்ததென்னே இனிச்செயல் இல்லையென்றார். ௬௨.

நான்மறை முனிவனார்க்கு நம்பியா ரூரர்தோற்றீர்
பான்மையி னேவல்செய்தல் கடனென்று பண்பின்மிக்க
மேன்மையோர் விளம்பநம்பி விதிமுறை யிதுவேயாகில்
யானிதற் கிசையேனென்றல் இசையுமோ என்றுநின்றார். ௬௩.

திருமிகு மறையோர்நின்ற செழுமறை முனியைநோக்கி
அருமுனி நீர்முன்காட்டு மாவணம தனிலெங்கள்
பெருமைசேர் பதியேயாகப் பேசிய துமக்கிவ்வூரில்
வருமுறை மனையுநீடு வாழ்க்கையுங் காட்டுகென்றார். ௬௪.

பொருவரும் வழக்கால்வென்ற புண்ணிய முனிவரென்னை
ஒருவரும் அறியிராகிற் போதுமென் றுரைத்துச் சூழ்ந்த
பெருமறை யவர்குழாமு நம்பியும் பின்புசெல்லத்
திருவருட்டுறையே புக்கார் கண்டிலார் திகைத்துநின்றார். ௬௫.

எம்பிரான் கோயினன்னை இலங்குநூன் மார்பனெங்க
ணம்பர்தங் கோயில்புக்க தென்கொலோ என்றுநம்பி
தம்பெரு விருப்பினோடு தனித்தொடர்ந் தழைப்பமாதோ
டும்பரின் விடைமேற்றோன்றி அவர்தமக் குணர்த்தலுற்றார். ௬௬.

முன்புநீ நமக்குத்தொண்டன் முன்னிய வேட்கைகூரப்
பின்புநம் மேவலாலே பிறந்தனை மண்ணின்மீது
துன்புறு வாழ்க்கைநின்னைத் தொடர்வறத் தொடர்ந்துவந்து
நன்புல மறையோர்முன்னர் நாந்தடுத் தாண்டோமென்றார். ௬௭.

என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன் கனைப்புக்கேட்ட
கன்றுபோற் கதறிநம்பி கரசர ணாதியங்கந்
துன்றிய புளகமாகத் தொழுதுகை தலைமேலாக
மன்றுளீர் செயலோவந்து வலிய ஆட் கொண்டதென்றார். ௬௮.

எண்ணிய வோசையைந்தும் விசும்பிடைநிறையவெங்கும்
விண்ணவர் பொழிபூமாரி மேதினி நிறைந்துவிம்ம
மண்ணவர் மகிழ்ச்சிபொங்க மறைகளு முழங்கியார்ப்ப
அண்ணலை யோலைகாட்டி யாண்டவர் அருளிச்செய்வார். ௬௯.

மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னுநாமம்
பெற்றனை நமக்குமன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க
அர்ச்சனை பாட்டேயாகு மாதலான் மண்மேனம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூய்மறை பாடும்வாயார். ௭௰.

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தேடிய அயனுமாலுந் தெளிவுறு ஐந்தெழுத்தும்
பாடிய பொருளாயுள்ளான் பாடுவாய் நம்மையென்ன
நாடிய மனத்தராகி நம்பியா ரூரர்மன்றுள்
ஆடிய செய்யதாளை யஞ்சலி கூப்பிநின்று எக.

வேதிய குகியென்னை வழக்கினுல் வெல்லவந்த
ளுதிய மறியாதேனுக் குணர்வுதந் துய்யக்கொண்ட
கோதிலா அமுதேயின்றுன் குணப்பெருங் கடலைநாயேன்
யாதினை யறிந்தேன்சொல்லிப் பாடுகே னெனமொழிந்தார். எஉ.

அன்பனை அருளினேக்கி அங்கண ரருளிச்செய்வார்
முன்பெனைப் பித்தனென்றே மொழிந்தனை யாதலாலே
என்பெயர் பித்தனென்றே பாடுவா யென்றார்நின்ற
வன்பெருந் தொண்டராண்ட வள்ளலைப் பாடலுற்றார். எஙு.

(வே.)கொத்தார்மலர்க் குழலாளொரு கூறுயடி யவர்பால்
மெய்த்தாயினும் இனியானையவ் வியனுவலர் பெருமான்
பித்தாபிறை சூடியெனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாமுல கெல்லாமுய எடுத்தார். எச.

முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலிற்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினுல்
நிறைபாணியில் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகி ழிசைபாடினன் எல்லாநிக ரில்லான். எரு.

சொல்லார்தமி ழிசைபாடிய தொண்டன்றனை யின்னும்
பல்லாறுல கினினம்புகழ் பாடென்றுறு பரிவின்
நல்லார்வெண்ணெய் நல்லூரருட் டுறைமேவிய நம்பன்
எல்லாவுல குய்யப்புரம் எய்தானருள் செய்தான். எசு.

அயலோர்தவ முயல்வார்பிறர் அன்றேமணம் அழியுஞ்
செயலாரனிகர் புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர்நாவலர் தனிநாதனை ஒழியாதுணர் வழியிற்
பெயராதுயர் சிவலோகமும் எழிதாம்வகை பெற்றாள். எஎ.

(வே.) நாவலர்கோன் ஆரூரன் றனைவெண்ணெய் நல்லூரின்
மேவும் அருட் டுறையமர்ந்த வேதியராட் கொண்டதற்பின்
பூவலருந் தடம்பொய்கைத் திருநாவ லூர்புகுந்து
தேவர்பிரான் றணப்பணிந்து திருப்பதிகம் பாடினார். எஅ.

சிவனுறையுந் திருத்துறையூர் சென்றணைந்து தீவினையால்
அவநெறியே செல்லாமே தடுத்தாண்ட அடியேற்குத்
தவநெறிதந் தருளென்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம் பாடினார். எகூ.

புலனொன்றும் படிதவத்திற் புரிந்தநெறி கொடுத்தருள
அலர்கொண்ட நறுஞ்சோலைத் திருத்துறையூ ரமர்ந்தருளு
நிலவுந்தண் புனலுமொளிர் நீள்சடையோன் றிருப்பாத
மலர்கொண்டு போற்றிசைத்து வந்தித்தார் வன்றொண்டர். அய.

திருத்துறையூர் தனைப்பணிந்து சிவபெருமான் அமர்ந்தருளும்
பொருத்தமாம் இடம்பலவும் புக்கிறைஞ்சிப் பொற்புலியூர்

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

நிருத்தனுர் திருக்கூத்துத் தொழுவதற்கு நினைவுற்று
வருத்தமிகு காதலினுல் வழிக்கொள்வான் மனங்கொண்டார். அக.

மலைவளர்சந் தகில்பீலி மலர்பாப்பி மணிகொழிக்கும்
அலைதருதண் புனற்பெண்ணை ஆறுகடந் தேறியபின்
நிலவுபசும் புரவிநெடுந் தேரிரவி மேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார். அஉ

உடையஅர சுலகேத்தும் உழவாரப் படையாளி
விடையவர்க்குக் கைத்தொண்டு விரும்புபெரும் பதியைமிதித்
தடையுமதற் கஞ்சுவனென் றந்நகரிற் புகுதாதே
மடைவளர்தண் புறம்பணையிற் சித்தவட மடம்புகுந்தார். அங.

வரிவளர்பூஞ் சோலைசூழ் மடத்தின்கண் வன்றெண்டர்
விரிதிரைநீர்க் கெடிலவட வீரட்டா னத்திறைதாள்
புரிவுடைய மனத்தினராய்ப் புடையெங்கு மீடைகின்ற
பரிசனமுந் துயில்கொள்ளப் பள்ளிஅமர்ந் தருளினுர். அச.

அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளும் அங்கணரும்
முதுவடிவின் மறையவராய் முன்னெருவர் அறியாமே
பொதுமடத்தின் உட்புகுந்து பூந்தாரான் றிருமுடிமேற்
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார் போற்பயின்றர். அரு.

அந்நிலைஆ ரூரனுணர்ந் தருமறையோய் உன்னடியென்
சென்னியில்வைத் தனையென்னத் திகையறியா வகைசெய்த
தென்னுடைய மூப்புக்காண் என்றருள அதற்கிசைந்து
தன்முடியப் பால்வைத்தே துயிலமர்ந்தான் தமிழ்நாதன். அசு.

அங்குமவன் திருமுடிமேன் மீண்டுமவர் தாணீட்டச்
செங்கயல்பாய் தடம்புடைசூழ் திருநாவல் ஊராளி
இங்கென்னைப் பலகாலு மிதித்தநீ யாரென்னக்
கங்கைசடைக் கரந்தபிரான் அறிந்திலையோ எனக்கரந்தான். அஎ.

செம்மாந்திங் கியானறியா தென்செய்தேன் எனத்தெளிந்து
தம்மானை அறியாத சாதியா ருளரேயென்
றம்மானைத் திருவதிகை வீரட்டா னத்தமர்ந்த
கைமாவின் உரியானைக் கழல்பணிந்து பாடினுர். அஅ.

பொன்றிரளு மணித்திரளும் பொருகரிவெண் கோடுகளு
மின்றிரண்ட வெண்முத்தும் விரைமலரு நறுங்குறடும்
வன்றிரைக ளாற்கொணர்ந்து திருவதிகை வழிபடலாற்
றென்றிசையிற் கங்கையெனுந் திருக்கெடிலந் திளைத்தாடி. அகூ.

அங்கணரை அடிபோற்றி அங்ககன்று மற்றந்தப்
பொங்குநதித் தென்கரைபோய்ப் போர்வலித்தோண் மாவலிதன்
மங்கலவேள் வியிற்பண்டு வாமனனுய் மண்ணிரந்த
செங்கணவன் வழிபட்ட திருமாணிக் குழியடைந்தார். கூய.

பரம்பொருளைப் பணிந்துதாள் பரவிப்போய்ப் பணிந்தவர்க்கு
வரந்தருவான் திருநகரை வணங்கினர்வண் டமிழ்பாடி
நரம்புடையா ழொலிமுழவி னுதவொலி வேதவொலி
அரம்பையர்தங் கீதவொலி அறுத்தில்லை மருங்கணைந்தார். கூக.



Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

(வே)தேமலங்கலணி மாமணிமார்பிற் செம்மலங்கயல்கள் செங்க
மலத்தன்
பூமலங்க எதிர் பாய்வனமாடே புள்ளலம்புதிரை வெள்வளவாவித்
தாமலங்குக டடம்பணைசூழந் தண்மருங்குதொழ வார்கடமும்மை
மாமலங்களற விடருடில்லை மல்லலம்பதியின் எல்லவணங்கி.கூஉ

நாகசூதவகு ளஞ்சரளஞ்சூழ் நாளிகேரமில் வங்கா ரந்தம்
பூகஞாழல்குளிர் வாழைமதூகம் போதுளும்வஞ்சிபல் எங்குநெருங்கி
மேகசாலமலி சோலைகளாகி மீதுகோகில மிடைந்துமிழற்றப்
போகபூமியினு மிக்குவிளங்கும் பூம்புறம்பணைக டந்துபுகுந்தார். கூ௩.

வன்னி கொன்றைவழை சண்பகமாரம் மலர்ப்பலாசொடு செருந்தி
மந்தாரங்
கன்னிகாரங்குரா வங்கமழ்புன்னை கற்பபாடலங் கூவிளமோங்கித்
துன்னுசாதிமரு மாலதிமௌவ லுதைந்தநந்திகர வீரமிடைந்த
பன்மலர்ப்புனித நந்தவனங்கள் பணிந்துசென்றனன் மணங்கமழ்
தாரான். கூ௪

இடமருந்ததனி நாயகிகாண ஏழ்பெரும்புவனம் உய்யவெடுத்து
நடநவின்றருள் சிலம்பொலிபோற்று நான்மறைப்பதியை நாளும்வ
ணங்கக்
கடல்வலங்கொள்வது போற்புடைசூழுங் காட்சிமேவிமிகு சேட்செ
ல வோங்குந்
தடமருங்குவளர் மஞ்சிவரிஞ்சித் தண்கிடங்கையெதிர் கண்டுமகிழ்ந்
தார். கூ௫.

மன்றுளாடுமது வின்னசையாலே மறைச்சுரும்பறை புறத்தின் மரு
ங்கே [தை
குன்றுபோலுமணி மாமதில்சூழுங் குண்டகழ்க்கமல வண்டலர்கை
துன்றுநீறுபுனை மேனியவாகித் தூயநீறுபுனை தொண்டர்களென்னச்
சென்றுசென்றுமுரல் கின்றதுகண்டு சிந்தையன்போடு திளைத்தெதி
ர்சென்றார். கூ௬.

பார்விளங்கவளர் நான்மறைநாதம் பயின்றபண்புமிக வெண்கொடி
ஆடுஞ்
சீர்விளங்குமணி நாவொலியாலுந்திசைகளுன்கெதிர் புறப்படலாலுந்
தார்விளங்குவரை மார்பினயன்பொற் சதுர்முகங்களென வாயினதி
ல்லை
ஊர்விளங்குதிரு வாயில்களுன்கின் உத்தரத்திசையின் வாயின்மு
னெய்தி. கூஎ.

(வேறு.) அன்பின்வந்தெதிர் கொண்டசீரடியார் அவர்களோ நம்பி
யாரூரர் தாமோ [கிழ்ந்து
முன்பிறைஞ்சின ரியாவரென்றறியா முறைமையால் எதிர் வணங்கிம
பின்புகும்பிடும் விருப்பினிறைந்து பெருகு நாவனகரார் பெருமானும்
பொன்பிறங்குமணிமாளிகைநீடும் பொருவிறந்ததிருவீதிபுகுந்தார். கூஅ.

அங்கண்மாமறை முழங்குமருங்கே ஆடரம்பையர் அரங்கு முழங்கும்
மங்குல்வானின்மிசை ஐந்துமுழங்கும் வாசமாலைகளின் வண்டு
முழங்கும்

பொங்குமன்பருவி கண்பொழிதொண்டர் போற்றிசைக்குமொலி யெ
ங்கு முழங்குந்
திங்கடங்குசடை கங்கைமுழங்குந் தேவர்தேவர் புரியுந்திருவீதி. ௬௬.

போகநீடுநிதி மன்னவன்மன்னும் புரங்களொப்பன வரம்பில வோங்கி
மாகமுன்பருகு கின்றனபோலு மாளிகைக்குல மீடைந்த பதாகை
யோகசிந்தைமறை யோர்கள்வளர்க்கும் ஓமதூமமுயர் வானிலடுப்ப
மேகபந்திகளின் மீதிடையெங்கு மின்னுடங்குவன வென்ன விளங்
கும். ௩௰.

ஆடுதோகைபுடை ஞாயில்கடோறும் அரணிதந்தசுடர் ஆகுதிதோறு
மாடுதாமமணி வாயில்கடோறு மங்கலக்கலசம் வேதிகை தோறுஞ்
சேடுகொண்டஒளி தேர்நிரைதோறுஞ் செந்நெலன்னமலை சாலைக
டோறு
நீடுதண்புனல்கள் பந்தர்கடோறு நிறைந்ததேவர்கண நீளிடைதோ
றும். ௩௧.

எண்ணில்பேருல கனைத்தினுமுள்ள எல்லையில்லழகு சொல்லிய
வெல்லாம்
மண்ணிலிப்பதியில் வந்தனவென்ன மங்கலம்பொலிவளத்தனவாகிப்
புண்ணியப்புனித அன்பர்கண்முன்பு புகழ்ந்துபாடல்புரி பொற்பின்
விளங்கும்
அண்ணலாடுதிரு அம்பலஞ்சூழ்ந்த அம்பொன் வீதியினை நம்பிவண
ங்கி. ௩௨.

மாலயன்சத மகன்பெருந்தேவர்மற்றுமுள்ளவர்கண் முற்றுநெருங்கிச்
சீலமாமுனிவர் சென்றுமுன்றுன்னித் திருப்பிரம்பினடி கொண்டு தி
ளைத்துக்
காலநேர்படுதல் பார்த்தயனிற்பக் காதலன்பர்கண நாதர்புகும்பொற்
கோலநீடுதிரு வாயிலிறைஞ்சிக் குவித்த செங்கைதலை மேற்கொடுபு
க்கார். ௩௩.

(வேறு.) பெருமதில் சிறந்த செம்பொன் மாளிகைமின் பிறங்குபே
ரம்பலமேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சியபின்னர் வணங்கிய மகிழ்வொ
டும் புகுந்தார்
அருமறை முதலி னடுவினிற் கடையில் அன்பர்தஞ் சிந்தையி லலர்
ந்த
திருவள ரொளிசூழ் திருச்சிற்றம் பலமுன் றிருவணுக் கன்றிரு வாயில்.
௩௪.

வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப மன்றுளே மாலயன் றேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றரை யஞ்சலி மலர்த்திமுன் குவித்த
கைகளோ திளைத்த கண்களோ அந்தக் கரணமோ கலந்தஅன்புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான் றிருக்களிற் றுப்ப
டி மருங்கு. ௩௫.

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்க ளுன்
குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக

இந்துவாழ் சடையான் ஆடுமானந்த எல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்
ந்தார். ௱௬.

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன் றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு வாலிதாம் இன்பமா மென்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார். ௱௭.

தடுத்துமுன் ஆண்ட தொண்டனார் முன்பு தனிப்பெருந் தாண்டவம்
புரிய
எடுத்தசே வடியர் அருளினாற் றரளம் எறிபுனன் மறிதிரைப் பொன்னி
மடுத்தநீள் வண்ணைப் பண்ணையா ரூரில் வருகநம் பாலென வானில்
அடுத்தபோ தினில்வந் தெழுந்ததோர் நாதங் கேட்டலும் அதுவுணர்ந்
தெழுந்தார். ௱௮.

ஆடுகின்றவ ரருளினா னிகழ்ந்த அப்பணி சென்னிமேற் கொண்டு
சூடுதங் கரங்கள் அஞ்சலி கொண்டு தொழுந்தொறும் புறவிடைகொ
ண்டு
மாடுபே ரொளியின் வளருமம்பலத்தை வலங்கொண்டு வணங்கின
ர்போந்து
நீடுவான்பணிய உயர்ந்தபொன் வரைபோ னிலையெழு கோபுரங்கடந்து. ௱௯.

நின்றுசோ புரத்தை நிலமுறப் பணிந்து நெடுந்திரு வீதியை வணங்கி
மன்றலார் செல்வ மறுகினூ டேகி மன்னிய திருப்பதி அதனிற்
றென்றிசை வாயில் கடந்துமுன் போந்து சேட்படு திருவெல்லை இ
றைஞ்சிக்
கொன்றைவார் சடையா னருளையே நினைவார் கொள்ளிடத் திருந
தி கடந்தார். ௱௰.

(வே.) புறந்தருவார் போற்றிசைப்பப் புரிமுந்நூல் அணிமார்பர்
அறம்பயந்தா டிருமுலைப்பா லமுதுண்டு வளர்ந்தவர்தாம்
பிறந்தருளும் பெரும்பேறு பெற்றதென முற்றுலகிற்
சிறந்தபுகழ்க் கழுமலமாந் திருப்பதியைச் சென்றணைந்தார். ௱௰௧

பிள்ளையார் திருஅவதா ரஞ்செய்த பெரும்புகலி
உள்ளுநான் மிதியேனென் றூரெல்லைப் புறம்வணங்கி
வள்ளலார் வலமாக வரும்பொழுது மங்கையிடங்
கொள்ளுமால் விடையானும் எதிர்காட்சி கொடுத்தருள. ௱௰௨.

மண்டியபே ரன்பினால் வன்றொண்டர் நின்றிறைஞ்சித்
தெண்டிரைவே லையின்மிதந்த திருத்தோணி புரத்தாரைக்
கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படியென்று
பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார். ௱௰௩.

இருக்கோலம் இடும்பெருமான் எதிர்நின்றும் எழுந்தருள
வெருக்கோளுற் றதுநீங்க ஆரூர்மேற் செலவிரும்பிப்
பெருக்கோதஞ் சூழ்புறவப் பெரும்பதியை வணங்கிப்போய்த்
திருக்கோலக் காவணங்கிச் செந்தமிழ்மா லைகள்பாடி. ௱௰௪.

Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

தேனார்க்கு மலர்ச்சோலைத் திருப்புன்கூர் நம்பர்பால்
ஆனப்பே ரன்புமிக அடிபணிந்து தமிழ்பாடி
மானார்க்குங் கரதலத்தார் மகிழ்ந்தவிடம் பலவணங்கிக்
கானார்க்கு மலர்த்தடஞ்சூழ் காவிரியின் கரையணைந்தார். ௱௰௫.

வம்புலா மலரலைய மணிகொழித்து வந்திழியும்
பைம்பொன்வார் கரைப்பொன்னிப் பயிறீர்த்தம் படிந்தாடித்
தம்பிரான் மயிலாடு துறைவணங்கித் தாவில்சீர்
அம்பர்மா காளத்தின் அமர்ந்தபிரான் அடிபணிந்தார். ௱௰௬.

மின்னார்செஞ் சடையண்ணல் விரும்புதிருப் புகலூரை
முன்னாகப் பணிந்தேத்தி முதல்வன்றன் அருளினைந்து
பொன்னாரும் உத்தரியப் புரிமுந்நூல் அணிமார்பர்
தென்னாவ லூராளி திருவாரூர் சென்றணைந்தார். ௱௰௭.

தேராரு நெடுவீதித் திருவாரூர் வாழ்வாருக்
காராத காதலினம் மாரூர னாமழைக்க
வாரார்நின் றனவவனை மகிழ்ந்தெதிர்கொள் வீரென்று
நீராருஞ் சடைமுடிமே னிலவணைந்தா ரருள்செய்தார். ௱௰௮.

தம்பிரான் அருள்செய்யத் திருத்தொண்ட ரதுசாத்தி
எம்பிரா னாரருடான் இருந்தபரி சீதுவானால்
நம்பிரா னாராவா ரவரன்றே யெனுநலத்தால்
உம்பர்நா டிழிந்ததென எதிர்கொள்ள உடனெழுந்தார். ௱௰௯.

மாளிகைகண் மண்டபங்கள் மருங்குபெருங் கொடிநெருங்கத்
தாளினெடுந் தோரணமுந் தழைக்கமுகுங் குழைத்தொடையு
நீளிலைய கதலிகளு நிறைந்தபசும் பொற்றசும்பும்
ஒளிநெடு மணிவிளக்கும் உயர்வாயி றொறுநிரைத்தார். ௱௨௰.

சோதிமணி வேதிகைக டுய்நறுஞ்சாந் தணிநீவிக்
கோதில்பொரி பொற்சுண்ணங் குளிர்தரள மணிபரப்பித்
தாதவிழ்பூந் தொடைமாலைத் தண்பந்தர் களுஞ்சமைத்து
வீதிகளு ண்டுகளடங்க விரைப்பனிநீர் மிகத்தெளித்தார். ௱௨௰௧.

மங்கலகீ தம்பாட மழைநிகர்தூ ரியமுழங்கச்
செங்கயற்கண் முற்றிழையார் தெற்றிதொறு நடம்பயில
நங்கள்பிரான் றிருவாரூர் நகர்வாழ்வார் நம்பியைமுன்
பொங்கெயினீ டிருவாயிற் புறமுறவந் தெதிர்கொண்டார். ௱௨௰௨

(வேறு.) வந்தெதிர்கொண்டு வணங்குவார் முன்னவன் றொண்டர் அஞ்சலி கூப்பிவந்து
சிந்தைகளிப்புற வீதியூடு செல்வார் திருத்தொண்டர் தம்மை நோக்கி
எந்தையிருப்பது மாரூரவர் எம்மையு மாள்வரோ கேளீரென்னுஞ்
சந்தவிசைப்பதி கங்கள்பாடித் தம்பெருமான் றிருவாயில் சார்ந்தார். ௱௨௰௩.

வானுறநீடிரு வாயினேக்கி மண்ணுற ஐந்துறுப் பாலணங்கித்
தேனுறை கற்பக வாசமாலைத் தேவாசிரியன் றொழுதிறைஞ்சி
ஊனுமுயிரு முருக்குமன்பால் உச்சிகுவித்த செங்கைகளோடுந்
தூநறுங் கொன்றையன் மூலட்டானஞ் சூழ்திருமாளிகை வாயில்புக்கார். ௱௨௰௪.

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from NEW YORK PUBLIC LIBRARY

புற்றிடங்கொண்ட புராதனனைப் பூங்கோயின் மேயபிரானையார்க்கும்
பற்றிடமாய பரம்பொருளைப் பார்ப்பதிபாகனைப் பங்கயத்தாள்
அர்ச்சனைசெய்யஅருள்புரிந்தஅண்ணலைமண்மிசைவீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோனுடம்பா னன்மையின் றன்மையை மெய்
மைபெற்றார். ௩௱௨௫.

அன்புபெருக உருகியுள்ள மலையஅட்டாங்கபஞ் சாங்கமாக •
முன்புமுறைமையி ளுல்வணங்கி முடிவிலாக்காதன் முதிரவோங்கி
நன்புலனுகிய ஐந்தும் ஒன்றி நாயகன் சேவடி எய்தப்பெற்ற
இன்பவெள்ளத்திடை மூழ்கிநின்றே இன்னிசைவண்டமிழ் மாலை
பாட. ௩௱௨௬.

வாழியமாமறைப் புற்றிடங்கொண் மன்னவனு ரருளாலோர்வாக்குத்
தோழமையாக வுனக்குநம்மைத் தந்தன நாமுன்புதொண்டுகொண்ட
வேழ்வியிலன்று நீகொண்டகோலம் என்றும் புனைந்துநின் வேட்
கைதீர
ஆழிமண்மேல்விளை யாடுவாயென்றாரூரர்கேட்கஎழுந்ததன்றே. ௩௱௨௭.

கேட்கவிரும்பிவன் றெண்டரென்றுங் கேடிலாதானை இறைஞ்சிநி
ன்றே
ஆட்கொளவந்த மறையவனே ஆரூர் அமர்ந்தஅருமணியே
வாட்கயல்கொண்டகண் மங்கைபங்கா மற்றுன்பெரிய கருணையன்
றே [௩௱௨௮.
நாட்கமலப்பதங் தந்ததின்று நாயினேனைப்பொரு ளாகவென்றார்.

என்றுபலமுறை யாவணங்கி எய்தியவுள்ளக் களிப்பினேடும்
வென்றியடல்விடை போனடந்து வீதிவிடங்கப் பெருமான் முன்பு
சென்றுதொழுது துதித்து வாழ்ந்து திருமாளிகை வலஞ்செய்து போந்
தார்
அன்றுமுதலடி யார்களெல்லாந் தம்பிரான் றோழனென்றே அறைந்
தார். ௩௱௨௯.

மைவளர் கண்ட ரருளினுலே வண்டமிழ் நாவலர் தம்பெருமான்
சைவவிடங்கி னணிபுனைந்து சாந்தமு மாலையுந் தாருமாகி
மெய்வளர் கோலமெல்லாம் பொலிய மிக்கவிழுத்தவ வேந்தரென்னத்
தெய்வமணிப்புற் றுளாரைப் பாடித் திளைத்து மகிழ்வொடுஞ் செல்
லாநின்றார். ௩௱௩௰.

(வேறு.) இதற்குமுன் னெல்லையில்லாத் திருநகரிதனுள் வந்து
முதற்பெருங் கயிலை யாதி முதல்வர்தம் பங்கினுட்குப்
பொதுக்கடிந் துரிமைசெய்யும் பூங்குழற் சேடிமாரிற்
கதிர்த்தபூ ணேந்துகொங்கைக் கமலினி அவதரித்தாள். ௩௱௩௧.

கதிர்மணி பிறந்ததென்ன உருத்திர கணிகைமாராம்
பதியிலார் குலத்திற்றோன்றிப் பரவையர் என்னுநாமம்
விதியுளி விளக்கதாலே மேதகு சான்றோரான்ற
மதியணி புனிதனன்னுண் மங்கல அணியாற்சாத்தி. ௩௱௩௨.

பரவினர் காப்புப்போற்றிப் பயில்பெருஞ் சுற்றந்திங்கள்
விரவிய பருவந்தோறும் விழாவணி எடுப்ப மிக்கோர்

வரமலர் மங்கையிங்கு வந்தனள் என்றுசிந்தை
தரவரு மகிழ்ச்சிபொங்கத் தளர்நடைப் பருவஞ்சேர்ந்தார். ௩௱௩௰௩.

மானிளம் பிணையோதெய்வ வளரிள முகையோ வாசத்
தோனிளம் பதமோவேலைத் திரையிளம் பவளவல்லிக்
கானிளங் கொடியோதிங்கட் கதிரிளங் கொழுந்தோகாமன்
ருனிளம் பருவங்கற்குந் தனியிளந் தனுவோவென்ன. ௩௱௩௰௪.

நாடுமின் பொற்புவாய்ப்பு நாளுநாள் வளர்ந்துபொங்க
ஆடுமென் கழங்கும்பந்தும் அம்மனை ஊசலின்ன
பாடுமின் னிசையுந்தங்கள் பனிமலை வல்லிபாதங்
கூடுமன் புருகப்பாடுங் கொள்கையோர் குறிப்புத் தோன்ற. ௩௱௩௰௫.

பாங்கியர்மருங்குசூழப் படரொளி மறுகுசூழத்
தேங்கமழ் குழலின்வாசந் திசையெலாஞ் சென்றுசூழ
ஓங்குபூங் கோயிலுள்ள ஒருவரை அன்பிஞேடும்
பூங்கழல் வணங்வென்றும் போதுவார் ஒருநாட்போந்தார். ௩௱௩௰௬.

புற்றிடம் விரும்பிஞரைப் போற்றினர் தொழுதுசெல்வார்
சுற்றிய பரிசனங்கள் சூழஆ ரூடையநம்பி
நற்பெரும் பான்மைகூட்ட நகைபொதிந் திலங்குசெவ்வாய்
விற்புரை நுதலின்வேற்கண் விளங்கிழை அவரைக்கண்டார். ௩௱௩௰௭.

கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார். ௩௱௩௰௮.

ஓவியநான் முகனெழுத வொண்ணுமை உள்ளத்தான்
மேவியதன் வருத்தமுற விதித்ததொரு மணிவிளக்கோ
மூவுலகின் பயனுகி முன்னின்ற தெனநினைந்து
நாவலர்கா வலர்நின்ருர் நடுநின்ருர் படைமதனுர். ௩௱௩௰௯.

தண்டரள மணித்தோடுந் தகைத்தோடுங் கடைபிறழுங்
கெண்டைநெடுங் கண்வியப்பக் கிளரொளிப்பூ ணுரவோனை
அண்டர்பிரான் றிருவருளால் அறியாமல் மனம்விரும்பப்
பண்டைவிதி கடைகூட்டப் பரவையா ருங்கண்டார். ௩௱௪௰.

கண்கொள்ளாக் கவின்பொழிந்த திருமேனி கதிர்விர்ப்ப
விண்கொள்ளாப் பேரொளியர் னெதிர்நோக்கி மெல்லியலுக்
கெண்கொள்ளாக் காதலின்முன் பெய்தாத தொருவேட்கை
மண்கொள்ளா நாண்மடமச் சம்பயிர்ப்பை வலிந்தெழலும். ௩௱௪௰௧.

முன்னேவந் தெதிர்தோன்று முருகனே பெருகொளியாற்
றன்னேரின் மாரனே தார்மார்பின் விஞ்சையனே
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருட்பேறுடையவனே
என்னேயென் மனந்திரித்த இவன்யாரோ வென்நினைந்தார். ௩௱௪௰௨.

அண்ணலவன் றன்மருங்கே அளவிறந்த காதலினுன்
உண்ணிறையுங் குணநான்கும் ஒருபுடைசாய்ந் தனவெனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தன் மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழுமன்பே கைக்கொண்டு செலவுய்ப்ப. ௩௱௪௰௩.

பாங்கோடிச் சிலைவளைத்துப் படையனங்கன் விடுபாணந்
தாங்கோலி எம்மருங்குந் தடைசெய்ய மடவரலுந்
தேங்கோதை மலர்க்குழன் மேற் சிறைவண்டு கலந்தார்ப்பப்
பூங்கோயில் அமர்ந்தபிரான் பொற்கோயில் போய்ப்புக்காள். ௩௪௪.

வன்றொண்டர் அதுகண்டென் மனங்கொண்ட மயிலியலின்
மின்றொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யாரென்ன
அன்றங்கு முன்னின்றார் அவர்நங்கை பரவையார்
சென்றும்பர் தரத்தார்க்கு சேர்வரியா ரெனச்செப்ப ௩௪௫.

என்றினைய பலவுநினைந் தெம்பெருமா னருள்வகையான்
முன்றொடர்ந்து வருங்காதன் முறைமையினாற் றொடக்குண்டு
நன்றெனையாட் கொண்டவர்பால் நண்ணுவனென் றுளமகிழ்ந்து
சென்றுடைய நம்பியும்போய்த் தேவர்பிரான் கோயில்புக. ௩௪௬.

பரவையார் வலங்கொண்டு பணிந்தேத்தி முன்னரே
புரவலனார் கோயிலினின் றொருமருங்கு புறப்பட்டார்
விரவுபெருங் காதலினான் மெல்லியலார் தமைவேண்டி
அரவினா ரம்புனைந்தார் அடிபணிந்தார் ஆரூரர். ௩௪௭.

அவ்வாறு பணிந்தேத்தி அணியாரூர் மணிப்புற்றின்
மைவாழுந் திருமிடற்று வானவர்பா னின்றும்போந்
தெவ்வாறு சென்றாளென் னின்னுயிராம் அன்னமெனச்
செவ்வாய்வெண் ணகைக்கொடியைத் தேடுவா ராயினார். ௩௪௮.

(வேறு.) பாசமாம் வினைப் பற்றறுப் பான்மிகும்
ஆசை மேலுமொ ராசை யளிப்பதோர்
தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய
ஈச னாரருள் எந்நெறிச் சென்றதே. ௩௪௯.

உம்பர் நாயகர் தங்கழல் அல்லது
நம்பும் ஆறறி யேனை நடுக்குற
வம்பு மால்செய்து வல்லியின் ஒல்கியின்
றெம்பிரா னருளெந் நெறிச் சென்றதே. ௩௫௰.

பந்தம் வீடுதரும் பரமன் கழல்
சிந்தை யாரவு முன்னுமென் சிந்தையை
வந்துமால் செய்து மானென வேவிழித்
தெந்தை யாரருள் எந்நெறிச் சென்றதே. ௩௫௧.

என்று சாலவும் ஆற்றலர் என்னுயிர்
நின்ற தெங்கென நித்திலப் பூண்முலை
மன்றல் வார்குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின். ௩௫௨.

காவி நேர்வருங் கண்ணியை நண்ணுவான்
யாவ ரோடும் உரையியம் பாதிருந்
தாவி நல்குவர் ஆரூரை ஆண்டவர்
பூவின் மங்கையைத் தந்தெனும் போழ்தினில். ௩௫௩.

நாட்டு நல்லிசை நாவலூரன் சிந்தை
வேட்ட மின்னிடை யின்னமு தத்தினைக்

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

காட்டு வேன்கட லக்கடந் தென்பபோற்
பூட்டும் ஏழ்பரித் தேரோன் கடல்புக. ௩௫௪.

எய்து மென்பெடை யோடிரை தேர்ந்துண்டு
பொய்கை யிற்பகல் போக்கிய புள்ளினம்
வைகு சேக்கைகண் மேற்செல வந்தது
பையுண் மாலை தமியோர் பனிப்புற. ௩௫௫.

பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கடம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான். ௩௫௬.

மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்திறல்
இறும ருங்குலர்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா. ௩௫௭.

அரந்தை செய்வார்க் கழுங்கித்தம் ஆருயிர்
வரன்கை தீண்ட மலர்குல மாதர்போற்
பரந்த வெம்பகற் கொல்கிப் பனிமதிக்
கரங்க டீண்ட அலர்ந்த கயிரவம். ௩௫௮.

தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்றும் இன்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற அண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா. ௩௫௯.

வாவி புள்ளொலி மாற்றிய மாலையில்
நாவ லூரரு நங்கை பரவையாம்
பாவை தந்த படர்பெருங் காதலும்
ஆவி சூழ்ந்த தனிமையும் ஆயினர். ௩௬௰.

தந்தி ருக்கண் எரிதழ லிற்படூஉ
வெந்த காமன் வெளியே உருச்செய்து
வந்தென் முன்னின்று வாளிதொ டுப்பதேன்
எந்தை ஆரருள் இவ்வண மோவென்பார். ௩௬௧.

ஆர்த்தி கண்டுமென் மேனின் றழற்கதிர்
தூர்ப்ப தேனெவனத் தொண்டுகொண் டாண்டவர்
நீர்த்த ரங்க நெடுங்கங்கை நீண்முடி
சார்த்தும் வெண்மதி போன்றில தண்மதி. ௩௬௨.

அடுத்து மென்மேல் அலத்தெழும் ஆழியே
தடுத்து முன்னெவன ஆண்டவர் தாமுணக்
கடுத்த நஞ்சுன் றரங்கக் கரங்களால்
எடுத்து நீட்டின என்னையின் றென்செயாய். ௩௬௩.

பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடை
சிறந்த ணைந்தது தெய்வநீர் நாட்டினிற்
புறம்ப ணைத்தடம் பொங்கழல் வீசிட
மறம்ப யின்றதெங் கோதமிழ் மாருதம். ௩௬௪.



Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

இன்ன தன்மைய பின்னும் இயம்புவான்
மன்னு காதல ளுகிய வள்ளல்பாற்
றன்ன ரும்பெற னெஞ்சு தயங்கப்போம்
அன்னம் அன்னவள் செய்கை அறைகுவாம். ௩௬௫.

(வேறு.) கனங்கொண்ட மணிகண்டர் கழல்வணங்கிக் கணவவனை முன் பெறுவாள்போல
இனங்கொண்ட சேடியர்கள் புடைசூழ எய்துபெருங் காதலோடுந்
தனங்கொண்டு தளர்மருங்குற் பரவையும்வன் ருெண்டர்பாற் றனித்துச்சென்ற
மனங்கொண்டு வரும்பெரிய மயல்கொண்டு தன்மணிமா ளிகையைச் சார்ந்தாள். ௩௬௬.

சீறடிமேல் நூபுரங்கள் அறிந்தனபோற் சிறிதளவே ஒலிப்பமுன்னர்
வேருெருவ ருடன்பேசாண் மெல்லவடி யொதுங்கி மாளிகையின் மேலால் [ன்
ஏறிமர கதத் தூணத்திலங்குமணி வேதிகையினலங்கொள் பொற்கா
மாறின்மலர்ச் சேக்கைமிசை மணிநிலா முன்றின்மருங் கிருந்தாள் வந்து. ௩௬௭.

அவ்வளவில் அருகிருந்த சேடிதவனை முகநோக்கி ஆரூராண்ட
மைவிரவு கண்டரைநாம் வணங்கப்போமறுகெதிர்வந்தவராரென்ன
இவ்வுலகில் அந்தணராம் இருவர்தே டொருவர்தாம் எதிர்நின்ருண்ட
சைவமுதற் றிருத்தொண்டர் தம்பிரான் தோழனர் நம்பியென்ருள். ௩௬௮.

என்ற உரைகேட்டலுமே எம்பிரான் தமரேயோ என்னுமுன்னம்
வன்ருெண்டர் பால்வைத்த மனக்காதல் அளவின்றி வளர்ந்துபொங்க
நின்றநிறை நாண்முதலாங் குணங்களுட னீங்கவுயிர் ஒன்றுதாங்கி
மின்றயங்கு நுண்ணிடையாள் வெவ்வுயிர்த்து மெல்லணைமேல் வீழ்ந்தபோது. ௩௬௯.

ஆரநறுஞ் சேறாட்டி அரும்பனிநீர் நறுந்திவலை அருகுவீசி
ஈரவிளந் தளிர்குளிரப் படுத்து மடவரர்செய்த இவையுமெல்லாம்
பேரழலில் நெய்சொரிந்தா லொத்தனமற் றதன்மீது சமிதையென்ன
மாரனுந்தன் பெருஞ்சிலையின் வலிகாட்டி மலர்வாளிசொரிந்தான் வந்து. ௩௭0.

மலரமளித் துயிலாற்ருள்வருந்தென்றன் மருங்காற்ருண்மங்குல்வாரினின் [டுங்
நிலவுமிகுந் தழலாற்ருள் நிறையாற்றும் பொறையாற்ரு நீர்மையோ
கலவமயில் எனவெழுந்து கருங்குழலின் பரமாற்ருக் கையளாகி
இலவவிதழ் செந்துவர்வாய் நெகிழ்ந்தாற்ரு மையின்வறிதே இன்ன சொன்னுள். ௩௭௧.

(வே)தேருங் கொடியும் மிடையும் மறுகிற் றிருவா ரூரர் நீரே அல்லால்
ஆரென் றுயரம் அறிவார் அடிகள் அடியேன்அயரும்படியோ இதுதான்

நீரும் பிறையும் பொறிவா ளரவின் நிரைய நிரைவெண் டலையின்
புடையே
ஊருஞ் சடையீர் விடைமேல் வருவீர் உமதன் பிலர்போல் யானே
வுறுவேன். ௩௭௨.

என்றின் னனவே பலவும் புகலும்இருளாரளகச்சுருளோ தியையும்
வன்றொண் டரையும் படிமேல் வரமுன் பருள்வான் அருளும் வகை
யார் நினைவார்
சென்றும் பர்களும் பணியுஞ் செல்வத் திருவா ரூர்வாழ் பெருமான்
அடிகள் [ளி. ௩௭௩.
அன்றங் கவர்மன் றலைநீர் செயுமென் றடியார் அறியும் படியாலரு

மன்னும் புகழ் நாவலர் கோன் மகிழ மங்கை பரவை தன்னைத் த
ந்தோம் [ருளிப்
என்னவ் வகைநம் மடியார் அறியும் படியே உரைசெய் தனமென் ற
பொன்னின் புரிவன் சடையன் விடையன் பொருமா கரியின் உரி
வைபுனைவன்
அன்னந் நடையாள் பரவைக் கணிய தாரூ ரன்பான் மணமென் ற
ருள. ௩௭௪.

(வே) தன்னையாள் உடையபிரான் சரணார விந்தமலர்
சென்னியிலுஞ் சிந்தையிலும் மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னுதமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையார் உடன்கூடி விளையாடிச் செல்கின்றார். ௩௭௫.

(வே) மாதுடன் கூடவைகி மாளிகை மருங்குசோலை
போதலர் வாவிமாடு செய்குன்றிற் புடையோர்தெற்றிச்
சீதளத் தரளப்பந்தற் செழுந்தவி சிழிந்துதங்கள்
நாதர்பூங் கோயினண்ணிக் கும்பிடு விருப்பானம்பி. ௩௭௬.

அந்தரத் தமரர்போற்றும் அணிகிளர் ஆடைசாத்திச்
சந்தனத் தளறுதோயந்த குங்குமக் கலவைசாத்திச்
சுந்தரச் சுழியஞ்சாத்திச் சுடர்மணிக் கலன்கள்சாத்தி
இந்திரத் திருவின்மேலாம் எழில்மிக விளங்கித்தோன்ற. ௩௭௭.

கையினிற் புனைபொற்கோலுங் காதினில் இலங்குதோடு
மெய்யினிற் றுவளுநூலு நெற்றியின் விளங்குநீறும்
ஐயனுக் கழகிதாமென் றுயிழை மகளிர்போற்றச்
சைவமெய்த் திரிபின்கோலந் தழைப்பவீ தியிணைச்சார்தார். ௩௭௮.

நாவலூர் வந்தசைவ நற்றவக் களிறேயென்றும்
மேவலர் புரங்கள்செற்ற விடையவர்க் கன்ப என்றுந்
தாவில்சீர்ப் பெருமையாரூர் மறையவர் தலைவ என்றும்
மேவினர் இரண்டுபாலும் வேறுவே றுயும்போற்ற. ௩௭௯.

கைக்கடா குரங்குகோழ் சிவல்கவு தாரிபற்றிப்
பக்கமுன் போதுவார்கள் பயின்மொழி பயிற்றிச்செல்ல
மிக்கபூம் பிடகைகொள்வோர் விரையடைப் பையோர்சூழ
மைக்கருங் கண்ணினார்கள் மறுகநீண் மறுகில்வந்தார். ௩௮௰

போலங்கலப் புரவிபண்ணிப் போதுவார் பின்புபோத
இலங்கொளி வலயப்பொற்றோள் இடையிடை மிடைந்துதொங்க
நலங்கிளர் நீழற்சூழ நான்மறை முனிவரோடும்
அலங்கலந்தோளினன்வந் தணைந்தனன் அண்ணல்கோயில். ௩௮௧.

கண்ணுதல் கோயிற்றேவா சிரியனுங் காவணத்து
விண்ணவ ரொழியமண்மேன் மிக்கசீர் அடியார்கூடி
எண்ணிலார் இருந்தபோதில் இவர்க்கியான் அடியேனாகப்
பண்ணுநாளெந் நாளென்று பரமர்தாள் பணியச்சென்றார். ௩௮௨.

அடியவர்க் கடியனாவேன் என்றுமா தரவுகூரக்
கொடிநெடுங் கோற்றவாயில் பணிந்துகை குவித்துப்புக்கார்
கடிகொள்பூங் கொன்றைவேய்ந்தார் அவர்க்கெதிர் காணக்காட்டும்
படியெதிர் தோன்றிநிற்கப் பாதங்கள் பணிந்து பூண்டு. ௩௮௩.

(வே) மன்பெ ருந்திரு மாமறை வண்டுசூழ்
அன்பர் சிந்தை அலர்ந்தசெந் தாமரை
நன்பெ ரும்பர மானந்த நன்மது
என்ற ரத்தும் அளித்தெதிர் நின்றன. ௩௮௪.

ஞாலம் உய்ய நடமன்றுள் ஆடின
கால னாருயிர் மாளக் கறுத்தன
மாவல தாழ்குழன் மாமலை யாள்செங்கை
சீல மாக வருடச் சிவந்தன. ௩௮௫.

நீதி மாதவர் நெஞ்சிற் பொலிந்தன
வேதி யாதவர் தம்மைவே திப்பன
சோதி யாஎழுஞ் சோதியுட் சோதிய
ஆதி மாலயன் காணா அளவின. ௩௮௬.

வேத வாரண மேற்கொண் டிருந்தன
பேதை யேன்செய் பிழைபொறுத் தாண்டன
ஏத மானவை தீர்க்க இசைந்தன
பூத நாதநின் புண்டரீ கப்பதம். ௩௮௭.

(வே) இன்னவா றேத்துநம்பிக் கேறுசே வகனார்தாமும்
அந்நிலை அவர்தாம்வேண்டும் அதனையே அருளவேண்டி
மன்னுசீ ரடியார்தங்கள் வழித்தொண்டை உணரநல்கிப்
பின்னையும் அவர்கடங்கள் பெருமையை அருளிச்செய்வார். ௩௮௮.

பெருமையாற் றம்மையொப்பார் பேணலால் எம்மைப்பெற்றார்
ஒருமையால் உலகைவெல்வர் ஊனமே லொன்றுமில்லார்
அருமையா நிலையினின்றா ரன்பினால் இன்பமாவர்
இருமையுங் கடந்துநின்றார் இவரைநீ அடைவாயென்று. ௩௮௯

நாதனார் அருளிச்செய்ய நம்பியா ரூரர்நானிங்
கேதந்தீர் நெறியைப் பெற்றே னென்றெதிர் வணங்கிப்போற்ற
நீதியால் அவர்கடம்மைப் பணிந்துநீ நிறைசொன்மாலை
கோதிலா வாய்மையாலே பாடென அண்ணல்கூற. ௩௯௰.

தன்னையா ளுடையநாதன் றானருள் செய்யக்கேட்டுச்
சென்னியால் வணங்கிநின்ற திருமுனைப் பாடிநாடர்

இன்னவா றின்னபண்பென் றேத்துகேன் அதற்குயானுர்
பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்செயென்ன. ௩௬௧.

(வே. தொல்லைமால் வரைபயந்த தூயாடன் றிருப்பாகன்
அல்லறீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்காற்
றில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேனென்
றெல்லையில்வன் புகழாரை எடுத்திசைப்பா மொழியென்றார். ௩௬௨.

மன்னுசீர் வயலாரூர் மன்னவரை வன்றொண்டர்
சென்னியுற அடிவணங்கித் திருவருண்மேற் கொள்பொழுதின்
முன்னமா லயனறியா முதல்வர்தாம் எழுந்தருள
அந்நிலைகண் டடியவர்பாற் சார்வதனுக் கணைகின்றார். ௩௬௩.

தூரத்தே திருக்கூட்டம் பலமுறையாற் றொழுதன்பு
சேரத்தாழ்ந் தெழுந்தருகு சென்றெய்தி நின்றிழியா
வீரத்தார் எல்லார்க்குந் தனித்தனிவே றடியேனென்
றார்வத்தாற் றிருத்தொண்டத் தொகைப்பதிகம் அருள்செய்தார். ௩௬௪.

தம்பெருமான் கொடுத்தமொழி முதலாகத் தமிழ்மாலைச்
செம்பொருளாற் றிருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் றானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடியவர் எதிர்பணிந்தார். ௩௬௫.

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் றோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் றமர்கள்திருத் தொண்டேத்த லுறுகின்றேன். ௩௬௬.

முற்றிற்று.

---

புறனடை.

தொல்லைநூலின்றுறைநெறியோர்கலார்
வல்லவாறு வழூஉ மஙவென்பரால்
இல்லவாந்தமிழ் ஏடிரண்டோர்வகைச்
சொல்லவாய் ஒருநூலினிற்றொன்மையே.

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY
Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY

AUG 16 1932

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google

Digitized by Google

Original from
NEW YORK PUBLIC LIBRARY

Generated for staff (University of Toronto) on 2019-10-07 16:11 GMT / http://hdl.handle.net/2027/nyp.33433081850798
Public Domain, Google-digitized / http://www.hathitrust.org/access_use#pd-google
Digitized by Google
Original from
NEW YORK PUBLIC LIBRARY